# தமிழரசு

16-6-1981 50காசு

திருவள்ளுவர் ஆண்டு 2012
துன்மதி - ஆனி 2






1981, சனவரித் திங்கள் 4-ஆம் நாள் முதல் 10-ஆம் நாள் வரை, மதுரை மாநகரில் நடைபெற்ற ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு பைந்தமிழ்க் காட்சிப் பேரணியில் உலா வந்த அலங்கார ஊர்திகளில் ஒன்று.

# அரசு அலுவலர்களுக்குச் சலுகைகள்!

1977-ஆம் ஆண்டு ஜூன் மாதம் மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் தலைமையில் பதவி ஏற்ற அரசு, அரசு ஊழியர்களின் நீண்ட நாள் கோரிக்கைக்கு இணங்க உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவரின் தலைமையின்கீழ் மூன்றாவது ஊதியக் குழுவை நியமித்தது.

மூன்றாவது ஊதியக்குழுவின் மிக முக்கியப் பரிந்துரைகள் கீழ்வருமாறு:—

1) 76 வகையாக இருந்த ஊதிய விகிதங்களை 20 ஆகக் குறைத்துச் சீரமைத்தது.

2) புதிய ஊதிய விகிதங்களில் அலுவலர்களின் ஊதியம் பொருத்தப்பட்டபோது பழைய அடிப்படைச் சம்பளத்தில் 5 சதவிகிதம் உயர்வு அளிக்கப்பட்டு, அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு குறைந்த பட்ச நன்மை ரூ. 20 ஆகவும், அதிகபட்ச நன்மை ரூ. 130 ஆகவும் அளிக்கப்பட்டது.

3) ஒருவர் ஒரே பதவியில் பத்தாண்டுக் காலம் பணி புரிந்தால், அந்த அலுவலருக்குத் தானாகவே பதவி உயர்வு ஊதியம் வழங்கப்பட வகை செய்யப்பட்டுள்ளது.

மேலே கூறிய பரிந்துரைகளையும் மற்றும் உள்ள இதர பரிந்துரைகளையும் ஏற்றுக்கொண்டு அரசு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளில் உள்ள முரண்பாடுகளைக் களைவதற்கு ஒரு நபர் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் அரசு தமது அலுவலர்களுக்குக் கீழ்க்கண்ட சலுகைகள் அளித்துள்ளது:

(1) சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட பதவிகளில் ஊதிய விகிதங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

(2) 1.10.1978 முதல் 31.3.1981 வரை ஈட்டிய விடுப்பு ஒப்புவிப்பு ஊதியத்தில் வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி ஆகியவை கணக்கில் கொள்ளப்படுவதில்லை. இனி அந்த இரண்டு படிகளும் ஒப்புவிப்பு ஊதியத்தில் 1.4.1981ல் இருந்து சேர்த்து அளிக்கப்படும்.

(3) தேக்கநிலை ஊதிய உயர்வுக்கான ஊதிய உச்சவரம்பு ரூ. 1500லிருந்து ரூ.2000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

(4) தேர்வுநிலையில் அலுவலரின் ஊதியத்தை நிர்ணயம் செய்யும்போது, ஊழியத் தரங்கள் 8 முதல் 11 வரையில் உள்ளவர்களுக்கு ரூ. 15ம், 12 முதல் 16 வரையில் உள்ளவர்களுக்கு ரூ. 10ம் குறைந்த பட்ச நன்மையாக அளிக்கப்பட்டுள்ளது.

(5) கூடுதல் பொறுப்புக்களை உடைய உயர்பதவிக்கு அலுவலர் பதவி உயர்வுபெறும்போது, கீழ் பதவியில் பெற்ற ஊதியத்தைவிட 5 சதவிகிதம் குறைந்தபட்ச நன்மை பெறும் வகையில் ஊதியம் நிர்ணயிக்கப்படும்.

(6) இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை அலுவலர்கள் பணிபுரியும் இடத்திலிருந்து 240 கி.மீட்டருக்கு மேற்பட்ட தூரத்தில் தமிழகத்தில் உள்ள எந்த இடத்திற்கும் தங்கள் குடும்பத்தினருடன் பயணம் செய்ய விடுப்புப் பயணச் சலுகை அளிக்கப்பட்டுள்ளது.

மூன்றாவது ஊதியக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் அரசு ஊழியர்களுக்குக் கொடுக்கப்பட்ட சலுகைகளால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 67 கோடி ரூபாய் கூடுதல் செலவும், ஒரு நபர் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் அளிக்கப்பட்ட சலுகைகளால் ஆண்டொன்றுக்கு ரூ. 3 கோடி கூடுதல் செலவும் ஆகும். இதிலிருந்து அரசு கொடுத்துள்ள சலுகைகளின் மதிப்பு எவ்வளவு என்பது விளங்கும்.

## அகவிலைப்படி

மத்திய அரசு கைக்கொள்ளும் முறையினை ஒட்டியும், மாநில அரசின் நிதி நிலையினைக் கருத்திலே கொண்டும் வாழ்க்கைச் செலவுப் புள்ளியை அடிப்படையாகக் கொண்டு தமிழக அரசு, ஊழியர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கு எட்டு தவணைகள் அகவிலைப்படி அளித்தது. முதல் தவணை 1.4.1979-லிருந்தும், இரண்டாவது தவணை 1.10.1979லிருந்தும் அளிக்கப்பட்டது. மூன்றாவது தவணை 1.2.1980லிருந்தும், நான்காவது தவணை 1.5.1980லிருந்தும் அளிக்கப்பட்டது. ஐந்து, ஆறாவது தவணை 1.7.1980 லிருந்தும், ஏழாவது தவணை 1.12.1980லிருந்தும், எட்டாவது தவணை 1.3.1981லிருந்தும் வழங்கப்பட்டது. ஒரு தவணை அகவிலைப்படி அதிகரிப்பினால் அரசுக்கு ஆகும் கூடுதல் செலவு ஆண்டொன்றுக்கு ரூ. 12 கோடி ஆகும்.

## இதர சலுகைகள்

அரசு ஊழியர்களுக்கு மிதி வண்டி (Cycle) வாங்குவதற்காக வழக்கமாகக் கொடுக்கப்பட்டு வந்த முன்பணம் ரூ. 400 லிருந்து ரூ. 600க்கு உயர்த்தப்பட்டுள்ளது. பண்டிகை முன்பணமாக வழங்கப்பட்டு வந்த ரூ. 250-ஐ ரூ. 500 ஆக உயர்த்தியுள்ளது. அரசு அலுவலர்களுக்கும் அவர்களின் மகனின், மகளின் திருமணத்திற்காக அளிக்கப்படும் திருமண முன்பணம் ரூ. 1000, ரூ. 2000 முறையே ரூ. 1500 (ஆண்களுக்கும்) ரூ. 3000 (பெண்களுக்கு) ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது.

அரசு அலுவலர்களின் பிள்ளைகள் கல்லூரிக் கல்வி பெறுவதற்கு வட்டியில்லாக் கடன் முன்பணம் வழங்கும் திட்டம் அமல் செய்யப்பட்டுள்ளது. கம்பளி ஆடை வாங்க மலைப்பகுதிகளில் பணிபுரியும் அரசு அலுவலர்களுக்கு முன்பணம் ரூ. 300 வரை கொடுக்கப்பட்டு வந்தது. 18.3.1980லிருந்து ரூ.500 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அரசுப் பொறியாளர்களுக்கும், கட்டடக்கலை வல்லுநர்களுக்கும் கணக்கீடுப் பொறிகளை வாங்க அலுவலர்களுக்குக் கடனாக ரூபாய் 500 வரை 25.3.1980 லிருந்து கொடுக்கப்பட்டுள்ளது.

ஓய்வுபெறும் வயது 55லிருந்து 58 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

கிராமப்புறங்களில் அரசு சார்புடைய வீடுகளில் வசிக்கும் ஊழியர்களின் ஊதியத்திலிருந்து வீட்டு வாடகைக்காக 10 சதவீதம் பிடிக்கப்பட்டு வந்தது 5 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. அரசுக்குச் சொந்தமான அரசு வாடகை வீடுகளை அனுபவித்து வருகின்ற அரசு அடிப்படைப் பணியாளர்கள், எழுத்துப் பதிவேட்டாளர்கள், ஓட்டுநர்கள் இவற்றிற்குச் சமமான பதவித் தரமுள்ள அரசுப்பணியாளர் ஏனையோரிடமிருந்துவீட்டு வாடகை வசூலிக்கத் தேவையில்லையென உத்தரவிட்டு 1981-ஆம் ஆண்டு மே திங்களில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. வெளியூர்களில் வீட்டு வாடகைப்படி பெறும் தகுதிக்கான ஊதிய உச்ச வரம்பு நீக்கப்பட்டுள்ளது. கிராமங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு வீட்டு வாடகை வழங்கப்படாமல் இருந்த பகுதிகளுக்கெல்லாம் முதன் முறையாக இவ்வரசு மாதம் ரூபாய் 10 வீதம் கிராமப்பணி ஊக்கப் படி அளிக்க ஆணை பிறப்பித்துள்ளது.







மலைவாழ் படிக்கான உச்ச வரம்பு ரூ. 80லிருந்து ரூ. 120ஆக உயர்த்தப்பட்டுள்ளது. குளிர் காலப்படி பெறுவதற்கான ஊதிய உச்ச வரம்பு நீக்கப்பட்டது.

சி.& டி. குரூப் அலுவலர்களுக்குத் தக்கபடி காது கேட்கும் கருவிகள் இலவசமாக அளிக்கப்பட உத்தரவிடப்பட்டுள்ளது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அரசு அலுவலர்களுக்கு வட்டியில்லா முன்பணம் தரப்பட்டது. காவல் துறையிலுள்ள காவலர் முதல், ஆய்வாளர் வரை உள்ள பதவிகளில் பணியாற்றுவோருக்கு இடையூறுப் படியாக மாதம் ரூபாய் 20 அளிக்க அரசு ஆணையிட்டுள்ளது.

## ஓய்வு ஊதியம்

அலுவலர் சங்கங்கள் கேட்டுக் கொண்டபடி ஓய்வூதியம் கணக்கிடும் முறையை மத்திய அரசில் மாற்றியமைக்கப்பட்ட முறையை ஒட்டி அலுவலர்களுக்கு சாதகமான முறையில் மாற்றியமைக்க அரசு ஆணையிட்டுள்ளது.

1.4.1981 முதல் ஓய்வு ஊதியம் பெறும் அரசு அலுவலர்களுக்கு அவர்கள் ஓய்வுபெற்ற நாளிலிருந்து 15 ஆண்டுகள் நிறைவு பெற்ற உடன் அவர்கள் ஓய்வூதியத் தொகையில் முன்பு ஒரு பகுதியை மொத்தமாக தொகுத்துப் பெற்றுக் கொண்டதை முழுமையாக்கி முழு ஓய்வூதியம் பெற ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது:

## குடும்ப ஓய்வூதியம்

அரசு ஊழியர்களின் குறைந்த அளவு மாதாந்திரக் குடும்ப ஓய்வூதியத்தொகையை ரூ. 50-லிருந்து ரூ. 100 ஆக அரசு உயர்த்தியுள்ளது. இது, கடந்த ஏப்ரல் முதல் அமலாக்கப்பட்டுள்ளது.

அதிக அளவு மாதாந்திரக் குடும்ப ஓய்வூதியத் தொகை ரூ. 300 லிருந்து ரூ. 500 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

முன்பு குடும்ப ஓய்வூதியம் பெறாமல் இருந்த, 1964-ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதிக்கு முன் ஓய்வு பெற்ற ஊழியர்களின் குடும்பத்தினருக்கும், மாதம் ரூ. 100 குடும்ப ஓய்வூதியம் அளிக்கப்பட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.



# வருவாய்த் துறையில் 1980-81 சாதனைகள்

**பினாமி நிலமாற்றங்களைச் செல்திறனற்றவையாக்கக் கொண்டு வந்த சட்ட முன்வடிவு :**

தமிழ்நாடு 1961-ம் ஆண்டு நிலச்சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுதல்) சட்டம் செயலுக்கு வந்தநாளுக்கு அதாவது 6-4-1960-க்கு முன்னரும் 1-1-1958ஆம் நாளுக்குப் பின்னரும் பல நிலங்களின் உரிமைகள் மாற்றப்பட்டன என்றும், இதனால் மேற் சொன்ன சட்டத்தின்படி அரசு எடுத்துக் கொண்ட உபரி நிலங்களின் அளவு குறைந்துவிட்டது என்றும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. எனவே, ஒருவர் வைத்திருந்த நிலம் எந்தவொரு நபருக்கு (பொறுப்புக் கழகம் உட்பட) எந்த முறையினாலும் (பாகப்பிரிவினை நீங்கலாக) மாற்றப்பட்டிருந்தால் அத்தகைய மாற்றம் சில விலக்குகளுக்குட்பட்டு செயல்திறனற்றுப் போகும் வகையில் மேற்சொன்ன சட்டத்தைத் திருத்த, தமிழ்நாடு 1980-ஆம் ஆண்டு நிலச்சீர் திருத்தங்கள்) நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

**தமிழ்நாடு நகர்ப்புற நில உச்ச வரம்பு கட்டுப்படுத்தல்**

கையகப்படுத்தும் பொருட்டு, உச்சவரம்பிற்குக் கூடுதலாக உள்ளது என அறிவிக்கப்பட்டுள்ள காலி நிலங்களின் பரப்பு 3,74,26,420 சதுர மீட்டர்களாகும். 174 அறிக்கைகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு 22,58,034 சதுர மீட்டர் பரப்பளவு காலி நிலம், உச்சவரம்பிற்குக் கூடுதலாக வைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது. அவை குறித்து பிரிவு 11, உட்பிரிவு (1)-ன்படி, தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. 74 இனங்களில் 9,20,292 சதுர மீட்டர் பரப்பளவு காலி நிலம் உச்சவரம்பிற்குக் கூடுதலாக வைத்திருப்பது குறித்து, பிரிவு 11, உட்பிரிவு (3)-ன்படி, அறிவிக்கை வெளியிடப்பட்டது. இதுவரை தனிப்பட்டவர்களுக்கும், தொழில்களுக்கும் அளிக்கப்பட்டுள்ள விலக்குகளின் எண்ணிக்கை முறையே 3,90,297 ஆகும். இவ்விரண்டு இனங்களிலும் விலக்களிக்கப்பட்டுள்ள நிலத்தின் பரப்பு 1,346,013 எக்டேர் ஆகும்.

**ஒரு நபர் குழுவின் பரிந்துரைகள்**

மாவட்டங்களில் இயங்கும் அலுவலகங்கள் குறிப்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்கள் கோட்டாட்சியர் அலுவலகங்கள் போன்றவை திறம்பட இயங்கி, மக்களுடைய பிரச்சினைகளை விரைவாகத் தீர்க்கும் வகையில் மாவட்ட அலுவலகங்களில் தற்போதுள்ள வழிமுறைகள், விதிமுறைகள் இவற்றையெல்லாம் ஆராய்ந்து, நிர்வாகத் திறனை மேம்பாடு செய்யும் பொருட்டு, ஒரு நபர் குழுவின் தலைவரான திரு. அம்புரோஸ், இ.ஆ.ப., அவர்கள் 184 பரிந்துரைகள் அரசுக்கு வழங்கியுள்ளார். அவைகளில் இதுவரை 75 பரிந்துரைகள் மீது முடிவெடுக்கத் தக்க ஆணைகளைப் பிறப்பித்துள்ளது. மாவட்ட வருவாய் அலுவலகங்கள் விரைவாகப் பணியாற்ற விதி முறைகளை எளிதாக்கும் வகையில் இந்த ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

**தக்காவிக் கடன்கள் தள்ளுபடி**

தக்காவிக் கடன்கள் தொடர்பாக விவசாயிகள் கொடுத்த மனுவைக் கருதிப் பார்த்து அரசு கடன் தொகை வசூலைத் தள்ளுபடி செய்யுமாறு ஆணைகள் பிறப்பித்து 31-12-80 தேதி உள்ளவாறு 21,41,98,812 ரூபாய் தள்ளுபடி செய்தது. இதனால் 9,46,029 விவசாயிகள் பயனடைந்தனர்.

**கடன் நிவாரணம்**

தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டத்தின் கீழ் ஏழைக் கடனாளிகள்

14-7-1978ம் நாளுக்கு முன்னர் வாங்கிய கடன்களைக் குறைக்க வகை செய்யப்பட்டது. குறைக்கப்பட்ட கடனை மொத்தமாகச் செலுத்துவது கடனாளிகளுக்குச் சிரமமாக இருக்கும் என்பதை அரசு உணர்ந்து, குறைக்கப்பட்ட கடனை மூன்று தவணைகளில் திரும்பிச் செலுத்த வகை செய்யும் அளவில் தமிழ்நாடு 1980-ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள் மற்றும் கடன் நிவாரணச் சட்டங்கள் (திருத்தச்) சட்டம் 23-10-1980-ல் அமலுக்குக்கொண்டு வந்தது. மேலும் தமிழ்நாடு 1976-ம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டம், தமிழ்நாடு 1979-ம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டம் மற்றும் 1980-ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டம் ஆகியவைகளின் கீழ் நிவாரணம் பெற அனுமதிக்கப்பட்டுள்ள காலம் வரை அடகு வைக்கப்பட்டுள்ள காலங்கடந்த அடகுப் பொருட்களை அடகுக் கடைக்காரர்கள் ஏலத்தில் விற்றுவிடாமல் இருக்க மேற்கூறிய சட்டத்தில் தடை விதிக்கப்பட்டது. மேலும் 1980-ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டத்தின் கீழ் கடனாளிகள் மனுச் செய்ய அனுமதிக்கப்பட்டிருந்த காலக் கெடு போதவில்லையென அரசுக்கு முறையீடு வந்ததால் 31-12-80ஆம் நாளோடு முடிவடைந்த காலக்கெடுவை 30-6-81ஆம் நாள் வரை நீட்டிக்க வகை செய்யும் அளவில் ஒரு திருத்தச் சட்ட முன்வடிவு சட்டப் பேரவையில் 3-4-1981 அன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

**வேளாண்மை வருமான வரிச் சலுகைகள்**

தமிழ்நாட்டில், வேளாண்மை வருமானத்திற்குவரிவிதிக்கும் சட்டம், 1955-ஆம் ஆண்டிலிருந்தே நடைமுறையில் இருந்து வந்த போதிலும், 1980-ஆம் ஆண்டுக்குப் பின்னர்தான், அதாவது 1979-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை வருமான வரி (திருத்த) சட்டம் கொண்டுவரப்பட்ட பின்னர்தான் வேளாண்மை வருமானவரி விதிக்கப்பட்டவர்களுக்கு நியாயமான சலுகைகள் வழங்கப்பட்டன. மேற் சொன்ன திருத்தச் சட்டத்தின் வாயிலாகக் காம்பவுண்டிங் முறையிலான இணக்கமுறை வரி விதிப்பிற்குரிய நில அளவு 10 ஸ்டாண்டர்டு ஏக்கரிலிருந்து 20 ஸ்டாண்டர்டு ஏக்கராகவும், வரிவிதிப்புத் தொகை ரூ. 5,000-லிருந்து ரூ. 10,000-மாகவும் உயர்த்தப்பட்டது. மேலும், சாதாரண ஏக்கரை ஸ்டாண்டர்டு ஏக்கராகக் கணக்கிடும் முறை 'பயிரைப் பொறுத்து' மாற்றி அமைக்கப்பட்டது. ஆகையால், வேளாண்மை வருமான வரி கட்டுவோரின் எண்ணிக்கை 71,724-லிருந்து 37,458 ஆகக் குறைந்தது. இதனால், பயன டைந்தோரின் எண்ணிக்கை 34,206 ஆகும்.

**வறட்சி நிவாரணப் பணி**

1980-81-ஆம் ஆண்டில் தென்மேற்கு, வடகிழக்குப் பருவ மழை பல இடங்களில் குறைவாகவே பெய்துள்ளது. வடார்க்காடு, புதுக்கோட்டை, தருமபுரி, தென் ஆர்க்காடு, இராமநாதபுரம் திருச்சிராப்பள்ளி, சேலம், தஞ்சாவூர், மதுரை, செங்கல்பட்டு, கன்னியாகுமரி, திருநெல்வேலி மற்றும் பெரியார், கன்னியாகுமரி மாவட்டங்கள் முழுமையாகவோ அல்லது பகுதிகளாகவோ வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளன.

புதிய ஆழ் கிணறுகள் தோண்டவும், ஏற்கனவே உள்ள கிணறுகளை ஆழப்படுத்தவும், நகராட்சி மன்றப் பகுதிகளில் தாற்காலிகத் திட்டங்களைப் போட்டு குடிநீர் வசதியைக் கூடுதலாக்கவும் பல்வேறு மாவட்டங்களுக்கு ரூபாய் 1095.05 லட்சத்திற்கு அரசு நிதி வழங்கியுள்ளது.

ஏரிகளிலும், குளங்களிலும் அல்லது அவற்றின் அருகில் கிணறுகளைப் போடுவதற்கென ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

குடிதண்ணீருக்காக மக்கள் நெடுந்தொலைவு போக ஏற்படும் பகுதிகளுக்கு லாரிகள், வண்டிகள் மூலம் தண்ணீரை எடுத்துச் சென்றுவிநியோகிக்கவும்தேவைப்பட்ட இடங்களில் வீதிகளில் உழைக்கும் மக்களைக் கொண்டு தண்ணீரை எடுத்துச் சென்று விநியோகிக்கவும் ரூ. 50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

நகராட்சிகள், பேரூராட்சிகளில் நீரேற்றுச் சாதனங்களுக்கு தொடர்ந்து மின் சப்ளை கிடைக்கும் வகையில் தனி மின் சப்ளை கம்பிகளைத் துணை மின் நிலையங்களிலிருந்து அமைப்பதற்கென ரூ. 50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆக மொத்தம் ரூ. 1295.05 லட்சம் குடிதண்ணீருக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் ஏழை மக்களுக்குப் பெருமளவில் வேலை வாய்ப்பு கிடைப்பதற்கு வழி செய்யும் வகையில் பெரிய நீர்ப்பாசன ஏரிகளைப் பழுது பார்க்கவும் கரைகளைப்



பலப்படுத்தவும், ஆறுகளில் கரைகளைப் பலப்படுத்தவும், புதிய குளங்களை அமைக்கவும் பொதுப்பணித்துறை மூலம் ரூ. 9.5கோடி செலவிட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாகச் சிறுபாசன ஏரிகளைப் பழுது பார்க்கவும் புதிய மண் சாலைகளை அமைக்கவும், ஊருணிகளை தூர் வாரி ஆழப்படுத்தவும், பழுது பார்க்கவும், கிராமங்களில் நீர் சேகரிப்பு குட்டைகளை அமைக்கவும் ரூ. 3 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயிர்களின் விளைச்சல் 37 பைசாவுக்கும் குறைவாக (50 சதவீதம்) விளைந்த நிலங்களுக்கு நிலவரி, உள்ளூர் வரி, தண்ணீர் தீர்வை, தனித் தண்ணீர் தீர்வை, பணப்பயிர் தீர்வை தள்ளுபடி செய்துள்ளது. ஒருவருக்குச் சொந்தமான நிலங்களில் பாதிக்கு மேல் (50 சதவீதம்) நிலவரித் தள்ளுபடி செய்யத் தகுதி உள்ளதாக இருந்தால் அவர்களுக்கு அரசுக் கடன், நிலவரி, உள்ளூர் வரி, நிலுவைகள் வசூலை அடுத்த ஆண்டிற்கு ஒத்தி வைத்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. வட ஆர்க்காடு, இராமநாதபுரம், புதுக்கோட்டை, தென் ஆர்க்காடு, தர்மபுரி, மதுரை, சேலம், செங்கல்பட்டு, தஞ்சாவூர் மாவட்டங்களுக்கு நிலவரிச் சலுகை அளிக்கப்பட்டுள்ளது.

வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கால் நடைத் தீவன தட்டுப்பாட்டுக்கு நிவாரணமாக ரூ. 20 லட்சம் அளவில் வைக்கோலை அரசுப் பண்ணைகளிலிருந்தும் அண்டை மாநிலங்களிலிருந்தும் வாங்கி விநியோகிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டு உள்ளது.

வேர்க்கடலை எண்ணெய் வித்துக்களை வாங்கி சேமித்து வைத்து தக்க சமயத்தில்

வறட்சிப் பகுதிகளிலுள்ள சிறு விவசாயிகளுக்கு விநியோகம் செய்ய ரூ. 32 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மொத்தம் வறட்சி நிவாரணப் பணிகளுக்காகவே, பல்வேறு இனங்களின் கீழ் இதுவரை சுமார் 31.67 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**பகுதி நேர கிராம அதிகாரிகள் பதவி நீக்கம்**

தமிழ்நாட்டில் தொன்று தொட்டு கிராமாதிகாரிகள் பகுதிநேரப் பணியாளர்களாக இருந்து வந்தனர். பகுதி நேரக் கிராம அலுவலர் என்னும் முறை காலத்திற்கு ஒவ்வாதமுறையென்றும், கிராம நிர்வாகத்தின் நவீன தேவைகளுக்கு அவைபொருந்துவதாக இல்லை என்றும் அரசு கருதிற்று. நிர்வாக அவசியத்தை முன்னிட்டும், வளர்ச்சித் திட்டங்களை கிராமஅளவில் விரைவாகச் செயல்படுத்த வகைசெய்யவேண்டும் என்பதற்காகவும் முழு நேர கிராம நிர்வாக அதிகாரிகளை நியமிக்கும் முறையை உடனே கொண்டுவர, அரசு கருதியதால் ஆளுநர் அவர்களால் 1980-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 13-ஆம் நாள் பிறப்பிக்கப்பட்ட அவசரச் சட்ட மூலம் பகுதிநேர கிராமாதிகாரிகள் பதவிகள் நீக்கப்பட்டன. பதவி விலகும் பகுதி நேர கிராமாதிகாரிகளுக்குப் பதவி வகித்த பணிக் காலத்தின் ஒவ்வொரு ஆண்டிற்கும் அரை மாத ஊதியம் என்று கணக்கிடப்பட்டு ஒரு தொகை வழங்கப்படும்.

இதனை எதிர்த்து முன்னாள் கிராமாதிகாரிகள் உச்ச நீதி மன்றத்தில் தொடுத்த ரிட்மனுக்கள் முடிவுற்ற பின்னர் முழு நேர கிராம நிர்வாக அதிகாரிகள் நியமனம் செய்யப்படுவர். இடைக்கால ஏற்பாடாக வருவாய் ஆய்வாளர்கள் கிராம நிர்வாக அலுவலராகப் பணியாற்றி வருகின்றனர்.



**வருவாய் வாரிய நீக்கம்**

திறமைமிக்க நிர்வாகத்திற்காகவும் விரைவான நடவடிக்கைகளுக்காகவும், இந்த அரசு, 1980-ஆம் ஆண்டு வருவாய் வாரிய நீக்கச் சட்டம் 3-வது வருவாய் வாரியத்தை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகக் கீழ்க்கண்ட பிரிவின்படி தனித்தனித் துறைகள் ஒவ்வொரு ஆணையரின் கீழ் உருவாக்கப்பட்டன :—

(1) போக்குவரத்துத்துறை:

(2) வணிக வரித்துறை

(3) வருவாய் நிர்வாகத்துறை

(4) நில நிர்வாகத் துறை

(5) நிலச் சீர்திருத்தத் துறை

(6) மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை

இந்தத் துறைகள் நேரடியாக அரசுக்குக் கடமைப்பட்டவை. தலைமைச் செயலகத்தில் அந்தந்த நிர்வாகத் துறைகளின் கீழ் இத்துறைகள் செயல்பட்டு வருகின்றன.

அன்றாட நிர்வாகம் விரைவாகவும், திறமையாகவும் நடைபெற, வருவாய் வாரியம் இது வரை செலுத்தி வந்த அதிகாரங்களை அரசுக்கும் புதிய துறைத் தலைவர்களான ஆணையாளர்களுக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் தக்கவாறு பகிர்ந்து வழங்கப்பட்டுள்ளன.

**நிலங்கள் வீட்டு மனைகள் ஒப்படை செய்தல்**

நிலமற்ற ஏழைகளுக்குத் தரிசு நிலங்கள் ஒப்படை செய்யும் திட்டமும், வீடில்லாஏழைகளுக்கு வீட்டு மனைகள் ஒதுக்கும் திட்டமும் திறம்பட செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1-6-1980 முதல் 28-2-81 வரை நிலப் பட்டாக்களும், வீட்டுமனைப் பட்டாக்களும் கொடுக்கப்பட்ட விபரங்கள் :—

நிலப்பட்டா:-

| ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் | | ஏனையோர் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|
| பட்டாக்களின் எண்ணிக்கை | பரப்பளவு ஏ. செ. | பட்டாக்களின் எண்ணிக்கை | பரப்பளவு ஏ. செ. | பட்டாக்களின் எண்ணிக்கை | பரப்பளவு ஏ. செ. |
| 1202 | 1002.68 | 10,266 | 10614.20 | 11,468 | 11616.88 |

வீட்டுமனைப் பட்டா:-

| ஆதிதிராவிடர் | பழங்குடியினர் | ஏனையோர் | மொத்தம் |
|---|---|---|---|
| 10,602 | 362 | 38,294 | 49,238 |

பட்டுப்பூச்சி வளர்க்கும் தொழிலை மேம்படுத்தும் பொருட்டு, தர்மபுரி, மாவட்டம் ஒசூர் வட்டத்தில் சில கிராமங்களில் 15,511.74 ஏக்கர் அரசு நிலத்தில் நிலம் குத்தகைக்கு விடப்பட்டது. இந்தத் திட்டம் எதிர்பார்த்த பலனைத் தராததால் இந்நிலங்களைக் குத்தகைதாரர்களிடமிருந்து திரும்பப்பெற்று நிலமற்ற ஏழைகளுக்கு ஒப்படை செய்ய ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகரத்தில் ஆங்காங்கே பரவிக்கிடக்கின்ற ஆட்சேபணையற்ற குடிசைப் பகுதிகளைக் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் மேம்பாட்டுப்பணிகளை மேற்கொண்டு அனுபவதாரர்களிடமிருந்து மனை ஒன்றிற்கு 7,700 ரூபாய் வீதம் மேம்பாட்டுச் செலவுடன் ஐந்தாண்டு தவணை முறையில் வசூலித்து குத்தகை விற்பனைப் பத்திரம் எழுதிக் கொடுக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இத்திட்டத்தால் அதிக பட்சமாக அரை மனை அளவுள்ள நிலம் ஆக்கிரமிப்பாளர்களுக்கு வழங்கப்படும்.

**மறுவாழ்வு**

9-6-80 முதல் 31-3-81 வரை இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய குடும்பங்களில் 4,766 குடும்பங்கள் தேயிலைத் தோட்டங்களிலும் கூட்டுறவு நூற்பாலைகளிலும் தாயகம் திரும்பி

யோர் கூட்டுறவு வங்கித் திட்டத்திலும், விவசாயம், மற்றும் விவசாயத் தொடர்புள்ள பண்ணைகளிலும், வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். பர்மாவிலிருந்து தாயகம் திரும்பிய 38 குடும்பங்களுக்கும், வியத்நாமிலிருந்து தாயகம் திரும்பிய 11 குடும்பங்களுக்கும் வியாபாரக் கடன் அளிக்கப்பட்டுள்ளது. இவ்விதமாகக் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களுக்கு ரூ. 69.46 இலட்சம் மானியமாகச் செலவிடப்பட்டுள்ளது. இதைத் தவிர சுமார் ரூ. 135 இலட்சம் வியாபாரக் கடன் போன்ற இதர திட்டங்களை அமுல்படுத்துவதற்காகக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.



இந்த மறு வாழ்வுத்திட்டங்கள் மத்திய அரசினால் அங்கீகரிக்கப்பட்டு, மத்திய அரசினால் மானியமாகவும், கடனாகவும், வழங்கப்படும் நிதி உதவிகளுடன் செயல்படுத்தப்படுகின்றன.

## வருவாய் அலுவலருக்கான வசதிகள்

வருவாய் அதிகார வரம்பு: 1980-81-ல் வருவாய் ஆய்வாளர்களின் பணியினைத் துரிதமாக பைசல் செய்யும் வகையில் 73 புதிய பிர்க்காக்கள் அமைக்கப்பட்டுள்ளன. தற்சமயம் 1097 பிர்க்காக்கள் இம்மாநிலத்தில் உள்ளன.

கட்டிடங்கள் : 1980-81 வருவாய் ஆய்வாளர்களுக்கு அலுவலகம் சேர்ந்த குடியிருப்பு 208 இடங்களில் கட்டிக் கொடுக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதுவரை மேற்படி கட்டிடங்கள் கட்ட ஆணையிடப்பட்டுள்ள 558 இடங்களில் 235 இடங்களில் மேற்படி கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.





1980-81-ல் புதுக்கோட்டை மற்றும் தர்மபுரியில் உள்ள 2 மாவட்ட வருவாய் அதிகாரிகள், உசிலம்பட்டி, புதுக்கோட்டை மற்றும் நாகர்கோயில் ஆகிய இடங்களில் 3 கோட்டாட்சியர் 14 வட்டாட்சியர் மற்றும் 40 துணை வட்டாட்சியர்களுக்கு வாடகை வீடு திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டிக் கொடுக்க ஆணையிடப்பட்டுள்ளது.

அலுவலகக் கட்டிடங்கள் : 1980-81-ல் திருச்சிராப்பள்ளி மற்றும் வேலூரில் உள்ள மாவட்ட ஆட்சியரின் அலுவலகங்களுக்குக் கூடுதல் கட்டிடங்கள் கட்டுவதற்கு ரூ. 5 இலட்சம் வீதம் மொத்தம் ரூ. 10 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வாண்டில் நத்தம், ராஜபாளையம் மற்றும் கோத்தகிரி வட்டாட்சி அலுவலகங்களுக்குப் புதிய கட்டிடங்கள் கட்டவும், காஞ்சீபுரம், தஞ்சாவூர் மற்றும் சங்கரி கோட்டாட்சியர் அலுவலகங்களுக்குப் புதிய கட்டிடங்கள் கட்டவும் ரூ.10 இலட்சம் அனுமதித்து. ஆணையிடப்பட்டுள்ளது. இவை தவிர புரசைவாக்கம்—பெரம்பூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டிடம் கட்ட ரூ. 5.31 இலட்சம் அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் மயிலாப்பூர்-திருவல்லிக்கேணி வட்டாட்சியர் அலுவலகம் இணைந்த அரசுக் கட்டிடங்கள் கட்டுவதற்கு நில எடுப்பிற்காக ரூ. 7 இலட்சம் அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளது.

மாவட்ட வருவாய் அலுவலகங்களில் 90 இடங்களில் கழிப்பறைகள் கட்ட 1980-81-ல் ரூ. 10 இலட்சம் செலவு செய்யவும், 29 வருவாய் அலுவலகங்களில் கூடுதலாகக் கட்டிடம் கட்டுவதற்கு ரூ. 10 இலட்சம் செலவு செய்யவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஜீப்புகள் : 1980-81-ல் வட்டாட்சியர்களின் அலுவலக உபயோகத்திற்காக 28 ஜீப்புகள் வாங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மரச்சாமான்கள் : 1980-81-ல் வருவாய் அலுவலகங்களில் செப்பனிடப்படமுடியாத பழைய பயனற்ற மரச்சாமான்களுக்குப் பதிலாகப் புதிய மரச்சாமான்கள் வாங்குவதற்கு ரூ. 10 இலட்சம் செலவு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. 1981-82-லும் இதே காரியத்திற்கு மேலும் ரூ. 10 இலட்சம் செலவு செய்ய ஆணையிடப்பட்டுள்ளது.



# தன்னிறைவுத் திட்டம்:

# ஓராண்டுச் சாதனைகளும் வருங்கால வாய்ப்புக்களும்

பரந்து கிடக்கும் நம் நாட்டின் வளர்ச்சி ஊர்ப்புறங்களின் முன்னேற்றத்தில் உள்ளது என்றால் அது மிகையாகாது. நாட்டின் பெரு நகரங்கள், தொழில் நகரங்கள் போன்றவைகளும் தங்களின் முக்கிய தேவைகளான உணவு, உடை, போன்ற மூலப் பொருள்களுக்கு ஊர்ப்புறங்களையே சார்ந்து இருக்கின்றன.

கடந்த ஐந்து ஐந்தாண்டுத் திட்டங்களில் எண்ணற்ற வளர்ச்சிப் பணிகள் மேற் கொண்ட போதிலும், பெருகி வரும் மக்கட் தொகையால் கிராமச் சமுதாயம் தனது அடிப்படைத் தேவைகளை முழுமையாகப் பெறமுடியாத ஒரு நிலை இருந்து வந்தது.

குடி தண்ணீருக்காகப் பல கல் தூரம் செல்லும் கிராம மக்கள், உற்பத்தி செய்யும் விளைப் பொருள்களைச் சந்தைக்கு எடுத்துச் செல்ல சாலை வசதியில்லாத கிராமங்கள், கல்வி அறிவைப் பெருக்கிக் கொள்ள வசதிகள் இல்லாத—அதாவது பள்ளிக் கட்டடம் இல்லாத—சிற்றூர்கள், தாய் நலம், சேய் நலம் பேணி வளர்க்க வசதியில்லாத கட்டடமற்ற தாய் சேய் நிலையங்கள், கிராம மருத்துவக் கட்டடங்கள் இல்லாத நிலை போன்ற பல இடர்ப்பாடுகள் இன்னும் கிராமங்களில் இருப்பதை உணர்ந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் அவைகளை உடனடியாகக் களைய வேண்டும் என்று மேற்கொண்ட உறுதியான எண்ணத்தின் விளைவே, தன்னிறைவுத் திட்டம். இத்திட்டம் மூன்று ஆண்டுக் காலத்திற்குள் முடிக்கப்பட வேண்டும் என்ற காலக் கெடுவினையும் நிர்ணயித்துள்ளார்கள்.

கிராமங்களின் தேவைகள் மிக அதிகமானவை. இத்திட்டத்தைத் தொடங்கு முன் தமிழ் நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் ஒன்றியங்கள் மூலமாக நடத்தப்பட்ட ஆய்வு, நிறைவேற்ற வேண்டிய படிகளை எடுத்துக் காட்டியது. குடிநீர் வழங்குதல், சிறு பாலங்கள் உட்பட்ட இணைப்புச் சாலைகள் அமைத்தலும், மேம்படுத்தலும், ஆதிதிராவிட குடியிருப்புக்களுக்கு மயான சாலை வசதிகள் ஏற்படுத்துதல், சிறு பாசன ஆதாரங்களை மேம்படுத்துதல், கிராம மருந்தகங்கள், தாய்-சேய் நிலையங்கள், பள்ளிக் கட்டடங்கள் மற்றும் ஆதி திராவிட மக்களுக்காக வீடுகள் கட்டுதல் போன்றவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து முதற்படியாக இத்திட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

12,603 குடியிருப்புக்களுக்குக் குடிநீர் வசதி, 29,566 கி. மீ. நீளமுள்ள இணைப்புச் சாலைகாள் மேம்படுத்தல், 27,718 சிறு பாலங்களைக் கட்டுதல், 5,268 கி.மீ. நீளமுள்ள ஆதி திராவிட குடியிருப்புக்களுக்கு மயான சாலைகள் அமைத்தல், 7,133 பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல், 12,226 சிறுபாசன ஆதாரங்கள் மேம்படுத்தல், 455 ஊர்ப்புற மருந்தகங்களுக்கும், 1,262 தாய்-சேய் நல விடுதிகளுக்கும் கட்டடங்கள் கட்டுதல் போன்றவைகள் இத்திட்டத்தால் நிறைவேற்றப்பட வேண்டியவைகளாகும்.

அரசின் நிதி வசதி, திட்டத்திற்குக் கட்டுமானத் தேவைப் பொருட்களாகிய சிமெண்ட், இரும்பு, குழாய்கள் மற்றும் ஏனைய கட்டுமான பொருட்கள் இயந்திரச் சாதனங்கள், பணிகளை மேற்கொள்ளும் பணியாளர்கள் போன்றவைகள் முழுமையாக குறுகிய காலத்தில் கிடைக்க முடியாத நிலையினால் இத்திட்டம் 3 ஆண்டுக் கால கட்டத்தில் நிறைவேற்ற திட்டமிடப்பட்டது.

முதற் கட்டத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏறக்குறைய 5 வட்டாரம் என 69 வட்டாரங்களில் 1980-81 ஆம் ஆண்டில் இத்திட்டம் செயலாக்கத்தில் கொண்டு வரப்பட்டது. இரண்டாவது கட்டமாக 150 வட்டாரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு 1981-82ஆம் ஆண்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். மூன்றாவது கட்டமாக, மிகுதியாக உள்ள 157 வட்டாரங்களில் இத்திட்டம் 1982-83ஆம் ஆண்டில் செயல் படுத்தப்படும்.

இத்திட்டம் 1980-81ஆம் ஆண்டு முதற்கட்டமாகிய 69 வட்டாரங்களில் சுமார் 45.41 கோடி ரூபாய் மதிப்பீட்டுத்தொகையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 2,045 குடியிருப்புகளுக்கு 21 கோடி ரூபாய் செலவில் குடிநீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்கத் திட்டமிட்டு அவற்றில் 1334 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது. 4,220 கி.மீ. நீளமுள்ள இணைப்புச் சாலைகளுக்கு 12.21 கோடி ரூபாய் செலவில் இணைப்புச்சாலைகளை மேம்படுத்த எண்ணி அவற்றில் 3,138 கி.மீ. சாலைப் பணி முடிக்கப்பட்டுள்ளது. ஆதி திராவிடக் குடியிருப்புக்களுக்கு மயான சாலை வசதிகள் மேற்கொள்ளும் பணியில் 1.43 கோடி ரூபாயில் 950 கி.மீ. நீளமுள்ள சாலைகளின் வேலைகளை மேற்கொண்டு 413 கி.மீ. சாலைப்

பணி முடிக்கப்பட்டுள்ளது. 1.3 கோடி ரூபாய் செலவில் 4,150 சிறுபாலங்கள் அமைக்க திட்டமிடப்பட்டு 1,248 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 23

இலட்சம் ரூபாய் செலவில் 683 பாசன குளங்களை மேம்படுத்த பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 1.194 கோடி ரூபாய் செலவில் 71 மருந்தகங்களும் மற்றும் 228 தாய் சேய் நல விடுதிகளும் கட்டி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. 5.45 கோடி ரூபாய் செலவில் 1,364 பள்ளிக் கட்டடங்கள் கட்டி முடிக்க வகை செய்யப்பட்டுள்ளது. 5,418 ஆதி திராவிடர்களுக்கு வீட்டு வசதிசெய்து தரப்பட்டுள்ளது. திட்டமிடப்பட்டுள்ள பணிகளில் எஞ்சிய பணிகள் தொடர்ந்து மேற்கொண்டு ஓர் இரண்டு மாதங்களில் முழுமையாக முடிக்கப்பட்டு விடும். இச் சாதனையில் நூறு சதவிகித முன்னேற்றம் அடைய இயலாத நிலைமைக்கு முக்கிய காரணம் கட்டுமான பொருட்களான எஃகு, சிமெண்ட் சரளைக் கற்கள், எந்திரச் சாதனங்கள், குழாய்கள் போன்றவை தட்டுப்பாடாக உள்ளன. இம் மாபெரும் திட்டத்தை நிறைவேற்றுவதில் ஊராட்சி ஒன்றியங்கள் தம்மை முழுமையாக ஈடுபடுத்தியுள்ளன. சுமார் 60 லட்சம் ரூபாய் மதிப்புள்ள பணிகளை ஒவ்வொரு ஒன்றியமும் ஏற்று செயல்படுத்துவது, சாதாரணமாக, நிறைவேற்றும் பணிகளைப் போல் 6 முதல் 10 மடங்கு வேலை பளுவினை ஏற்று செயல்படுத்தும் நிலையில் உள்ளது.

நடப்பு ஆண்டில் இத்திட்டம் 150 வட்டாரங்களில் சுமார் 109.76 கோடி ரூபாய் மதிப்பில் தன்னிறைவுத் திட்டம் மேற்கொள்ளப்படும். அவை:



12,334 கி. மீ. நீளமுள்ள இணைப்புச் சாலைகள்.

4,222 குடியிருப்புக்களுக்குக் குடிதண்ணீர் வசதி.

ஆதி திராவிட குடியிருப்புக்களுக்கு 2,037 கி.மீ. நீளமுள்ள மயான சாலைகள் அமைத்தல்.

11,440 சிறு பாலங்கள் கட்டுதல்.

3,520 சிறுபாசன ஆதாரங்களை மேம்படுத்துதல்.

192 ஊர்ப்புற மருந்தகங்கள் கட்டுதல்.

495 தாய் சேய் நல விடுதிகள் கட்டுதல்.

2,312 பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல்.

15,000 ஆதி திராவிட குடியிருப்புகள் கட்டுதல்.

தன்னிறைவுத் திட்டப் பணிகளோடு மனமகிழ் மன்றங்கள், பெண்களுக்காகப் பொதுக் கழிப்பிடங்கள் போன்ற சிறப்புத் திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் மக்கள் பங்கேற்கும் வகையில் பல ஒன்றியமும் 5 முதல் 60 விழுக்காடு வரை அவைகளின் நிலைக்கேற்ப பங்குத் தொகையாக ஏற்றுக் கொள்ளல் வேண்டும். இத்தகைய மிகப் பெரும் முதலீட்டை ஏற்றுக் கொள்ள இயலாத நிலையில் உள்ள ஒன்றியங்களுக்கு உதவும் வகையில் ரூபாய் 3.59 கோடி அரசு கடனாக வழங்கியுள்ளது.



இம்மாபெரும் பணியினை மேற்கொள்ளும் வகையில் கூடுதலான பொறியாளர், கணக்கர் மற்றும் இதர பதவிகளைத் தேவையான அளவுக்கு அரசு ஏற்படுத்தியுள்ளது.

இத்திட்டம் நன்முறையில் நடைபெற மாவட்ட அளவில், மாநில அளவில், குழுக்கள் ஏற்படுத்தி அரசுக்கு ஆலோசனை கூற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சுருங்கக் கூறின், கிராமங்கள் புத்துணர்ச்சியும் புதுப்பொலிவையும் பெற்று கிராமப்புற வாழ்வை பொருள் பொதிந்த விருப்பு மிகுந்த வாழ்வாக மாற்றும் திட்டமே தன்னிறைவுத் திட்டமாகும்!



# தமிழ் நாட்டில் கல்வி வளர்ச்சி

தமிழ்நாட்டில் கல்வித்துறையில் கடந்த ஓராண்டில் நிகழ்ந்துள்ள வளர்ச்சிச் சாதனைகள் பலவாகும்.

**பள்ளிக் கல்வி :**

பள்ளிக் கல்வித்துறையில் வியத்தகு சாதனைகள் பல நிகழ்ந்துள்ளன. குறிப்பாகத் தன்னிறைவுத் திட்டத்தின் வழி, தன்னிகரில்லாச் சாதனைகளை ஏற்படுத்த இயன்றது. நம் மேல்நிலைக் கல்வியின் வளர்ச்சியோ மற்ற மாநிலங்கள் கண்டு வியக்குமளவுக்கு உயர்ந்தது. 1977-78ஆம் ஆண்டில் பள்ளிக் கல்விக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 130 கோடி. இத் தொகை 1980-81இல் ரூ. 183 கோடியாகவும், 1981-82இல் 207 கோடியாகவும் வளர்ந்துள்ளது. கல்விப் பலனைப் பெறுவதற்கு, மாணவ மாணவியரைப் பள்ளிகளில் சேர்க்கப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வகையில் 1980-இல் 64 தொடக்கப் பள்ளிகளும், 78 நடுநிலைப் பள்ளிகளும், 110 உயர்நிலைப் பள்ளிகளும் துவக்கப்பட்டுள்ளன்.

1976-77 முதல் 1980-81 முடிய வரலாறு காணாத வகையில் சுமார் 15,000 (பல்வகை நிலை) ஆசிரியர் பணியிடங்கள் அனுமதிக்கப் பட்டுள்ளன. 1981-82இல் 2,150 பணியிடங்கள் புதிதாக ஏற்படுத்தப்படும். மதிய உணவுத் திட்டத்தில் 1976-77இல் 19.80 இலட்சம் பள்ளிக் குழந்தைகள் பயனடைந்தனர். இத்திட்டத்திற்கு உதவியாக மைய சமையற்கூடங்கள் கட்டப்பட்டுள்ளன. 1980-81இல் 20.25 இலட்சம் பள்ளிக் குழந்தைகள் பயனடைந்தனர். இராமநாதபுரத்தில் ஐந்து சமையற்கூடங்கள் கட்டப்பட்டுள்ளன. இத் திட்டத்தை மேற்பார்வையிட மேலும் 9 களப் பணி அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர்.

ஏழ்மையிலுள்ள குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்கு உதவும் வகையில் 13 இலட்சம் மாணவர்களுக்கு (1-3 வகுப்புகள்) இலவசப் புத்தகங்கள், கற்பலகைகள் வழங்கப்பட்டுள்ளன. ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளில் பயிலும் ஆங்கிலோ இந்திய மாணவர்களுக்கு 1978-79 முதல் கற்பித்தல் கட்டணங்கள் நீக்கப்பட்டுள்ளன. பிற்பட்டோருக்கான இட ஒதுக்கீடு 50 விழுக்காடு ஆகச் செய்யப்பட்டுள்ளது. கிராமப்புற மாணவர்களுக்கான படிப்புதவித் திட்டத்தின் கீழ் 1978-79 முதல், ஆண்டுக்கு ஓர் ஒன்றியத்திற்கு 4 மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன.

தாழ்த்தப்பட்ட மக்கள் மிக அதிக அளவில் வாழும் கிராமங்கள் தமிழகத்தில் 3341 உள்ளன. அவற்றுள் 94.6 விழுக்காடு கிராமங்களுக்கு ஒரு கிலோ மீட்டர் தொலைவிற்கு உள்ளாகவே பள்ளி வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. 1980-81இல் 110 உயர்நிலைப் பள்ளிகள் புதிதாகத் திறக்கப்பட்டன. 1980-81 முடிய 1018 உயர்நிலைப் பள்ளிகளில் அறிவியல் கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 1980-81ஆம் ஆண்டு முதல், அரசுப் பள்ளிகளுக்கு ரூ. 98,000மும், அரசினரல்லாத பள்ளிகளுக்கு ரூ. 60,000-மும் என மானியம் அதிகரிக்கப்பட்டுள்ளது. 1—3 வகுப்புகளில் பயிற்றுவிக்கும் 15,000 இளநிலை (ஹையர்கிரேடு) ஆசிரியர்களுக்குத் தமிழ்நாடு கல்வி ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனம் 300 சிறப்பு மறுபயிற்சி வகுப்புகளை நடத்தியுள்ளது. 1980-81ஆம் ஆண்டு வரை 1243 மேல் நிலைப் பள்ளிகள் திறக்கப்பட்டன. 1979-80 மற்றும் 1980-81 ஆகிய



இரண்டு ஆண்டும் சேர்ந்து மேல் நிலைப் பள்ளிகளில் 11, 12-ஆம் வகுப்புகளில் 2.58 இலட்சம் மாணவர்கள் படிக்கின்றனர். கிராமப்புற மாணவர்கள் இதனால் பயன் அதிகம் பெற முடிகின்றது. இதில் 22 விழுக்காடு அதாவது 57,093 மாணவர்கள் தொழிற் பாடங்கள் பயில்வது ஒரு அகில இந்தியச் சாதனையாகும். 1978-79, 1979-80 ஆண்டுகளில் தொடங்கிய 477 அரசு மேல் நிலைப் பள்ளிகள் ஒவ்வொன்றிற்கும் ஒரு வகுப்பறையும், ஒரு ஆய்வுக் கூடமும் கட்ட மொத்தத்தில் பெருந்தொகையாக ரூ. 8 கோடிக்கு மேல் அரசு ஏற்பளித்தது; 400 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன.

**கல்லூரிக் கல்வி :**

கல்லூரிக் கல்வியின் தரத்தினை உயர்த்துவதிலும் கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களின் பணி நிலைகளை மேம்படுத்துவதிலும் கல்லூரிக் கல்வித்துறை 1980-81-ஆம் ஆண்டில் அதிக அளவில் முன்னேற்றம் கண்டுள்ளது. பள்ளிகளில் மேல்நிலைப்படிப்புகள் ஏற்படுத்தப்பட்டதன் விளைவாக கல்லூரிகளிலிருந்து புகுமுக வகுப்புகள் அகற்றப்பட்டன. இதனால் கல்லூரிகளில் இடவசதி ஏற்பட்டதால் புகுமுக வகுப்புகள் தொடங்கப்பட்டன. மேலும் மேல்நிலைப் படிப்பு மாணவர்கள் அதிக அளவில் கல்லூரிகளுக்குச் சேர வந்ததனால் அதற்குத் தகுந்தாற்போல் பட்ட வகுப்புகள் புதிதாகத் துவக்கப்பட்டன. 1980 81இல் 80 பட்டப் படிப்பு வகுப்புகளும் 53 பட்டமேற் படிப்பு வகுப்புகளும் தமிழ்நாட்டிலுள்ள கல்லூரிகளில் தொடங்கப்பட்டன.

கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் குறைபாடுகளைப் பேசித் தீர்க்க உதவும் வகையில், மூன்று நலக் குழுக்கள் ஒவ்வொரு கல்லூரியிலும் அமைக்கப்பட்டுள்ளன. மானியம் பெறும் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதோருக்கு 1-4-80 முதல் நேரடிச்சம்பளம் வழங்கும் திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 10 (ஏ) (1) விதியின் கீழ் நியமனம் செய்யப்பட்டவர்களின் பணியை ஒழுங்குபடுத்தச் சிறப்புத் தேர்வுகள் தமிழ்நாடு தேர்வாணைக் குழுவால் நடத்தப்பட்டன. 224 உதவிப் பேராசிரியர்களும், 160 பயிற்றுநர்களும், விளக்குநர்களும் தமிழ்நாடு தேர்வாணைக் குழுவால் தேர்வு செய்யப்பட்டார்கள். கல்லூரிகளில் மிகுதியாக இருந்த 397 ஆசிரியர்கள் வேறு கல்லூரிகளில் உள்ள ஒழிவிடங்களுக்குப் பணி மாற்றப்பட்டுள்ளனர். அரசு மானியம் பெறும் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதோர் தற்போது அரசினர் கல்லூரி ஊழியர்களைப் போலவே முழு ஓய்வுச் சலுகைகள் வழங்கப் பெற்றுள்ளனர். அவர்கள் ஓய்வு பெறும்போது பணிக் கொடை பெறவும் தகுதி வழங்கப்பட்டுள்ளது. பணியிலிருக்கும்போது அகாலமாய் இறக்கும் ஊழியர்களின் குடும்பத்திற்குக் கூட்டு ஆயுட்காப்புத் திட்டத்தின் கீழ் கொடுக்கப்படும் ரூ. 10,000 அரசு மானியம் பெறும் கல்லூரிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. தமிழ் மொழியில் பாடம் பயிலும் மாணவர்களை ஊக்கிடும் வகையில் இவ்வாண்டு ரூ. 32.5 இலட்சம் செலவு செய்யப்பட்டது.

**முறைசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி :**

தமிழகத்தில் உள்ள 374 ஊராட்சி ஒன்றியங்களின் முறைசாராக் கல்வி மையங்கள் அமைக்கப்பட்டன. இம் மையங்கள் 6-14 வயது பிரிவினர்களில் பெற்றோரின் பொருளாதார நிலை, சமூக சூழ்நிலை காரணமாக முறையான கல்வி ஒழுங்காகக் கிடைக்கப் பெறாமல் பள்ளியை இடையே விட்டவருக்கும், பள்ளியை எட்டிக் கூடப் பார்க்காமல் இருந்தோருக்குமாக அமைக்கப்பட்டது. பின்னர் உழவர் செயல்முறைத் திட்டத்தையும், முறைசாரா கல்வித் திட்டத்தையும் ஒன்றாக இணைத்து, கிராமியச் செயல்முறை எழுத்தறிவுத் திட்டமாகக் குமரி, சென்னை, நீலகிரி, பெரியார் ஆகிய இந்நான்கு மாவட்டங்கள் நீங்கலாக, ஏனைய 12 மாவட்டங்களில் அமல்படுத்தப்பட்டது. தொழில் திறனை வளர்க்க வேண்டும் என்ற நோக்குடன் வயது வந்தோர் கல்வி மையங்கள் மாநில அரசுத் திட்டத்தின் கீழும், கிராமிய செயல்முறை எழுத்தறிவுத் திட்டத்தின் கீழும் திறக்கப்பட்டன. இவ்வியக்ககம் எழுத்தறிவின்மையை அகற்றும் பெரிய பொறுப்பை ஏற்றுக் கொண்டதோடு 1978இல் இருந்து இதுவரை 4 இலட்சத்திற்கு மேல் எழுத்தறிவற்றோரைப் பயனடையச் செய்திருக்கிறது. நகர்வாழ் மக்களுக்காக நடத்தப்படும் 150 தொழிற் கல்வி மையங்கள் கைத் தொழிலோடு எழுத்தறிவையும் புகட்ட வழி வகுக்கிறது. இது 5 மாதக் கால அளவைக் கொண்டது. தமிழகத்தில் ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் நான்கு வீதம் 6-14 வயதுப் பிரிவினர்களுக்கு நான்கு முறைசாராக் கல்வி மையங்கள் நடைபெற்று வருகின்றன.

**தமிழ் நாட்டில் நூலகப் பணி :**

தமிழ்நாட்டில் மக்கள் எல்லோரும் படித்துப் பயன் பெறவும் அறிவை வளர்த்துக் கொள்ளவும், மாநிலம் அளாவிய நூலக இயக்ககம், சிறந்த முறையில் செயற்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் உள்ள எல்லா மாவட்டங்களிலும் (கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக) மாவட்ட மைய நூலகங்கள் உள்ளன. நகரங்களிலும், பேரூர்களிலும், சிற்றூர்களிலும் துணை நூலகங்கள் செயற்பட்டு வருகின்றன. நூலகப் பணித்துறையில் பணிபுரியும் நூலகப் பணியாளர்கள் அனைவரும் அரசுப் பணியாளர்கள் போலவே அரசுப் பணியாளர்கள் பெறும் சலுகைகள் அனைத்தையும் பெற இந்த அரசு ஆணையிட்டுள்ளது.

1954 முதல் 1974 வரை நூலகங்களில் இருந்த நூல்கள் 50 இலட்சங்கள்தான். 1979-



80 ஆண்டுக் கணக்கின்படி இப்போது 79 இலட்சம் நூல்கள் உள்ளன. கன்னிமாரா பொது நூலகத்தில் படிப்பவர்களுக்கு உதவும் பொருட்டு 5 குறிப்பு உதவியாளர்கள் பணியிடங்கள் 1-7-78 முதல் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 1-4-80 முதல் இந்த நூலகம் ஆண்டிற்குத் தேசிய விடுமுறையான 3 நாட்களைத் தவிர மற்ற எல்லா நாட்களிலும் திறந்து வைக்கப்பட்டு, காலை 8 மணி முதல் மாலை 8 மணி வரை செயற்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

திருச்சி மாவட்டத்தில் ரூ. 30 இலட்சம் மதிப்பீட்டில் மாவட்ட மைய நூலகத்திற்குப் பல அடுக்கு மாடிக் கட்டடம் ஒன்றைக் கட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சரவர்களால் 3-10-80இல் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் நகரில் ரூ. 25 இலட்சம் செலவில் வடக்குக் கோயம்புத்தூரில் ஒரு கட்டடமும், பெரியகடை வீதியில் ஒரு கட்டடமும் கட்ட ஆணையிடப்பட்டுள்ளது. சேலம் நகரில் 9.60 இலட்சம் மதிப்பீட்டில் மாவட்ட மைய நூலகக் கட்டடம் கட்டப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது. மறைந்த தமிழறிஞர் தேவநேயப் பாவாணர் அவர்களின் பெயரைச் சென்னை மாவட்ட மைய நூலகத்திற்கு வைக்க அரசு ஆணையிட்டுள்ளது. வேலூர் மாவட்ட மைய நூலகத்திற்குத் தந்தை பெரியாரின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. தமிழ்நாட்டு மக்களுக்குக் குறைந்த செலவில் சிறந்த படிப்பு அளிக்கும் வகையில் தமிழ்நாடு அரசின் பொது நூலகத்துறை அரும்பாடுபட்டு வருகிறது.

**தமிழ் வளர்ச்சி :**

அரசு அலுவலகங்களில் ஆட்சி மொழித் திட்டத்தை விரைவுபடுத்தும் பணிகளும், தமிழ் மொழி மற்றும் அதன் வளர்ச்சி குறித்த பணிகளும் தமிழ் வளர்ச்சித் துறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ் ஆட்சி மொழித் திட்ட முன்னேற்றம் குறித்து கடந்த ஓராண்டில் 10 மாவட்டத் தமிழ் வளர்ச்சி ஆய்வு உதவி இயக்குநர்கள் மாநிலம் முழுதும் 5,000 அரசு அலுவலகங்களை ஆய்வு செய்துள்ளனர். தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்கள் 36 துறைத் தலைமை அலுவலகங்களையும், 12 மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களையும், 12 சார்நிலை அலுவலகங்களையும் ஆய்வு செய்துள்ளார். 13 இளநிலை, இ.ஆ.ப. அலுவலர்களுக்கும், 7 தகுதிகாண் பருவத் துணை ஆட்சியர்களுக்கும் தமிழ் திட்டச் செயலாக்கம் பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டது தமிழில் போதிய தேர்ச்சியில்லாத 51 பேர்களுக்குத் தமிழ்த் தேர்வு நடத்தப் பெற்றது.

தமிழில் சிறந்த வரைவுகள், குறிப்புகள் எழுதும் பணியாளர்களுக்குப் பரிசளிக்கும் திட் டத்தின் கீழ்ச் சென்னை மாவட்டத்தில் மூவர் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசளிக்கப்பட்டனர். 16 மாவட்டங்களில், அரசு அலுவலர்கள், நகராட்சி, ஊராட்சி அலுவலகங்கள் ஆகிய வற்றில் பணியாற்றும் பணியாளர்களில் 115 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பரிசுகள் வழங் கப்பட்டுள்ளனர். பல்வேறு துறைகளின் 16 படிவங்கள் 30 நூல்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. 46 துறைகளின் சிறப்புச் சொற்கள் துணை அகராதிகள் அச்சிடப்பட்டுள்ளன.



சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசளிக்கும் திட்டத்தின் கீழ் 1973, 1974-க்கான நூல்களில் பரிசுக்குரியவை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. பரிசளிப்பு விழா 6-6-81 அன்று நடைபெற்றது. 1867 முதல் 1935 ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கு, தமிழ் நூல் விவர அட்டவணை தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. வெளி மாநிலங்களில் தமிழ் இருக்கையை நிறுவ 3 பல்கலைக் கழகங்களுக்கு ரூ. 21,730 நிதியுதவி அரசு வழங்கியுள்ளது. வெளி மாநிலங்களில் உள்ள பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் தமிழில் பகுதி நேரப் பட்டய வகுப்பு நடத்த மைசூர் இந்திய மொழிகள் மைய நிறுவனத்திற்கு ரூ. 15,000மும் நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது. அவை, முதிர்ந்த தமிழறிஞர்கட்கு நிதியுதவி அளிக்கும் திட்டத்தின் கீழ் இதுவரை 90 தமிழறிஞர்களுக்குத் திங்களொன்றுக்கு ரூ. 250 வீதம் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

அண்ணா பிறந்த நாள் விழாவில் சிறந்த எழுத்தாளர் ஒருவருக்கு 1979 முதல் திரு. வி. க. விருதாக ரூ. 10,000 வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருது 1979இல் எழுத்தாளர் திரு. ஜெகசிற்பியனுக்கும், 1980-இல் முதுபெரும் எழுத்தாளர் திரு. நாரணதுரைக் கண்ணன் அவர்கட்கும் வழங்கப்பட்டுள்ளது. 1978 முதல், அரசு சார்பில் பாவேந்தர் விழா நடைபெற்று வருகிறது. இவ்விழாவில் ஆண்டு தோறும் கவிஞர் ஒருவருக்குப் பாவேந்தர் விருது ரூ. 10,000 அளிக்கப்பட்டு வருகிறது. 1980-ஆம் ஆண்டில் கவிஞர் முத்துலிங்கம் அவர்களும், 1981-ஆம் ஆண்டில் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் அவர்களும் இவ்விருதினைப் பெற்றுள்ளனர். சிறப்பிலக்கிய மொழி பெயர்ப்புத் திட்டத்தின் கீழ் 1981-ல் Prophet, Dance of Siva, 100 poems of Soviet Literature ஆகிய நூல்கள் ஆங்கிலத்திலிருந்து தமிழிலும் ஞானரதம், பதிற்றுப்பத்து, அணிலாடு முன்றில் (Squirrel in the court yard) ஆகிய நூல்கள் தமிழிலிருந்து ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டுள்ளன.

1981-ஆம் ஆண்டு சனவரித் திங்களில் மதுரையில் நடைபெற்ற ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டில் தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறைக்கென இரு கண்காட்சி அரங்குகள் தமிழ் அறிஞர்கள் வியந்து பாராட்டத் தக்க வகையில் அமைக்கப்பெற்றன. அரசு

அலுவலகங்களில் ஆட்சி மொழித் திட்டத்தைச் செம்மையாகவும் முழுமையாகவும் நிறைவேற்ற மூவாண்டு முனைப்புத் திட்டம் ஒன்றை அரசு ஏற்படுத்தியுள்ளது. இதன்படி 1981-82-ல் முதற்கட்டமாகப் பின்வரும் 7 துறைகளில் தமிழ் முழுமையாகச் செயற்படுத்தப்படும்.

1. பத்திரப் பதிவுத்துறை
2. சீர்திருத்தப் பணித்துறை
3. தீயணைப்புத் துறை
4. சிறைத்துறை
5. கால்நடை பராமரிப்புத்துறை
6. தலைமைச் செயலகக் கல்வித்துறையின் கீழ் உள்ள துறைகள்
7. புள்ளியல் துறை

இத்திட்ட இறுதியில் 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்னும் நிலை மலரத் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### அரசுத்தேர்வுத் துறை

அரசுத் தேர்வுத்துறை தனி இயக்ககமாக 1975-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் துவக்கப்பட்டது. இடை நிலைப்பள்ளி இறுதித்தேர்வு (S.S.L.C) மேல்நிலைப்பள்ளித் தேர்வு (Higher Secondary) ஆகிய இரு முக்கிய தேர்வுகள் நடத்துவதுடன், இத்துறை ஏனைய சுமார் 38 தேர்வுகளையும் (தொழில், வேலை சம்பந்தப்பட்டவை) - நடத்தி வருகிறது. கடந்த ஆண்டு, ஏறக்குறைய 6.5 இலட்ச மாணவர்கள் இத்தேர்வுகளை எழுதியுள்ளனர்.

எட்டாம் வகுப்பு தே, ıய மாணவ, மாணவியர் 16 வயது நிரம்பி இருந்தால், தனிப் படிப்பாக பள்ளி இடைநிலைக் கல்வி பொதுத் தேர்வு எழுதலாம் என ஆணை வழங்கப்பட்டது. இச்சலுகை, பிற மாநிலங்களில் படித்திருப்பினும், தமிழ்நாட்டில் தங்கி வசிப்பவர்கட்கும் பொருந்தும் என விரிவாக்கப்பட்டது. மைய மதிப்பீட்டு முறையும், தேர்வு முடிவுகள் கம்ப்யூட்டர் உதவியுடன் வெளியிடலும் நடைமுறையில் உள்ளன.

18 வயது நிரம்பிய மாணவ, மாணவியர்கள் இடைநிலைப்பள்ளி இறுதி வகுப்பு (பத்தாம் வகுப்பு) பொதுத் தேர்வில் வெற்றி பெற்றிருப்பின், தனிப்படிப்பாக, மேல் நிலைப் பள்ளித் தேர்வு எழுத அனுமதித்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது. செய்முறைத் தேர்வு இல்லாத, தொழில் சம்பந்தப்படாத பிற பாடங்களில் தேர்வு எழுதலாம் என அறிவிக்கப்பட்டது.

ஆங்கிலோ இந்திய பள்ளி இறுதித்தேர்வு நடத்தும் பொறுப்பு 1977-ஆம் ஆண்டு இத் துறைக்கு வழங்கப்பட்டது. அதன்படி தேர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

பல்கலைக் கழகங்களால் நடத்தப்பட்டு வந்த மெட்ரிக்குலேஷன் தேர்வு 1979-ஆம் ஆண்டு அரசுத் தேர்வுத் துறைக்கு மாற்றப் பட்டது. அதன்படி இத்தேர்வுகள் நடத்தப் பட்டு வருகின்றன.

எந்தப் பள்ளியிலும் படிக்காமல் தனிப் பட்ட மாணவர்களாக, 14 வயது பூர்த்தி செய்திருப்பின் எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதலாம் என 1979-1980ஆம் ஆண்டு ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதன் படி சுமார் 3,000 மாணவ, மாணவியர் இத்தேர்வு எழுதினர்.

தேர்வுகள் மேம்படுத்தும் வகையான வினா வங்கித் திட்டத்தை 1981-82 முதல் அமல் படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. வினா வங்கியில் இடம் பெறும் வினாத்தாட்கள், பள்ளியில் பாடம் போதிக்கும் ஆசிரியர்களால் தயா





ரிக்கப்பட்டு, தொகுக்கப்பட்டு, பாடவல்லுநர்களால் ஆய்வு செய்யப்பட்டு அமையும். பொதுத் தேர்விற்கான வினாக்கள் தயாரிப்பதற்கும் மாணவர்களின் கல்வித் தரத்தின்படி வினாக்கள் அமையவும் இத்திட்டம் ஏதுவாகும்.

தேர்வு எழுதும் மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கையும், தேர்வுகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வருவதற்கேற்ப, இத்துறை விரிவுபடுத்தப்படுவது அவசியமாகி, மதுரையில் ஒன்றும், கோவையில் ஒன்றும் ஆக இரண்டு மண்டல' அலுவலகங்கள் துவக்கப்பட்டு இயங்கி வருகின்றன. 1981-82ல் இவை மேலும் வலுப்படுத்தப்படும்.

மேலும், அரசுத்தேர்வு இயக்ககத்துக்கு ரூபாய் 7 இலட்சம் செலவில் ஒரு கூடுதல் கட்டடம் கட்ட அனுமதிக்கப்பட்டு, கட்டடம் நிறைவு பெறும் நிலையில் உள்ளது.

**தமிழ்நாடு ஆவணக் காப்பகம்**

தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் 300 ஆண்டுகட்கு மேற்பட்ட ஆவணங்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அது வரலாற்று ஆராய்ச்சி மையமாக விளங்குவதுடன் ஆட்சித் துறையினருக்கு வேண்டிய தகவல்களையும் அளிக்கிறது. முப்பது ஆண்டுகட்கு முற்பட்ட ஆவணங்கள் ஆராய்ச்சியாளர்களின் ஆய்வுக்குத் தரப்படுகின்றன.

**8 ஆம் வகுப்பு தேறியவர்கள் ....**

**அரசினர் முன்னிலை தொழிற்பயிற்சி தேறிய மாணவர்கள் 1981-82ஆம் கல்வி ஆண்டிலிருந்து பொதுவான உயர்நிலைப் பள்ளிகளில் தொடர்ந்து ஒன்பதாவது வகுப்பில் சேர்ந்து படிக்கலாம் என தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது.**

தமிழ்நாட்டு வரலாற்று ஆராய்ச்சிக்குழு 1973-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு, தென்னகத்தின் பல்வேறு வாழ்க்கைக் கூறுபாடுகள் குறித்த ஆராய்ச்சியினை ஊக்குவிப்பதற்காக நான்கு மாணவர்கட்கு ரூ. 750 முதல் ரூ. 1,000-வரையும் உதவிப் பணமும் இதர செலவுகளுக்கு ஆண்டுக்கு ரூ. 5,000-மும் வழங்கி வருகிறது.

இயந்திரப் பிரிவுகளுக்காக ரூ. 2,87,000- செலவில் கூடுதலாக அண்மையில் ஒரு கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இரசாயனப் புகையூட்டும் இயந்திரம், ஆவணங்கள் செப்பனிடும் இயந்திரம், ஆவணங்களை நிழற்படம் எடுக்கும் இயந்திரம் (Xerox), மின்சாரப் படிகள் எடுக்கும் இயந்திரம் (electronic stencil cutter) ஆகியவை வாங்கப்பட்டு நிறுவப்பட்டுள்ளன.

அரசு அலுவலகங்களில் நவீன முறை ஆவணங்களைப் பாதுகாக்கும் முறையைப் போதிக்க ஒரு தனிப் பிரிவு இயங்கி வருகிறது.

**அருங்காட்சியகம்**

1981-ல் மதுரையில் ரூ. 1.12 இலட்சம் செலவில் ஓர் அருங்காட்சியகம் திறக்கப்பட்டது. சென்னையில் சிறுவர்கள் அருங்காட்சியகம் அமைப்பதற்காக 1980-இல் அடிக்கல் நாட்டப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. சேலம் அருங்காட்சியகம் ரூ. 1.40 இலட்சம் செலவில் அரசு அருங்காட்சியகமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. சென்னையிலுள்ள தேசிய கலைக்கூட இணைப்புக் கட்டடத்தைக் கட்ட முதல் தவணையாக ரூ.16.05 இலட்சத்தை அரசு வழங்கியுள்ளது. பதிவு அறையும், அலுவலக அறையும், எலும்புக் கூடமும், பொருளாதார தாவரக் கூடம், புவியியல் கூடம் ஆகியவைகளுக்கு நவீனகாட்சிப் பெட்டிகளும் குவி மைய ஒளி விளக்குகளும் மொத்தம் ரூ. 4,90,000- செலவில் அமைக்கப்



சமூக சேவையில் ஈடுபட்டுள்ள கல்லூரி மாணவர்கள்

பட்டுள்ளன. உலகத் தமிழ் மாநாட்டுப் பணிக்கென 'லெமூரியா' மாதிரி அமைப்புக்கான தொடக்கப் பணிகள் செய்யப்பட்டன.

**சிறப்புக் கண்காட்சிகள், கருத்தரங்குகள்:**

1977 முதல் 1981 வரை அகில இந்திய சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியில் இத்துறை அரங்கம் அமைத்தது.

1980-81ஆம் ஆண்டில் சில சிறப்புக் கண்காட்சிகள் அமைக்கப்பட்டன. டாக்டர் ஆனந்த குமாரசாமியின் நூற்றாண்டுவிழா, அருங்காட்சியகத்தின் 125ஆம் ஆண்டுவிழா ஆகியவை கொண்டாடப்பட்டது. சிறந்த கலைஞர்களின் கண்காட்சிகள் நடத்தப்பட்டன.

''அருங்காட்சியகப் பொருள்களைக் காத்தல்'', ''பதப்படுத்துதல்'' ஆகிய வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வகுப்பில் பயில இம்மாநிலத்திலிருந்தும், மற்ற மாநிலத்திலிருந்தும் பயில்வோர் வருகின்றனர்.

**தொழில்நுட்பக் கல்வி:**

தமிழகத்தில் தற்போது 13 பொறியியல் கல்லூரிகளும், 40 தொழில் நுட்பப் பயிலகங்களும், 146 தொழிற்பாட மேல் நிலைப்பள்ளிகளும் உள்ளன. 17 பட்டப்படிப்பு வகுப்புகள் 43 மேல் பட்டப் படிப்பு வகுப்புகள், 9 மேல் பட்டப் படிப்பு வகுப்புகள், 47 பட்டயவகுப்புகள், 20 மேல்பட்டய வகுப்புகள், மற்றும் 17 சான்றிதழ் வகுப்புகள் மேற்காணும் நிலையங்களில் நடத்தப்படுகின்றன. பொறியியல் கல்லூரிகளில் பட்ட வகுப்புகளில் 1422 லிருந்து 1700 ஆகவும் தொழில் நுட்பப் பயிலகங்கள் 4480 லிருந்து 6313 ஆகவும் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை கடந்த மூன்றாண்டுகளில் உயர்ந்துள்ளன.

4 பட்டப்படிப்பு வகுப்புகளும், 9 பட்ட வகுப்புகளும், 26 பட்டய வகுப்புகளும், 2 மேல் பட்டய வகுப்புகளும், கடந்த நான்காண்டில் புதியதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. சென்னையில் 4.9.1978 இல் பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகமும் தோற்றுவிக்கப்பட்டது.

தருமபுரி மாவட்டத்தில், கிருஷ்ணகிரியில் அரசு தொழில் நுட்பப் பயிலகம் புதியதாக நிறுவப்பட்டுள்ளது. இப்போது இங்கு 180 மாணவர்கள் பயில்கின்றனர். மேலும், 1980 இல் தனியார் நிறுவனங்களின் பேணுகையில் 5 புதிய தொழில் நுட்பப் பயிலகங்கள் நிறுவப்பட்டுள்ளன. ஏழை மாணவர்களின் தேவைக்காகவும் பயனுக்காகவும் அமைந்து தொழில் நுட்பப் பயிலகங்களிலும் புத்தக வங்கிகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. தொழில் நுட்பக் கல்வி வளர்ச்சிக்காக, தொழில் நுட்பப் பயிலகங்களுக்கான பாட நூல்கள் தயாரிக்கும் திட்டம் துவக்கப்பட்டது. 31 தலைப்புகளில் நூல் தயாரிக்கும்பணிகள் தொடங்கப்பட்டன. இதில் 7 தலைப்புகளில் நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

''சிற்பச் செந்நூல் '' ( Sirpa Chennool ) என்னும் தலைப்பில் நூல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு வழிகாட்டி உதவும் வகையில் எல்லாத் தொழில் நுட்பப் பயிலகங்களிலும் தொழில் வழிகாட்டித்திட்டத்தின் கீழ் ( Career Guidence Programme ) தொழிலில் நியமனம் செய்யும் பிரிவுகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. சென்னை, திருச்சி, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் அறிவியல் அருங்காட்சியகங்களை ஏற்படுத்த அரசு முடிவு எடுத்துள்ளது. அடையாற்றில் தந்தை பெரியார் அறிவியல் அருங்காட்சியகம் நிறுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



# பல்கிப் பெருகிடும் பால் வளம்

**1980-81** ஆம் ஆண்டு ஏழை எளிய விவசாயக் குடும்பங்களின் நன்மைக்காக 140 சங்கங்களைப் புதிதாகவும், இதே வசதிகளை ஏற்படுத்தும் பொருட்டு ஏற்கெனவே இருந்த 197 சங்கங்களை பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களாக மாற்றப்பட்டும் இருக்கிறது. மேலும் 19 பால் வாங்கும் சங்கங்களை மாற்றி பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களாக மாற்றப்பட்டது. இந்த ஏற்பாட்டினால் ஏறத்தாழ 30,000 விவசாயிகள் நன்மை அடைந்திருக்கிறார்கள்.

முக்கியமாக இந்தச் சங்கங்களின் அங்கத்தினர்களுக்கு எந்த விதமான கடனும் நேரிடையாகக் கொடுக்கப்படுவதில்லை. ஆனாலும் அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் எங்கெங்கு தேவையோ அங்கங்கு கடன் வசதிகளை ஏழை விவசாயிகளுக்குக் கறவை மாடுகள் வாங்க உதவுகின்றன.

அரிசன நலத் திட்டத்தின்கீழ் ஒரு நபருக்கு ஒரு பசு வாங்குவதற்கு ரூபாய் 500 மானியமாகவும் ரூபாய் 1500 கடனாகவும் அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் கடந்த 1980-81 ஆம் ஆண்டுகளில் ரூபாய் 3.85 இலட்சங்கள் 700 நபர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

இதைத் தவிர 1980-81-ஆம் ஆண்டு 1440 சிறு விவசாயிகளுக்கும் 1930 சொற்ப நிலமுள்ள விவசாயிகளுக்கும் 1920 நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்களுக்கும் கறவை மாடுகள் வாங்க ரூபாய் 30 இலட்சம் மானியமாக வழங்க அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தின்கீழ் 1980-81ல் விவசாயத் தொழிலாளர்களைச் சிறிய நடுத்தர விவசாயிகள் இவர்களுக்கு உதவும் வகையில் தேவையானவைகளைச் செய்யவும் சிறிய கன்றுகளுக்கு சுமார் 4 முதல் 27 மாதங்களுக்கு அவைகளை வளர்ப்பதற்குத் தேவையான தீவனத்திற்காக ரூபாய் 50.69 இலட்சங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. கன்றுகள் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 15,395 கன்றுகள் கொண்டுவரப்பட்டு ரூபாய் 183 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டிருக்கிறது.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நீலகிரி மாவட்டத்திலுள்ள 281 சிறு கிராமங்களில் வசிக்கும் 16,000 விவசாயிகளும் 3,942 தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலை ஜாதியினரும் அவர்களது சமூகப் பொருளாதார வளர்ச்சியினால் விஞ்ஞான அடிப்படையில் பசுக்களை வளர்த்துப் பயன் அடைந்துள்ளார்கள்.

ரூபாய் 10 இலட்சம் செலவில் பால் உற்பத்தி செய்யும் விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வண்ணம் நல்ல தரமான கால்நடைத் தீவனம் உற்பத்தி செய்யும் ஆலை மாதவரம் கால் நடைத் தீவன உற்பத்தி ஆலையில் நிறுவப்பட்டு செயல்படத் தயாராக உள்ளது. விவசாயிகளுக்குக் கலப்படமில்லாத தரமான மாட்டுத் தீவனம் கிடைக்கப் பெரிதும் உதவிகரமாக

இருக்கும். இதை உண்பதால் மாடுகள் எந்தவிதமான நோயினாலும் பாதிக்கப்படுவது இல்லை.

நாளொன்றுக்கு .00 டன்கள் உற்பத்தி செய்யும்திறன்கொண்ட மாட்டுத் தீவன உற்பத்தி ஆலை ஒன்று ஈரோட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கடந்த 16-11-80-ல் துவக்கி வைக்கப்பட்டிருக்கிறது.

பால் வளத்துறையில் பெரியார் மாவட்ட விவசாயிகள், தாங்கள் உற்பத்தி செய்யும் பாலை விற்க உதவும் பொருட்டு சித்தோடு என்ற இடத்தில் ரூபாய் 4கோடி செலவில் 1.5 இலட்சம் லிட்டர் பால் பதப்படுத்த வசதியும் பால் பவுடர், வெண்ணெய் முதலிய பால் உப பொருட்கள் தயார் செய்யவும் உற்பத்தி சமப்படுத்தும் பால் பண்ணை (Feeder Balancing dairy) ஏற்படுத்தப் பட்டுள்ளது. இந்த ஏற்பாட்டினால் ஏறத்தாழ 30,000 விவசாயிகள் 200 பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் வாயிலாகப் பயன்பெறவிருக்கிறார்கள்.

இதேபோல் உற்பத்தி சமப்படுத்தும் பால் பண்ணை ஒன்று ரூபாய் 305 இலட்சம் செலவில் சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பண்ணையால் சுமார் 30,000 விவசாயிகள் பயன் பெறுவர். இது அவர்கள் உற்பத்தி செய்யும் பாலை நல்ல முறையில் விற்பனை செய்ய ஒரு வழி வகுத்துக் கொடுக்கும்.

வறட்சியால் பாதிக்கக்கூடிய பகுதிக்கான திட்டத்தின் கீழ் தர்மபுரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரியில் சுமார் 175 இலட்சம் செலவில் 10 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட பால் பவுடர் ஆலை ஒன்று ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. கிருஷ்ணகிரி மற்றும் தர்மபுரியிலுள்ள பால் குளிரூட்டும் நிலையங்கள் அதிகமான பாலைக் கையாள வசதியாக விரிவாக்கப்பட்டு ரூபாய் 15.95 இலட்சம் 1980-81ல் அனுமதிக்கப்பட்டது.

பால் வள உற்பத்தியை விரிவாக்கும் நோக்குடன் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ரூபாய் 16.98 இலட்சம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் விருதுநகர், ஸ்ரீவில்லிபுத்தூரிலுள்ள பால் குளிரூட்டும் நிலையங்கள் மேலும் அதிக அளவு பாலைக் கையாளும் பொருட்டு விரிவாக்கப்பட்டிருக்கிறது.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நீலகிரி மாவட்டத்தில் நவீன வசதிகளுடன் கூடிய பால் பண்ணை ஒன்றும், மிகுதி அளவு பாலை 'சீஸ்' செய்வதற்கான பண்ணை ஒன்றும் ரூபாய் 200 இலட்சத்தில் கட்டப்படவிருக்கிறது. இதனால் இப்பகுதி மலைவாழ் மக்களும் நிலமில்லாத தொழிலாளர்களும் பயனடைய வாய்ப்புள்ளது.



நாளும் தொடரும்

# நல்வாழ்வுப்பணிகள்

"கி. பி. 2,000-த்திற்குள் அனைவருக்கும் உடல்நல வாழ்வு'' என்ற அல்மா ஆட்டா பிரகடனத்தில் இந்திய நாடு பெரும் பங்கேற்றுள்ளது. இப் பிரகடனத்தின் மூலக் குறிக்கோள்களை நிறைவேற்றுவதைத் தமிழக அரசு தனது இலட்சியமாகக் கொண்டுள்ளது.

நல்வாழ்வு முன்னேற்றப் பணிகள், நோய்த் தடுப்புப் பணிகள், நோய் நீக்கும் பணிகள், நல்வாழ்வுப் புனரமைப்புப் பணிகள் ஆகியனவற்றைப் பலப்படுத்துவதற்கும் விரிவாக்கம் பெறச் செய்வதற்கும் உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மருத்துவர்கள் செவிலியர்கள் மற்றும் இதரப்பணியாளர்களுக்குப் பயிற்சியளிக்கப்படும் வகையில் பயிற்சிக் கூடங்கள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. இம் மேம்பாட்டிற்காகச் சில பயிற்சிக் கூடங்களில் மாணவர்களின் எண்ணிக்கையினை அதிகரித்தும் புதிய கட்டடங்கள் கட்டியும், புதிய சாதனங்கள் அமைத்தும் பயிற்சிக் கருவிகள் மற்றும் இதர துணை வசதிகளைப் பெருக்கியும் பயிற்சிக் கூடங்களின் கூடுதல் தேவைகளை நிறைவாக்கும் வகையில் கூடுதல் பணியாளர்களை நியமனம் செய்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலுமுள்ள குடிசைப் பகுதிகளிலும் வசிக்கின்ற நலிவுற்ற பிரிவினர், போதிய உணவு வசதியில்லாதவர்கள், போதிய சத்துணவில்லாதவர்கள் ஆகியோருக்குத் தொடக்க நல்வாழ்வு மற்றும் மருத்துவப் பணிகளின் பலன்கள் போய்ச் சேர வேண்டுமென்பதே இந்த அரசின் கொள்கையாகவும் திட்டமாகவும் அமைந்துள்ளது.

கிராமப்புற மக்கள் அனைவருக்கும் மருத்துவ வசதிகளைச் செய்து கொடுத்து, அவர்கள் நோயற்ற வாழ்வு வாழவும் உடல் நலத்திற்கு ஊறு விளைக்கின்ற அபாயங்களிலிருந்து விடுபட்டு வாழவும் சமுதாய, பொருளாதார அந்தஸ்தில் மேம்பட்டு வாழவும் உத்தரவாதமான ஒரு சூழலை உருவாக்குவதில் அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகின்றது.

குறிப்பாக, சமுதாயத்தின் நலிவுற்ற பிரிவினருக்கு முழுமையான நல்வாழ்வுத் திட்டப் பணிகளுடன் ஒருங்கிணைந்து, மக்கள் தொகைப்பெருக்கத்தினை எவ்விதக் கட்டாயமுமின்றிக் கட்டுப்படுத்தவும் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலம் பேணவும் குடும்ப நலத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மிகக் குறைந்த மக்கள் தொகைப் பெருக்கத்தினைக் காட்டும் ஆண்டொன்றுக்கு 1.723 சதவீதத்தினை, கடந்த பத்தாண்டுகளில் எட்டியுள்ளதிலிருந்து, குடும்பநலத்திட்டம் நமது நாட்டிலேயே தமிழகத்தில்தான் நல்ல வெற்றி கண்டுள்ளது தெரியவருகின்றது.

சென்னைப் பொது மருத்துவ மனையில் ஒரு கோடி ரூபாய் செலவில் 4.2.81 அன்று திறக்கப்பட்ட புதிய பகுதி



**மருத்துவக் கல்வியும் சார்புள்ள மருத்துவ மனைகளும்:**

படுக்கை வசதிகளை அதிகரித்தல்: 1978-ஆம் ஆண்டில் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் படுக்கைகளின் எண்ணிக்கை 13471-இல் இருந்தது. இது 1981-இல் 14689 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. கடந்த ஓராண்டுக் காலத்தில் மட்டும் 487 படுக்கைகள் கூடுதலாக்கப்பட்டுள்ளன.



1980-81-ல் மொத்தம் ரூ. 88.32 இலட்சம் செலவில் புதிய கருவிகள் வாங்குவதற்கு அரசு ஒப்பளித்துள்ளது. கடந்த ஆண்டில் ரூ. 40 இலட்சம் செலவில் சென்னை அரசு பொது மருத்துவமனைக்கு நரம்பு இயல் பயிற்சிப் பிரிவுக்கு ஒரு முப்பரிமாண உருப்பதிவுப் பொறி ( C. T. Scanner ) வாங்கியுள்ளதும் ரூ. 7.17 இலட்சம் செலவில் பல வழி இதயத்துடிப்புப்பதிவுக் கருவி ( Multi Channel echo - Cardiogram ) வாங்கியுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

கூடுதல் கட்டடங்கள் : மாநிலம் முழுவதிலுமுள்ள மருத்துவக் கல்வி மருத்துவமனைகளை விரிவாக்கம் செய்யும் பொருட்டு 1980-81-ஆம் ஆண்டில் ரூ. 84.97 இலட்சம் செலவில் புதிய கட்டடங்களைக் கட்டுவதற்கு அரசு ஆணையிட்டுள்ளது.

விபத்து மற்றும் அவசரகாலப் பணிகள்: சகல சாதனங்கள் மற்றும் வசதிகள் கொண்ட விபத்து, மற்றும் அவசரகாலப் பணி நிலையங்களில் விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நேரத்தில் மருத்துவ சிகிச்சையளிக்கவும் சிறந்த முறையில் முதலுதவி செய்யவும் விரைவான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தவும், 1979-80ஆம் ஆண்டில் ஏறத்தாழ ரூபாய் 2 கோடி செலவில் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய தென் மாவட்டங்கள் நான்கிலும் மூவகை வசதிகளும் கொண்ட விபத்து மற்றும் அவசரகாலப் பணிப் பிரிவுகள் தொடங்க அரசு ஆணையிட்டுள்ளது. (இத்திட்டத்தில் வட்டத் தலைமையிட மருத்துவமனைகள், மாவட்ட மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்வி மருத்துவமனைகள் ஆகியன அடங்கும்) இரண்டாவது கட்டமாக இத்திட்டம் 1981-82-ஆம் ஆண்டில் மேலும் 4 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்படும்.

**மாவட்டம் மற்றும் வட்டத் தலைமையிடம், வட்டத் தலைமையிடமல்லாத இடங்களிலுள்ள மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள் வழியாக மருத்துவப் பணிகள்:**

நல்வாழ்வுப் பணிகள் மக்களுக்குச் சரியாகப்போய்ச்சேர்வதில் மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள் மற்றும் வட்டத் தலைமையிடமல்லாத இடங்களிலுள்ள மருத்துவ மனைகளும் மருந்தகங்களும் பெரும் பங்கு வகிக்கின்றன. இம்மருத்துவ மனைகள் மற்றும் மருந்தகங்களிலுள்ள விரிவான மற்றும் சிறப்பான மருத்துவப் பணிகள் கிராமப்புற ஏழைகளுக்கு எளிதாகக் கிட்டும் வகையில் அமைந்துள்ளமையே இதற்கான காரணமாகும். இம்மருத்துவ மனைகளிலும் மருந்தகங்களிலும் மருத்துவப் பணிகளில் முன்னேற்றம் ஏற்படவும் விரிவடையவும் அரசு ஆவன செய்து வருகிறது.

படுக்கை வசதிகளை அதிகரித்தல் :1977 78-இல் 12713 ஆக இருந்த படுக்கைகளின் எண்ணிக்கை 1980-81-இறுதியில் 13713 ஆகக் கூடியுள்ளது. (அதாவது 1000 படுக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன).

**மாவட்டம் மற்றும் வட்ட மருத்துவமனைகளில் தொடங்கப்பட்ட சிறப்பு மருத்துவப் பிரிவுகள்:**

1980-81-ஆம் ஆண்டில் மாவட்டம் மற்றும் வட்ட மருத்துவமனைகளில் 2 இரத்த சேமிப்பு நிலையங்களும், 5 பல் சிகிச்சைப் பிரிவுகளும்,6 எலும்புமுறிவு சிகிச்சைப் பிரிவுகளும் 5 காது, மூக்கு மற்றும் தொண்டை சிகிச்சைப் பிரிவுகளும் 4 பால்வினை நோய் சிகிச்சைப் பிரிவுகளும் 4 மன நோய் சிகிச்சைப் பிரிவுகளும் 6 குழந்தைகள் சிகிச்சைப் பிரிவுகளும் தொடங்கப்பட்டுள்ளன.

**கருவிகள் மற்றும் சாதனங்கள் வாங்குதல்:**

மாவட்டத் தலைமையிடம், வட்டத் தலைமையிடம் மற்றும் வட்டத் தலைமையிடமல்லாத இடங்களிலுள்ள மருத்துவமனைகளுக்கு 1979-80-ஆம் ஆண்டில் ரூ. 46 இலட்சத்திற்குக் கருவிகள் வாங்குவதற்கு ஆணையிடப்பட்டது. இந்தத் தொகை 1980-81-ல் ரூ. 47 இலட்சமாகவும் 1981-82-இல் ரூ. 133 இலட்சமாகவும் உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

கட்டடத் திட்டங்கள் : மாவட்டத் தலைமையிடம், வட்டத் தலைமையிடம் மற்றும் வட்டத் தலைமையிடமல்லாத இடங்கள் ஆகியவற்றிலுள்ள மருத்துவமனைகளுக்குக் கட்டடங்கள் கட்டுவதற்கு 1980-81-இல் ரூபாய் 77 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த ஒதுக்கீடு, 1981-82-இல் ரூபாய் 239 இலட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

**அரசு நடத்தும் இலவச கண்சிகிச்சை முகாம்:**

1980-81-ஆம் ஆண்டில் மொத்தம்

12776 கண் அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டன.

**தொழுநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம்:**

தொழுநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் கீழ், 1980-81-ஆம் ஆண்டில் நடைபெற்ற பள்ளி மருத்துவப் பரிசோதனையில் 11 வயதிற்குட்பட்ட 18 இலட்சம் சிறார்களுக்குத் தொழுநோய் உள்ளதா என்று பரிசோதிக்கப்பட்டது.

இந்திய அரசு குறிப்பிட்டுள்ள குறியீட்டின்படி 1980-81-ஆம் ஆண்டில், தமிழக அரசு, கீழ்க்காணும் திட்டங்களுக்கு ஒப்பளித்துள்ளது :—

(1) ஒரு தொழுநோய் மறுவாழ்வு வளர்ச்சிப் பிரிவு ;

(2) 2 நகர்ப்புற தொழுநோய்ச் சிகிச்சை நிலையங்கள். 6 மாவட்டத் தொழுநோய்ச் சிகிச்சை அலுவலர் அலுவலகங்களையும் தரமுயர்த்துதல்.

(3) தற்காலிகமாகத் தங்கி சிகிச்சை பெறுவதற்காக 22 வார்டுகள் கட்டுதல்.

(4) 6 தொழுநோய்க் கட்டுப்பாட்டு நிலையங்களையமைத்தல்.

**காசநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம்:**

பி. சி. ஜி. தடுப்பு ஊசிபோடும் திட்டம் தீவிரப்படுத்தப்பட்டு வருகிறது. 1980-81ஆம் ஆண்டில் ரூபாய் 36.45 இலட்சம் செலவில் பீடி சுற்றும் தொழிலாளர்களையும், கைத்தறித் தொழிலாளர்களையும் காசநோய் பீடித்துள்ளதா என்பதைக் கண்டறியும் வகையில் ஒருங்கிணைந்த நல்வாழ்வுத் திட்டம் ஒன்றுக்கு அரசு ஒப்பளித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் மாநிலம் முழுவதும் 5 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுச் செயலாக்கப்படும். ஒவ்வொரு பகுதிக்கும் நடமாடும் மருத்துவப் பிரிவு ஒன்றும் சிறிய ஊடுகதிர்ப் பிரிவு ஒன்றும் கொடுக்கப்படும். இந்த 5 பகுதிகளும் முறையே சேலம், ஈரோடு, திண்டுக்கல் தூத்துக்குடி, வேலூர் ஆகிய இடங்களில் நிறுவப்படும். இந்தத் திட்டம் மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

**ஓமியோபதி முறை மருத்துவம்:**

1980-81-ஆம் ஆண்டில் 6 மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் ஓமியோபதி மருந்தகங்கள் தொடங்க ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

**குடும்பநலத் திட்டம்:**

குடும்பநலத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் தமிழகம் எப்போதும் முன்னணியில் இருந்து வருகிறது. கடந்த 10 ஆண்டுகளில் மக்கள் தொகை புள்ளியியல் கணக்கீட்டின்படி, மக்கள் தொகைப் பெருக்கத்தைக் காட்டும் மிகக் குறைந்த அளவான ஆண்டுக்கு 1.723 என்ற சதவீதத்தினைத் தமிழ்நாடு எட்டியுள்ளதற்கு முக்கியக் காரணம் குடும்பநலத் திட்டத்தினைச் சிறப்பாகச் செயல்படுத்தியதன் விளைவேயாகும். இது சாதாரணச்செயல் அன்று. இது ஒரு மாபெரும் சாதனை.



எந்த விதமான கட்டாயமுமின்றி மக்களைத் தூண்டுவதின் மூலம், குடும்பநல முறைகளைத் தமிழகத்தில் ஏற்றுக் கொள்ளச் செய்யும் பாங்கு சிறந்த குடும்ப நலத்திட்ட முறையாகக் கருதப்பட்டு வருகிறது.

குடும்பநலத் திட்டத்தில் இப்போதுள்ள நிலை அதிக அளவில் தாய்மார்கள் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்ய முன்வருவதுதான். எனவே, மாவட்ட மருத்துவமனைகளில் கருத்தடை அறுவைச் சிகிச்சைக்குப் பின் கவனிக்கும் கூடங்களில் அதிகப்படியான படுக்கைகள் தேவைப்படுகின்றன.

பிரிட்டன் உதவித் திட்டத்தின் கீழ் 31 தொடக்க நல்வழ்வு நிலையங்களிலும் 15 வட்ட மருத்துவமனைகளிலும் கருத்தடை அறுவை சிகிச்சைக்குப் பின் அளிக்கப்படுகின்ற வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. தவிர, மருத்துவக் கல்லூரி இணைந்த 9 மருத்துவமனைகளும் 2 தொண்டு நிறுவனங்களும் 13 மாவட்ட மருத்துவ மனைகளும் கருத்தடை அறுவைச் சிகிச்சைக்குப் பின் உள்ள பணிகளைச் செயல்படுத்துகின்றன. வட்ட மற்றும் வட்டம் அல்லாத 11 மருத்துவமனைகளில் அறுவைச் சிகிச்சைக்குப் பின் அளிக்கின்ற வசதிகளைச் செய்து தர ஒப்பளிக்கப்பட்டுள்ளது. பிற நோயாளிகளுக்கு அளிக்கப்படுகின்ற சிகிச்சைக்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படாத வகையில் மாவட்ட மருத்துவமனைகளில் அறுவைச் சிகிச்சைக்குப் பின் உள்ள சிகிச்சைக் கூடங்களில் தற்போதுள்ள 10 படுக்கைகள் போக மேலும் 10 படுக்கைகள் ஏற்படுத்த அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. தவிரவும் 14 மாவட்ட மருத்துவமனைகளில் அறுவைச் சிகிச்சைக்குப் பின் சிகிச்சை அளிக்கின்ற 20 படுக்கைகள் கொண்ட கூடங்களை ரூ. 28.60 இலட்சம் மதிப்பீட்டில் கட்ட அரசு அனுமதியளித்துள்ளது.

ஆய்வுக் குழுவினால் சுட்டிக்காட்டப்பட்ட முறைகேடுகளையும், தவறுகளையும் களையும் பொருட்டும் அறுவை சிகிச்சையின் தரத்தினை உயர்த்தும் பொருட்டும் இந்த ஆண்டு குடும்பநலத் தீவிர இயக்கம் நடத்துவதை நிறுத்துவதற்கு அரசு ஆணையிட்டுள்ளது. எனினும் குடும்பநலத் திட்டம் ஆண்டு முழுவதும் தொடர்ந்து திறமையுடன் சீராகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆண் அறுவை சிகிச்சைக்கும் பெண் அறுவைச் சிகிச்சைக்கும் அரசு ஒரே அளவாக ரூ. 70 அனுமதி

யளித்துள்ளது. ஆனால் இந்த அரசு ஆண் அறுவைச்சிகிச்சைக்கு ரூ. 75-ம், பெண் அறுவைச்சிகிச்சைக்கு ரூ. 85ம் வழங்கி வரு கின்றது.

1980-81 ஆம் ஆண்டில் குடும்பநலத் திட்டத் தினைப் பொறுத்த மட்டில், தமிழக அரசின் சாதனை கீழ்க்காணும் பட்டியலிலிருந்து விளங் கும்:

| குடும்பநலத் திட்ட முறை | 1980—81 சாதனை |
|---|---|
| அறுவை சிகிச்சைகள் | 1,31,224 |
| கருத்தடை வளையங்கள் பொருத்துதல் | 31,463 |
| மரபு வழியான கருத்தடை சாதனங் களைப் பயன்படுத்துவோர் | 70,746 |
| கருத்தடை மாத்திரைகள் உட்கொள்வோர் | 3,023 |



**மருத்துவ முறையில் கருவைக் கலைத்தல்:**

தாய்மார்கள் தொடர்ந்து கருவுறுவ தால் அவர்கள் உயிருக்கு ஆபத்து விளையும், ஆகவே தொடர்ந்து கருவுறுவதைத் தடுக்கும் படி அவர்களுக்கு ஆலோசனை வழங்க தமிழ் நாட்டில் தெரிந்தெடுக்கப்பட்ட மருத்துவ மனைகளில் மருத்துவ முறையில் கருவைக் கலைப்பதற்கான வசதிகள் 1971-ஆம் ஆண்டு மருத்துவ முறையில் கருவைக் கலைத்தல் சட்டப்படி செய்யப்பட்டுள்ளன.

தற்போது 117 அரசு மருத்துவ நிலை யங்களிலும் 32 தனியார் மருத்துவ நிலையங் களிலும் இவ்வசதிகள் உள்ளன. மருத்துவ முறையில் கருவைக் கலைப்பதற்கு மேலும் 41 அரசு மருத்துவ நிலையங்களில் இவ்வசதி களை ஏற்படுத்த அரசு ஒப்புதல் வழங்கியுள் ளது. 1980-81-இல் 33,385 பேர் மருத்துவ முறையில் கருவைக் கலைத்துள்ளனர்.

**லெப்ராஸ்கோப் கருவியின் மூலம் மகளிர் அடி வயிற்றுப் பகுதியைப் பார்த்து கருத்தடை அறுவை சிகிச்சை செய்தல்:**

லெப்ராஸ் கோப் கருவியின் மூலம் மகளி ரது அடிவயிற்றைப் பார்த்து கருத்தடை அறுவை சிகிச்சை செய்யும் நவீன தொழில் நுட்ப முறையில் சில மருத்துவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. சென்னை ஆர். எஸ். ஆர். எம். மருத்துவமனையில் இந்த முறை பின்பற்றப்படுகிறது.

**குறிப்பிட்ட மாவட்டங்களில் குடும்ப நலம், மகப் பேறு மற்றும் குழந்தைகள் நலம் ஆகிய பணி களைப் பலப்படுத்துதல்:**

ஊரக மருத்துவமனைகள், வட்டத் தலைமையிட மருத்துவமனைகள், வட்டத் தலைமையிடமல்லாத இடங்களிலுள்ள மருத் துவமனைகள் மற்றும் ஏனைய மருத்துவ மனைகள் ஆகியவற்றில் ஏற்கெனவே அமைந் துள்ள வசதிகளை மேலும் அபிவிருத்தி செய் திடவும் குறிப்பாக மகப்பேறு மற்றும் குழந் தைகள் நலம், குடும்ப நலம், நோய் தடுப்புப் பணிகள் ஆகியனவற்றைப் பலப்படுத்திடவும் அனைத்து நலப்பணிகளையும் உள்ளடக்கிய தெளிவமைந்த திட்டமொன்று சேலம், தென் னார்க்காடு ஆகிய மாவட்டங்களில் டேனிடா எனப்படும் டென்மார்க் நாட்டிலுள்ள அனைத்து நாடுகளின் வளர்ச்சி நிறுவனத்தின் உதவியுடன் செயற்படுத்துவதற்கு விரைவில் எடுத்துக் கொள்ளப்படும். 1981-82-ஆம் ஆண்டு முதல் ஏறத்தாழ ரூபாய் 14 கோடி மதிப்பீட்டுச் செலவில் 5 ஆண்டுகளுக்கு இத் திட்டத்தினை மேற்படி இரு மாவட்டங்களி லும் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக ஒரு திட்ட இயக்குநர் நியமிக்கப் பட்டுள்ளார்.

**தொடக்க நல்வாழ்வு நிலையங்கள்:**

கிராமப்புற மக்களுக்கு நல்வாழ்வு மற் றும் மருத்துவ வசதிகள் கிடைக்கச் செய்வதில் 383 தொடக்க நல்வாழ்வு நிலையங்களும் 3377 தாய்சேய் நலத் துணை நிலையங்களும் முக்கிய மையங்களாகத் திகழ்கின்றன. இந்த நிலையங்களைப் பலப்படுத்துவதும் மேம் பாடடையச் செய்வதும் அரசின் கொள்கை யாக இருந்துவருகிறது.

மருந்துகள் : 1980-81-ஆம் ஆண்டில் ஒவ்வொரு தொடக்க நல்வாழ்வு நிலையத்திற் கும் ஆண்டு ஒன்றுக்கு மருந்துகள் வாங்கு வதற்காக ஒதுக்கப்படும் தொகை ரூபாய் 14,000-த்தில் இருந்து ரூபாய் 20,000மாக உயர்த்தப்பட்டுள்ளது.

கட்டடத் திட்டங்கள் : மொத்தமுள்ள 383 தொடக்க நல்வாழ்வு நிலையங்களில், 192 நிலையங்களுக்கு மருந்தகக் கட்டடங் களும் பணியாளர் குடியிருப்புகளும் இருக் கின்றன. எஞ்சியுள்ள 191 தொடக்க நல் வாழ்வு நிலையங்களில், 75-க்கு மருந்தகக் கட்டடங்கள் மட்டும் உள்ளன. 1978-79 முதல் 1980-81 வரையில் 41 தொடக்க நல் வாழ்வு நிலையங்களுக்கு மருந்தகக் கட்ட டங்கள் கட்ட அரசு அனுமதியளித்துள்ளது. 238 தொடக்க நல்வாழ்வு நிலையங்களில் பணியாளர் குடியிருப்புகள் உள்ளன (மேற் கூறியுள்ள 41 இடங்களையும் சேர்த்து),

**நடமாடும் மருத்துவப் பணிகள்:**

இவ்வரசு நாட்டிலேயே முதலாவதாக 1977-78-ல் 24 ஆரம்ப சுகாதார நிலையங் களிலிருந்து அப்பகுதிகளின் பின்தங்கிய கிராமங்களுக்குச் சென்றுவர நடமாடும்

மருத்துவக் குழுக்கள் வடிவில் ஒரு புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

கிராமப்புற மக்களுக்கு விரிவான மருத்துவப் பணிகள் வழங்குவது இத்திட்டத்தின் குறிக்கோளாகும். 1978-79-ல் மேலும் 100 தொடக்க நல்வாழ்வு நிலையங்களுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. 1979-80ஆம் ஆண்டில் இன்னும் 100 தொடக்க நல்வாழ்வு நிலையங்களில் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. இவ்வாறு 224 தொடக்க நல்வாழ்வு நிலையங்களில் நடமாடும் மருத்துவக்குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன.

நடமாடும் சுகாதாரக் குழுக்கள் இயங்கிக் கொண்டிருக்கும் ஒவ்வொரு தொடக்க நல்வாழ்வு நிலையத்திற்கும் தற்சமயம் ரூபாய் 15,000 மருந்துகளுக்காக வழங்கப்படுகிறது. இத்தொகை 1981-82-ஆம் ஆண்டில் ரூபாய் 20,000-த்திற்கு உயர்த்தக் கருதப்பட்டுள்ளது. இது ஒவ்வொரு தொடக்க நல்வாழ்வு நிலையத்திற்கும் மருந்துகளுக்காக வழங்கப்படுகின்றது. இது ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருந்துகளுக்காக ஒதுக்கப்படும் ரூ.20,000-தை தவிர கூடுதலாக ஒதுக்கப்படும் தொகையாகும்.

**சுகாதார நிலையங்கள்:**

கூட்டுறவு அடிப்படையில் மக்களுக்கு விரிவான சுகாதாரப் பாதுகாப்புப் பணிகளை வழங்க தொண்டு நிறுவனங்களை ஊக்கப்படுத்தும் நோக்கத்துடன் சிறு சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. இத்திட்டத்தில் ஈடுபட்டுள்ள தொண்டு நிறுவனம் 5,000 மக்களுக்கு ஆண்டொன்றுக்கு சிறு சுகாதார நிலையத்திற்கு ரூ. 18,000 மொத்தச் செலவில் தெளிவமைந்த சுகாதாரப் பணிகள் வழங்கும்படி ஏற்பாடு செய்யும். ஒரு சிறு சுகாதார நிலையத்தில் ஒரு பகுதி நேர மருத்துவ அலுவலரும் ஒரு முழுநேர ஆண் மற்றும் பெண் சுகாதாரப் பணியாளரும், மூன்று முதலுதவியாளர்களும், அமர்த்தப்படுவர். மருந்துகளுக்காக ரூ. 3,000 ஒதுக்கப்படுகிறது. ஆண்டொன்றுக்கு மொத்தச் செலவில் உயர்ந்த அளவு 9,000 ரூபாய்க்கு உட்பட்டு 50 சதவீதத் தொகையை மானிய உதவியாக மாநிலம் மற்றும் மைய அரசுகள் சமமாகப் பகிர்ந்து வழங்குகின்றன. தொண்டு நிறுவனம் நன்கொடைகள் பெறுவதன் மூலமோ அல்லது பயனடைபவர்களிடமிருந்து பணம் வசூலிப்பதன் மூலமோ எஞ்சியுள்ள 9,000 ரூபாய் செலவை ஏற்கும். சிறு சுகாதார நிலையம் ஒன்றினைத் தொடங்க, தொண்டு நிறுவனங்கள் தேவையான கட்டடம், சாதனங்கள், மேசை, நாற்காலிகள் முதலியன வற்றைத் தங்கள் நிதியிலிருந்து ஏற்படுத்திக் கொள்வார்கள். தொண்டு நிறுவனங்களின் நிதிப்பற்றாக் குறையைத் தவிர்க்கக் கருதி அரசு பின்கண்டவாறு 3 தவணைகளில் ரூ. 9,000 மானியத் தொகையை வழங்குமாறு ஆணையிட்டுள்ளது.

**நல்வாழ்வுப் பணிகள்:**

பள்ளிச் சிறார் நல்வாழ்வுச் சிறப்புத்திட்டம்: இத்திட்டத்தின்படி 6 வயது முதல் 11 வயது வரையுள்ள பள்ளிச் சிறார்களுக்கு இலவசமாக மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது. 1980-81-ஆம் ஆண்டில் விரிவுபடுத்தப்பட்ட 20 தொடக்க நல்வாழ்வு நிலையங்களையும் சேர்த்து மொத்தம் 103 தொடக்க நல்வாழ்வு நிலையங்களிலும் 5 நகராட்சிகளிலும் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டம் மேலும் 50தொடக்க நல்வாழ்வு நிலையங்களுக்கும் 25 நகராட்சிகளுக்கும் 1981-82 ஆண்டில் விரிவுபடுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ் கடந்த நான்கு ஆண்டுகளில் மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டுள்ள பள்ளிச் சிறார்களின் எண்ணிக்கை வருமாறு :—

| | |
|---|---|
| 1977—78 | 129516 |
| 1978—79 | 137866 |
| 1979—80 | 171072 |
| 1980—81 | 125972 (1980 டிசம்பர் முடிவு வரை) |

**முத்தடுப்பூசித் திட்டம்:**

இந்த முத்தடுப்பு ஊசித் திட்டத்தின் கீழ் கடந்த நான்காண்டுகளில் ஏற்படுத்தப்பட்ட சாதனைகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| ஆண்டு | முத்தடுப்பு ஊசி போட்டுக் கொண்ட குழந்தைகளின் எண்ணிக்கை. |
|---|---|
| 1977—78 | 2,51,445 |
| 1978—79 | 2,80,915 (இரண்டு முறை அட்டவணை:) |
| 1979—80 | 3,73,647 |
| 1980—81 | 2,32,609 (மூன்று முறை அட்டவனை:) |

**விரிவுபடுத்தப்பட்ட நோய் தடுப்பூசித் திட்டம்:**

கீழ்க்காணும் நோய்களினாலேற்படும் நோயளவு மற்றும் இறப்புவிகிதத்தினைக் குறைப்பதே விரிவுபடுத்தப்பட்ட நோய்த் தடுப்பூசித் திட்டத்தின் குறிக்கோளாகும்.

1. தொண்டை அடைப்பான்
2. கக்குவான்
3. தட்டம்மை
4. டைபாய்டு காய்ச்சல்
5. இசிவு நோய்
6. இளம்பிள்ளை வாதம்
7. காசநோய்

இரண்டு வயதுக்குட்பட்ட பெரும்பாலான குழந்தைகளுக்குத் தடுப்பூசி போடுவதன் மூலமும் கருவுற்றிருக்கும் பெண்களுக்கு இசிவு நோய் வராமல் பாதுகாக்க இசிவு நோய்த்

தடுப்பூசி போடுவதன் மூலமும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.



இளம்பிள்ளை வாத நோய்க்குத் தடுப்பூசி போடும் திட்டம் ஒரு கட்ட அளவில் செயல் படுத்தப்படுகிறது. இம்மருந்துகள் தக்க பாது காப்பில் வைக்கப்பட்டு குளிர்சாதன வசதி யுடன் ஏனைய இடங்களுக்கு அனுப்பப்படு கிறது. முதலாவதாக, கோயம்புத்தூர், பெரியார் மாவட்டங்களில் நகர்ப்புற கிராமப் புறப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டது. பின்னர் இத்திட்டம் நீலகிரி மாவட்டம், மதுரை மாநகராட்சி, வடஆர்க்காடு,மாவட் டம், செங்கல்பட்டு மாவட்டத்தில் ஒரு பகுதிக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

**தொற்று நோய்களைக் கட்டுப்படுத்துதல்:**

வாந்திபேதி, பிளேக், நரம்புச் சிலந்தி நோய், மூளைக்காய்ச்சல், யாஸ் (சரும)நோய், மலேரியா, யானைக்கால் நோய் ஆகிய தொற்று நோய்கள் வரவிடாமல் தடுக்கும் பணிகளும் கண்காணிப்புப் பணிகளும் தீவிரமாகச் செயல் படுத்தப்பட்டு வருகின்றன.

**இந்திய மருத்துவம்:**

தமிழகத்திற்கே உரித்தான சித்தமுறை மருத்துவம், தொன்மை வாய்ந்த நமது பாரம் பரியம் மற்றும் நாகரிகத்தின் ஓர் அங்கமாகத் திகழ்கின்றபடியால் அதனை எல்லா வகை யிலும் மேம்படுத்துவதில் அரசு மிகுந்த அக் கறை கொண்டுள்ளது. ஆயுர்வேதம், யுனானி இயற்கைமுறை மற்றும் யோகாசனம் ஆகிய இதர மருத்துவமுறைகளும் தமிழகத்தில் வளர்ச்சியடைந்து வருகின்றன.

சித்தா, ஆயுர்வேதா, யுனானி ஆகிய மூன்று முறைகளிலும் சென்னையிலுள்ள 150 படுக்கைகள் கொண்ட அறிஞர் அண்ணா அர சினர் இந்திய முறை மருத்துவமனையில் மருத்துவ வசதிகள் செய்யப்பட்டுள்ளது. பாளையங்கோட்டை, அரசினர் இந்திய முறை மருத்துவக் கல்லூரியில் 208 படுக் கைகள் கொண்ட சித்த மருத்துவமனை யொன்று செயல்பட்டு வருகிறது.

1977-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் வரை யில் மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகள், வட்டத் தலைமையிட மருத்துவ மனைகள், வட்டத் தலைமையிடமல்லாத இடங்களிலுள்ள தலைமையிட மருத்துவ மனைகள் ஆகியனவற்றில் மொத்தம் 59 சித்த மருத்துவப் பிரிவுகள் தொடங்கப்பட் டன. 1977-78-முதல் மேலும் 44 சித்த மருத்துவப் பிரிவுகள் தொடங்க ஆணையிடப் பட்டுள்ளது. ஒதுக்குப்புற கிராமங்களில் வாழ் கின்ற மக்களுக்கு வைத்திய வசதிகள் செய்து தரும் முகமாக, 20 கிராம சித்த மருந்தகங் களைத் தொடங்குவதற்கு அரசு ஒப்பளித் துள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் ரூபாய் 17.50 இலட்சம் செலவில், இராமநாதபுரம், சிதம்பரம், தர்மபுரி, ஈரோடு, நாகப்பட்டினம் திண்டுக்கல், வேலூர் ஆகிய இடங்களில் 15 படுக்கைகள் கொண்ட சித்த மருத்துவப் பிரிவு களுக்குத் தனிக் கட்டிடம் கட்டவும் அரசு ஆணையிட்டுள்ளது. சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவ மனையில் 24 படுக்கைகள் கொண்ட குழந் தைகள் சிகிச்சைப் பிரிவு தொடங்க அனுமதி யளிக்கப்பட்டுள்ளது.

1980-81-ஆம் ஆண்டு முதல், பாளையங் கோட்டை அரசினர் இந்தியமுறை மருத்துவக் கல்லூரியில் பி. எஸ். எம். எஸ். சித்தா பட் டப் படிப்பில் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 44-இலிருந்து 75 ஆக உயர்த்தப் பட்டுள்ளது. தமிழகத்தில் மேலும் ஒரு சித்த மருத்துவக் கல்லூரி தொடங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. பி. யு. எம். எஸ்., யுனானி மருத்துவப் பட்டப்படிப்புக்காக, 1979-80-ஆம் ஆண்டில் யுனானி மருத்துவக் கல்லூரி ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. ஆயுர் வேதம் மற்றும் யுனானி மருத்துவப் பாட நூல்களை முறையே சமஸ்கிருதத்திலிருந்தும் உருது மொழியிலிருந்தும் தமிழில் மொழி பெயர்க்கவும் சித்த மருத்துவ இலக்கியங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கவும் திட்ட மிடப்பட்டுள்ளது.

ரூபாய் 5.80 இலட்சம் செலவில் கீழ்க் காணும் இடங்களில் மூலிகைப் பண்ணைகள் அமைப்பதற்கும் சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்தியமுறை மருத்துவ மனைக்கருகி லுள்ள மூலிகைத் தோட்டத்தினை விரிவாக்கம் செய்யவும் அரசு ஆணையிட்டுள்ளது:

(அ) திருவரங்கம்.

(ஆ) கொல்லிமலை.

(இ) மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

(ஈ) கன்னியாகுமரி மாவட்டம், வீரப்புலி ஒதுக்கக்காடு.

மூலிகைப் பண்ணைகளைப் பராமரிக்க வும், மூலிகை மருந்துகளைத் தயாரிக்கவும் தன்னுரிமையுள்ள வணிக நிறுவனம் ஒன் றினைத் தொடங்கு முகமாகப் பொருளாதார நுட்ப அறிக்கை ஒன்று தயாரிக்க அரசு ஒரு குழுவினை அமைத்துள்ளது.

1977-78-ஆம் ஆண்டு தொட்டு ரூபாய் 93.80 இலட்சங்களுக்கு இந்திய மருத்துவத் துறையின் வளர்ச்சிக்காகப் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு அரசு ஒப்பளித்துள்ளது.

தமிழகத்தில் தற்போதுள்ள ஆயுர்வேதா மற்றும் யுனானி மருத்துவ வசதிகளைமுழுமை யாகப் பயன்படுத்தவும், இவ்வசதிகளை மேலும் பெருக்குவதற்கும் உரிய வழி முறை களைக் கண்டறிந்து, அரசுக்கு ஆலோசனை வழங்குவதற்கு இரண்டு நிபுணர் குழுக்களை அரசு அமைத்துள்ளது.



# எண்ணெய் வித்துக்கள் இயக்ககப் பணிகள்!

எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்துடன் எண்ணெய் வித்து இயக்குநரகத்தை 21.10.80ல், தமிழக அரசு ஏற்படுத்தியது. உயர்விளைச்சல் தரும் வீரிய எண்ணெய் வித்துக்களை அதிகப் பரப்பில் பயிர் செய்தல், உரிய காலத்தில் தகுந்த அளவு உரமிடல், பயிர் பாதுகாப்பு முறைகளைக் கடைப்பிடித்தல், இதர தொழிற் நுட்பங்களை எண்ணெய்வித்துச் சாகுபடியாளர்களுக்குத் தெரிவித்தல் முதலியன, இந்தப் புதிய இயக்குநரகத்தின் பணிகள் ஆகும்.

நிலக்கடலையும் இதர எண்ணெய் வித்துக்களும் மானாவாரி பயிராகவே தமிழகத்தில் பயிர் செய்யப்படுகின்றனஆயினும்இந்த ஆண்டு பருவநிலை மானாவாரி பயிர்களுக்குக் குறிப்பாக நிலக்கடலைச் சாகுபடிக்கு உகந்ததாக இல்லை, தென்மேற்குப் பருவ மழை, வடக்குக் கடற்கரையோர மாவட்டங்களைத்தவிர மற்ற மாவட்டங்களில் தேவையான அளவு பெய்யவில்லை. இதனால் மானாவாரி நிலக்கடலை விதைப்பு 3 இலட்சம் எக்டேருக்கு மேல் பாதிக்கப்பட்டு விட்டது.

மின்வெட்டு, டீசல் எண்ணெய் பற்றாக்குறை, குறைவான மழை முதலிய இடையூறுகள் இருப்பினும், எண்ணெய்வித்து இயக்குநரகம் இடைவிடாமுயற்சிகள் மூலம் கீழ்க்கண்ட உற்பத்தி இலக்கை 1980-81ல் அடைய முயற்சிக்கிறது.

நிலக்கடலை 14.00 இலட்சம் டன்கள் (7.08மெ.டன்); எள் 0.70 இலட்சம் டன்கள் (0.32 மெ.ட); ஆமணக்கு 0.05 இலட்சம் டன்கள் (0.04 மெ.ட); சூரிய காந்தி 1.25 இலட்சம் டன்கள் 0.07 மெ.ட.) மொத்தம் 16.03 இலட்சம் டன்கள்.

தென்னை 121.61 கோடி தேங்காய்கள்

ஒட்டு மொத்தப் பயிர்ப்பாதுகாப்பையும் 1981-82ஆம் ஆண்டிலும் சுமார் 27700 எக்டேர் பரப்பில் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு மானியமாக எக்டருக்கு ரூ. 15 வீதம் தரப்படும். மேலும் பூச்சி மருந்துகள் 50 சதம் விலையில் எக்டருக்கு ரூ. 25 வரை மானியம் வழங்கப்படும். மேலும், செயல்விளக்கப் பாத்திகள் அமைக்க மானாவாரிப் பயிருக்கு 125- வீதமும், பாசனப் பயிருக்கு ரூ. 200-வீதமும் மானியங்கள் வழங்கப்படுகின்றன. மினிசிட் பாத்திகள் அமைக்க ரூ. 320- வீதம் வழங்கப்படுகிறது.

மக்களுக்குத் தேவைப்படும் அளவிற்குத் தேங்காய், தேங்காய் எண்ணெய் முதலியன உற்பத்தி செய்து அதன்மூலம் விலையைக் கட்டுப்பாடு செய்யும் நோக்கத்துடன் நீண்ட காலத் திட்டம் ஒன்று 52.93 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

வீரிய ஒட்டுத் தென்னங்கன்றுகளுக்குத் தமிழகத்தில் தேவை அதிகம் உள்ளது. ஆகவே, வீரிய ஒட்டுத் தென்னங்கன்றுகள் உற்பத்தி நிலையம் நாகர்கோவில், தர்மபுரி, பொள்ளாச்சி ஆகிய இடங்களில் ஒவ்வொன்றும் 5 ஏக்கர் பரப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவைமூன்றும் 1981-82ஆம் ஆண்டுமுதல் 3 இலட்சம் வீரிய ஒட்டுத் தென்னங்கன்றுகள் உற்பத்திசெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1981-82ம் ஆண்டில் புதுக்கோட்டை மாவட்டத்தில் சுமார் 200 ஏக்கர் பரப்பில் மேலும் ஒரு வீரிய ஒட்டுத் தென்னங்கன்று உற்பத்தி நிலையம் ஏற்படுத்தப்படும். இந்த நிலையம் 4.00 இலட்சம் வீரிய ஒட்டுத் தென்னங்கன்றுகளையும் 4 இலட்சம் நெட்டை ரக தென்னங்கன்றுகளையும் உற்பத்தி செய்து தமிழகத்தின் தேவையைப் பூர்த்தி செய்யும். மேலும் ஐந்து பெரிய நெட்டை ரக தென்னை நாற்றங்கால்கள் நவ்லாக், பவானி, திருவேரகம், வைகை டேம், கல்லிக்குளம் ஆகிய இடங்களில் 30 எக்டேர் பரப்பில் அமைக்கப்பட்டு 15 இலட்சம் தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யப்படும்.

1980-81ஆம் ஆண்டில் நான்கு எண்ணெய்வித்து உற்பத்தி நிலையங்கள் விழுப்புரம், திருவண்ணாமலை, திண்டுக்கல், கோபிசெட்டிப்பாளையம் ஆகிய இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.



# நாட்டுக்குத் தேவை தொழில் வளர்ச்சி!
# தொழில் வளர்ச்சிக்குத் தேவை
# டான்சி



தொழில் துறைக்கும்
வீட்டு உபயோகத்திற்கும்
ஏற்ற பல்வேறு
சாதனங்களைத் தயாரிக்கும்
55 தொழிற்கூடங்கள்.
ஆண்டு ஒன்றுக்கு
ரூ. 23 கோடி மதிப்பு உற்பத்தி-
6000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு.

டான்சியின் தயாரிப்புகளில் சில:

- இரும்பு கட்டுமானங்கள்
- நுண்ணலைக் கோபுரங்கள் மற்றும் மின்கடத்திக் கோபுரங்கள்
- இரும்பு மற்றும் மரத்தாலான நாற்காலிகள் முதலியன
- கொல்லுலை உறுப்புகள்
- இயந்திரக் கருவிகள்
- தோல் மற்றும் தோலினாலான பொருட்கள்
- விவசாயக்கருவிகள்
- வார்ப்பட இரும்புக் குழாய்கள்
- எனாமல் பூசிய செப்புக்கம்பிகள்
- பிரெஞ்சி பாலிஷ், காஸ்கட் ஷெல்லாக் மற்றும் அதைச் சார்ந்த பொருட்கள்.

## டான்சி

**தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்**
(தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனம்)
1, ஒயிட்ஸ் சாலை, சென்னை 600 014
தொலைபேசி: 82161
தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI

DIPR



# உள்துறையின் ஓராண்டுச் சாதனைகள்!

சமூகத்தில் வளர்ந்துவரும் பல பிரச்சினைகளினால் சட்டம்-ஒழுங்கைத் திறமையாகவும் பல னளிக்கும் வகையிலும் பராமரிக்க வேண்டியுள்ள இன்றியமையாத் தேவையைக் கருத்தில் கொண்டு, இரண்டு சிறப்புக் காவல்படைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத னால், சுமார் 1988 பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

தமிழ்நாட்டில் உள்ள எல்லாக் காவல் நிலையங்களுக்கும், வி.எச்.எஃப். வசதிகள் மற்றும் வாக்கி-டாக்கிகள் வழங்க அரசு ரூ. 198 இலட்சம் வழங்கியுள்ளது. மேலும், குற்றப்புலனாய்வுத் துறைக்குத் தனியாக யூ.எச்.எப். வசதி செய்து தரும் பொருட்டு அரசு ரூ. 120 இலட்சம் செலவு செய்ய அனுமதி வழங்கியுள்ளது.

**காவலர்களுக்கு மலிவு விலையில் சில குறிப்பிட்ட அத்தியாவசியப் பண்டங்கள் வழங்குதல்**

காவல் துறையில் பணியாற்றும் இன்ஸ்பெக்டர்களுக்கும், அவர்களுககுக் கீழ்மட்டத்தில் உள்ள அனைத்துக் காவலர்களுக்கும் அரசு மானியத்துடன் குறைந்த விலையில் அரிசி, துவரம் பருப்பு, உளுத்தம்பருப்பு, பாமோலின் எண்ணெய், சர்க்கரை, கோதுமை மற்றும் ரவை, மைதா ஆகிய அத்தியாவசிய உணவுப் பண்டங்களை, 1-10-80விருந்து அரசு வழங்கி வருகிறது. இத் திட்டத்தில் காவலர்கள் குடும்பம் ஒன்றுக்கு 4 நபர்களாக ஏறக்குறைய 47,000 குடும்பங்கள் பயன்பெற்று வருகின்றன.

மானியம் ஆணை பிறப்பித்த பொழுது அன்றைய விலையில் ஏறக்குறைய 50 விழுக்காடாகத் தரப்பட்டு வருகிறது. இதன் பயனாகக் குடும்பம் ஒன்றுக்குச் சுமார் ரூ. 70 சலுகையாக அமைகிறது. இதன் பொருட்டு அரசுக்கு ஆண்டொன்றுக்குச் சுமார் ரூ. 3.82 கோடி செலவாகிறது.

**தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகம்**

காவல்துறை அதிகாரிகளுக்கும், காவலர்களுக்கும் சொந்த வீடுகள் கட்டித் தரும் நோக்கத்துடன், காவலர் வீட்டுவசதிக் கழகம் ஏற்படுத்த ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்தக் கழகம் சம்பந்தப்பட்ட அலுவல்களைக் கவனிக்க இன்ஸ்பெக்டர் ஜெனரல் அந்தஸ்தில் ஒரு தனி அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

கம்பெனிகள் சட்டம் 1956-ன் கீழ், தமிழ்நாடு வீட்டு வசதிக் கழகத்தைப் பதிவு செய்யுமாறு தனி அலுவலர் பணிக்கப்பட்டுள்ளார். விரைவில் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் பதிவு பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**புதிதாகக் காவல் [illegible] மற்றும் புறக்காவல் [illegible]**

80-81ஆ[illegible]
காவல் நி[illegible]
புறக் கா[illegible]
திறக்க [illegible]

**கனரகப் போக்குவரத்து வண்டிகள் அனைத்திலும் வேகக் கட்டுப்பாட்டு கருவி நிறுவுதல**

கனரக மோட்டார் வண்டிகள் அதிவேகமாகச் செல்வதனால் விபத்துக்கள் ஏற்பட்டு அதன் காரணமாகப் பலர் உயிரிழக்க நேரிடுகிறது. இவ்வகை விபத்துக் களைக் குறைக்கும்பொருட்டு கன ரகப் போக்குவரத்து வண்டிகள் அனைத்திலும் மின்அணு வேகக் கட்டுப்பாட்டுச் சாதனம் ஒன்றை கட்டாயமாகப் பொருந்தும்படி வகைசெய்யும் ஒரு நிபந்தனையை உரிமத்திற்கான நிபந்தனைகளில் சேர்க்க 160 என்ற புதிய விதி ஒன்றினை தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் விதிகளில் அரசு சேர்த் துள்ளது.

தமிழ்நாட்டில் தற்போது சுமார் 42,360 கனரக வண்டிகள் உள்ளன. அவற்றில் சுமார் 7,145 வண்டிகள் அரசு போக்கு வரத்துக் கழகங்களுக்குச் சொந்த மானவை. போதிய அளவில் வேகக்கட்டுப்பாட்டுக் கருவிகள் தயாரிக்கப்பட்டு வெளி மார்க் கெட்டில் வரவில்லையாதலால், இக்கருவிகளை முதலில் அரசு போக்குவரத்துக்கழகப் பேருந்து களில் பொருத்தப்பட வேண்டு மென்று அரசு முடிவு செய்து நடை முறைப்படுத்தி வருகிறது. சுமார் 3,000 வேகக் கட்டுப் பாட்டுக் கருவிகளைப் போக்கு வரத்துக் கழகங்கள் வாங்கி அவற் றில் சுமார் 700 வண்டிகளில் இக் கருவிகள் பொருத்தப்பட்டுள் ளன இதன் பலன் நிறைவு அளிக்கும் வகையில் உள்ளது.

**கிராமங்களுக்குப் போக்குவரத்து வசதி**

கிராம மக்களின் போக்கு வரத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், சாலைப் போக்கு வரத்துத் தேவைகளை மதிப்பிடு வதில் அறிவியல் பூர்வமான உதவிகளுக்கு வகை செய்வதற் கும் முதன் முதலாக நெடுஞ் சாலை போக்குவரத்துத்துறை, கிராம வளர்ச்சித்துறை, போக்கு வரத்துக் கழகங்கள், அரசு புள்ளி விவரத் தொகை நிலையம் அனைத்தும் இணைந்து சாலைப் போக்குவரத்து ஆய்வு நடத்த வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்தது.

...மிழகத்திலுள்ள 12,[illegible]39
...சிகளில் 8034 ஊராட்சி
...கெனவே பேருந்து
...யப்பட்டுள்ளது.
... பயன்களை
...ண்டு மீதி
...ாட்சிகளில்
... மக்கள்
...8 ஊர்

களுக்குச் சிறிய உந்துகளையும் பேருந்துகளையும விடுவதறகாக 476 வழித்தடங்கள அமைக்கப் பட்டுள்ளன. எனினும், இரண்டா வது சாலைப் போக்குவரத்து ஆய்வினை நடத்தி 426 வழித் தடங்களில் 22 இலட்சம் மக்க ளுக்குப் பேருந்து வசதி செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. . இப்போதுள்ள சாலைகளை அகலபபடுத்துவதும் இரண்டாவது ஆய்வில் காணப் படும் தடங்களுக்குத் தேவைப் படுகிறது.

எத்தனை தடங்கள் ஆரம் பிக்கப்பட்டுள்ளன; எத்தனை கிராமங்கள் பேருந்து வசதி பெற் றுள்ளன என்பதைக் கீழே காண லாம்:—

| | பேருந்துகளின் எண்ணிக்கை | | வருடம் 1979—80 | 1980—81 |
|---|---|---|---|---|
| 1. | மோட்டார் வண்டிகளின் எண்ணிக்கை | | 11466 | 11984 |
| 2. | பேருந்துகளின் மொத்தம் | | | |
| | தடப்பேருந்துகள் மொத்தம் | ... | 10332* | 10832* |
| | உதிரிப்பேருந்துகள் | ... | 1134* | 1152* |
| | மொத்தம் | ... | 11466* | 11984* |
| 3. | மொத்ததடங்கள் | ... | 6738 | 7188 |
| 4. | புதிய தடங்கள் | ... | 1037 | 450 |
| 5. | பயனடைந்த கிராமங்களின் எண்ணிக்கை | ... | 1629 | 328 |
| 6. | பயனடைந்த மக்களின் எண்ணிக்கை (இலட்சக்கணக்கில்) | ... | 34.61 | 9.66 |

*இதில் தனியார் துறை மற்றும் அரசு போக்குவரத்துக் கழகங்களும் அடங்கும்.



**ஏழைகளுக்கு இலவச சட்ட உதவி**

ஏழைகளுக்கு இலவச சட்ட உதவி அளிப்பது இந்திய அரசியலமைப்பின் பிரிவு 39 படி அரசின் கடமையாகும். தமிழ்நாடு சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் கழகம் 1977-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களிலிருந்து செயல்பட்டு வருகிறது. இக்கழகத்தின் செலவிற்கு நிதி உதவியை அரசுமானியமாக அளிக்கிறது. மொத்தம் 17 மாவட்டக் குழுக்கள், 78 வட்டக்குழுக்கள் 81 ஆலோசனைக் குழுக்கள் ஆகியவை இக்கழகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன. இக்கழகம் மோட்டார் வண்டி விபத்துக்குள்ளானோருக்கு நட்டஈடு பெற சட்ட உதவி அளிக்கிறது. மாவட்டங்களில் உள்ள அதிகாரிகள், நீதிமன்றங்கள், தீர்ப்பாயங்கள் ஆகியவைகளிலிருந்து நிவாரணம் பெற்றுத்தருவது, பெண்டிர் மற்றும் குழந்தைகள் ஆகியோருக்கு பராமரிப்புச் செலவு (ஜீவனாம்சம்) பெற்றுத் தருவது ஆகிய திட்டங்கள் இக்கழகத்திடம் உள்ளது.

இக்கழகம் விசாரணைக் கைதிகள், தண்டிக்கப்பட்ட கைதிகள் ஆகியோருக்குச் சட்ட உதவி அளிக்கிறது. சிறைக்குச் சென்று சிறைக்கைதிகளின் சிக்கல்களைக் கேட்டறிந்து அவர்களுக்கு உதவி அளிப்பதற்காகப் ''பணி வழக்குரைஞர்கள்'' என்ற திட்டத்தை இக்கழகம் சமீபத்தில் அறிமுகப்படுத்தியுள்ளது.

இக்கழகம் 31-12-80 தேதி வரை 21,050 விண்ணப்பங்களைப் பெற்று உள்ளது. இந்த 21,050 விண்ணப்பங்களில் 11,599 விண்ணப்பங்களுக்குத் தீர்வு காணப்பட்டது.



**வெளியூரிலுள்ள சிவில் நீதி மன்றங்கள்.**—இம்மாநிலத்தில் 15 மாவட்ட நீதிமன்றங்கள் உள்ளன. கோயம்புத்தூர், கடலூர், திருச்சிராப்பள்ளி, சேலம், இராமநாதபுரம் மாவட்டங்களில் ஒவ்வொன்றும், மதுரை, திருநெல்வேலியில் இரண்டுமாக இம்மாநிலத்தில் கூடுதல் மாவட்ட நீதிமன்றங்களும், செஷன்ஸ் நீதிமன்றங்களும் உள்ளன. மாவட்ட நீதிபதி, அந்தந்தக் கோட்டத்தின் செஷன்ஸ் நீதிபதியாகவும் இருப்பார். தொழிலாளர் அரசுக் காப்புறுதி நீதிமன்றம், எஸ்டேட் ஒழிப்பு நடுவர் மன்றம், மோட்டார் வண்டிகள் விபத்து உரிமைக் கோரிக்கை நடுவர் மன்றங்கள் போன்று குறிப்பிட்ட வகைத் தனிச் சட்டங்களின் கீழ் சிறப்பு நடுவர் மன்றங்களாகவும் செயல்படுகின்றன. மாவட்ட நீதிபதிகள் அவரவரது கோட்டங்களிலுள்ள சார் நிலை சிவில் நீதிமன்றங்களையும், நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தையும் ஆய்வு செய்கின்றனர். மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்ட நீதிபதிகள், மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்டங்களில் விசாரணை அதிகாரத்துடன் குற்றவியல் சட்ட திருத்தச் சட்டத்தின் கீழ் வழக்குகளை விசாரணை செய்கின்ற சிறப்பு நீதிபதிகள் எனப் பெயரிடப்பட்டுள்ளனர்.

**தமிழ்நாட்டிலுள்ள உரிமையியல் நீதிமன்றங்களின் நிதி அதிகார வரம்பை உயர்த்துதல்**

சமீபகாலம் வரை ரூபாய் 5,000 நிதி வரம்பிற்குட்பட்ட வழக்குகள் மாவட்ட முன்சீப்களின் அதிகார வரம்பிற்கு உட்பட்டதாயிருந்தது. 5,000 ரூபாய்க்கு மேற்பட்ட வழக்குகள் தொடர்பாக வழக்கு தொடர வழக்காடும் பொதுமக்கள் நெடுந்தொலைவில் உள்ள துணை நீதிமன்றங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது. மாவட்ட நீதிபதிகள் ரூ. 10,000 வரையுள்ள உரிமையியல் வழக்குகளை மட்டுமே விசாரிக்கும் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு உடையவர்களாயிருப்பதால் ரூ. 10,000த்திற்கு மேல் மதிப்புள்ள வழக்குகளில் நிவாரணம் காண உயர்நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்ய வேண்டியுள்ளது. சென்னையில் உள்ள மாநகர உரிமையியல் நீதிமன்றம் ரூ. 5,000 வரை மதிப்புள்ள வழக்குகளை மட்டுமே விசாரிக்கும் அதிகாரம் கொண்டதாயிருப்பதால் ரூ. 5,000 மதிப்புள்ள சென்னை மாநகர எல்லைக்குள் உருவாகும் அனைத்து வழக்குகளிலும் நிவாரணம் பெற உயர்நீதிமன்றம் செல்ல வேண்டியுள்ளது. வழக்காடும் பொது மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் நோக்குடனும், உயர்நீதிமன்றத்தில் உள்ள வழக்கு நிலுவையைக் குறைக்கும் நோக்குடனும் 'தமிழ்நாடு உரிமையியல் நீதிமன்றங்கள் மற்றும் சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள் (திருத்த) சட்டம் 1980 என்னும் சட்டத்தை இயற்றி மாவட்ட முன்சீப்புகள் ரூ. 15,000 வரை மதிப்புள்ள வழக்குகளையும் மாவட்ட நீதிபதிகள் ரூ. 3,000 வரை மதிப்புள்ள மேல்முறையீடுகளையும், சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றம் ரூ. 10,000 வரை மதிப்புள்ள வழக்குகளை விசாரிக்க வழிவகை செய்துள்ளது. மேலே கண்டுள்ள சட்டம் 7-3-81ஆம் நாளிலிருந்து செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ரேட்டு பதவிகள் முதல் வகுப்பு மாஜிஸ்ரேட் பதவிகளாக நிலை உயர்த்தப்பட்டு மாவட்ட முன்சீப் பதவித் தரத்துடன் ஒருங்கிணைக்கப் படலாமென்ற அரசு ஆணையிட்டுள்ளது. குற்றவியல் மாஜிஸ்ரேட்டுகள், சிவில் நீதிபதிகள் ஆகிய இருவகையினரும் மாவட்ட செஷன்ஸ் நீதிபதிகளாகப் பதவி உயர்வு பெறுகின்ற காலத்தில் அவர்கள் நீதித்துறையில் பல்வேறு பிரிவுகளையும் சேர்ந்த பணிகளை நன்றாக அறிந்திருக்க வேண்டியும், மாஜிஸ்டிரேட்டுகள் சிவில் வழக்குகள் குறித்து அனுபவம் பெறவும், சிவில் நீதிபதிகள் குற்ற வழக்கு விசாரணைகள் பற்றி அனுபவம் பெறவும் இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதனைச் செயல்படுத்த சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.



# பிற்பட்ட சமுதாயத்தினர் மேம்பாட்டுத் திட்டங்கள்

பிற்பட்ட சமூகத்தினரது கல்வி அறிவை உயர்த்தி விட்டால் மற்ற நிலைகளில் முன்னேறி விடுவார்கள் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில், தமிழக அரசு, பின்தங்கிய மக்களது கல்விக்காகக் கணிசமான அளவு பொருளுதவி செய்து வருகிறது.

### கல்வி உதவித் தொகை

கடந்த நான்கு ஆண்டுகளில் ஆண்டுதோறும் சுமார் 3 இலட்சத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் 3 கோடி ரூபாய் வரையில் நிதி உதவி பெற்றுப் பயன் அடைந்து வருகிறார்கள். 1981-82ஆம் ஆண்டிற்கு ரூ. 338.29 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனால் சுமார் 4 கோடி மாணவர்கள் பயன் பெறுவார்கள்.

### மாணவ, மாணவியர் இல்லங்கள்

பின்தங்கிய மாணவ, மாணவியர்கள் தங்கிப் படிக்க, ஏராளமான விடுதிகளை அரசு நடத்தி வருகிறது. 1976-77ஆம் ஆண்டு வரை 266 ஆக இருந்த இவ்வில்லங்கள், இப்பொழுது 357 என்று உயர்ந்து இருக்கிறது. 1981-82-ல் மேலும் 40 இல்லங்கள் திறக்கப்பட இருக்கின்றன. இதனால் சுமார் 25,000 மாணவ, மாணவியர்கள் இலவச உணவு, உடை, உறைவிடம் முதலிய அத்தனையையும் பெற்று கல்வியில் முன்னேறுவதற்குத் தமிழக அரசு வாய்ப்பைப்பெருக்கி இருக்கிறது. இந்த விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களது உணவுக்காக தற்சமயம் கொடுக்கப்பட்டு வரும் தொகையைவிட 1981-82ல் இருந்து மாதம் மேலும் ஒரு மாணவருக்கு ரூ. 15 வீதம் உயர்த்த முடிவு செய்யப்பட்டு இருக்கிறது. இது தவிர தனிப்பட்டோர் நடத்தும் இல்லங்களில் படிக்கும் பின்தங்கிய மாணவர்களது உணவுக்காக மாதம் ஒன்றிற்கு மேலும் ரூ. 10 இவ்வாண்டு முதல் உயர்த்திக் கொடுக்க இவ்வரசு முடிவு எடுத்திருக்கிறது. இதனால் 2,500 மாணவர்கள் பயன் அடைவார்கள். அரசு நடத்தும் மாணவ, மாணவியர் இல்லங்களில் பணியாற்றும் சமையற்காரர்கள் இது வரை ரூ. 55, ரூ. 65 என்று மாதச் சம்பளம் பெற்று வந்தார்கள். அவர்கள் எல்லாரையும் அடிப்படை ஊழியர்களாக மாற்றி இலவச உணவோடு தக்க அடிப்படை ஊதியம் வழங்கி அவர்களை முழு நேர அரசு அலுவலர்களாக மாற்றி தமிழக அரசு ஆணை பிறப்பித்து இருக்கிறது. இதனால் 707 சமையற்காரர்கள் பயன்பெறுவார்கள்.

### இட ஒதுக்கீடு

தமிழக அரசு அலுவலகங்களிலும், அரசைச் சார்ந்த நிறுவனங்களிலும், மற்றும் கல்லூரிகளிலும் பிற்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர்கள், சேர்ந்து படிக்கவும் பணியில் அமரவும் இதுகாறும் 31 விழுக்காடு ஒதுக்கப்பட்டு இருந்ததை, 1-2-80முதல் 50 விழுக்காடாக உயர்த்தி அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

பிற்பட்ட வகுப்பினரைச் சார்ந்த 50 மாணவர்களைத் தயார் செய்து ஆண்டுதோறும் ஐ. ஏ. எஸ்., ஐ. பி. எஸ். போன்ற தேர்வுக்கு இத்துறையால் அனுப்பப்பட்டு வந்தது. சென்னையில் இயங்கி வரும் தனிப் பயிற்சி நிலையத்தைப்





போன்று ஐ. ஏ. எஸ்., ஐ. பி.எஸ்; தேர்வுக்கான பயிற்சியைக் கொடுப்பதற்கு மதுரை, திருச்சி, கோவை, ஆகிய 3 இடங்களில் துணைப் பயிற்சி நிலையங்கள் 1980-81ல் ஆரம்பிக்கப்பட்டன.

### இலவசத் தொழிற்கருவிகள் வழங்குவது

பின்தங்கிய மக்களில் முடி திருத்துவோர், சலவைத் தொழிலாளிகள் ஆகியவர்களுக்குப் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராக இருந்தபொழுது, இலவசக் கருவிகள் வழங்கும் திட்டம் முதன் முதலாகச் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தை முனைப்புடன் செயல்படுத்தி, 1978-79 முதல் 1980-81 முடிய கடந்த 3 ஆண்டுகளில் 23,249 குடும்பங்களுக்கு இலவச தொழிற் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. இச்சாதனை கடந்த 10 ஆண்டுகளில் நிகழ்த்திய சாதனைக்குச் சற்றேறத்தாழ சமமாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

### சலவைத்துறைகள்

சலவைத் தொழிலாளரின் நன்மைக்காக, நகர ஊராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் சலவைத் துறைகள், பாதி கடன், பாதி மானியம் (50 விழுக்காடு) என்ற அளவில், சென்ற ஆண்டு வரை 55 இடங்களில் கட்டப்பட்டுள்ளன.

### பாசனக் கிணறுகள்—இலவச வீட்டுமனைப் பட்டாக்கள்–வீடுகள்

குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட மக்களுக்கு, ஆதி திராவிட மக்களுக்குக் கொடுக்கப்படும் உதவிகளுக்குச் சமமாக சலுகைகள் வழங்கப்படுகின்றன. பாசனக் கிணறு வெட்டவும், மற்றும் வீடு கட்டிக்கொள்ளவும் அரசு மானியம் வழங்குகிறது. கடந்த 2 ஆண்டுகளில் 1,000 வீடுகளுக்கு மேல் இத்திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வருகிறது. 1981-82ல் ஒட்டர், நரிக்குறவர், சலவை செய்பவர், முடிதிருத்துவோர் ஆகிய மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள மக்களுக்கு இலவசமாக வீட்டு மனைப்பட்டா வழங்கும் திட்டம் அமல்படுத்தப்பட இருக்கிறது. இதற்காக அரசு ரூ. 15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

### பொருளாதார மேம்பாட்டுப் பணிகள்

இவை தவிர பிற்பட்ட சமூகத்தைச் சார்ந்த மக்களின் பொருளாதார மேம்பாட்டை உயர்த்தும் நோக்கத்துடன், ஒரு கழகம் நிறுவுவதற்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. தமிழ்நாடு பிற்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் என்ற பெயரில் இயங்க இருக்கும் இந்நிறுவனம், ரூ. 10 கோடி முதலீட்டில் செயல்படும். பின்தங்கிய மக்கள் துவங்கும் தொழில்களுக்குக் குறைந்த வட்டி விகிதத்தில் கடன் கொடுத்தல், வங்கி முதலீடு செய்தல் வங்கி உத்தரவாதம் அளித்தல், ஆகியவற்றில் ஈடுபடும். மேலும், பிற்பட்ட சமூகத்தினரது வணிக வர்த்தக மற்றும் தொழில் மேம்பாட்டிற்கான திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தவும் இந்நிறுவனம் பாடுபடும். மேலும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டம், சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் கிடைக்கும் மானியத்தைப்பயன்படுத்தி, இக்கழகம் பிற்பட்ட மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்குப் பாடுபடும்.

# வனத்துறையின் ஓராண்டு



நமது இயற்கை உயிர் வளங்கள் அழிந்திடாமல் காத்திடவும் காடுகளைப் பாதுகாக்கவும் மேம்பாடு செய்யவும் 1980-81ஆம் ஆண்டில் ரூ. 789.89 இலட்சம் அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

1980-81ஆம் ஆண்டில் காடு படு பொருட்கள் சார்ந்த தொழில்களுக்கான மூலப்பொருட்கள் யூகலிப்டஸ் மர வகைகள், மிலாறு மரம், கருவை மற்றும் மூங்கில்களை 1.50 இலட்சம் டன்கள் அளவிற்கு அரசு வழங்கியது.

**சந்தன மர எண்ணெய் ஆலை நிறுவுதல்**

ரூ. 49.99 இலட்சம் செலவில் அதிக லாபம் தரக்கூடிய 400 டன்கள் அளவு சந்தனமர எண்ணெய் ஆலை நிறுவ அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டு துவக்கப்பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்குச் சுமார் ரூ. 12.28 இலட்சம் இலாபம் கிடைக்கும்.

**அரசு ரப்பர் தோட்டங்களும் தொழிற்சாலைகளும்**

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ரப்பர் தோட்டங்களிலிருந்து கிடைக்கக்கூடிய வருவாயினைப் பெருக்கத் திட்டமிடப்பட்டு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பெருஞ்சாணியில் உள்ள மணலோடை ரப்பர் தோட்டத்தில் ரப்பர் பாலை ரப்பர் சீட்டுகளாக்கும் தொழிற்சாலை 22.9.80ல் தொடங்கப்பெற்றது. 1980ம் ஆண்டில் 1,55,580 கிலோ எடையுள்ள பல்வேறு ரப்பர் பொருட்கள் இத்தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்டன.

மயிலாறு கோட்டத்தில் 'கிரம் ரப்பர்' (Crumb Rubber) தொழிற்சாலை ஒன்றினை நிறுவத் திட்டமிடப்பட்டு தொழிற்சாலை கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

மேலும் ரப்பர் பாலைக் கெட்டிப்படுத்துகின்ற "ஆல்பா லாவல் லாடக்ஸ் கான்சென்டிரேட்டர்" (Alfa laval late concentrator) என்னும் இயந்திரம் ஒன்று 1980-81ல் ஸ்வீடன் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு அதனை நிறுவுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ரப்பர் தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்காகக் குடியிருப்புகள் கட்டுவது 1980-81ஆம் ஆண்டில் தீவிரப்படுத்தப்பட்டு 245 குடியிருப்புகள் கட்டப்பட்டன.

மேலும் இலங்கையில் இருந்து தாயகம் திரும்பியவர்களைக் குடியமர்த்த 1980-81ல் ரூ. 29.34 இலட்சம் செலவிடப்பட்டது.

**சமூகக் காடு வளர்க்கும் திட்டம்**

சமூகக் காடுவளர்ப்புத் திட்டத்தைச் செயலாக்குவதில் தமிழ்நாடு முன்னணியில் நிற்கிறது. இத்திட்டத்தின்கீழ், 8 புதிய வன விரிவாக்கக் கோட்டங்களை ஏற்படுத்த அரசு அனுமதித்துள்





ளது. இதனால் 1980-81ம் ஆண்டில் 23640 எக்டேர் பரப்பளவிலும் சாலை ஓரங்களில் 589 கி.மீ. தூரத்திற்கும் ரூ. 214.50 இலட்சம் செலவில் தோட்டங்கள் எழுப்பப்பட்டன. வீட்டிற்கு ஒரு மரம் வளர்ப்போம் என்ற இலட்சிய முழக்கத்தினைச் செயலாக்கம் செய்யும் வகையில், வனத்துறை 1980-81ம் ஆண்டில் 45 இலட்சம் மரக் கன்றுகளைப் பொது மக்களுக்கு மலிவு விலையில் வழங்கியுள்ளது.

**மரக்கூழ் தயாரிப்பதற்கான மரங்களை வளர்த்தல்:**

காகிதம், ரயான் போன்ற தொழில்களுக்குத் தேவையான மூலப் பொருட்களை வழங்குவதற்காக 1980-81ஆம் ஆண்டில் ரூ. 55.44 இலட்சம் செலவில் 3,295 எக்டேர் பரப்பளவில் கற்பூரத் தைல மரங்கள், மூங்கில் ஆகியவை வளர்க்கப்பட்டன. மேற்கு மலை வளர்ச்சித் திட்டப் பணிகளும் இதனுள் அடங்கும்.



**தொழில்துறை வணிகத்துறைகட்கு வேண்டிய திண்மரங்களை வளர்த்தல்:**

இத் திட்டத்தின் கீழ் 1980-81ம் ஆண்டில் 432 எக்டேர் பரப்பளவில் ரூ. 5.26 இலட்சம் செலவில் தேக்கு, செம்மரம் முதலிய திண் மரத் தோட்டங்கள் உருவாக்கப்பட்டன.

தீப்பெட்டித் தொழிற்சாலைகட்குத் தேவையான மர வகைகளை வளர்த்திடவும் அதன் மூலம் அத்தகைய தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு நலிந்திடாமலிருக்கவும் 1980-81ல் ரூ. 0.82 இலட்சம் செலவில் 82 எக்டேர் பரப்பளவில் மென் மரத் தோட்டங்கள் எழுப்பப்பட்டன.

**மிலாறு மரத் தோட்டங்கள்:**

தோல் பதனிடுவதற்குத் தேவைப்படும் படிகப்பொருளை எடுப்பதற்கும் ரயான் கூழ் தயாரிப்பதற்கும் மிலாறு மரங்கள் ரூ. 4.69 இலட்சம் செலவில் 1527 எக்டேர் பரப்பில் 1980.81ல் எழுப்பப்பட்டன.

கிராமப்புறங்களில் விறகு மரக் காடுகளை வளர்க்கும் பணியினை தீவிரப்படுத்துவதற்காக 4 கோட்டங்கள் 1980-81ல் புதிதாக ஏற்படுத்தப்பட்டன.

**சந்தன மரத் திட்டம்:**

சந்தன மரங்களை எழுப்பி





வருங்காலத்தில் வருவாயைப் பெருக்கவும், தற்போதுள்ள மரங்களைப் பேணிக்காக்கவும், 1980-81ல் ரூ. 15.47 இலட்சம் செலவிடப்பட்டது. 226 எக்டேர் பரப்பளவில் சந்தன மரத் தோட்டங்கள் எழுப்பப்பட்டு 646 எக்டேர் பரப்பளவில் உள்ள பழைய தோட்டங்களில் பராமரிப்பு வேலைகள் செய்யப்பட்டன. மேலும் சேலத்தில் ரூ.9.82 இலட்சம் செலவில் சந்தனமரக் கிடங்கு ஒன்று கட்ட அரசு அனுமதித்து உள்ளது. இதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

### புயல்தடுப்பு மரம் வளர்ப்புத் திட்டம்

புயலால் விளையும் சேதங்களைக் குறைக்க புயல்தடுப்பு அரணாக அமைவதற்காகவும், வேளாண்மையை மேம்படுத்தவும் கடற்கரையோர மாவட்டங்களில் ரூ. 10.18 இலட்சம் செலவில் 627 எக்டேர் பரப்பளவில் 1980-81ல் தோட்டங்கள் எழுப்பப்பட்டன.

மேட்டூர் ஸ்டான்லி நீர்த்தேக்கப்பகுதியில் தர்மபுரியைத் தலைமை இடமாகக் கொண்டு மேலும் ஓர் மண்வளப் பாதுகாப்புத் தோட்டம் புதிதாகத் துவக்கப்பட்டு பணிகள் தீவிரப் படுத்தப்பட்டுள்ளன.

### பழங்குடியினர் மேம்பாட்டுப் பணித் திட்டம்

காடு வளர்ப்பதன் மூலம் பழங்குடி மக்கட்கு வேலை வாய்ப்பு அளிக்கவும், மலைப்பகுதிகளில் சாலை அமைத்தல், பள்ளி ஆசிரியர்களுக்குக் குடியிருப்புகள் மாணவர்கட்கு விடுதிக் கட்டடங்கள் ஆகிய பணிகள் ரூ. 16.17 இலட்சம் செலவில் 1980-81ல் செய்யப்பட்டன. 541 எக்டேர் பரப்பளவில் தோட்டங்கள் எழுப்பப்பட்டன. இவ்வேலைகளை பெருமளவில் செய்யவும், கல்ராயன் மலைப்பகுதியை மேம்படுத்தவும், சேலம் மாவட்டம் ஆத்தூர் மற்றும் தென்னார்க்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சியில் புதிய இரு வனக்கோட்டங்களை 1980-81ல் அரசு ஏற்படுத்தியது.

### தேயிலை

1980-81ம் ஆண்டில் மத்திய நிதி உதவியுடன் ரூ. 15.53 இலட்சம் செலவில் 75 எக்டேர் பரப்பில் தேயிலைத் தோட்டம் எழுப்பியது.

### வனவிலங்கு மேம்பாட்டுத் திட்டங்கள்

உலகச் சுற்றுலா தேசப்படத்தில் சுற்றுலாப் பயணிகள் இந்திய நாட்டில் காண வேண்டிய இடங்களாகக் குறிப்பிட்டுள்ள இடங்களில் முதுமலை வனவிலங்குகள் புகலிடம் ஒன்றாகும். இதைப் போலவே திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள களக்காட்டில் சிங்கவால் குரங்கிற்காக உய்விடம் அமைத்தல், தஞ்சை மாவட்டம் கோடியக்கரையில் ''வெளிமான்' உய்விடம் அமைத்தல் வடஆர்க்காடு மாவட்டம் சாத்தனூர் நீர்த்தேக்கத்தில் மக்கர்வகை முதலைகளை வளர்க்கும் திட்டம் ஆகிய பணிகள் ரூ. 1.93 இலட்சம் செலவில் 1980-81ல் மேற்கொள்ளப்பட்டன. வனத்துறையின் இம்முயற்சியால் தமிழ்நாட்டிற்கு வரும் சுற்றுலாப்பயணிகள் காணத் தகுந்த இடங்களாக இவை வளர்ந்து வருகின்றன. இவைகளுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் சென்னை மாநகரிலிருந்து 30 மீ. தொலைவில் வண்டலூர் என்னும் காட்டில் 302 எக்டேர் பரப்பில் நவீனவசதிகளுடன் வனவிலங்குப் பூங்கா ஒன்றை ரூபாய் 300 இலட்சம் செலவில் அமைக்க அரசு முடிவு எடுத்து இதற்கான ஆக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன.




# கூட்டுறவுத் துறையின் முன்னேற்றப் பணிகள்

தமிழ்நாட்டில் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேலும் உயர்த்தும் பணியில் கூட்டுறவு இயக்கம் தொடர்ந்து பெரும் பங்குவகித்து வருகிறது. குறிப்பாக விவசாயக் கடன் வழங்குதல், விவசாய இடு பொருட்கள் வழங்குதல், விளை பொருட்களை விற்பதற்கு வசதி செய்தல், நுகர் பொருட்களை விநியோகித்தல் ஆகியவற்றில் இவ்வியக்கம் பெரிதும் உதவுகின்றது.

தமிழ்நாட்டில் சாகுபடியின் கீழ் உள்ள நில உடைமைகள் 53.14 இலட்சம் என மதிப்பிடப் பட்டுள்ளது. அவற்றில் 77.2 சதவீதம், அதாவது 41.02 இலட்சம் நில உடைமையாளர்கள் மாநிலத்தில் உள்ள சுமார் 4740 கிராம விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களில் 31.3.81-ஆம் தேதி நிலவரப்படி உறுப்பினர்கள் ஆகியுள்ளனர். இச்சங்கங்கள் தங்கள் அங்கத்தினர்களின் பயிர்ச் செலவிற்குத் தேவையான நிதி வசதியினைக் குறுகிய காலக் கடன்களாகத் தொடர்ந்து வழங்கி வருகின்றன.

**மத்திய காலக் கடன்கள்**

விவசாயிகளுக்குக் கூடுதலாக வருவாய் கிடைக்கும் பொருட்டு கறவை மாடுகள் வாங்குதல், உழவு மாடுகள் வாங்குதல், ஆடு வளர்த்தல், கட்டை வண்டி வாங்குதல் போன்ற காரியங்களுக்காக மத்திய காலக் கடன்களையும் இச்சங்கங்கள் வழங்கி வருகின்றன.

**நகைக் கடன்கள்**

நகைக் கடன் வழங்கும் கூட்டுறவு அமைப்புகளின் எண்ணிக்கை 1976-77ல் 919 ஆக மட்டுமே இருந்து 1979-80ல் 1581 ஆக உயர்ந்து, தற்போது, 1666 ஆக மேலும் உயர்ந்துள்ளது.

சவரன் ஒன்றுக்கு ரூ. 500 வீதம் நகைக் கடன் கொடுத்து வந்த கூட்டுறவுச் சங்கங்கள் தற்போது ரூ. 600 வீதம் கொடுத்து வருகின்றன. ஒரு நபர் பெறக் கூடிய நகைக் கடனின் உச்ச அளவு ரூ. 5,000 ஆகும். நகைக் கடன்கள் மீது வசூலிக்கப்பட்டு வந்த வட்டி வீதம் நலிந்த பிரிவினர் பயன் பெறும்பொருட்டு 15 சதவீதத்திலிருந்து 14 சதவீதமாகக் குறைக்கப்பட்டு உள்ளது.

**நீண்டகாலக் கடன்கள்**

சிறு பாசனம், நிலச் சீர்திருத்தம், டிராக்டர்கள் வாங்குவது, நிலம் வாங்குவது போன்ற காரியங்களுக்கும், காபி, தேயிலை, தென்னை, திராட்சை, மா முதலிய தோட்டப் பயிர்கள் பயிரிடுவதற்கும், கோழி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, போன்ற காரியங்களுக்கும் தமிழகத்திலுள்ள 182 கூட்டுறவு நிலவள வங்கிகள் தொடர்ந்து நீண்ட காலக் கடன்கள் வழங்கி வந்துள்ளன. வேளாண்மை மறுநிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன் பகுதிவாரியான வளர்ச்சிக்கான திட்டங்கள் தீட்டப்பட்டு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் 38.08 கோடி ரூபாய் மொத்த நிதி ஒதுக்கீடு கொண்ட 91 சிறுபாசனத் திட்டங்களும் 18.10 கோடி ரூபாய் மொத்த நிதி ஒதுக்கீடு கொண்ட 84 இதர

வறட்சி நிவாரணத்துக்கு

# 40 கோடி ரூபாய்

தமிழகத்தில் வறட்சி நிவாரணப் பணிகளுக்கென இது வரை 39.54 கோடி ரூபாய் தமிழக அரசு செலவிட்டுள்ளது. இதில் 40 சதவிகிதம் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிவாழ் மக்களுக்குக் குடிதண்ணீர் வழங்குவதற்காகவே செலவிடப்பட்டுள்ளது.

பட்டு வருகின்றன.

நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் உபரி நிலம் ஒப்படை பெற்றவர்கள் தங்கள் நிலத்தை வங்கிகளிடம் அடமானம் வைத்து அரசு உத்தரவாதத்துடன் கிணறு வெட்டுதல், பம்புசெட்டு வைத்தல் போன்ற காரியங்களுக்காகக் கடன்கள் பெற அரசு அனுமதியளித்துள்ளது.

விவசாயிகள் செலுத்த வேண்டிய பாக்கித் தொகைகளைத் திருப்பிக் கொடுக்காமல் இருந்ததன் விளைவாக விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களிலும் மற்றும் நிலவள வங்கிகளிலும் தவணை கடந்த கடன்கள் அதிகரித்ததால் 1978-79 முதல் அவை வழங்கும் கடன் அளவு குறைந்து வருகிறது. வசூலில் கணிசமான முன்னேற்றம் எதிர்பார்த்து, நடப்பாண்டில் குறுகிய கால, மத்திய கால மற்றும் நீண்ட காலக் கடன்களாக 140 கோடி ரூபாயும், நகைக் கடன்களாக 130 கோடி ரூபாயும் ஆக 270 கோடி ரூபாயும் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### சிறு விவசாயிகளுக்கு உதவி

சமுதாயத்தில் நலிவுற்ற பிரிவைச் சார்ந்தவர்களுக்கு அதாவது சிறு விவசாயிகளுக்கும், ஓரளவு நிலம்வைத்திருக்கும்விவசாயிகளுக்கும் உதவுவதில் விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் தனிக் கவனம் செலுத்தி வந்துள்ளன. 31.16 இலட்சம் நில உடைமைகளை வைத்துள்ள சிறு விவசாயிகள் விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் ஆகியுள்ளனர். கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கிய குறுகிய கால, மத்திய கால மொத்தக் கடன் தொகையில் 47 சதவீதம் 1976-77ல் நலிந்த பிரிவைச் சார்ந்த விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. இது 1980-81-ஆம் ஆண்டில் 51 சதவீத அளவிற்கு உயர்ந்துள்ளது

புதுக்கிணறு வெட்டும் சிறு விவசாயிகட்கு கிணறு ஒன்றுக்கு ரூபாய் 500-க்கு மேற்படாமல் அரசு மான்யம் வழங்கி வரும் திட்டத்தின் கீழ் 1977-78ஆம் ஆண்டு முதல் 1980-81ம் ஆண்டு வரை 4,008 சிறு விவசாயிகட்கு 20 இலட்சம் ரூபாய் அளவிற்கு மான்யம் வழங்கப்பட்டுள்ளது.

மலை வாழ் வகுப்பினருக்கு மலைப் பிரதேசங்களில் புதுக் கிணறுகள் வெட்டுவதற்காகக் கிணறு ஒன்றிற்கு 3,500-ரூபாய்க்கு மேற்படாமல் அரசு மான்யம் வழங்கும் புதுத்திட்டம் தொடங்கப்பட்டு 1977-78ஆம் ஆண்டுமுதல் 1979-80ஆம்ஆண்டு வரை 4.15 இலட்சம் ரூபாய் 145 விவசாயிகட்கு வழங்கப்பட்டுள்ளது.

### பயிர்க் காப்புறுதித் திட்டம்

வெள்ளம், வறட்சி, பூச்சிகள் முதலிய இயற்கைக் காரணங்களால் ஏற்படும் இழப்பிலிருந்து உழவர்களைக் காக்க விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களில் நடைமுறைப்படுத்தும் பயிர்க் காப்புறுதித் திட்டம், ஒன்றை முன்னோடித் திட்ட அடிப்படையில், அரசு அனுமதித்துள்ளது. வசூலிக்கப்படும் காப்புறுதிக்கட்டணத்திலும், காப்புறுதித்தொகையிலும் பொதுக் காப்புறுதிக் கழகமும், தமிழ்நாடு அரசும் 75:25 என்ற விகிதத்தில் பகிர்ந்துகொள்கின்றன. ஒரு உழவர் காப்புறுதி செய்யக்கூடிய அதிகபட்சத் தொகை ரூ. 2000 ஆகும். அறுவடைச் சோதனைகளின் அடிப்படையில் பொதுக் காப்புறுதிக் கழகம் நிர்ணயிக்கும் அளவிற்கு விளைச்சல் குறைவுபடும் விவசாயிகளுக்குக் காப்புறுதித் தொகை வழங்கப்படும். இத்திட்டம் 1979ல் நெல் இரண்டாம் போகப் பயிருக்கு 10 மாவட்டங்களில் உள்ள 17 வட்டங்களில் துவக்கப்பட்டது. 1980லும் இரண்டு நெல் போகப் பயிருக்கு அமல் செய்யப்பட்டது. இந்த மூன்று பருவங்களிலும் 11000 விவசாயிகள் 21082 ஏக்கரில் பயர் செய்யப்பட்ட 113 இலட்சம் ரூபாய் பெறுமான நெற் பயிரை 4.88 இலட்சம் ரூபாய் கட்டணம் செலுத்தி காப்புறுதி செய்திருந்தனர்.

1979 நெல் இரண்டாம் போகம் பயிர் அறுவடை சோதனைகளின்படி மூன்று வட்டங்





களில் உள்ள விளைச்சல் பொதுக் காப்பீட்டுக் கழகம் நிர்ணயம் செய்தஅளவிற்குக் குறைந்திருந்த தால், இவ்வட்டங்களில் பங்கு பெற்ற உறுப்பினர்களுக்கு 1.42 இலட்ச ரூபாய் அளவுக்குக் காப் புறுதித் தொகை கிடைக்கிறது.

நடப்பு ஆண்டிலும் நெல்முதல் போகப் பயிருக்கு 12 வட்டங் களில் இத்திட்டத்தை அமல் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட் டுக்கின்றன.

**மாநிலத்தில் முதல் நடமாடும் கூட்டுறவு வங்கிக் கிளை**

1980ஆம் ஆண்டு மே மாதம் முதல், சென்னை மத்தியக் கூட் டுறவு வங்கி தனது நடமாடும் கிளையை இயக்கி வருகிறது. தமிழ் நாட்டில் வங்கி வரலாற் றிலேயே நடமாடும் கிளை துவக் கியுள்ளது ஒரு புதிய பணியாகும். இந்த நடமாடும் கிளை எல்லா விதமான வங்கிப்பணி வசதி களையும் இட்டு வைப்பாளர் களுக்கு வழங்குவது மட்டுமின்றி எதிர்காலத்திற்கு ஓரளவுக்குப் பணம் சேமிக்கப்பட வேண்டும் என்ற சேமிப்புப் பழக்கத்தைச் சமுதாயத்தில், குறிப்பாக நலிந்த பிரிவினரிடையே ஏற்படுத்தி வரு கின்றது. 31.12.80 வரை இக் கிளை 6.96 இலட்சம் ரூபாய் இட்டு வைப்புத் தொகை சேக ரித்துள்ளது.

1979-80 இறுதியில் மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் இட்டு வைப்புத் தொகை 199 கோடி ரூபாயிலிருந்து 1980-81ஆம் ஆண்டு இறுதியில் இது 227 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.

**விவசாயிகளுக்கு இடர் உதவிப் பணிகள்**

விவசாயிகளின் பிரச்சினை களை ஆராய்ந்த உயர் மட்டக் குழுவின் பரிந்துரைகளைப் பரி சீலித்து, கூட்டுறவு விவசாயக் கடன்களைப் பொருத்த வரை யில் வட்டி மற்றும் அபராத வட்டி தள்ளுபடி செய்தல், கடன் பளுவைக் குறைக்கும் வகையில் கடன்கள் திருப்பிச் செலுத்தும் காலக்கெடுவை நீட்டித்தல்,வட்டி விகிதத்தை குறைத்தல் போன்ற சலுகைகளை அரசு 1979ஆம் ஆண்டில் அளித்தது. வட்டி தள்ளு படி சலுகையின்மூலம்5.21 இலட் சம் விவசாயிகள் 4.85 கோடி ரூபாய் அளவிற்கும் கடன்கள் திருப்பிச் செலுத்தும் காலக் கெடுவை நீடிப்பதில் 2.35 இலட் சம் விவசாயிகளின் கடன்கள் அசல் 53 கோடி ரூபாய் அள விற்கும் ஒருங்கிணைக்கப்பட்டு திருப்பிச் செலுத்தும் காலக் கெடுவு 3 முதல் 6 ஆண்டு வரை நீட்டிக்கப்பட்டும் பயன் பெற்ற னர்.

சிறு விவசாயிகளின் கடன் பளுவைக் குறைக்கும் வகையில் அவர்களுக்கு நிவாரணம் அளிக் கும் வகையிலும், அரசு மேலும் சில சலுகைகளை 1980ஆம் ஆண்டு அளித்தது. அவைகளின் விவரம் கீழ்வருமாறு:

(அ) 1980ஆம் ஆண்டு மார்ச்சு மாத இறுதியில் சிறு விவசாயி களிடம் நிலுவையாக இருந்த மத்திய கால மாற்றுக் கடன் களைச் சம்பந்தப்பட்ட சங்கங் களுக்கு அரசே திருப்பிச் செலுத் தியது. இதனால் 4.52 இலட்சம் சிறு விவசாயிகள் சுமார் 50 கோடி ரூபாய் அளவிற்குப் பயன் பெற்றனர்.

(ஆ) சிறு விவசாயிகள் மேற் கூறிய வகை கடன்களில் 1.7.75 முதல் 31.3.80 வரை திருப்பிச் செலுத்திய தொகையை அவர் களுக்குத் திருப்பிக் கொடுக்கவும் முடிவு செய்துள்ளது. இதனால் அரசுக்கு ஏற்படும் செலவு சுமார் 23 கோடி ரூபாயாகும்.

விவசாயிகளுக்கு மேலும் நிவா ரணம் அளிக்கும் வகையில் கீழ்க் காணும் சலுகைகளை அரசு 1981-ல் ஆண்டு அளித்துள்ளது. சிறு விவசாயிகள் தங்களது குறு கிய காலக் கடன் அசலை 1981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் தேதிக்குள் திருப்பிச் செலுத்தி னால் அவ்வாறு திருப்பிச் செலுத் தப்படும் தேதி வரைக்கான வட் டியும் அபராத வட்டியும் தள்ளு படி செய்யப்படும். அது போல, இதர விவசாயிகள் மேற்கண்ட வகைக் கடன்களில் அசலையும், வட்டியையும் 1981ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் தேதிக்குள் திருப்பிச் செலுத்தினால், அவ் வாறு திருப்பிச் செலுத்தப்படும் தேதி வரைக்கான அபராதவட்டி தள்ளுபடி செய்யப்படும். இந்தச் சலுகையை அளிப்பதால் அரசுக் காகும் செலவு சுமார் 40 கோடி ரூபாய் ஆகும்.

மேலும் குறித்த காலத்தில் கடன்களைத் திருப்பிச் செலுத்து, வதற்கான விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களின் கடன் தாரர்களை ஊக்குவிக்கும் வகையில் 1981-82ஆம்

ஆண்டில் தமது குறுகிய காலக் கடன்களையும் மத்திய காலக் கடன் தவணைகளையும் குறிப்பிட்ட நாட்களுக்குள் திருப்பிச் செலுத்தும் சிறு விவசாயிகளுக்கு வட்டியில் 2 சதவீதம் தள்ளுபடி செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

**விதைப் பெருக்குத் திட்டம்:**

ரூ. 170.50 இலட்சம் முதலீட்டில் அரசுச் சான்றிதழ் பெறப்பட்ட விதைகளை 23,000 ஏக்கர் நிலத்தில் உற்பத்தி செய்து குறைந்த விலையில் விவசாயிகளுக்கு வழங்கும் நோக்கத்துடன் விதைப் பெருக்குத் திட்டம் ஒன்று கோவை மற்றும் பெரியார் மாவட்டங்களில் உள்ள துடியலூர் கூட்டுறவு சேவா சங்கம் மற்றும் 9 விற்பனை கூட்டுறவு சங்கங்களால் இரு கட்டங்களாகச் செயல்படுத்தப்பட்டுவருகின்றது. 94 இலட்சம் ரூபாய் முதலீட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் முதல் கட்டத் திட்டம் முடியும் தறுவாயில் உள்ளது. இரண்டாம் கட்டத் திட்டம் முதல் கட்டப் பணிகள் முடிவுற்றவுடன் தொடங்கப் பெறும்.

இத்திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் 31.1.81 முடிய 3,531 ஏக்கர் பரப்பில் 724 டன்கள் விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு, 682 டன் விதைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**பதனிடுதல்:**

கூட்டுறவுத் துறையில் விளைபொருள் பதனிடும் காரியத்திற்காக 1980-81ஆம் ஆண்டில் 42 இலட்சம் ரூபாய் அளவுக்கு அரசு நிதியுதவி வழங்கியது.

**கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்:**

தமிழ்நாட்டிலுள்ள 115 பிரதமக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் 1980-81 ஆண்டில் 55 கோடி ரூபாய் மதிப்புள்ள விளை பொருட்களை விற்பனை செய்தன. முந்தைய ஆண்டின் சாதாரண 41 கோடி ரூபாயாக இருந்தது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் 154 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள விளை பொருட்களை ஏற்றுமதி செய்தது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையமும் மற்ற கூட்டுறவு நிறுவனங்களும் சம்பாப் பருவத்தில் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 180- வரை விலை கொடுத்து சுமார் 20கோடி ரூபாய் பெறுமான 1.15 இலட்சம் டன் நெல் கொள்முதல் செய்தன. இதனால் உழவர்களுக்கு எதிர்பாராத அளவுக்கு நல்ல விலை கிடைத்தது.

கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் வாணிபத்தைப் பெருக்குவதற்காக ரூ. 10.25 இலட்சமும், சங்கங்களுக்குப் புத்துயிரூட்டுவதற்காக ரூ. 5 இலட்சமும் பங்குத் தொகையாகவும், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு ரூ. 40 இலட்சம் விளிம்புத் தொகையாகவும் தேசியக் கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து உதவி பெறப்பட்டது.

**கிடங்கு கட்டும் திட்டம்:**

விவசாய விளைபொருட்களின் உற்பத்தி அதிகரித்துள்ள இந்நிலையில் கிடங்குகளின் தேவை அதிக முக்கியத்துவம் பெறுகிறது. 60 சதம் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தினால் கடனாகவும், 40 சதவிகிதம் மாநில அரசினால் மான்யமாகவும் நிதியுதவி அளிக்கப்படுகிறது. 1980-81ல் 29,007 மெட்ரிக் டன் கொள்திறனுள்ள 200 கிராமப் புறக் கிடங்குகள், 5 விற்பனைச் சங்கக் கிடங்குகள் மற்றும் 4 நுகர்வோர் சங்கக் கிடங்குகள் கட்ட நிதியுதவி அனுமதிக்கப்பட்டது. கிடங்குகள் கட்ட கடனாக 123.63 இலட்சம் ரூபாயும், மான்யமாக 76.04 இலட்சம் ரூபாயும் அரசினால் வழங்கப்பட்டது. 1980-81ஆம் ஆண்டு இறுதியில் 3417 கிடங்குகள் கட்டி முடிக்கப்பட்டு உபயோகத்தில் இருந்தன. 597 கிடங்குகள் கட்டப்பட்டு வரும் நிலையில் இருந்தன.

**நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்:**

நகரங்களிலும் கிராமங்களிலும் வாழும் மக்களுக்கு இன்றியமையாப் பொருட்களைத் தரமாகவும், நியாயமாகவும் விலையிலும், எடை குறைவில்லாமலும் நுகர்வோர், கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கி வருகின்றன. இத்தகைய நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சிக்காக அரசு 1980-81ஆம் ஆண்டில் ரூ. 120 இலட்சம் நிதி உதவி வழங்கியுள்ளது. அவற்றில் முக்கியமானவை பின் வருமாறு:

**பேரங்காடிகள் கட்டடம் கட்ட அரசு உதவி:**

பெரும்பாலான பேரங்காடிகள் வாடகைக் கட்டடங்களில் இயங்குவதால் 1980-81ல் இரண்டு மொத்த கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்குப் பேரங்காடிக் கட்டடங்கள் கட்டுவதற்காக அரசுக் கடனாக ரூ. 10 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**உயர்நிலைப் பள்ளி மாணவர் கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கு அரசு நிதி உதவி:**

உயர்நிலைப்பள்ளி மாணவர் பண்டகசாலைகள் நிதி நிலையில் பிற்பட்டுள்ளதாலும், நாளைய சமுதாயத்தினை உருவாக்கும் மாணவர் சமுதாயத்தினை ஊக்குவிக்கும் முகமாக அவர்களுக்கான பண்டகசாலைகளை வளர்ப்பதற்கு அரசு உதவிகள் அளிக்கப்படுகின்றன. இதுவரை நடைமுறையில் இல்லாத புதுத் திட்டம் இது. 1980-81ல் உயர்நிலைப்பள்ளி மாணவர் கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்குக் கூடுதல் அரசு பங்கு முதலீடாக ரூ. 3,51,000-ம் அரசு மானியமாக ரூ. 39,282-ம் வழங்கப்பட்டுள்ளன.

**ஒரு கிராமம் ஒரு அங்காடித் திட்டம்:**

கிராமப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு அவர்களின் அன்றாடத் தேவைப் பொருட்களைச் சுலபமாக அவர்களின் கிராமங்களிலேயே நியாயமான விலையில் கிடைக்கத் துவக்கப்பட்ட அரசின் ''ஒரு கிராமம் ஒரு அங்காடி திட்டம்'' தொடர்ந்து சிறப்பாக செயல்பட்டு வந்தது. ஒரு புதிய கடைக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2,400-வீதம் மானியமாகச் சிப்பந்தி மற்றும் வாடகை செலவுகளுக்காக அரசு வழங்குகிறது. இது தவிர ஒரு கடைக்கு ரூ. 1,250 தளவாட சாமான்கள் வாங்க மானியமாக அரசு வழங்குகிறது. 1980-81ஆம் ஆண்டில்இத் திட்டத்தை நிறைவேற்ற கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ. 137.41 இலட்சம் அரசு மானியமாக வழங்கியது. கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்பட்டு வரும் 11,101 கிராம அங்காடிகள் சென்ற ஆண்டில் (1.4.80 முதல் 31.3.81 முடிய) ரூ. 29.53கோடி மதிப்புள்ள நுகர் பொருட்களைக் கிராமப் பகுதிகளில் விற்பனை செய்துள்ளன.



**சிமெண்ட் விநியோகம்:**

*1980-81ம் ஆண்டில் (31.3.81 முடிய) சிமெண்ட் விநியோகிக்க உரிமம் பெற்ற 1226 கூட்டுறவுச் சங்கங்கள் 81,180 மெட்ரிக் டன் சிமெண்டை மக்களுக்கு விநியோகம் செய்துள்ளன.*

**மண்டல விநியோக மையம்:**

நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் கொள்முதல் திறனை ஒருமுகப்படுத்தவும், பேரம் செய்யும் சக்தியை அதிகப்படுத்தவும், கூட்டுறவுச் சங்கங்களின் சில்லறை விற்பனை அங்காடிகளுக்குத் தயாரிப்பாளர்கள் அல்லது உற்பத்தியாளர்களிடம் இருந்து சுமுகமாகவும் தொடர்ச்சியாகவும், பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்யவும் ஆங்காங்கே மண்டல விநியோக மையங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இதில் ஒன்று கோயம்புத்தூர், பெரியார் மற்றும் நீலகிரி மாவட்டங்களுக்காக கோயம்புத்தூர் மாவட்ட மத்திய விற்பனை மற்றும் விநியோக சங்கத்தால் கோயம்புத்தூரில் 1978-ல் நிறுவப்பட்டு செயல்பட்டு வருகிறது. இதே போல் ரூ. 101 இலட்சம் செலவில் சென்னையில் ஒரு மையம் அமைக்கப்பட்டு விரைவில் துவக்கப்பட உள்ளது.

**பள்ளிப் புத்தகங்களும் நோட்டுப் புத்தகங்களும் விநியோகித்தல்:**

நமது மாநிலத்தில் அனைத்துப் பள்ளி மாணவர்களுக்கு வேண்டிய பாடநூல்களும் நோட்டுப் புத்தகங்களும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டு தமிழ்நாட்டிலுள்ள பல கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விநியோகம் செய்யப்படுகிறது. இவை பள்ளிகளில் உள்ள மாணவர் கூட்டுறவு பண்டகசாலைகள் மூலமும் விநியோகிக்கப்படுகின்றன. சென்ற பள்ளி ஆண்டில் ரூ 555 இலட்சம் மதிப்புள்ள பாட நூல்களும் ரூ. 189.12 இலட்சம் மதிப்புள்ள நோட்டுப் புத்தகங்கள் விநியோகிக்கப்பட்டன..

நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் 1980-81ஆண்டில் 220கோடி ரூபாய் அளவிற்கு நுகர்பொருள் விற்பனை செய்துள்ளன. இது சென்ற ஆண்டை விட ரூ. 45 கோடி அதிகமாகும்.

**மலைக் குடியினருக்கான பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்:**

தமிழ்நாட்டில் பணியாற்றி வரும் 12 மலைக் குடியினருக்கான பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் எல்லையிலுள்ள 31,281 மலைக்குடியினர் குடும்பங்களில் 28,366 மலைக்குடியினர் குடும்பங்களிலிருந்து இச்சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். இச்சங்கங்கள் வேளாண்மைக் கடன்கள், நுகர்வுக் கடன்கள் மற்றும் மத்திய காலக் கடன்களை அரசின் வட்டி மானியம் பெற்று 4 சதவீதம் என்னும் சலுகை வட்டியில் அவர்களுக்கு வழங்கி வருகின்றன. 1980-81ஆம் ஆண்டில் இச்சங்கங்கள் 24 இலட்சம் ரூபாய் அளவிற்குக் கடன்களையும், 7 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள வேளாண்மை இடுபொருட்களையும் வழங்கின. ஒரு இலட்சம் ரூபாய் மதிப்புள்ள விவசாய விளை பொருட்களையும் 8இலட்சம் ரூபாய் மதிப்புள்ள காடுபடு பொருட்களையும் கொள்முதல் செய்தன. 34 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நுகர் பொருட்களைத் தங்கள் உறுப்பினர்களுக்கு நியாயமான விலையில் விநியோகம் செய்தன. நிர்வாக ஊழியர் மான்யம், வட்டி மான்யம், இழப்பு நிதி மான்யம், உறுப்பினர் பங்குத் தொகை மான்யம் பங்கு மூலதனம், விலை ஏற்றத் தாழ்வு நிதி மான்யம், வாகனங்கள் செப்பனிடவும் ஓட்டுநர் ஊதியத்துக்குமான மானியம், ஆகிய வகைகளில் இச்சங்கங்களுக்கு 1980-81ஆம் ஆண்டில் 28.55 இலட்சம் ரூபாய் அளவுக்கு அரசு நிதியுதவி அளித்துள்ளது.



**தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள்:**

சமுதாயத்தில் நலிவுற்றோரின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் பொருட்டு, அவர்களுக்குப் போதிய வேலை வாய்ப்பளித்தல் என்ற குறிக்கோளின் அடிப்படையில் தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. தற்போது 122 தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன. அவற்றில் 7 இவ்வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டன. இவ்வகைச் சங்கங்களுக்கு அரசு 1980-81ஆம் ஆண்டில் கடன் மற்றும் மான்யமாக ரூ. 2.00 இலட்சம் அளித்தது.

**கிராமிய மின்சாரக் கூட்டுறவுச் சங்கம்:**

உறுப்பினர்களுக்கும், உபயோகிப்போர்க்கும் சிக்கனமாகவும், துரிதமாகவும், சீரிய முறையிலும் மின்சாரம் வழங்குதல், விவசாய தொழில்களைக் கிராமப்புறங்களில் வளர்த்தல் என்ற குறிக்கோள்களுடன் கும்பகோணத்தில் 2.23 கோடி ரூபாய் முதலீட்டில், முன்னோடித் திட்டமாக ஓர் கிராமிய மின்சாரக் கூட்டுறவுச் சங்கம் பதிவு செய்யப்பட்டது. இச்சங்கம் 1.7.1980 முதல் செயல்படத் துவங்கியுள்ளது. இச்சங்கத்தில் அரசு ரூ. 25. இலட்சம் பங்குத் தொகைசெலுத்தியுள்ளது. கிராமிய மின்சாரக் கழகம் ரூ. 148.12 இலட்சம் கடனாக வழங்கியுள்ளது.

**கூட்டுறவுத் தொண்டர் அணி:**

இயற்கையின் பாதிப்பு மற்றும் இதர பாதிப்பு ஏற்படும் காலங்களில் சமூக சேவை செய்யும் பொருட்டு, மாநிலம் மற்றும் மாவட்ட அளவில் கூட்டுறவுத் தொண்டர் அணி அமைக்கப்பட்டுள்ளது. இக்கூட்டுறவு அணி இந்தியாவில் முதன் முதலாகத் தோற்றுவிக்கப்பட்ட ஓர் அணியாகும். இவ்வணி 1980ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் நடைபெற்ற கூட்டுறவு வார விழாவின் போது ஆரம்பித்து வைக்கப்பட்டது. 1981 சனவரி 26ஆம் நாள் குடியரசு தினவிழா அணி வகுப்பில் இவ்வணி பங்கேற்றது.

**உடல் ஊனமுற்றோர்க்குக் கூட்டுறவுச் சங்கங்களின் உதவி:**

1980 நவம்பர் மாதம் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடந்த கூட்டுறவு வார விழாவின் போது சென்னையிலுள்ள 22 கூட்டுறவு நிறுவனங்கள் உடல் ஊனமுற்ற 102 குழந்தைகளுக்கு உபகரணங்கள் வழங்கின. தங்களுடைய இலாபத்திலிருந்து ஒதுக்கப்பட்ட பொதுநல நிதியைக் கொண்டு இந்த உதவியை அளித்தன. சென்ற மூன்று ஆண்டுகளில் 76,000 ரூபாய் அளவுக்கு சக்கர நாற்காலி போன்ற உபகரணங்கள் 184 உடல் ஊனமுற்றோருக்குக் கூட்டுறவுச் சங்கங்களால் கூட்டுறவு வாரத்தின் போது வழங்கப்பட்டன.

**கூட்டுறவாளர்கள் இரத்த நன்கொடை செய்தல்:**

நவம்பர் 1980ல் அனைத்து இந்தியக் கூட்டுறவு வாரம் கொண்டாடப்பட்டதை ஒட்டிசென்னைப் பொது மருத்துவமனையில் உள்ள இரத்த வங்கிக்கு நூறு கூட்டுறவாளர்கள் மனமுவந்து இரத்த நன்கொடை செய்தனர்.



# நிதி ஆதாரம் பெருக்கும் சுற்றுலாத் துறை!

சுற்றுலாவினால் ஏற்படும் நற்பயன்களை நன்குணர்ந்துள்ள தமிழக அரசு, தமிழகத்தின் சுற்றுலா வளர்ச்சியில் மிகுந்த கவனம் செலுத்தி வருவதனை, வரவு-செலவுத் திட்டத்தில் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகளிலிருந்து அறியலாம். 1975-76 ஆம் ஆண்டில் சுற்றுலாவிற்கான நிதி ஒதுக்கீடு ரூபாய் 22:70 இலட்சத்திலிருந்து இன்று 1981-82ஆம் ஆண்டில் ரூ. 110 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளதே இதற்கு எடுத்துக்காட்டாகும்.

**பயணவட்டங்களின் மேம்பாடு:**

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் சுற்றுலா வளர்ச்சிக்காகக் குறைந்தது இரண்டு பெரிய ''பயண வட்டங்களைத்'' தமிழகத்தில் தெரிந்தெடுக்குமாறு மைய அரசு கேட்டுக் கொண்டதன் பேரில், கீழ்க்கண்ட மூன்று பயண வட்டங்களும் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. இப்பயண வட்டங்களின் மேம்பாட்டிற்கென மைய அரசும், மாநில அரசும் செய்யவிருக்கும் முதலீடுகள் நல்ல பயனை விளைவிக்கும் வகையில் இவை தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன:

1. சென்னை - மாமல்லபுரம் திருக்கழுக்குன்றம் - காஞ்சிபுரம்-திருச்சிராப்பள்ளி - தஞ்சாவூர்-புதுக்கோட்டை - மதுரை-இராமேசுவரம் - கன்னியாகுமரி-குற்றாலம் - திருவனந்தபுரம்:

2. சென்னை - கிருஷ்ணகிரி-ஓகேனக்கல் - ஏர்க்காடு - கோயம்புத்தூர் - உதகமண்டலம் - முதுமலை-மைசூர்-பெங்களூர்.

3. இராமேசுவரம் - மதுரை-கொடைக்கானல் - புதுக்கோட்டை - திருச்சிராப்பள்ளி-தஞ்சாவூர் - மாமல்லபுரம் - சென்னை.

இம்மூன்று பயண வட்டங்களின் மேம்பாட்டிற்கென ரூபாய் 70 கோடி செலவினைக்கொண்ட பெரும் திட்ட வரைவு ஒன்றும் வரையப்பட்டுள்ளது. பயண வட்டங்களின் மேம்பாட்டுத் திட்ட வரைவு, இந்திய அரசின் நிதி உதவியைப் பெறுவதற்கென அனுப்பப்பட்டு, பரிசீலனையில் இருந்து வருகின்றது.
றது.

**மாமல்லபுரம்:**

மாமல்லபுரத்தின் மேம்பாட்டிற்காக ரூ. 6 கோடி செலவில் மாபெரும் திட்டம் ஒன்று வகுக்கப்பெற்றுள்ளது. மாமல்லபுரத்தின் குடைவரைக்கோயிலும், கடற்கரைக் கோயிலும், வெண்மணற் பரப்பும், அழகிய கடற்கரையும், மாமல்லபுரத்தை உலகிலுள்ள சிறந்த சுற்றுலா இடங்களில் ஒன்றாக ஆக்குகின்றன. மாமல்லபுரத்தை மேம்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட ஒருங்கிணைப்புக் குழு முன்னுரிமை அடிப்படையில் முதற்கட்டமாகப் பின்வரும் ஐந்து திட்டங்களை நிறைவேற்றுவதெனக் கருதியுள்ளது:

1. சுற்றுச் சாலை அமைத்தல்
2. வாகனங்கள் நிறுத்துமிடத்தை உருவாக்குதல்
3. ஒழுங்குமுறையில் அங்காடிகளை ஏற்படுத்துதல்
4. எழில் வளாகம் உருவாக்குதல்
5. பொழுதுபோக்கு வசதிகளைச் செய்து தருதல்

இந்த ஐந்து திட்டங்களையும் மேம்படுத்துவதற்காக முதல் தவணையாக ரூ. 25 இலட்சம் வழங்குமாறு நாம் மத்திய அரசைக் கேட்டுள்ளோம். அவர்களது பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

குறைந்த வருமானம் உள்ளவர்கள் தங்குவதற்கு வசதியாகத் தேவையான வசதிகளுடன் கூடிய ஓய்வுக் கூடங்கள் கட்டுவதற்காக 1980-81ல் ரூபாய் 2.20 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. பயணிகளின் தங்குமிடம் கட்டும் பணி நடந்தேறி வருகிறது. சித்திர, சிற்ப வேலைப்பாடு அமைந்த

திறந்தவெளி அருங்காட்சியகம் ஒன்றையும், மாமல்லபுரத்தில் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வருங்காட்சியகம் கடற்கரைக் கருகில் சுமார் இருபத்தைந்து ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. 1980-81ல் இந்த அருங்காட்சியகத்திற்கென ரூ. 9.80 இலட்சம் செலவிட அனுமதிக்கப்பட்டுள்ளது. 1981-82ல் ரூபாய் 10 இலட்சம் இத்திட்டத்திற்காகத் தேவை என்பதும் அரசின் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

**இராமேசுவரம்:**

இராமேசுவரத்தையும், அதன் சுற்றுப்புறப் பகுதிகளையும் மேம்படுத்த மாபெருந்திட்டத்தைச் சுற்றுலாத்துறை வகுத்துள்ளது. இதற்காகும் மொத்த செலவு ரூ. 28 கோடியாகும். இத்திட்டம் பத்தாண்டுகளில் செயல்படுத்தப்படும். இத்திட்டம் அனைத்து நாட்டு உதவிபெறும் தகுதியுடையதாக இருப்பதால், உலக வங்கியிடமிருந்து நிதி உதவி பெற்றுத் தரும்படி மத்திய அரசை தமிழக அரசு கேட்டுள்ளது.

இங்கு போதிய வசதிகளுடன் கூடிய ஓய்வுக் கூடங்களையும், உடைகளை மாற்றிக்கொள்ள அறைகளையும் கட்டுவதற்கு அரசு ரூ. 3 இலட்சம் ஒதுக்கியுள்ளது. இராமேசுவரத்தைக் காண வேண்டுமென்ற ஆவலில் வருகின்ற குறைந்த வருமானமுடைய பயணிகளுக்காக 1981-82ல் ரூபாய் 10 இலட்சம் செலவில் இளைஞர் இல்லம் (துயிலக விடுதி) கட்ட,திட்டமிட்டுள்ளது.

**கன்னியாகுமரி:**

நம் நாட்டின் தென் முனையில் அமைந்திருக்கும் கன்னியாகுமரியைக் காண நாள்தோறும் வெளிநாட்டுப் பயணிகளும், நம் நாட்டுப் பயணிகளும் வந்தவண்ணமிருக்கின்றனர்.

இங்கே குறைந்த வருமானமுடையோர் நிறைந்த பயனைப் பெறும் வண்ணம் துயிலக விடுதியும் (இளைஞர் இல்லம்), சுற்றுலா அலுவலகம் கட்ட முறையே ரூ. 5 இலட்சமும், ரூ. 1 இலட்சமும் 1980-81ல் ஒதுக்கப்பட்டது.

**உதகமண்டலம்:**

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் உதகமண்டலம் ஏரிப்பகுதியை அழகுபடுத்த ரூ. 20.5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இங்குள்ள படகு இல்லத்தை விரிவுபடுத்தவும், இப்பகுதியில் குழந்தைகள் இரயில் விடவும் கருதப்பட்டுள்ளது. 1981-82ல் மேற்படி திட்டத்தின்கீழ் உதகமண்டலத்தை மேம்படுத்த ரூபாய் 15 இலட்சம் ஒதுக்கக் கருதப்பட்டுள்ளது.

**பிச்சாவரம்:**

கிழக்குக் கடற்கரையில் இயற்கையன்னை எழிற்கோலம் பூண்டு நீர்வழிப் பாதைகளும் காண்பதற்கரிய கானகக் காட்சிகளும் அமைந்த சிறப்பிடமாகப் பிச்சாவரம் அமைந்துள்ளது. அங்குப் படகு இல்லம் கட்டி, வருகின்ற பயணிகள் உல்லாசமாகப் படகு சவாரி செய்ய, படகுகள் வாங்க, 1981-82ல் ரூபாய் 5 இலட்சம் ஒதுக்கக் கருதப்பட்டுள்ளது.

**ஒகேனக்கல்:**

குறைந்த வருமானம் உடைய பயணிகளுக்காகத் துயிலக விடுதி கட்ட 1979-80ல் ரூபாய் 3 இலட்சம் ஒதுக்கப்பட்டு . இவ்விடுதி கட்டப்பட்டு வருகிறது. 1981-82ல் ரூபாய் 5 இலட்சம் செலவில் அங்கு தொங்குபாலம் கட்டவும் கருதப்பட்டுள்ளது.

**இளைஞர் இல்லங்கள்: (துயிலக விடுதிகள்)**

கீழ்க்காணும் இளைஞர் இல்லங்கள் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது:

1) ஏர்க்காடு, 2) மண்டபம் 3) பிச்சாவரம் 4) ஒகேனக்கல் 5) கொடைக்கானல் 6) கன்னியாகுமரி 7) உதகமண்டலம் 8) இராமேசுவரம் 9) மாமல்லபுரம்

ஏர்க்காடு, மண்டபம், ஒகேனக்கல், மாமல்லபுரம் ஆகிய இடங்களில் கட்டப்பட்டு வரும் இளைஞர் இல்லங்கள்' கட்டும் பணி முடியும் தறுவாயில் உள்ளது.

**தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்:**

இக்கழகத்தின் வருவாய் 1971 72ல் ரூ. 4.58 இலட்சமாக இருந்தது. 1976-77ல் இக்கழகத்தின் வருமானம் ரூ. 68.51 இலட்சமாகப் பெருகியது. 1980-81ல் இவ்வருவாய் 153 இலட்சமாகப் பெருகியது. 1981-82ல் இது ரூபாய் 200 இலட்சமாக உயரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. முதன் முறையாக இக்கழகம் 1977-78ல் நிகர ஆதாயம் ஈட்டியது. முந்தைய ஆண்டுகளில் ஏற்பட்ட இழப்புகள் இப்பொழுது ஈடுசெய்யப்பட்டுவிட்டன.

**ஓட்டல்கள்:**

1975-76ல் மொத்தம் 752 படுக்கை வசதிகள் கொண்ட 11 சுற்றுலா மாளிகைகள் இருந்தன. அண்மையில் மதுரையில் கட்டப்பெற்ற 3 நட்சத்திர ஓட்டல் உட்பட தற்போது மொத்தப் படுக்கைகளின் எண்ணிக்கை கழகத்திற்குச் சொந்தமான 16 ஓட்டல்களிலும் 1,095 ஆகும்.

அத்துடன் மதுரை, உதகமண்டலம், கொடைக்கானல், கன்னியாகுமரி, ஏர்க்காடு ஆகிய இடங்களில் தற்போதுள்ள ஓட்டல்கள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

கோயம்புத்தூரில் ரூபாய் 35 இலட்சம் செலவில் கட்டப்படும் 91 படுக்கை வசதிகளுடன் கூடிய ஒரு புதிய மூன்று நட்சத்திர ஓட்டல் விரைவில் செயல்படத் தொடங்கும்.



மாமல்லபுரத்தில் ரூபாய் 30 இலட்சம் செலவில் எல்லா நவீன வசதிகளுடன் கூடிய 30 புதிய குடில்கள் கட்டப்பட்டு வருகின்றன.

முதுமலை, காஞ்சிபுரம், புதுக்கோட்டை ஆகிய இடங்களில் புதிய ஓட்டல்கள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. சென்னையில் நட்சத்திர ஓட்டல் ஒன்றைக் கட்ட, இக்கழகம் திட்டமிட்டுள்ளது.

பெருகிவரும் சுற்றுலாப் பயணிகளின் தேவைகளைக் கருத்தில் கொண்டு மண்டபத்தில் 'படகுக் குழாம்' ஒன்றும் குறைந்த வாடகையில் பலர் தங்கும் அறைகள் கொண்ட சுற்றுலா விடுதி ஒன்றையும் அமைக்கும் பணி சுமார் மூன்று இலட்சம் ரூபாய செலவில் ஆரம்பித்து அது முடிவடையும் தறுவாயில் உள்ளது.

புண்ணியத் தலமான இராமேசுவரத்திற்கு வரும் யாத்திரீகர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் தேவைகளை உணர்ந்து அவர்கள் குளிப்பதற்கு வசதியாக 'குளியல் பகுதி' ஒன்றையும், ஆடை மாற்றும் அறை நிறைந்த பகுதி ஒன்றையும் சுமார் மூன்று இலட்சம் செலவில் கட்டும் பணி துவக்கப்பட்டு அது முடிவடையும் தறுவாயில் உள்ளது.

தமிழ்நாட்டிலேயே சிறந்த சுற்றுலா மையமாக விளங்கும் மாமல்லபுரம் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சுமார் 9.25 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு 'கூடார அமைப்புப் பகுதியும்' 'கடைகள் பிரிவும்' அமைக்கும் திட்டமும், சுமார் 9.5 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு 'திறந்த வெளி கலைக்கூடம்' அமைக்கும் திட்டமும் உள்ளது.

உதகமண்டல மலை வளர்ச்சி திட்டத்தின்கீழ், சிறுவர்களுக்கான புகைவண்டி வாங்கவும், அதற்கான பாதைகள் அமைக்கவும், 'குழந்தைகள் பூங்கா' அமைக்கவும், மற்றும் உதகை படகுக் குழாம் மேம்பாட்டிற்காகவும் சுமார் 20 இலட்சம்ரூபாய் செலவில் ஒரு திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

புண்ணிய[illegible]லமான திருத்தணியி[illegible]மார் 7.5 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு 'நெடுஞ்சாலை ஓய்வு விடுதியும்' சுமார் 20இலட்சம் ரூபாய் செலவில் காஞ்சிபுரத்தில் ஒரு சுற்றுலா விடுதி'' கட்டும் திட்டமும் உள்ளது. கோடை வாசஸ்தலங்களான உதகை, ஏர்க்காடு ஆகிய இடங்களில்




டெலஸ்கோப் கூடம்' அமைப்பதற்காக சுமார் ரூ. 1.10 இலட்சம் சராசரி மதிப்பீட்டில் ஒரு திட்டம் உள்ளது.

## பெருவழி விடுதிகள்:

ஓட்டல்களிலிருந்து 1971-72-ஆம் ஆண்டில் ரூபாய் 4.50 இலட்சம் வருவாய் கிட்டியது. இது 1976-77ஆம் ஆண்டில் ரூ. 40 இலட்சமாகவும் 1980-81ஆம் ஆண்டில் ரூபாய் 85 இலட்சமாகவும் உயர்ந்தது.

தென்கிழக்கு ஆசிய நாடுகளிடையே தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஏற்பாடு செய்யும் சுற்றுலாப் பயணத் திட்டங்கள் மிகவும் பாராட்டுப் பெற்றவையாக உள்ளன. இப்பகுதிகளிலிருந்து பெருமளவு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் பொருட்டு மலேசியாவிலும், சிங்கப்பூரிலும் பொது விற்பனை முகவர்களைக் கழகம் அண்மையில் நியமித்துள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்தான் இந்தியாவிலேயே இத்தகைய ஏற்பாட்டை முதன் முதல் மேற்கொண்ட சுற்றுலா வளர்ச்சிக் கழகமாகும்.

சுற்றுலாப் பயணிகளுக்குச் சுற்றுலாப் பயணச் சீட்டுகள் எளிதில் கிடைக்க வகை செய்யும் பொருட்டு சென்னையிலுள்ள பெரிய ஓட்டல்களும், சுற்றுலாப் பயண முகவர் அமைப்புகளும் 1979 அக்டோபர் திங்கள் முதல் இக் கழகத்தின் பயணச் சீட்டு விற்கும் முகவர்களாக ஆக்கப்பட்டனர். பம்பாய், டில்லி போன்ற பெரும் நகர்களிலும் நமது சுற்றுலாப் பயண ஊர்தியில் பயணம் செய்வதற்கான பயணச்சீட்டுகள் கிடைக்கின்றன.

1972ஆம் ஆண்டில்தொடங்கப்பட்ட போக்குவரத்துப் பிரிவில், தொடக்கத்தில் 2 சொகுசு ஊர்திகள் மட்டுமே இருந்தன. தற்போது குளிர் சாதன வசதியுடன் கூடிய ஒரு சுற்றுலா ஊர்தி உட்பட, மொத்தம் 15 சொகுசு ஊர்திகள் உள்ளன. விரைவில் குளிர்சாதன வசதியுடன் கூடிய ஊர்திகள் இன்னும் இரண்டு சேர்க்கப்படவுள்ளன.

போக்குவரத்துப் பிரிவில் 31.3.1981ஆம் நாள் வரையில் 35 இலட்சம் ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இப்பிரிவிலிருந்து 1972-73ஆம் ஆண்டில் 2 இலட்சம் ரூபாயும், 1976-77 ஆம் ஆண்டில் 14 இலட்சம் ரூபாயும் வருவாய் கிடைத்தது. 1980-81ஆம் ஆண்டில் 35 இலட்சம் ரூபாய் வருவாய் கிட்டியுள்ளது.

# அகில இந்திய கைத்தறி கண்காட்சி



விவசாயத் தொழிலுக்கு அடுத்த படியாக முக்கியத்துவம் வாய்ந்த நெசவுத் தொழிலில் இலட்சக்கணக்கானவர்கள் ஈடுபட்டுள்ளமையால், நெசவுத் தொழிலை நம்பியுள்ள நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் நோக்குடன் அரசு, திட்டங்கள் தீட்டி சீரிய முறையில் நிறைவேற்றி வருகிறது. இத்திட்டங்களின் மூலம் இலட்சக்கணக்கான நெசவாளர்கள் பொருளாதார மேம்பாட்டுடன் மற்ற பல வசதிகளைத் தொடர்ந்து பெற்று வருகிறார்கள்.

கைத்தறித் துணிகளின் தேக்கத்தினால், கைத்தறித் தொழில் வளர்ச்சி பாதிக்கப்படும் என்ற சூழ்நிலை உருவாகும் போதெல்லாம் அரசு தகுந்த முன் நடவடிக்கைகளை மேற்கொண்டு நெசவுத் தொழில் பாதிக்கா வண்ணம் பாதுகாப்பு செய்து வருகிறது. இவ்வகையில், ஆண்டுதோறும் மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் துணித்தேக்கத்தினைக் குறைத்து நெசவாளர்கள் துணி உற்பத்தியில் தொடர்ந்து ஈடுபடும் வகையில், விற்பனையை அதிகரிக்கும் நோக்குடன் ''கைத்தறி வார விழா'' தமிழகம் முழுவதும், முக்கிய ஊர்களில் நடத்தப்படுகிறது. இந்த ஆண்டும் அரசு இவ்விழாவினை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்து, அகில இந்திய கைத்தறிக் கண்காட்சி ஏப்ரல் 4ம் நாள் முதல் மே 3ம் நாள் வரை மிகவும் சிறப்பாக நடத்தப் பட்டது. 27வது அகில இந்திய கைத்தறி கண்காட்சியுடன் இணைந்து இக்கண்காட்சி நடத்தப்பட்டது.



காஞ்சிபுரம், திருச்சி, மதுரை, திண்டுக்கல், திருநெல்வேலி, தூத்துக்குடி, நாகர்கோவில், சேலம், கோவை, ஈரோடு, விருதுநகர், ஆகிய இடங்களில் கைத்தறி கண்காட்சிக் குழுக்களும், சென்னையில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனமும் மேற்படி கண்காட்சியினைச் சிறப்பான முறையில் செயல்படுத்தின.

ஏப்ரல் 81 முதல் வாரத்தில் ரூ. 24 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணி ரகங்கள் கோ-ஆப்டெக்ஸிலும், ரூ. 14 கோடி மதிப்புள்ள துணி ரகங்கள் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலும் தேக்கமடைந்திருந்தன. பொருட்காட்சியில் விற்பனை நிலையங்கள் அமைத்து 10சதவீத தள்ளுபடி மானியத்துடன் துணி விற்பனைக்கு அரசு அனுமதி வழங்கியதனால், மேற்படி காலத்தில் மொத்தம் ரூ. ரூ13.92 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணி விற்பனையாகியது.

# செய்தித் துறையின் சிறப்பான பணிகள்

அரசுக்கும், பொதுமக்களுக்கும், பத்திரிகைத் துறைக்கும் இடையேயான நல்லுறவை வளர்த்திடும் தொடர்புப் பாலமாக இயங்கி வருகிறது செய்தி-மக்கள் தொடர்புத் துறை.

அரசினுடைய நோக்கங்கள் யாவை - திட்டங்கள், செயல் முறைகள், சாதனைகள் என்னென்ன என்றெல்லாம் பத்திரிகைகளுக்கான செய்திக் குறிப்புகள், திரைப்படங்கள், பொருட்காட்சிகள், நாடகம். கலை நிகழ்ச்சிகள், நூல் வெளியீடுகள் அகியவற்றின் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கும் சீரிய பணியைச் செம்மையுற நிறைவேற்றி வருவதுதான் செய்தி-மக்கள் தொடர்புத் துறை.

அரசின் பல்வேறு துறைகள், அரசின் பொறுப்பிலுள்ள பல்வேறு கழகங்கள், வாரியங்கள், நிறுவனங்கள் ஆகியவைகள் தருகின்ற விளம்பரங்கள் எல்லாம் இந்தத் துறையின் மூலமே செய்தித்தாள்களுக்கும், பிற ஏடுகளுக்கும் அளிக்கப்படுகின்றன. இத்துடன் செய்தி - மக்கள் தொடர்புத் துறை மூலம் சில



பயனுள்ள விளம்பரங்களும் வெளியிடப்படுகின்றன. அரசின் கொள்கைகளும், திட்டங்களும், இத்தகைய விளம்பரங்கள் மூலம் மக்களுக்கு விளக்கப்படுகின்றன.

## விழாக்கள்

வரலாற்றுச் சம்பவங்களும், நாட்டு மக்களுக்கு நல்லதுசெய்த தேசத் தலைவர்களின் பெருமைகளும் மக்கள் அறிய வேண்டுமென்ற உயரிய நோக்கில் பெருந்தலைவர்களின் பிறந்தநாள்விழா உட்படப் பல்வேறு விழாக்களும், நினைவு நாள் நிகழ்ச்சிகளும் செய்தி-மக்கள் தொடர்புத் துறை மூலமே நடாத்தப்படுகின்றன.

## தமிழ்நாடு வெள்ளி விழா

தமிழ்நாடு தனி மாநிலமாக மலர்ந்து 25 ஆண்டுகள் ஆனதையொட்டி, அதன் வெள்ளி விழா இவ்வாண்டு நவம்பர் திங்களில் சிறப்பாகக் கொண்டாட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

டி. கே. சி. நூற்றாண்டு விழா, ராஜா அண்ணாமலைச் செட்டியார் நூற்றாண்டு விழா, மகாகவி சுப்பிரமணிய பாரதியார் நூற்றாண்டு விழா ஆகிய விழாக்களையும் இவ்வாண்டு நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## தந்தை பெரியார் நூற்றாண்டு விழா

தந்தை பெரியார் நூற்றாண்டு விழாக்குழு பரிந்துரை செய்துள்ள பல திட்டங்களை அரசு நிறைவேற்றி வருகிறது.

தந்தை பெரியார் ஒலி, ஒளி, அரங்கக் காட்சிகள் சென்னையிலும், திருச்சியிலும், தஞ்சாவூரிலும், வேலூரிலும் நெல்லையிலும் நடத்தப்பட்டுள்ளன. பெரியார் மாவட்டத்தில் நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இவ்வொலி, ஒளி அரங்கக் காட்சி நடத்தப்பட்டுள்ள மாவட்டங்களில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கண்டுகளித்துப் பாராட்டியுள்ளனர். வரும் மாதங்களில் தமிழ்நாட்டின் பிற மாவட்டங்களிலும் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

தந்தை பெரியார் நூற்றாண்டு விழா வல்லுநர் குழு தயாரித்து வருகிற 'தந்தை பெரியார் வாழ்க்கை வரலாறு' மூன்று பகுதிகளாக வெளியிடப்படும். பெரியாரின் பொன்மொழிகள் அடங்கிய 'பெரியாரின் புரட்சி மொழிகள்' என்ற புத்தகம்

மலிவுப் பதிப்பாக வெளியிடப்பட்டுள்ளது. அந்நூலை ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்து வெளியிடும் திட்டம் ஆலோசனையிலுள்ளது. 'பெரியாரின் வாழ்க்கைப்பட விளக்கம்' என்ற குழந்தைகளுக்கான நூல் விரைவில் வெளியிடப்பட இருக்கிறது.

### பொருட்காட்சி

மாநிலத்தில் அரசு மூலம் பொருட்காட்சிகள் நடத்தப்படுவதோடு, மற்ற மாநிலங்களில் நடைபெறும் பொருட்காட்சிகளில் அரசின் சார்பாகப் பங்கேற்று தமிழக அரசின் பல்வேறு துறைகளின் செயற்பாடுகளையும் சாதனைகளையும் விளக்கும் பணியினை ஆற்றி வருகிறது செய்தி மக்கள் தொடர்புத் துறை.

செய்தி-மக்கள் தொடர்புத் துறை கடந்த ஆண்டு மதுரையில் அரசு சித்திரைப் பொருட்காட்சியினை ஏப்ரல் - ஜூன், கோவையில் மார்ச்சு - மே, சேலத்தில் ஜூலை - செப்டம்பர் ஆகிய மாதங்களில் நடத்தியுள்ளது. அரசின் பல்வேறு துறைகளும் நிறுவனங்களும் தனியார் நிறுவனங்களும் இப்பொருட்காட்சியில் பங்கு கொண்டன. மதுரை சித்திரைப்பொருட்காட்சியில் 6 இலட்சம் மக்களும், கோவைப் பொருட்காட்சியில் 10 இலட்சம் மக்களும், சேலம் பொருட்காட்சியில் 14 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களும் வருகை தந்துள்ளனர். மேற்கண்ட மூன்று பொருட்காட்சிகளின் மூலம் கிடைத்த வருமானம் ரூ. 42.74 இலட்சம் ஆகும்.

மதுரை மாநகரிலே சீரும் சிறப்புமாக நடைபெற்ற ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டினையொட்டி இத்துறையின் மூலம் மதுரையில் 5-1-81 முதல் 25-4-81 வரை பொருட்காட்சி நடத்தப்பட்டது.

### செய்தி நிலையங்கள்

சென்னை மதுரை ஆகிய இடங்களிலுள்ள இத்துறையின் செய்தி நிலையங்கள் பல்வேறு பொருட்கள் குறித்தும் மற்றும் அரசின்கொள்கைகள் சாதனைகள் பற்றியும் செய்திகளையும் விளக்கங்களையும் பொது மக்களுக்கு வழங்குகின்றன. படிப்பகங்களையும் நடத்தி வருகின்றன.

மாவட்டங்களில் செய்திப் படங்களையும் கருத்து விளக்கப் படங்களையும் செவ்வனே காட்டப் போதுமான ஊர்தி வசதிகள் இப்போது இல்லாததால் இந்தக் குறையைப் போக்கிட நடப்பு நிதியாண்டிலிருந்து இதற்கெனத் திரைப்படம் காட்டும் கருவி பொருத்தச் சரியான இரண்டு வாகனங்கள் ஒவ்வொன்றும் ஒரு லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வாங்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

### நினைவுச் சின்னங்கள்

தமிழ்நாடு அரசைச் சார்ந்த தலைவர்கள் வாழ்ந்த இடங்களும் நினைவுச் சின்னங்களும் செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் நிர்வாகப் பொறுப்பிற்கு மாற்றப்பட்டுள்ளன.

காஞ்சீபுரத்தில் அறிஞர் அண்ணா வாழ்ந்த இல்லத்தை அரசு ஏற்று அண்ணாவின்நினைவு இல்லமாகப் போற்றிப்பாதுகாத்து வருவதோடு, அண்ணாவின்பெருவாழ்வைச் சித்தரிக்கும்படங்கள், அவர் பயன்படுத்திய பொருட்களடங்கிய பொருட்காட்சி ஒன்றும் அமைக்கப்பட்டது.

### கலைவாணர் அரங்கம்

சென்னையிலுள்ள கலைவாணர் அரங்கத்தையும் வேலூரிலுள்ள அண்ணா கலையரங்கத்தையும் இத்துறை நிர்வகித்து வருகிறது. வேலூர் அண்ணா கலையரங்கில் கலை நிகழ்ச்சிகளுக்கு அனுமதிப்பதோடு திரைப்படங்களும் காட்டப்படுகின்றன.

குளிர்சாதன வசதியுள்ள கலைவாணர் அரங்கம் அரசாங்க விழாக்கள் பிற விழாக்கள் கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு ஒதுக்கப்படுகிறது. விழாக்கள் நடைபெறாத சமயங்களில் நாளொன்றுக்கு இரண்டு காட்சிகள் வீதம் திரைப்படம் நடத்தச் சில விதிகளின் கீழ் அனுமதிக்கப்படுகிறது. இதனால், அண்மைக்காலமாக இந்த அரங்கின் வருமானம் பெருகியுள்ளது.

ராஜாஜி மண்டபம், காந்தி இல்லம், சீரணி அரங்கம் ஆகியவைகளும் இத்துறையின் நிர்வாகத்தில் உள்ளன.

### 'தமிழரசு' இதழ்

தமிழரசு இதழ் (தமிழ்-ஆங்கிலம்) இத்துறையினரால் வெளியிடப்படும் இதழாகும்.

இந்த இதழ் அரசின் செய்திகளையும் கொள்கைகளையும் பரப்ப முனைவதுடன் அரசின் ஒருங்கிணைந்த திட்டங்களையும் பொது மக்களுக்கு அறிவிக்கிறது. மாதம் இரு முறைவரும் தமிழ்



இதழ் சராசரி 50,000 பிரதிகள் வெளியிடப்படுகின்றன.

மாதம் ஒரு முறை வரும் ஆங்கில இதழ் சுமார் 3,000 பிரதிகள் வெளியாகின்றன.

### தமிழ்நாடு திரைப்படப் பிரிவு

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு மாநிலத்தில் நடைபெறும் அரசின் ஆக்கப்பணிகளையும் பொது நிகழ்ச்சிகளையும் தேர்ந்தெடுத்துப் படமாக்கி செய்திப் படங்களாக மத்திய அரசின் திரைப்படப் பிரிவின் மூலம் வெளியிடுகிறது.

பல்வேறு கருத்து விளக்கப் படங்களும் (டாகுமெண்டரி) இங்கு உருவாக்கப்படுகின்றன.

திரைப்படத் தொழிலை ஊக்குவிக்கும் பொருட்டு சிறந்த படங்களுக்கும் கலைஞர்களுக்கும் பரிசளிக்கப்படுகிறது.

செய்தி-மக்கள் தொடர்புத் துறைக்கு உட்பட்ட தமிழ்நாடு திரையரங்குக் கழகம் மூலம் - தமிழகத்தில் பகுதி நிலைத் திரையரங்குகளைக் கட்டவும் அவற்றை நிலையான திரையரங்குகளாக மாற்றவும் - புதிதாக நிலையான திரையரங்குகள், டூரிங் திரையரங்குகள் திறந்த வெளி திரையரங்குகள் கட்டவும் திரைப்படக் கருவிகள் வாங்கவும் நிதி உதவி அளிக்கப்படுகிறது.

இவ்வாறு செய்தி - மக்கள் தொடர்புத் துறை ஆற்றிவரும் சிறப்பான பணிகள் கணக்கிலடங்கா!




9.6.'80ல், சென்னைக் கலைவாணர் அரங்கத்தில் அமைச்சரவை பதவியேற்றபின், அண்ணா சாலையில் பேரறிஞர் அண்ணா சிலையருகே அலைகடலெனத் திரண்டிருந்த மக்கள் வெள்ளத்திடையே மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள்.

# சமூக நலத்துறைச் சாதனைகள்



சமூதாயத்தில் நலிந்த பிரிவினரின் வாழ்க்கை நிலையைப் பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் மேம்படுத்துவதில் தமிழ்நாடு அரசு தனிக் கவனம் செலுத்தி வருகிறது. 1958-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட மகளிர் நலத்துறை நாளடைவில் சமூக நலத்துறை என்ற பெயரில் உடல் ஊனமுற்றோர், மகளிர், சிறார்களுக்கான மேம்பாட்டுத் திட்டங்களை வகுத்து நிறைவேற்றி வருகின்றது.

**உடலூனமுற்றோர் நலத் திட்டங்கள்:**

பார்வையற்றோர், காது கேளாதோர், மூடவர் சித்த சுவாதீனமற்றோர் மற்றும் தொழுநோய் பிடித்தோருக்காக 20 பள்ளிகள் அரசின் நேரடி நிர்வாகத்திலும் அரசு மானியத்தால் 24 பள்ளிகளும் நடைபெறுகின்றன. இவற்றில் ஏறத்தாழ 4275 மாணவர்கள் படித்து வருகின்றனர். 422 ஆசிரியர்கள் இவற்றில் பணியாற்றுகிறார்கள்.

பொதுக்கல்வி, தொழில்நுட்பக் கல்வியைத் தொடரவும் தொழிற்சாலைகளில் பயிற்சி பெறவும் படிப்பு உதவித் தொகையாக அரசு சமூக நலத்துறை மூலம் ரூபாய் 40 முதல் 125 வரை அளிக்கிறது. இதனால் ஆண்டொன்றுக்கு 1,000 பேர் நன்மை பெறுகிறார்கள்.

சித்த சுவாதீனமற்றோர் 100 பேர் பயன் பெறும் வண்ணம் ஓர் இல்லம் தொடங்க அரசு திட்டமிட்டுள்ளது.

**ஊனமுற்றோருக்கான தொழில் பயிற்சி:**

உடலூனமுற்றோருக்கு உருக்கு வார்ப்புத் தொழில்களில் பயிற்சி அளிக்க 1975-ஆம் ஆண்டு முட்டுக்காடு நவீனப்பயிற்சி- உற்பத்திப் பணிமனை தொடங்கப்பட்டது. இதில் ஊனமுற்றோருக்கெனப் பெட்டிக்கடைகள், மூன்று சக்கர வண்டிகள் மற்றும் அவற்றிற்குத் தேவையான கிளை உறுப்புகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

உடலூனமுற்ற மகளிருக்குத் தட்டெழுத்து சுருக்கெழுத்து உடைகள் தயாரித்தல், பூத்தையல் வேலை, பொம்மைகள் செய்தல் போன்றவற்றில் 57 பேர்களுக்கு இதுவரை ஸ்திரீசேவா மந்திர் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு மாதம் ரூபாய் 75 வீதம் அரசு உதவிப் பணமாக வழங்கி வருகின்றது.

சென்னை லிட்டில் ப்ளவர் கான்வெண்டு காது கேளாதோர் பள்ளி மூலமாகக் காதுகேளாத குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் பயிற்சி பெறுகிறார்கள்.

பார்வையற்ற குழந்தைகளுக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு அரசு பார்வையற்றோர் பள்ளி, பூவிருந்தவல்லியில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

சித்த சுவாதீனமற்ற குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களாகப் பயிற்சி பெறுவோருக்கு மாதம் ரூபாய் 100 உதவிச் சம்பளமும், குழந்தைகள் காப்பகத்திற்கு மானியமும் அளிக்கப்படுகிறது.

1978-ஆம் ஆண்டு துவக்கப்பட்ட இந்த இல்லத்தில் 40 வயதிற்குட்பட்ட. 40 பார்வையற்ற பெண்களுக்கு 6 மாதங்கள் நெசவு. சாக்கு தயாரித்தல் போன்றவற்றில் பயிற்சிக் காலங்களில் மாதம் ரூபாய் 50 உதவிப் பணமும் அளிக்கப்படுகிறது. பயிற்சிக்குப் பின் அவர்களுக்கு அங்கேயே வேலை கொடுக்கப்பட்டு. இருப்பிடச் செலவு. உணவுச் செலவு ஆகியவற்றில் பாதியை அரசு வழங்குகிறது.

கிண்டியில் 1967-இல் தொடங்கப்பட்ட பார்வையற்றோருக்கான சிறிய அளவு பொறியியற் பயிற்சிக் கூடத்தில் 6 மாதம் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு பார்வையற்றோருக்கும் பயிற்சிக் காலத்தில் இலவச உணவு, தங்குமிடம் வழங்கப்படுவதோடு, செலவிற்காக வாரம் ஒவ்வொருவருக்கும் ரூபாய் 2 வழங்கப்படுகிறது.

இவ்வாண்டு நான்கு தொகுதிகளில், 120 பேர் பயிற்சி பெறுவதற்காக, பார்வையற்றோருக்காக பயிற்சி-பணிக்கல்வி-நெசவு-கூட்டுறவு சங்கம் அமைக்க அரசு அனுமதி வழங்கி உள்ளது. பயிற்சி முடிந்த பின்னர் அவர்கள் கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

### ஏனைய உதவிகள்

சமூகநல இயக்குநரின் பொறுப்பில் மா நிலக்குழு ஒன்று செயல்பட்டு வருகிறது. இக்குழு உடல் ஊனமுற்றோரின் சுய வேலை வாய்ப்புக்காகவும், அவர்களுக்கு உதவி செய்யும் நிறுவனங்களுக்கு மானியமும் வழங்குகிறது. அரசு இக் குழுவுக்கு ரூபாய் 1 லட்சம் மானியமாக அளித்துள்ளது.

வறுமையில் வாடும் உடலூனமுற்றோருக்கு 5,000 மூன்று சக்கர வண்டிகளும், பள்ளி செல்லும் காது கேளாத குழந்தைகளுக்கு 2325 காது கேட்கும் கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

உடல் ஊனமுற்றோரின் நிலையை மேம்படுத்தும் வகையில் சேவை செய்யும் தனியார் நிறுவனங்களுக்கு ரூபாய் 3.6 லட்சம் இதுவரை வழங்கப்பட்டுள்ளது.

உடல் ஊனமுற்ற, சித்த சுவாதீனமுற்ற, குழந்தைகளையும், தொழுநோயாளிகளின் குழந்தைகளையும் பராமரித்து வரும் நிறுவனங்களுக்கு ஒரு குழந்தைக்கு மாதம் ரூபாய் 30 வீதம் பராமரிப்பிற்காக வழங்கப்படுகிறது. 1980-81ஆம் ஆண்டு 1.26 இலட்சம் இவ்வகையில் செலவிடப்பட்டுள்ளது.

பூவிருந்தவல்லியில் 1968-69-ல் தொடங்கப்பட்ட, வட்டார அச்சகத்தில், பார்வையற்றோர் படிப்பதற்காக நான்கு தென் மாநிலமொழிகளின் எழுத்து முறையில் புத்தகங்கள் அச்சிடப்படுகின்றன. இதற்கான செலவுத் தொகையை 1976 முதல் நான்கு தென் மாநிலங்களும் ஏற்றுக் கொள்கின்றன.

### உடல் ஊனமுற்றோருக்கு வேலை வாய்ப்பு:

தமிழகத்தில் 1979-80-81-ஆம் ஆண்டுகளில் 250 உடல் ஊனமுற்றோர் சிறு கடைகள் வைக்க நிதி உதவியளிக்கப்பட்டுள்ளது. அமைக்கும் கடை ரூபாய் 1,000 மதிப்புள்ளதானால் ரூபாய் 500 அரசு மானியமாக வழங்குகிறது.

வேலை வாய்ப்பகத்தில் பெயரைத் தொழிற்பயிற்சி பெற்றதாகப் பதிவு செய்துள்ள உடலூனமுற்றோருக்குப் பல்வேறு நிறுவனங்களில் தொழில் பழகுவோராக நியமித்து மாதம் ரூபாய் 150 வீதம் உதவித் தொகை அளித்து, தொழில் பழகியபின் அந்நிறுவனத்திலேயே வேலை வாய்ப்பு அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இதுவரை 234 பேர் அவ்விதம் தொழில் பழகுவோராக நியமிக்கப்பட்டுள்ளனர்.

ரூபாய் 2.92 லட்சம் செலவில் மதுரையில் வட்டாரப் புனர் வாழ்வு நிலையம் செயல்படத் துவங்கியுள்ளது. இதன் மூலம் 20 உடல் ஊனமுற்றோர் ஒவ்வொரு மாதமும் பயன் பெறுவர்.

### 1981-82இல் செயல்படுத்துவதற்கான புதிய திட்டங்கள்:

அனைத்து உலக நாடுகளின் உடல் ஊனமுற்றோர் சிறப்பு ஆண்டான இந்த ஆண்டில் (1981) ஊனமுற்றோர் நலன் காத்து, நல்வாழ்வு அளிப்பதில் அரசு மேலான கவனம் செலுத்தும். உடல் ஊனமுற்றோர் வாழ்க்கை வளம் பெற, பல் துறையிலும், சிறந்த வல்லுநர்களிடம் கலந்தாய்ந்து, பல புதிய திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. குழந்தைகளுக்குக் கல்வி வசதி அளித்தல், வளரும் இளைய தலை முறையினருக்கும், வயது வந்தோருக்கும், வாழ்க்கைக்குத் தேவையான தொழிற் பயிற்சி மற்றும்தொழில் நுட்பப் பயிற்சிகள் அளித்தல், வேலை வாய்ப்பு அளித்தல், சுய வேலை வாய்ப்பு நல்குதல், எல்லா மாவட்ட மருத்துவ நிலையங்களிலும் மருத்துவ வசதி அளித்தல் போன்ற திட்டங்களால் அவர்களும் நாட்டு நலனில் மறு வாழ்வு பெற்று, நம்மைப் போன்று சமமாக ஈடுபட வகை செய்கின்றன.

இத் திட்டங்களுக்காக 1981-82ஆம் ஆண்டில் ரூபாய் 45.29 இலட்சம் செலவாகும். திட்ட கால முழுவதிற்கும் ரூபாய் 203.98 இலட்சம் செலவு ஏற்படும்.

### குழந்தை நலம் :

சத்துணவு மற்றும் சுகாதாரக் குறைவால் வாடும் குழந்தைகளை ஆரோக்கியமானவர்களாக உருவாக்கவும், பிறக்கும் குழந்தைகள் ஆரோக்கியமாகப் பிறக்க வேண்டும் என்ற தொலை நோக்குடனும் கிராமப்புற சத்துணவு சுகாதாரத் திட்டங்களை அரசு நிறைவேற்றி வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் தற்போது 4639 குழந்தை நல நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

இவற்றில் 450, ஆதிதிராவிட குழந்தைகளுக்காகவும், 130, பழங்குடியினருக்காகவும், 25, ஆதிவாசி குழந்தைகளுக்காகவும் 10 பணியர் வகுப்பு குழந்தைகளுக்காகவும், இலங்கை அகதிகளின் குழந்தைகள் குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடியினர் குழந்தைகளுக்கெனவும் முறையே 5-ம் செயல்பட்டு வருகின்றன. பழங்குடியினர் பகுதி துணைத் திட்டத்தின் கீழ் தென் ஆர்க்காடு, வடஆர்க்காடு, சேலம், தர்மபுரி, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களிலுள்ள மலைப் பகுதிகளில் 139 குழந்தை நல நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இவற்றில் 91 நிலையங்கள் அரசு கட்டடங்களில் நடைபெற்று வருகின்றன. இதன் மூலம் 5,560 பழங்குடியினர் குழந்தைகள் பயனடைந்து வருகின்றனர்.

### ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம்:

எதிர் கால இந்தியாவின் இளஞ் சிற்பிகளாம் இன்றைய மழலைச் செல்வங்களின் ஒருங்கிணைந்த முன்னேற்றம் முறையான குழந்தைப் பிராய பணிகளாலும் அப்பணிகளை செயல்படுத்தும் முறைகளாலும்தான் மேம்பாடு அடையும் என்பதை உணர்ந்த இந்திய அரசு, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்சித் திட்டத்தினை உருவாக்கி 1974-75ம் ஆண்டு முதல் இந்தியா முழுவதும்செயல் படுத்தி வருகின்றது. அதன் அடிப்படையில் தமிழ்நாட்டில் சென்னை, நிலக் கோட்டை, தளி ஆகிய 3 இடங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது





இத் திட்டத்தின் கீழ் புகுமுகப் பள்ளி படிப்பு, துணை சத்துணவுத் திட்டம், நோய்த்தடுப்பு; மருத்துவ சோதனையும் அது அதனைச் சார்ந்த பணிகளும் சத்துணவு மற்றும் மருத்துவ கல்வி, முதிய பெண்களுக்கான நடைமுறைக்கல்விஆகிய பணிகள் செயல்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 100 அங்கன்வாடிகள் செயல்படுகின்றன. ஒவ்வொரு அங்கன்வாடியுலும் அனுமதிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை 40 ஆகும்.

இத் திட்டத்தினால் சுமார் 30 000 குழந்தைகள், சூலுற்ற பெண்கள். பாலூட்டும், தாய்மார்கள் பயன் பெறுகின்றார்கள்.

...ணைச் சத்துணவுத் திட்டத்
... கருத்தரித்த பெண்கள்
... ஆறுமாதக் குழந்
...டைய தாய்மார்களுக்
...ா ஒன்றுக்கு 40
... வீதம ஒவ்வொரு
...தம் 6 மாதம் முதல் 6
...ர நாள் ஒன்றுக்கு 25
... வீதமும் செலவிடப்படு
...

...தனைத் தவிர இத்திட்டத்
...ல்பயன் பெறும் ஒவ்வொரு
...ருக்கும் 4.5 பைசா வீதம் உண
...செலவின வகையில்
...றது. இவ்வாறு
...னைத்துச் செல
... மாநில அரசே
...ண்டிருக்கிறது.
...ல் ('80'81)
...ய் இத்திட்
...ப்பட்டுச்
...ந் நிதி
...தினை
...த்த
...ல

அரசினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தாய்சேய் நலப் பணிகள் :

ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் இந்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் ஒருபகுதியே இத்திட்டமாகும். இத்திட்டம் உலக வங்கியின்உதவியுடன்சென்னைப் பெருநகரின் எல்லைக்குட்பட்ட குடிசைப் பகுதிகளில் செயல் படுத்தப்பட்டு வருகின்றது.

நலிவுற்ற குழந்தைகளின் நல் வாழ்வினை கருத்தில் கொண்டு, இத்திட்டத்தின் மூலம் துணைச் சத்துணவு, உடல் நல ஆய்வு, தொடர் சிகிச்சை, நோய்த் தடுப்பு,பள்ளிக்கல்விக்குமுந்தைய கல்வி சத்துணவு சுகாதாரக் கல்வி மற்றும் செயல்முறைக் கல்வி ஆகிய பணிகளால் மக்கள் பயனடைய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சென்னைப் பெருநகர் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் குடிசைப் பகுதிகளில் கட்டி முடிக்கப்பட்டும். தொடர்ந்து கட்டப்படும் குழந்தைகள் நல நிலையங்கள் மூலம் இப்பணி நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

500 குழந்தைகள் நல நிலையங்கள் தொடங்க வேண்டுமென்பது அரசின் குறிக்கோளாகும். இவற்றில் சென்னை நகர அபிவிருத்தித் திட்டத்தின கீழ் 200 நிலையங்கள் தொடங்கப்பட்டு உள்ளன.

இன்றுவரை அரசு ஒப்புதல் அளித்துள்ள 150 நிலையங்களில் 81 நிலையங்கள் சொந்த கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. 80-81ஆம் ஆண்டில் மட்டும் 50 நிலையங்களுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.மேலும் 50 நிலையங்களுக்கு அரசின் ஒப்புதல் எதிர் பார்க்கப்படுகின்றது. இது தவிர 81—82 நிதியாண்டில் மேற்கொண்டு 200 நிலையங்கள் சொந்த கட்டடங்களில் செயல்படும். ஒவ்வொரு நிலையத்தின் மூலமும் 70 பள்ளி செல்லும் வயதடையா குழந்தைகளும் 30 கருத்தரித்த மகளிரும் பயனடைகின்றனர். கேர் நிறுவனம் வழங்கும்பாலாகார்மூலம் துணை சத்துணவு வழங்கப்படுகின்றது.

உலக வங்கியின் உதவியுடன் தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டத்தினை மதுரை. செங்கல்பட்டு. வட ஆர்க்காடு முகவை. தி... நெல்வேலி மற்றும் புதுக்கோட்... மா... வட்டங்களில் செயல்படு...

அரசு திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தின் தலையாய நோக்கம் மிக மோசமான நிலையில் 6 முதல் 36 மாதங்கள் வரையுள்ள குழந்தைகளுக்கு முறைப்படி சத்துணவு வழங்குவதே ஆகும்.

இத்திட்டத்தின் மூலம். கருவுற்ற. மகளிருக்கும். பாலூட்டும் தாய்மார்களுக்கும், பள்ளி செல்லும் பாலர்களுக்கும் சத்துணவின் முக்கியத்துவம் தரம், அதனின் தொடர்பான பணிகள் ஆகியவை அவர்களை சென்றடைய வழி வகை செய்வதும் இதன் நோக்கமாகும்.

முதன் முதலாக இத்திட்டத்தினைச் செயல்படுத்த மதுரை மாவட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டு முதற்கட்டமாகக் கொட்டாம்பட்டி வளர்ச்சி வட்டாரத்தில் 26-11-80 முதல் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது இவ்வளர்ச்சி வட்டாரத்தில் 66 சமுதாயச் சத்துணவு நிலையங்களும், 13 சுகாதாரத் துணை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றது.



இத்திட்டத்தின் இரண்டாவது கட்டமாக மதுரை மாவட்டத்தில் எஞ்சியுள்ள 32 வளர்ச்சி வட்டங்களிலும் சத்துணவு திட்டத்தினை செயல்படுத்த ஏதுவாகவும், 365 சுகாதாரத் துணை நிலையங்கள் அமைப்பதற்கும் ஆயத்தப்பணிகள் அனைத்தும் நடைபெற்று வருகின்றன.

சென்னை, மதுரை, கோவை மாநகராட்சிகளின் மூலமும் மற்றும் புதுக்கோட்டை நகராட்சி மூலமும் மருத்துவ உதவியுடன் கூடிய சிறப்புச் சத்துணவுத் திட்டம் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. இதில் நோய்த் தடுப்புக்கான முத்தடுப்பு ஊசியும் மற்ற தடுப்பு ஊசிகள் போடுவதும். மாத்திரைகள் வழங்குவதும் இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாகும். இத்திட்டத்தினால் தமிழ்நாடு முழுவதும் 1980-81 ஆம் ஆண்டில் பயனடைந்தோர் எண்ணிக்கை 2,76,530 ஆகும். அதற்காக மாநில அரசால்ரூபாய் 45,79 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.



# ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நலம்

ஆதிதிராவிடர் முன்னேற்றப் பணியில் தமிழ்நாடு அரசு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நலத்துறை மூலமாக நல்ல சாதனைகளை நிகழ்த்தி யுள்ளது. 1949-ஆம் ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாயாக இருந்த நிதி ஒதுக்கீடு 1980-ல் ரூ. 24.68 கோடியாக உயர்ந்ததும், மேலும் 1981-ல் ரூ. 27.02 கோடியாக உயர்ந்ததும் இதற்கு எடுத்துக் காட்டாகும்.

ஆதிதிராவிட மற்றும் பழங் குடி மக்கள் துறையின் நிதி ஒதுக் கீட்டில் 2/3 பங்கு இம்மக்கள் கல்விக்கான திட்டங்களுக்குச் செலவிடப்பட்டு வருகிறது. ஆதி திராவிடர்கள் கல்வி அறிவு பெற 942 பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பள்ளிகளில் 86,876 மாணவர்களும் 78,900 மாணவிகளும் கல்வி பயில் கிறார்கள். இஃதே போல் மலை வாழ் மக்களுக்கு 113 உறை விடப் பள்ளிகளும், ஒரு உறை விடமில்லாத பள்ளியும் நடத்தப் படுகின்றன. பொதுப் பள்ளி களில் படிக்கும் ஆதிதிராவிட மக்கள் தங்கிப் படிக்கும் வசதியை அளிக்க 40,535 மாணவர்கள் பயன்பெற 646 அரசு விடுதிகள் உள்ளன. மலைவாழ் மக்களுக்கு 895 மாணவர்கள் பயன் பெறத் தக்க 20 விடுதிகள் உள்ளன. ஒவ் வொரு ஆண்டும் படிப்படியாக புதிய விடுதிகள் திறக்கப்படுகின் றன. 1980-81ஆம் ஆண்டில் 33 பள்ளிகளுக்கு ரூ. 1.15 கோடி செலவிலும், 81 விடுதிகளுக்கு ரூ. 2.05 கோடி செலவிலும் உறுதியான கட்டடங்களைக் கட்ட அரசு அனுமதி வழங்கி யுள்ளது. 1980-81ஆம் ஆண்டில் இப்பொழுது உள்ள விடுதிகளில் 416 மாணவர்களை அதிகப்படி யாகச் சேர்க்க அனுமதித்த தோடு, 15 புதிய விடுதிகளும் திறக்கப்பட்டன.

இத்துறையால் நடத்தப்படும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்கள், புத்தகங்கள், பலகைகள், மதிய உணவு மற்றும் சீருடைகள் இலவசமாகப் பெறு கிறார்கள். இத்துறையால் நடத்தப்படும் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ மாணவியர்கள் இலவச உணவு, உறைவிட வசதி களுடன் 2 இணை சீருடைகளும் இலவசமாக அளிக்கப்படுகின்ற னர். இத்துறையால் நடத்தப் படும் பள்ளிகளில் 1 முதல் 5-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர் களுக்கு (விடுதிகளில் தங்கிப் பயி லும் மாணவர்களுக்கு உள்ளது போல்) ஏற்கெனவே வழங்கப் படும் ஒரு இணை சீருடை தவிர மேலும் ஒரு இணை சீருடை வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. ஏற் கனவே சீருடை எதுவும் வழங் கப்படாத 6 முதல் 8-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு 2 இணை சீருடைகள் வழங்கவும் ஆணையிடப்பட்டுள்ளது. கல் லூரி விடுதிகளிலுள்ள மாணவ, மாணவியருக்கு உணவுக்காகச் செலவிடப்படும் தொகையினை மாதம் ஒன்றுக்கு ரூ. 65-ல் இருந்து ரூ. 80 ஆகவும் பள்ளி விடுதி மாணவ மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 40லிருந்து ரூ. 45 ஆகவும் உயர்த்தி 1977-

78-ம் ஆண்டில் அரசு ஆணை யிட்டுள்ளது.

இப்பொழுது 1 முதல் 8-ஆம் வகுப்பு வரை ஆதிதிராவிடர் நலப்பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியருக்கு 2 இணை சீருடைகள் ஆண்டு ஆரம்பத்திலேயே இலவசமாக வழங்கப்படுகின்றன. ஆதிதிராவிட மற்றும் பழங்குடி மக்களுக்கான நலப் பள்ளிகள் மற்றும் விடுதிகளிலுள்ள 1,12,332 மாணவர்களும் 87,342 மாணவியர்களும் இதனால் பயனடைகின்றனர். 1979-80-ஆம் ஆண்டிலிருந்து, சென்னை மற்றும் மாவட்ட, வட்டத் தலைநகரங்களிலுள்ள தனியார் இல்லங்களுக்கு (உதவித் தொகை பெறுபவை) வடி வழங்கப்படும் உணவுத் தொகை ஒரு மாதத்திற்கு ஒரு நபருக்கு ரூ. 25-ல் இருந்து ரூ. 35 ஆகவும், மற்ற இடங்களுக்கு ரூ. 25-லி இருந்து ரூ. 30 ஆகவும் அதிகரித்து வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

1977-78 முதல், மெட்ரிக் படிப்புக்கு முந்தைய படிப்புப்பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடி மக்கள் மற்றும் ஆதிதிராவிட கிருஸ்துவ மாணவ மாணவியருக்கு உறைவிடமற்ற உபகாரச் சம்பளம் வழங்குவதற்கான (N. R. S. S.) வருமான வரம்பு நீக்கப்பட்டது. மேலும் ஆதிதிராவிடர், பழங்குடி மற்றும் மதம் மாறிய ஆதிதிராவிட மாணவர்கள் அனைவருக்கும் தேவைப்பட்ட அனைத்துப் பாடப்புத்தகங்கள் பெற்றோர் பாதுகாவலர் வருமான வரம்பைப் பாராமல் இலவசமாக அளிக்கப்பட்டன. இவர்கள் செலுத்த வேண்டிய தனிக்கட்டணம் கல்வி நிறுவனங்களுக்கு நேரடியாக அளிக்கப்பட்டது. பள்ளி இறுதித் தேர்வுக்கான கட்டணம் அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களுக்கு நேரடியாக அளிக்கப்பட்டது. இவ்வாறாக, மாணவர்களின் நலன் கருதி 25 ஆண்டுகளுக்கும் மேலாக நடைமுறையில் இருந்து வந்த மெட்ரிக் படிப்புக்கு முந்தைய வகுப்புகளில் பயிலும் மாணவ மாணவியருக்கான உறைவிடமற்ற உபகாரச் சம்பளம் பணமாக வழங்குவது கைவிடப்பட்டது.

இத்திட்டத்தால் பயனடைந்தவர்களின் எண்ணிக்கை 1976-77ல் 5.515 இலட்சமாக இருந்து சீராக உயர்ந்து 1980-81ல், 7.79 இலட்சமாக அதிகரித்துள்ளது. இதற்கான செலவும் 76.77-ல் ரூ. 129.15 இலட்சங்களாக இருந்தது சீராக உயர்ந்து 1980-81ல் ரூ. 129.15 இலட்சங்களாக உயர்ந்துள்ளது. 1977-78ஆம் ஆண்டிலிருந்து மெட்ரிக் வகுப்புக்குப் பிந்திய வகுப்புகளில் படிக்கும் ஆதிதிராவிடர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ மாணவர்கள் முழுச் சம்பளச் சலுகை பெறுவதற்கான வருமான வரம்பான ரூ. 2,500 நீக்கப்பட்டது. மேலும், மெட்ரிக் வகுப்புக்கு பிந்தைய வகுப்புகளில் படிக்கும் எல்லா மாணவர்களுக்கும் எல்லாப் பிரிவினர்களுக்கும் அவர்களின் பெற்றோர்—பாதுகாவலர் வருமானத்தைப் பாராது படிப்புக் கட்டணம் இலவசமாக வழங்கப்படுகிறது. இவர்களுக்கு வருமான வரம்புக்குட்பட்டிருந்தால் மெட்ரிக் படிப்புக்குப் பிந்தைய எல்லாப் பிரிவிலுள்ள வகுப்புகளுக்கும் உபகாரச்சம்பளம் தொடர்ந்து வழங்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் 1976-77ல் 21,832 மாணவர்களுக்குச் செலவான தொகையான ரூ. 155.78 இலட்சங்கள் 1980-81 சீராக உயர்ந்து 47,618 மாணவர்களுக்கு ரூ. 322.45 இலட்சங்களாகச் செலவிடப்பட்டது.

எஸ். எஸ். எல். சி. (10-ஆம் வகுப்பு)யிலும், மேல்நிலைக் கல்வி வகுப்புகள் 2-ஆம் ஆண்டிலும் 60 சதமும் அதற்கு மேலும் பெற்ற ஆதிதிராவிடர் (கிருத்துவ மதம் மாறியவர்கள் உட்பட) மற்றும் பழங்குடி மக்கள் மாணவர்களுக்கு ரூ. 300 தகுதி மான்யமாகக் கொடுக்கப்பட்டுவருகிறது. இத்திட்டத்தின்கீழ் 1980-81ல் ரூ. 4,91,400 செலவிடப்பட்டது. 1,638 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். ஒவ்வொரு மாவட்டத்திலும் எஸ். எஸ். எல். சி. (10ஆம் வகுப்பு) தேர்வில் மிகவும் அதிக மதிப்பெண்களும், அதற்கு அடுத்தும் பெற்ற ஆதிதிராவிடர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிட மாணவர்களுக்கு மட்டும் மாதமொன்றுக்கு ரூ. 80 ஆக அளித்து வந்த செயலாக்கத் திட்டம் பழங்குடி மக்கள்மாணவ மாணவியருக்கும் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய மாணவிகளுக்கும் நீட்டிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 1980-81ல் 121 நபர்களுக்குச் செலவிடப்பட்டதொகை ரூ. 1.15 இலட்சங்கள் ஆகும். 1980-81லும் ஆதிதிராவிடர் பழங்குடி மற்றும் மதம் மாறிய ஆதிதிராவிட கிருத்துவ மாணவர்களுக்குள்ளும், மாணவிகளுக்குள்ளும் மேல்நிலைப் பள்ளித் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ மாணவியருக்குக் காந்தியடிகள் நினைவுப்படிப்பு உதவித்தொகை மற்றும் தகுதி வழிவகைப்பரிசுத் திட்டம்ஆகியவை தொடர்ந்து செயல்படுத்தப்பட்டன. இத்திட்டத்தின்கீழ் புதியதும், புதுப்பிப்பதுமாக 171 நபர்களுக்கு ரூ. 1.85 இலட்சம் செலவழிக்கப்பட்டது.

கடந்த சில ஆண்டுகளாக, கடன் படிப்புதவித் தொகை அளிக்கும் திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் அதிக மாணவ மாணவியர்கள் பயன் பெற வேண்டி அதிக தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவழிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 1976-77-ல் 2,438 நபர்களுக்குச் செலவிடப்பட்ட தொகையான ரூ. 11.24 இலட்சங்கள் 1980-81ல் 6,078



மாணவர்களுக்கு வழங்க ரூபாய் 58.91 இலட்சங்களாக உயர்ந்துள்ளது.

சட்டம் பயின்ற மாணவர்களுக்கு அவர்கள் தொழில் நடத்த ரூ. 500 மான்யமாகவும் மற்றும் புத்தகம், சாமான்கள் மற்றும் அறைக்கான வாடகைக் கட்டணம் போன்றவைகளுக்குச் செலவிட ரூ. 750 கடனாகவும் கொடுக்கப்பட்டது. 1980-81-ல் மான்யம் ரூ. 750 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிலும் ஆதிதிராவிட மாணவர்களுக்கு ரூ. 45 உதவித் தொகையாக (Stipend) வழங்கப்பட்டு வந்தது. இத்தொகை 1-8-80 முதல் ரூ. 55 ஆக உயர்ந்துள்ளது.

**துப்புரவுப் பணியில் ஈடுபட்டவர்களின் குழந்தைக்கான உதவித் தொகை வழங்கும் தனித்திட்டம்:**

1977-78-ஆம் ஆண்டு மதுரை மற்றும் திருச்சி மாவட்டங்களில் வறண்ட கழிப்பிடம் சுத்தம் செய்தல், தோல் பதனிடுதல் போன்ற சுகாதாரக் குறைவான பணியில் ஈடுபடும் பெற்றோர்களின் குழந்தைகள் 6 முதல் 10-ஆம் வகுப்பு வரை படிப்பவர்களுக்குப் பெற்றோர்களின் சாதியைப் பாராமல் ஆண்டுக்கு ரூ. 1,450 வழங்கும் தனித்திட்டம் கொண்டு வரப்பட்டது. 1980-81ல் மற்ற மாவட்டங்களுக்கும் இத்திட்டம் நீட்டிக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் 1980-81ல் 23 நபர்களுக்கு ரூ. 30,450 செலவு செய்யப்பட்டது.

**புத்தக வங்கிகள்:**

மருத்துவப் பொறியியல் கல்லூரிகளில் பயிலும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடிமாணவமாணவியர்ன் நலனுக்காகப் புத்தக வங்கிகள் மேற்படி கல்லூரிகள் ஒவ்வொன்றிலும் ஒன்று வீதம் ஏற்படுத்த ஒரு புதிய திட்டம் புகுத்தப்பட்டு 1979-80-ல் செயல்படுத்தப்பட்டது. 1979-80-ல் இதற்கான செலவு ரூ. 05.69 இலட்சங்கள் ஆகும். இத்திட்டத்தின்கீழ் 955 மருத்துவக் கல்லூரி மாணவர்களும், 777 பொறியியல் கல்லூரி மாணவர்களும் பயனடைந்தனர். 1980-81ல் இத்திட்டத்திற்காக ரூ. 3.42 இலட்சங்கள் செலவு செய்யப்பட்டது. இது இம்மாநிலத்தில் மீதமுள்ள 485 மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்காகவும், 553 பொறியியல் மாணவர்களுக்காகவும் செலவு செய்யப்பட்டது.



அனைத்திந்தியப் பணித் தேர்வில் வெற்றி பெற்ற ஒவ்வொரு ஆதிதிராவிடர் பழங்குடி மற்றும் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு ரூ. 1,000 நிதி உதவியாக அளிக்கப்பட்டு வருகிறது. இத்தொகை வழங்க வருமான வரம்பு ஏதும் இல்லை.

தட்டச்சு, சுருக்கெழுத்து, கல்லூரி மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பது போன்ற திட்டங்களும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**உழவு மாடுகளும் விவசாயக் கருவிகளும்:**

பொருளாதார முன்னேற்றத் திட்டத்தின்கீழ் உழவுமாடுகளும், விவசாயக் கருவிகளும் வாங்க ஆதிதிராவிடர், பழங்குடிமக்கள் மற்றும் மதம் மாறிய கிருத்துவ இனத்தைச் சேர்ந்த ஆதிதிராவிடர்கள் ஆகியவர்களுக்கு ரூபாய் 600 மான்யமாக அளிக்கப்படுகிறது.

பாசனக் கிணறுகள் வெட்டும் திட்டம் நிலவள வங்கி மூலம் செயல்படுத்தப்படுகிறது. கிணறு வெட்டுவதற்காகஆகும்மொத்தச் செலவில் $33\frac{1}{3}$ மான்யமாக அளிக்கப்படும். மீதி நிலவள வங்கியின் கடன்தொகையாகும். 1980-81ல் இத்திட்டத்தின் கீழ் 100 ஆதிதிராவிடர்களும், 7 கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர்களும் பயனடைந்துள்ளனர். உழவு மாடு அளிக்கும் திட்டத்தில் 212 ஆதிதிராவிடர்களும், 34 மதம்மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர்களும் பயனடைந்துள்ளனர். சேலம் மாவட்டத்திலுள்ள கல்ராயன், கொல்லி மலைப் பகுதி மலைவாழ் மக்களின் நலனுக்காகத் தோட்டக்கலை வளர்க்கும் திட்டம் முக்கியமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**கூட்டுறவு:**

ஏழை ஆதிதிராவிட மக்கள், உதவி பெறும்படி அவர்களுக்கு வேலைகுறைவாய்இருக்குங்காலங்களில் வேலை வாய்ப்பைப் பெற பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆதிதிராவிடர் பால் வழங்கு கூட்டுறவுச் சங்கத்திலுள்ள ஒவ்வொரு நபருக்கும் 1 மாடு வாங்க ரூபாய் 1,500 வீதம் நிதி உதவி அளிக்கப்படும். ஒரு நபருக்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நலத்துறையிலிருந்து ரூபாய் 500 மான்யமும் தேசியமயமாக்கப்பட்ட வங்கியிலிருந்து குறைந்த வட்டி விகிதத்தில் ரூ. 1,000 கடனாகவும், ஒரு மாட்டிற்கு அளிக்கப்படுகிறது.

மேலே சொல்லப்பட்ட உதவி ஒரு நபருக்கு இரண்டு மாடுகள் வாங்குவதற்கு மட்டுமே உண்டு. 1980-81-ல் இத்திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர்களுக்கும், கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர்களுக்குமாக ரூபாய் 11 இலட்சம் செலவிடப்பட்டது.

சைக்கிள் கடை, மளிகைக் கடை, சிற்றுண்டிச் சாலை போன்ற ஒப்புதலளிக்கப்பட்ட 31 வகைத் தொழில்கள் நடத்துவதற்கு வட்டியில்லாக் கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் 1980-81ல் மட்டும் 1243 நபர்களுக்கு ரூபாய் 11.00 இலட்சம் கடனாகக் கொடுக்கப்பட்டுள்ளது. 1979-80ல் ஆதிதிராவிட தீப்பெட்டி தொழிலாளர்களுக்கென, இராமநாதபுரம் மாவட்டத்தில் தொழிற் கூட்டுறவுச் சங்கம் அமைக்க வட்டி இல்லாக் கடனாக ரூபாய் 4.90 இலட்சம் அரசால் அளிக்கப்பட்டது.

1980-81ல் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வளர்ச்சிக் கழகத்தில் மேம்பாட்டுப் பிரிவு ஒன்றை அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது. இதற்காக 1980-81ல் இரண்டு கோடி ரூபாய் அரசின் பங்குத் தொகையாக ஆதிதிராவிடர்களின் மேம்பாட்டுத் திட்டங்களுக்கென தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வளர்ச்சிக் கழகத்திற்கு வழங்கியுள்ளது. இப்பிரிவு 1980-81 லேயே செயல்பட ஆரம்பித்து விட்டது.

**வீட்டு மனைப் பட்டா:**

எங்கெங்கு அரசு புறம்போக்கு நிலங்கள் உள்ளனவோ, அவைகளை ஆதிதிராவிட மற்றும் பழங்குடி மக்களுக்கு வருவாய்த்துறையினரால் வீட்டு மனைக்காக ஒப்படை செய்யப்பட்டு வருகிறது. புறம்போக்கு நிலங்கள் இல்லாத இடங்களில் தனியார் நிலங்களை

அரசு செலவில் நிலம் கையகப் படுத்தும் சட்டத்தின் கீழ் கையகப்படுத்தி ஆதிதிராவிடர் மக்களுக்கும், பழங்குடி மக்களுக்கும் வீட்டு மனைகள் இலவசமாக அளிக்கப்பட்டு வருகின்றன. 1980-81ஆம் ஆண்டில் மட்டும் ரூபாய். 122.05 இலட்சம் செலவில் 31,126 வீட்டு மனைகள்கொண்ட 1858.66 ஏக்கர் நிலம் கையகப் படுத்தப்பட்டது. இதுவரை இப் பணிக்காகச் செலவு செய்யப் பட்ட தொகைகளில் இது மிக அதிகப்படியானதாகும்.



**சலவைத் துறை கட்டுதல்:**

சலவைத் தொழில் செய்யும் ஆதிதிராவிடர்களுக்குச் சலவைத் துறை கட்ட1978-79 ஆம்ஆண்டு புதிய திட்டம் ஒன்று ஏற்படுத் தப்பட்டது. 1980-81ஆம் ஆண்டு ரூபாய் 10,000 மான்யமாகவும், ரூபாய் 10,000 கடனாகவும் இரண்டு சலவைத்துறைகள் கட்ட நிதி ஒதுக்கப்பட்டது. இவற்றில் ஒன்று குமரி மாவட் டத்திலும், மற்றொன்று நெல்லை மாவட்டத்திலுள்ள செங் கோட்டைத்தாலுகாவிலும் கட்ட உத்தரவிடப்பட்டுள்ளது.

**சாதாரணக் கழிப்பிடங்களை நீரடிக் கழிப்பிடங்களாக மாற்றுதல்:**

சாதாரணக் கழிப்பிடங்களை நீரடிக் கழிப்பிடங்களாக மாற் றும் திட்டம்1973-74-ல்கொண்டு வரப்பட்டது. 1980-81-ல் ஆண் டில் 729 நீரடிக் கழிப்பிடங்கள் ரூ. 2,39,610 செலவில் கட்டப் பட்டது.

தேவைப்படும் இடங்களுக்குக் குடிநீர்க்கிணறுகள் அமைக்கப் பட்டு வருகின்றன. தரைமட்ட நீர்த் தேக்கத் தொட்டிகளும் கட்டித் தர திட்டமிட்டு, செயல் படுத்தப்பட்டு வருகிறது. 25,526 ஆதிதிராவிடர் காலனிகளுக்கும் (புதிய குடியிருப்புகள் தவிர) முழுமையாக மின்வசதி அளிக்கப் பட்டுள்ளது.

**ஈமக்கடன் செய்ய நிதி உதவி:**

1978-79-ஆம் ஆண்டு முதல் ஏழை ஆதிதிராவிட குடும்பங் களில் எவரேனும் ஒருவர் இறந்து விட்டால் அவரது ஈமக்கடன் களைச் செய்ய ரூபாய் 50 நிதி உதவி அளிக்கும் புதிய திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**தீண்டாமை ஒழிப்பு**

தீண்டாமையை ஒழிப்பதற்குத் தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் ''ஆதிதிராவிடர் வாரம்'' சனவரி மாதம் 24 முதல் 30-ஆம் தேதி வரையில் கொண்டாடப்பட்டு வருகின்றது. 1980-81ஆம் ஆண்டு ஒரு துணைக் காவல் துறைத் தலைவர் குடிமை உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தை அம லாக்கவும், ஆதிதிராவிடர்களுக்கு அளிக்கப்படும் கொடுமைகளின் றும் அவர்களைப் பாதுகாப்பதற் காகவும் என பிரத்தியேகமாக நியமிக்கப்பட்டுள்ளார். தீண் டாமை ஒழிப்பு பற்றிய ஒரு செய்திப் படம் விரைவில் வெளி யிட நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

**கலப்புத் திருமணந் தம்பதிகளுக்கு வெகுமதிகள்:**

1979-80 ஆண்டில், கலப்புத் திருமணத்தை ஊக்குவிக்கும் பொருட்டு, அரசு ஒரு மாற்று திட்டத்தை ஏற்படுத்தியது. அத் திட்டத்தின்படி, கலப்பு மணம் புரிந்த தம்பதிகளுக்கு, ஒருதங்கப் பதக்கமும், பாராட்டுப் பத்திரம் திருமணச் செலவுகளுக்காக ரூபாய் 300 ஆகியவை வழங்கப் படுவதுடன், தம்பதியர் இருவர் பெயரிலுமாகச் சேர்ந்து ரூபாய் 4,000 ஐந்து ஆண்டுகளுக்கு நிரந்தர வைப்புத் தொகையாக (பிக்செட் டிபாசிட்) ஏதேனும் ஒரு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் இடப்படுகிறது. இந்தத் திருத்தப்பட்ட திட்டத்தின்படி 1980-81ஆம் ஆண்டில், 123 தம் பதியருக்கு நிதியுதவி மற்றும் நிரந்தர வைப்புத் தொகையாக ஒரு தம்பதியருக்கு ரூ. 4,300 வீதம் ரூபாய் 5,28,900 செல விடப்பட்டுள்ளது.

**குழந்தைகள் காப்பகங்கள்:**

ஆதிதிராவிடர் குழந்தை களுக்கென, ஆதிதிராவிடர் மற் றும் பழங்குடி மக்கள் நலத்துறை யின் நிதியிலிருந்து, குழந்தைகள் காப்பகங்கள் திறப்பதற்கான புதிய திட்டம் 1977-78ல் உரு வாக்கப்பட்டது. 1977-78 முதல் 1979-80 வரையான மூன்று ஆண்டுகளில் 150 குழந்தைகள் காப்பகங்கள் ஏற்படுத்தப்பட்டுள் ளன. 1980-81 நிதியாண்டில் மேலும் 50 குழந்தைகள் காப்ப கங்கள் திறப்பதற்கு அரசு உத் தரவு வழங்கியுள்ளது. 1980-81 ஆண்டில் இதற்கென ரூபாய் 4.39 இலட்சம் செலவிடப் பட்டுள்ளது. இத்திட்டம் சமூக நலத் துறையின் மூலம் செயல் படுத்தப்படுகிறது.

**பழங்குடி மக்கள் முன்னேற்றம்:**

பழங்குடி மக்களின் ஒருங் கிணைந்த முன்னேற்றத்திற் கென, துணைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு சிறப்புப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன 1980-81ஆம் ஆண்டில் மேற் குறிப்பிட்ட துணைத்திட்டத்தின் கீழ் ரூபாய் 347 இலட்சங்கள் நிதி ஒதுக்கப்பட்டது. ஒருங்கிணைந்த பழங்குடி மக்கள் முன்னேற்றத் தின் கீழ் 1980-81 நிதியாண்டில் பத்து உறைவிடப் பள்ளிகள் திறக்க அரசு ஆணையிட்டுள்ளது.

**சிறப்புக் கூட்டமைப்புத் திட்டம்:**

இந்திய அரசின் அறிவுரைக் கிணங்க மாநிலத் திட்ட நிதி யிலிருந்து போதிய நிதி உதவி ஆதிதிராவிடப் பணிகளுக்கு வழங்க, தமிழக அரசு, 1980-81 1981-82 மற்றும் 1980-85 ஆண்டுகளுக்கென ஒரு திருத்தப் பட்ட சிறப்புக் கூட்டமைப்புத் திட்டத்தை உருவாக்கி வருகிறது. ஒருங்கிணைந்த கிராமிய முன் னேற்றம் மற்றும் இதர பொரு ளாதாரத் திட்டங்களில், குறைந் தது 40 முதல் 60 சதம் வரை ஆதிதிராவிடர்களுக்கென் ஒதுக் கப்படுகிறது.

இவ்வாறாக தமிழக அரசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களின் வாழ்க்கைத் தரம், மாநிலத்திலுள்ள இதர பிரிவு மக்களின் வாழ்க்கைத் தரத் திற்குச் சமமாக உயர்வடையும் படி அனைத்து வழிகளிலும் முயற்சி செய்து வருகிறது.



# நீர்ப்பாசனத் துறையின் பணிகள்

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1980-85) பாசனத் திட்டங்களுக்காக 66000 எக்டேர் பாசனம் பெறும் வண்ணம் ரூ. 149.79 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1977-78, 1979-80 ஆண்டுகளில் ஒரு பெரிய திட்டமும் 10 நடுத்தரத் திட்டங்களும் ரூ.32.27 கோடி மதிப்பீட்டில் 67500 எக்டேர் (1,66,700 ஏக்கர்) புதிய நிலங்களுக்குப் பாசன வசதி அளிப்பதற்கு அரசு அங்கீகாரம் அளித்துள்ளது. இதில் 8 நடுத்தரத் திட்டங்களும் ஒரு பெரிய திட்டத்தின் ஒரு பகுதியும் நிறைவடைந்துள்ளன. இதன் மூலம் கூடுதலாக 18500 எக்டேர் (45,700 ஏக்கர்) பாசனம்கிடைத்துள்ளது. 1977-78 முதல் 1979-80முடிய பெரிய ,நடுத்தரத் திட்டங்களுக்காக ரூ. 39.70 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டில் திருச்சி மாவட்டத்தில் இரு நடுத்தரத் திட்டங்களும், கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு நடுத்தரத் திட்டமும், தருமபுரி மாவட்டத்தில் ஒரு நடுத்தரத் திட்டமுமாக மொத்தம் 4 நடுத்தரத் திட்டங்கள் அரசால் அனுமதி அளிக்கப்பட்டன. அத்திட்டங்கள் பின் வருமாறு:

1980-81ஆம் ஆண்டில் பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்திலுள்ள கீழ் நீராறு அணையின் எஞ்சியவேலைகளும், சாத்தனூர் வலதுபுறக் கால்வாய் திட்ட வேலைகளும் முடிவுற்று அதனால் கூடுதல் 8520 எக்டேர் பாசனம் கிடைக்கப்பெற்றது. கோவை, பெரியார் மாவட்டங்களில் பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, பல்லடம், தாராபுரம் ஆகிய வட்டப் பகுதிகளில் மிகவும் வறட்சியாகக் காணப்படும் பகுதிகளுக்குப் பாசன வசதி அளிக்கும் பொருட்டாக பரம்பிக்குளம் ஆழியாறு திட்ட ஆயக்கட்டோடு மேலும் (46540 எக்டேர்) (1,15,000 ஏக்கர்) நிலப்பரப்பை இத்திட்டத்தின்கீழ் கொண்டுவர அரசு ஒப்புதல் அளித்து இத்திட்ட வேலைகள் தற்போது நடைமுறையிலுள்ளன.

உலக வங்கியின் உதவி பெற்ற பெரியாறு மேம்பாட்டுத் திட்டமும் மேலும் 11நடுத்தரத் திட்டங்களும் தற்போது செயலிலுள்ளன. 1980-81ஆம் ஆண்டில் பெரியநடுத்தரத் திட்டங்களுக்கு



ரூ. 14.26 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

**பருவ நிலை**

மூன்று ஆண்டுகளாக (1977-78 முதல் 1979-80 வரை) பருவ நிலை அனுகூலமாகவே இருந்தது. தமிழ்நாட்டிலுள்ள எல்லா நீர்த் தேக்கங்களிலும் நீர் போதுமானதாக இருந்தது. அதனால் எல்லா நீர்ப்பாசன முறைகளும் உரிய காலத்தில் திறக்கப்பட்டு பயிர்களுக்குத் தேவையான அளவு தண்ணீர் பயிர்க்காலம் முழுதும் வழங்கப்பட்டது. சில நீர்ப்பாசன முறைகளில் (கீழ்பவானித் திட்டம், மேட்டூர் கால்வாய், கிருட்டிணகிரி நீர்ப்பாசன முறை ஆகியவைகளில்) இரண்டு போகங்களுக்குப் பயன்படுத்தியபின் நீர்த் தேக்கத்திலுள்ள மிகுதியான நீரைப் பயன்படுத்திக் கூடுதல் பயிர் விளைவிக்கப்பட்டது.

1980-81ஆம் ஆண்டில் வட கிழக்குப் பருவமழை தவறியதால், தமிழ்நாட்டிலுள்ள பல மாவட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டன. வறட்சியால் பாதிக்கப்பட்ட இடங்களிலுள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும், அப்பகுதிகளில் நீர்ப்பாசன அமைப்புக்களைச் செம்மைப் படுத்தவும் ரூ. 9.50 கோடி அனுமதித்துள்ளது. அதற்கான பணிகள் கீழ்க்கண்ட மாவட்டங்களில் நடைபெற்று வருகின்றன.



**மாவட்ட ஒதுக்கீட்டின் நிதி (ரூ. இலட்சத்தில்)**

செங்கல்பட்டு 50, தென் ஆர்க்காடு 120, வட ஆர்க்காடு 190, தஞ்சாவூர் 10, திருச்சிராப்பள்ளி 40, சேலம் 80, தருமபுரி 80, மதுரை 60, இராமநாதபுரம் 195, புதுக்கோட்டை 90, திருநெல்வேலி 20, பெரியார் 10, கன்னியாகுமரி 5ம் ஆக மொத்தம் ரூ. 950 இலட்சம்

தமிழ்நாட்டிலுள்ள ஆற்று நீர் கிட்டதட்ட முழுதும் பயன்படுத்தப்பட்டுவிட்டதால் கேரள மாநிலத்தில் மேற்கு நோக்கிச் செல்லும் ஆறுகளிலிருந்து உபரி நீரை தமிழ்நாட்டிற்குத் திருப்பி தமிழ் நாட்டின் நீர்ப்பாசனத்தைப் பெருக்குவதற்கு அரசு எல்லா முயற்சிகளையும் எடுத்துவருகின்றது.

# உயர் மட்டக் குழு

அரசு அலுவலாளர்கள் ஓய்வு பெறும் போது அவர்களுக்குப் பத்தாயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்கவேண்டும் என்ற கோரிக்கை எந்த அளவுக்கு நடைமுறை சாத்தியமானது; இயலுமா என்பதை ஆராய்ந்து அரசுக்கு அறிக்கை கொடுக்க உயர்மட்டக்குழு ஒன்றைத் தமிழக அரசு நியமித்துள்ளது.

மாண்புமிகு நிதியமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் இக்குழுவின் தலைவராவார். தலைமைச் செயலாளர் திரு வே. கார்த்திகேயன், ஐ.ஏ.எஸ்., இரண்டாவது செயலர் திரு க. திரவியம், ஐ.ஏ.எஸ்., நிதித் துறைச்செயலர் திரு கே. ஜெ. எம். ஷெட்டி, ஐ.ஏ.எஸ்., ஆகியோர் இக்குழுவின் இதர உறுப்பினர்கள் ஆவார்கள்.




# பொதுப்பணித்துறை கட்டடங்கள்

அரசு மேம்பாட்டுத் திட்டங்களில் பொதுப்பணித்துறைக் கட்டடப்பிரிவின் பணி தலையாயதாகும். மாநில அரசின் நிலவளர்ச்சி உட்பட பல்வேறுதுறைகளின் தேவைகளுக்கு ஏற்ப திட்டம் தீட்டி வடிவமைத்து, கட்டடங்கள் கட்டுவதும் மற்றும் கட்டடங்களைப் பேணி வருதலும் இத்துறையின் முக்கியப் பொறுப்பாகும்.

**மருத்துவம் :**

கடந்த ஓராண்டில் மருத்துவத் துறைக்கு பல்வகை கட்டடப்பணிகளை ரூ. 4.95 கோடி மதிப்பிற்கு மேற்கொண்டு கட்டடப்பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

காஞ்சி அருகில் பேரறிஞர் அண்ணா நினைவுப் புற்றுநோய் மருத்துவ மனை (மதிப்பு ரூ. 86 இலட்சம்); சென்னை பொது மருத்துவமனையில் சிறப்பு மருத்துவப்பகுதி பல மாடிக் கட்டடம் (மதிப்பு ரூ. 56 இலட்சம்) குறிப்பிடத்தக்க பணிகளாகும்.

நடப்பு ஆண்டில் மருத்துவத் துறைக்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு அரசு ரூ. 5.88 கோடிக்கு ஒதுக்கீடு செய்துள்ளது.

**கல்வி :**

கல்வித்துறைக்கு இத்துறையினால் மேற்கொள்ளப்படும் பணிகளில் முக்கியமான பணி 10+2+3 எனப்படும் பொதுக்கல்வி முறையைத் தமிழகத்தில் அமல்படுத்த அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப்பள்ளிகளாக உயர்த்தக் கூடுதலாக ஒரு விஞ்ஞான ஆய்வுக்கூடமும், ஒரு வகுப்பறையும் கட்டுவதாகும். இப்பணிகளைப் பகுதிவாரியாகச் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் அரசு 477 பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்த ஆணை வழங்கி இதுகாறும் மூன்று கட்டங்களில் ரூ. 693.16 இலட்சம் செலவில் 403 பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அதில் சென்ற ஆண்டு மட்டும் ரூ. 94.60 இலட்சம் செலவில் 55 பள்ளிகளுக்குக் கட்டடம் கட்டித்தரப்பட்டுள்ளது. இது தவிர ரூ. 6.75 இலட்சம் மதிப்பில் திருத்தணியில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஒன்றும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

மற்றும் காவல்துறை, நீதிமன்றம், சிறைத்துறை, வருவாய்த் துறை ஆகிய துறைகளுக்குப் பல கட்டடங்கள் கட்டித்தரப்பட்டுள்ளன.

**கடல் அரிப்புத் தடுப்புப்பணிகள் :**

கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கோடு வட்டத்தில் உள்ள இணையம் மற்றும் கல்குளம் வட்டத்தில் உள்ள முத்தம் துறை ஆகிய கிராமங்கள் கடல் அரிப்பால் பாதிக்கப்பட்டது. மேற்படி கடல் அரிப்பைத் தடுக்க 1600 மீ. நீள கருங்கல் பாறையினால் வேயும் சுவர் எழுப்பும் பணி 46.40 இலட்சம் மதிப்பிலும் 650 மீ. நீளத்தில் 14.50 இலட்சம் மதிப்பிலும் முறையே இத்துறையினரால் செய்து முடிக்கப்பட்டது. இது தவிர சென்னை ராயபுரத்தில் 300 மீ. நீளத்தில் கடல் அரிப்புத் தடுப்புச் சுவர் ரூ. 7.70 இலட்சத்திற்குச் செய்து முடிக்கப்பட்டது. கன்னியாகுமரி மாவட்டத்தில் மற்றும் 17 இடங்களில் கடல் அரிப்புத் தடுப்புச் சுவர் எழுப்ப 2.23 கோடிக்கு அரசு நிதி ஒதுக்கி மேற்கண்ட பணிகள் இத்துறையினரால் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்றுவருகிறது.

**நகராட்சிப் பணிகள் :**

நகராட்சிக்கான கட்டடம் கட்டும் பணிகள், பொதுப்பணி



கடல் அரிப்பின் போது....

கள் பொதுப்பணித்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டு தற்போது பல நகராட்சியில் 157 இலட்ச ரூபாய்க்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன.

ஒழுங்குமுறைவிற்பனைக்கூடங்கள் ரூ. 32.70 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது: ஆனைமலை, புஞ்சைப் புளியப்பட்டி, கடம்பூர், ஸ்ரீவைகுண்டம் சிவகங்கை, பல்லடம், உடுமலைப் பேட்டை ஆகிய இடங்களில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

| | திட்டத்தின்பெயர் | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) | பயன்பெறும் (எக்டேரில்) | பரப்பு |
|---|---|---|---|---|
| 1. | திருச்சி மாவட்டம் உப்பாறு நீர்த் தேக்கம் | 90 | 723 | பாசன வசதியோடு கூடிய புதிய புன்செய் நிலம். |
| 2. | திருச்சி மாவட்டம் சித்தமல்லி அருகே நீர்த்தேக்கம் | 240 | 1702 | பாசன வசதியோடு கூடியபுதிய புன்செய். |
| | | | 336 | நன்செய், உறுதிப் பாசனமளித்தல் |
| 3. | கன்னியாகுமரி மாவட்டம், அனந்தனார் வாய்க்காலைப் புனரமைத்தல் | 246 | 932 | இருபோக நன்செய் (Gap) |
| | | | 1458 | இருபோக நன்செய் - பாசன உறுதியளித்தல் |
| 4. | தருமபுரி மாவட்டம் சூலகிரி சின்னாறுத் திட்டம். | 95 | 871 | பாசன வசதியோடு கூடிய இருபோக புன்செய் புதிய நிலம். |

கடல் அரிப்பைத் தடுக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர்...





# மின்துறையின் சாதனைகள்

ஏழு ஆண்டுகளாகக் கடுமை பான மின் பற்றாக்குறைக்கு இலக்காகியிருந்த தமிழ்நாடு, 1-7-77 முதல் கடுமையான மின் வெட்டிலிருந்து விடுதலை பெற்றது. இதுவரை இருந்த மின் வெட்டு நீக்கப்பட்டது.

அனல் மின் நிலையங்கள் திருப்திகரமாக இயங்காததாலும் நெய்வேலியிலிருந்து போதிய அளவுக்கு உதவி கிடைக்காததாலும் சிறிய அளவுக்கு மின் வெட்டும், கட்டுப்பாடுகளும் குறுகிய கால அளவுக்கு 1980-1981 ஆண்டுகளில் அமலாக்கப் பட்டது.

1976-77ஆம் ஆண்டில் 4,928 மில்லியன் யூனிட் அளவுக்கு உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்தின் அளவு 1979-80 ஆம் ஆண்டில் 7574 மில்லியன் யூனிட் உச்சத்திற்கு உயர்ந்தது. இதன் விளைவாக கடந்த நான்கு ஆண்டுகளின் சராசரி உற்பத்தியின் அளவு 6792 மில்லியன் யூனிட்டாக உயர்ந்தது. விலைக்கு வாங்கப்பட்ட மின் சாரத்தின் அளவையும் சேர்த்து 1976-77ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த மின்சாரத்தின் அளவு 8349 மில்லியன் யூனிட்டாக ...ந்தது, 1980-81ல் 10,908 ...ன் யூனிட் அளவுக்கு ...து. அதாவது 2559 ... ...னிட் (சற்றேறக் கு... ...தம்) அளவு மின் ... ...கியுள்ளது.

சி... ...ன்சார அள... ...உற் பத்தி... மு... இ...

* ... கொ... திட்ட...

* 110 மெகாவாட் திறன் கொண்ட குந்தா நான்காம் நிலை விரிவாக்கம்—[அக்டோபர் 1978]

* 210 மெகாவாட் திறன் கொண்ட தூத்துக்குடி அனல் மின் நிலையம்—[ஜூலை 1979].

தமிழ்நாட்டின் மொத்த நிறுவனத் திறன் கடந்த நான்கு ஆண்டுகளில் 565 மெகாவாட் (சுமார் 25 சதம் அளவுக்கு) அதிகமாகி, 2364 மெகாவாட்டிலிருந்து 2929 மெகாவாட்டுகளாக உயர்ந்துள்ளது.

கீழ்க்கண்ட புதிய திட்டங்களுக்கு அனுமதி பெறப்பட்டுள்ளது:

210 மெகாவாட் திறன் கொண்ட தூத்துக்குடி அனல் மின் திட்டத்தின் இரண்டாம் நிலை—[செப்டம்பர் 1977].

* ஒவ்வொன்றும் 210 மெகாவாட் திறன் கொண்ட நெய்வேலி அனல் மின் நிலையத்தின் இரண்டாவது திட்டத்தின் இரு பிரிவுகள்-(பிப்ரவரி 1978.]

* ஒவ்வொன்றும் 210 மெகாவாட் திறன் கொண்ட நெய்வேலி அனல் மின் நிலையத்தின் இரண்டாவது திட்டத்தின் இருபிரிவுகள் [பிப்ரவரி 1978).

* 120 மெகாவாட் திறன் கொண்ட கீழ் மேட்டூர் நீர் மின் திட்டம்—[செப்டம்பர் 1980].

* ஒவ்வொன்றும் 210 மெகாவாட் திறன் கொண்ட ...ட்டூர்அனல் மின் திட்டத்தின் பிரிவுகள்—[செப்டம்பர்

...றும் 100 மெகா... ...டைய நான்கு உற் பத்... ...திப் பிரிவுகளைக் கொண்ட ...டம்பாறை நீரேற்றுத் திட்டத்தின் பணிகளை மீண்டும் தொடர ஜனவரி 1978ல் முடிவெடுக்கப் பட்டது.

பேசின்பிரிட்ஜ் மின்நிலையத்தை 110 மெகாவாட் திறன் கொண்டதாக மாற்றி அமைப்பதற்கான திட்ட அறிக்கை, மத்திய மின்சார அதிகார மன்றத்திற்குச் செப்டம்பர் 1980-ல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொன்றும் 210 மெகாவாட் திறன் கொண்ட மூன்று பிரிவுகளை உள்ளடக்கிய சென்னை வடக்கு அனல் மின் திட்டத்திற்கான திட்ட அறிக்கையும், மத்திய மின்சார அதிகார மன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மின்துறைக்கான முதலீட்டின் அளவு, குறிப்பாக மின் உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதற்கான வகையில் கணிசமாக அதிகரித்துக் கொண்டே வந்துள்ளது.

மத்தியத்துறை திட்டங்களையும் சேர்த்து சுமார் இரண்டாயிரம் மெகாவாட் கூடுதலாகச் சக்தி பெறக்கூடிய ஆறாவது திட்டத்திற்கான முதலீட்டுச் செலவு ரூ. 1023 கோடி என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதுவரை திட்டமிடப்பட்டுள்ளதில் இதில்தான் முதலீட்டின் அளவும், மின் உற்பத்தியின் அளவும் மிக அதிகமான அளவுக்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

தனி மனிதர் மின் நுகர்வின் அளவு 146லிருந்து 182 யூனிட்டுக்கு உயர்ந்துள்ளது.

நலிவுற்ற மக்களும் மின்சாரத்தின் பயனை நுகர வேண்டும் என்ற நோக்கில் மாதம் ஒன்றுக்கு ரூ. 2.50 நிலைத்த கட்டணமாக குடிசைக்கோர் மின் விளக்கு திட்டம் அரசினரால் அறிமுகப்படுத்

தப்பட்டது. ஜூலை 1979ல் துவக்கி வைக்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் இன்றுவரை மூன்று இலட்சத்திற்கு மேற்பட்ட குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

1-12-79 முதல் அளிக்கப்பட வேண்டிய ஊதிய மாற்றம் குறித்து பல்வேறு தொழிற்சங்கங்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி, குறித்த காலத்திற்குள்ளேயே வெற்றிகரமாக முடிக்கப்பட்டது. இத்துடன் கூடவே திருத்தப்பட்ட பணி அளவு குறித்தும் ஒப்பந்தம் செய்யப்பட்டது.

வாரியத்திலுள்ள இரண்டாம் வகுப்பு அலுவலர்களைப் பொறுத்த வரை தமிழக அரசு ஊழியர்களுக்குத் திருத்தப்பட்டதுபோல், வயது முதிர்ந்து ஓய்வு பெறுவதற்கான வயது 55லிருந்து 58 ஆகத் திருத்தப்பட்டது.

விவசாயப் பயனீட்டார்களைப் பொறுத்தவரை, மீட்டர் கட்டணம் 4 ரூபாயிலிருந்து 2 ரூபாயாக 1.7.80 முதல் குறைக்கப்பட்டது.

விவசாயப் பயனீட்டாளர்களின் நீண்ட நாளைய கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் சிறு விவசாயிகளைப் பொறுத்தவரை மின் கட்டண வீதம் யூனிட் ஒன்றுக்கு 16 காசிலிருந்து 14 காசாக, ஜூலை 1977 முதல் குறைக்கப்பட்டது. சிறு விவசாயிகளைப் பொறுத்த வரை இதுவே 12 காசாகவும், மற்ற விவசாயிகளைப் பொறுத்த வரை 14 காசாகவும் ஜூன் 1978 முதல் மீண்டும் குறைக்கப்பட்டது.

ஆதி திராவிடக் குடியிருப்புகளுக்கு மின்சாரம் வழங்கும் திட்டம், மார்ச் 1979 இறுதியில் முழுமை பெற்றது. மின் இணைப்புகளுக்குத் தேவையான பொருள்களை நுகர்வோரையே வாங்கியளிக்க அனுமதிப்பது நவம்பர் 1979 முதல் செயலாக்கப்பட்டுள்ளது.

புதிய மின் இணைப்புகளுக்கு மின்சாரம் வழங்கக் கோருவது அதிகமாகியுள்ளதால், தாமதம் ஏற்பட்டு பொதுமக்களின் கண்டனத்திற்கும், புகார்களுக்கும் இடமளித்துள்ளது. எனவே, இதற்கான வழிமுறைகள் சீரமைக்கப்பட்டு எளிமையாக்கப்பட்டுள்ளன.

வருமானம் வரக்கூடியதுதானா என்பதைக் கவனித்து அனுமதி வழங்குவது கைவிடப்பட்டது.

- திட்டங்களுக்கு அனுமதி வழங்க பல நிலைகளிலும் உள்ள அலுவலர்களுக்கு அதிகப்படியான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- உயர் அழுத்தப் பயனீட்டாளர்களைப் பொறுத்தவரை காப்பு முன் வைப்புத் தொகை 3 மாதத்திலிருந்து 1½ மாதமாகக் குறைக்கப்பட்டு மாற்றியமைக்கப்பட்ட பட்டியல் தயாரிப்பு முறை செயலாக்கப்பட்டுள்ளது.
- பொதுக் கூட்டங்களுக்கு அருகிலுள்ள மின் இணைப்பிலிருந்தோ, மின்வாரிய மெயின்களிலிருந்தோ தற்காலிகமாக மின் இணைப்பு வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.
- புறநகர் இணைப்புகள், விவசாய இணைப்புகளைப் பொறுத்த வரை காலையில் உச்ச நேர மின் சுமைக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன.
- விவசாயப் பணிகளுக்கு இணைப்புக் கொடுப்பதில் அவர்களது மனு கிடைக்கப் பெறும் நாளைப் பொறுத்து முன்னுரிமை அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.
- மின் இணைப்புக் கேட்கும் குறைந்த அழுத்தத் தொழிலகங்களைப் பொறுத்தவரை, நிதி உறுதிச் சான்றிதழைக் கேட்பது தள்ளப்பட்டது.

ரூபாய் கோடிக் கணக்கில்.

| | 1976-77 | 1977-78 | 1978-79 | 1979-80 |
|---|---|---|---|---|
| 1. மின் உற்பத்தி | 44 | 56 | 70 | 80 |
| கடந்த ஆ மேல் உள்ளிக்கு சதவிகிதம் | | 127% | 125% | 114% |
| 2. மின் செலுத்துகையும் மின் வழங்குதலும் | 13 | 20 | 33 | 51 |
| கடந்த ஆண்டுக்கு மேல் உள்ள சதவிகிதம் | | 54% | 165% | 154% |
| மற்ற வகைகள் | 18 | 14 | 20 | 28 |
| மொத்தம் | 75 | | 123 | 159 |
| கடந்த ஆண்டுக்கு மேல் உள்ள சதவிகிதம் | | 120% | 137% | 129% |



# தமிழ்நாட்டில் தொழிலாளர் நலன்



தமிழ்நாட்டில் கடந்த ஓராண்டில் தொழிலாளர் நிலைமையும் தொழில் வளர்ச்சியும் மிக முன்னேற்றமடைந்துள்ளன. தொழிலாளர்களின் நலனுக்காக உள்ள சட்டங்களைச் செவ்வனே நிர்வகித்தல், அவர்களின் மேம்பாட்டுக்காகச் சட்டங்களைத் திருத்தியமைத்தல் மற்றும் தொழிலாளர்களின் ஊதியத்தை உயர்த்துதல், சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளை நிறைவேற்றுதல் போன்ற இன்ன பிற நடவடிக்கைகள் மூலமாக, நல்ல பணிகள் பல நடைபெற்றுள்ளன.

## தொழில் தகராறுகளைத் தீர்த்து வைத்தல்

11,664 நிறுவனங்களில் பணி புரியும் சுமார் 8,20,890 தொழிலாளர்களைக் கொண்ட தமிழகத்தில் கடந்த ஆண்டில் 293 வேலை நிறுத்தங்களும், கதவடைப்புகளும் மட்டுமே நடைபெற்றுள்ளன. இவ்வளவு குறைந்த அளவிலாவது வேலை நிறுத்தங்கள் நடைபெறுவதன் காரணம், இவ்வரசு தொழிலாளர்களின் வேலை நிறுத்த உரிமையை மதிக்கிறது என்பதுவே. கடந்த ஆண்டில் 1036 வழக்குகள் தொழில் நீதிமன்றங்களின் தீர்ப்புக்கு விடப்பட்டுள்ளன. கடந்த 10 ஆண்டுகளில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வழக்குகள் தொழில் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு விடப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

## மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளை திறத்தல் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் நிவாரணநிதி உதவியளித்தல்

இவ்வரசு பணியேற்கும் சமயம் மூடுதலினால் பாதிக்கப்பட்டிருந்த 11 தொழிற்சாலைகளைத் திறக்க முயற்சிகள் எடுத்து வெற்றி கண்டதன் பயனாக, சுமார் 3,366 தொழிலாளர் குடும்பங்களின் நல்வாழ்வுக்கு வகை செய்துள்ளது.

மேலும், தொழிற்சாலைகள் மூடப்பட்டதின் விளைவாகத் தொழிலாளர் அடையும் துயரைப் போக்க அரசு, கீழ்க்காணும் தொழில் நிறுவனங்களைச் சார்ந்த தொழிலாளர்களுக்கு, முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து, ஒவ்வொரு தொழிலாளருக்கும் ரூ. 200 வழங்கியுள்ளது.

1. சௌத் இந்தியா கிளாஸ் மற்றும் இனாமல் ஒர்க்ஸ் லிமிடெட், சேலம்.

2. குரோம் தோல் தொழிற்சாலை, குரோம்பேட்டை.



3. பைலட் பேனா கம்பெனி, சென்னை.

4. பாவுகார்மெண்ட், சென்னை.

5. கேஞ்சஸ் பிரிண்டிங் இங்க், சென்னை.

6. பக்கிங்ஹாம் அண்ட் கர்னாடிக் மில்ஸ், சென்னை.

இதன் மூலமாக 14,300 தொழிலாளர் பயனடைந்துள்ளனர். இவற்றில் பி.அண்ட் சி. மில்லில் பணி புரிந்த சுமார் 13,000 தொழிலாளர்களுக்கு மட்டும் ரூ. 26,00,000 (ரூபாய் இருபத்தி ஆறு லட்சம்) வழங்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து தொழிலாளர்களுக்காக இவ்வளவு அதிகமான தொகை வழங்கப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

**சட்டத்திருத்தங்கள்**

இந்த அரசு பதவியேற்றபின்னர் தொழிலாளர்கள் சட்டரீதியாகக் கீழ்க்கண்ட சலுகைகள் நுகர வழி செய்துள்ளது.





**1965 ஆம் ஆண்டு ஊதியக் கொடை வழங்கல் சட்டம்**

1965 ஆம் ஆண்டு சிறப்பூதியச் சட்டத்திலுள்ள 10-க்கு மேல் 20-க்குள்ளாக ஆட்களை வேலைக்கமர்த்தும் தொழிற்சாலைகள், கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், உணவு நிறுவனங்கள், பத்திரிகை நிறுவனங்கள் ஆகியவற்றிக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

**1948 ஆம் ஆண்டு வேலைவாய்ப்பு (நிலை ஆணைகள்) சட்டம்**

தொழில் பணி நிலையாணைச் சட்டத்தை, ஐம்பதும் அதற்கு மேற்பட்டவர்களும் வேலை செய்யும் நிறுவனங்களுக்கு அந்த நிறுவனத்தில் பணி புரிபவர்கள் பணி முறைகளை ஒழுங்குபடுத்துவதற்காக நீட்டிக்கப்பட்டுள்ளது.

**மாதிரி நிலை ஆணைகளில் ஆணை எண் 7 (2) 7 (3) ஆகியவற்றை நீக்குதல்**

எட்டு நாட்கள் தொடர்ந்து பணிக்கு வராத பணியாட்களை ஒட்டுமொத்தமாக வேலை நீக்கம் செய்வதற்குப் பதிலாக அதனை ஒழுங்கீனமாகப் பாவிக்கும் வகையில் மாதிரி நிலை ஆணை எண். 7 (2) மற்றும் 7 (3)யை நீக்கியுள்ளது.

**பீடி மற்றும் தொழிலாளர்கள் (வேலை நிலைமை) விதிகள் 1968**

தமிழ்நாடு 1968-ஆம் ஆண்டு பீடி சுருட்டுத் தொழிலாளர்களுக்குப் பணி நிலைமைகள் விதிகள் 31 (5)ன் கீழ், மேல்முறையீடு செய்பவர் என்ற முறையில், தொழிலாளரில் ஒருவர் தேவையான நகல் முத்திரைத் தாள்களுக்குக் கட்டணம் செலுத்துவதன் பேரிலேயே, மேல்முறையீடு அதிகாரியின் ஆணைகளைப் பெற இயலும். முத்திரைத் தாள்களை வழங்க வேண்டும் என்னும், நிபந்தனையிலிருந்து, தொழிலாளர்களுக்கு விதிவிலக்கு அளிப்பதன் மூலம் தொழிலாளர்களுக்கு இருந்த இந்த இடர்ப்பாட்டை அரசு அகற்றியது. இப்போதுள்ள நிலவரத்தின்படி தொழிலாளர்கள் ஆணை நகலை இலவசமாகப் பெற இயலும்.

**தொழிலாளர் தொழிற்சங்கங்களுக்கு முத்திரைக் கட்டண வில்லைகள் ஒட்டுவதிலிருந்து விதிவிலக்கு**

எல்லா தொழிலாளர் நலச் சட்டத்தின் கீழும், தொழிலாளர் துறை அலுவலர்கள், தொழில் வழக்கு மன்றங்கள் தொழில் தீர்ப்பு மன்றங்கள் மற்றும் அரசின் முன்பாகத் தொழிலாளியாலோ, அவரின் சார்பிலோ, தரப்படும் மனுக்களுக்கு முத்திரைக் கட்டண வில்லை ஒட்டுவதிலிருந்து விலக்களித்தது.

**1948 ஆம் ஆண்டு உணவகங்கள் சட்டத்தின் கீழ் மேல்முறையீட்டு அலுவலர்களுக்கு அதிகாரம் வழங்குதல்**

தொழிலாளர் நலனைக் கருத்திற்கொண்டு அரசு, உணவகங்களில் உள்ள தொழிலாளர்கள் மேல் முறையீடு செய்யும்பொழுது அத்தகைய அலுவலர்களுக்கு வழக்கில் சம்பந்தப்பட்டவர்களுக்கு (சம்மன் அழைப்பு ஆணை) அனுப்பி கட்டாயமாக வர

வழைக்கும் அதிகாரத்தை வழங்கும் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறது.

**தொழிலாளர்களுக்குப் பணிச்சீட்டு நேர அட்டை வழங்குதல்**

தொழிற்சாலைகள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் பீடி மற்றும் சுருட்டு தயாரிக்கும் நிறுவனங்கள், கடைகள் நிறுவனங்கள் முதலிய வற்றில் பணிபுரியும் தொழிலாளர்களின் இதுவரை அவர்கள் மேற்கண்ட நிறுவனங்களில் பணியாற்றிய காலம் - அல்லது பெற்ற ஊதியம் பற்றிய எந்த விதச் சான்றும் அவர்கள் கைவசம் இல்லாமலிருந்தது. அதனால், அவர்களால் சட்டப்படி பெற வேண்டிய சலுகைகளைப் பெற இயலாமல் இருந்தது. இந்த நிலைமையை மாற்றும் வகையில் இந்த அரசு அந்தத் தொழிலாளர்களுக்கு, மேற்படி நிறுவனங்கள் பணிச்சீட்டு - நேர அட்டைகள் கட்டாயமாக வழங்க வேண்டும் என்று ஆணையிட்டுள்ளது.

**தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசீய பண்டிகை விடுமுறை நாட்கள்) 1958 நீட்டித்தல்**

1948-ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் கீழ் மாநில அரசு சம்பந்தப்பட்ட அட்டவணையிலுள்ள வேலைகளுக்கும், தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசீய பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டத்தின் விதிகளை அரசு தற்போது நீட்டித்துள்ளது. இதன் பலனாக இந்த நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்களும் தேசீய பண்டிகை விடுமுறை நாட்கள் பெற உரிமை பெற்றுள்ளனர்.



**தமிழ்நாடு வாழ்க்கைப்படி வழங்குதல் சட்டம்**

நிர்வாகங்கள், விசாரணை நடைபெற்று வரும்போது தமது பணியாளர்களைத் தற்காலிகமாகப் பணியிலிருந்து நீக்கம் செய்யும் கால அளவில் அப்பணியாளர்களுக்கு வாழ்க்கைப்படி வழங்க நிர்வாகங்கள் கட்டாயம் பொறுப்பேற்க வேண்டுமென்று விதிக்கும் வகையில் தமிழ்நாடு வாழ்க்கைப்படி வழங்கல் சட்ட முன் வடிவு ஒன்று சட்டமன்றத்தில் 7-5-81 அன்று ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

**தற்காலிக காஷுவல் தொழிலாளர்களை நிரந்தரமாக்குதல்**

இந்த அரசு, 24 மாதங்களில் தொடர்ந்து 480 நாட்கள் பணியாற்றிய அனைத்துத் தொழிலாளர்களையும், அவர்கள் பணியில் நிரந்தரமாக்குவதற்கென்று ஒரு சிறப்புச் சட்டம் கொண்டு வந்தது. அச்சட்டம் சட்டமன்றத்தின் முன் 14-5-81 அன்று ஒப்புதல் வழங்கப்பட்டது. மேலவையிலும் இச் சட்டம் 15-5-81 அன்று நிறைவேறியது.

**1948-ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதிய வீதங்கள் திருத்தச் சட்ட முன் வடிவு**



1948-ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் 5 (1) பிரிவின்படி, அட்டவணையிடப்பட்ட யாதொரு தொழில் தொடர்பாகக் குறைந்த அளவு ஊதிய வீதங்களை மேற்படி சட்டத்தின் கீழ் முதன் முதலில் வரையறுப்பதற்கு அல்லது அவ்வாறு வரையறுக்கப்பட்ட குறைந்தளவு ஊதிய விகிதங்களைத் திருத்தியமைப்பது குறித்து விசாரிப்பதற்கும், அந்த குறைந்தளவு ஊதிய வீதங்களை வரையறுப்பது அல்லது திருத்தியமைப்பது தொடர்பாக அரசுக்கு ஆலோசனை நல்கவும், குழுக்களையும், துணைக் குழுக்களையும் நியமிக்க வேண்டும். சட்டத்தின் மேற்சொன்ன 5-ஆம் பிரிவின்படி நியமனம் செய்யப்பட்டகுழுக்கள் துணைக்குழுக்கள் ஆகியவற்றின் பணிகளை ஒருங்கிணைப்பதற்காகவும், குறைந்தளவு ஊதிய வீதங்களை வரையறுப்பதிலும் திருத்தியமைப்பதிலும் பொதுவாக அரசுக்கு ஆலோசனை நல்கவும், மேற்கூறித்த சட்டத்தின் 7-ஆம் பிரிவின்படி, ஆலோசனை வாரியம் ஒன்றை அரசு அமைக்க வேண்டும். ஆலோசனை வாரியம் அல்லது குழு அல்லது துணைக்குழு ஒன்றின் தலைவரை அல்லது உறுப்பினர் ஒருவரை நியமித்து மாநில அரசு பிறப்பித்த ஆணை எதுவும் ஆலோசனை வாரியம் அல்லது குழுவின் அல்லது துணைக் குழுவின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், அவ்வாரியத்தில், குழுவில் அல்லது துணைக்குழுவில் காலி இடம் இருப்பதன் காரணமாகவோ அவற்றின் அமைப்பில் குறைபாடோ முறைகேடுகளோ இருப்பதன் காரணமாகவோ செயல் திறனற்றதென நீதி மன்றம் எதிலும் எவ்வகையிலும் வழக்கும் தொடரலாகாது எனத் திட்டவட்டமான ஒரு விதித்துறையை இயற்றுவது அவசியம் எனக் கருதி இந்த அரசு கொண்டு வந்த ஒரு சட்டத் திருத்தத்தின் முன் வடிவை 13-5-1981 அன்று சட்டமன்றம் அங்கீகரித்தது. இந்தத் திருத்தம் மேலவையில் 15-5-81 அன்று நிறைவேறியது.

கைத்தறி நெசவாளர்களின் நலத்தைப் பேணவும் அவர்கள் பணிமுறைகளை ஒழுங்குப்படுத்தவும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்கள் (வேலை முறை மற்றும் இதர வகைகள்) மசோதா என்ற தனிச்சட்டம் ஒன்றினை அரசு 12-5-1981 அன்று சட்ட மன்றத்தில் நிறைவேற்றியது.

## குறைந்த அளவு ஊதியச் சட்டம்

வலுமிக்க அமைப்பிற்குட்பட்ட தொழிலாளர்களைப் போல, நலன்கள் பேணப்படாமல் விடப்பட்டிருக்கும் அமைப்பிற்கு உட்படாத ஏனைய தொழிலாளர்களுக்குச் சட்டப்படி குறைந்த பட்சக் கூலி கிடைக்கச் செய்ய அரசு குறைந்தபட்ச கூலிச் சட்டம் பொருந்தக்கூடிய அட்டவணையின் கீழ் இத்தகைய தொழிலாளர் நிறைந்த தொழில்களையும் கொண்டுவர முடிவெடுத்தது. அதன்படி அட்டவணையில் எட்டுத் தொழில்கள் சேர்க்கப்பட்டன. மருத்துவமனைகள், சிகிச்சை விடுதி முதலியவற்றில் பணியாற்றும்தொழிலாளர்கள், சோப்புத் தயாரிப்பு, தையல் தொழில் போன்றவை அவற்றில் முக்கியமானவை. டாக்சி, ஆட்டோ ரிக்ஷா தொழில்களையும் இவற்றோடு சேர்க்கும் எண்ணம் அரசின் ஆழ்ந்த பரிசீலனையில் இருக்கிறது. பல்வேறு தரப்பில் இருந்து வந்த கோரிக்கைகளின் பயனாகப் பதநீர் இறக்குதல், கதர் கிராமத்தொழில், கருங்கல் பாறைகளை உடைத்தல், சிறிய எஞ்சினியரிங் தொழில், ஆலய ஊழியம் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களையும் இதனோடு சேர்க்கும் சாத்தியக் கூறுகளைப் பற்றியும் அரசு ஆராய்ந்து வருகிறது.



அமைப்பிற்குட்படாத பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் குறைந்த பட்சக் கூலி நிர்ணயித்ததால் பயன் அடைந்திருக்கின்றனர். அவற்றில் குறிப்பிடத்தக்கவை சுமை தூக்கும் தொழில், மோட்டார் பழுது பார்க்குமிடம், அச்சகங்கள் மற்றும் கடைகள் வர்த்தக நிறுவனங்கள் ஆகியவை. அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தொழில்களுக்கும் குறைந்த கூலி தரப்படுவதைக் கண்டு அரசு கீழ்க்கண்ட தொழில்களில் குறைந்த பட்சக் கூலி அளவை மாற்றி அமைத்துள்ளது:

1. தீப்பெட்டி மற்றும் வர்ண வெடித் தயாரிப்புத் தொழில்.

2. செங்கல் ஓடு தயாரிப்பு.

3. சேமியா தயாரிப்பு.

4. உப்பளங்கள்

5. மோட்டார் போக்குவரத்துத்துறை.

6. புகையிலைத் தொழில் (பீடி தயாரித்தலில்-பீடி சுருட்டுபவர்களுக்கு மட்டும்).

7. விவசாயம் மற்றும் அதோடு தொடர்புடைய விவசாயப் பணி.

8. சலவைச் சாலைகள் மற்றும் சலவை செய்தல் (கம்பளி, பட்டு உட்பட).

9. எண்ணெய் ஆட்டும் தொழில்.

10. அரிசி ஆலை, மாவு அல்லது பருப்பு மில்.

11. கயிறு தயாரித்தல்.

12. தோல் பதனிடும் மற்றும் தோல் தயாரித்தல்.



# குடிநீர் வடிகால் வாரியம்:

# சாதனை மிக்க ஆண்டு!

மனிதனின் அடிப்படைத் தேவைகளில் மிக அத்தியாவசியமானது குடிநீர். பொதுமக்களின் அடிப்படைத் தேவையான குடிநீர் வழங்கும் திட்டங்களை விரைவுபடுத்திடும் வகையில் 1971-ல் ''தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம்'' என்ற தனி நிறுவனம் ஏற்படுத்தப்பட்டு குடிநீர்த் திட்டங்கள் விரைவுபடுத்தப்பட்டன.

ஊரகக் குடிநீர் திட்டங்களின் கீழ் கிராம மக்களுக்குப் பயன் தரும் திட்டங்கள் வாரியத்தின் சார்பில் நிறைவேற்றப்பட்டன என்றாலும், 1 கிலோ மீட்டர் தூரத்திற்குள் நீர் ஆதாரமே இல்லாத கிராமங்களுக்கும், நீர் இருந்தும் (குறிப்பாகக் கடலோரப் பகுதிகள்) பருகுவதற்கு ஏற்றதாக இல்லாத நிலைகளிலும் உள்ள கிராமங்களின் குடிநீர்ப் பிரச்சினைகள் தீர்க்கப்படாமலேயே இருந்து வந்தன. ஆனால் இந்த அரசு பதவி ஏற்றதற்குப் பிறகு மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் முதன்மையான அறிவிப்பாக ஒன்றை வெளியிட்டார்கள். அதாவது, ''நீர் எவ்வளவு தொலைவிலிருந்து கொணரப்பட்டாலும், அதற்காகச் செலவிடப்படும் தொகை எவ்வளவு இருந்தாலும், கிராம மக்கள் அனைவர்க்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டேயாக வேண்டும் என்ற உயரிய திட்டமே இவ்வரசின் மிக முக்கிய குறிக்கோளாகும்'' என்று அறிவித்தார்கள்.

ஆக, இக்குறிக்கோளின் அடிப்படையில், 1 கிலோ மீட்டர் தூரத்திற்குள் நீர் ஆதாரம் இல்லாத குடியிருப்புக்களை வகை I என்ற பிரிவின் கீழும், நீர் இருந்தும் பருகுவதற்கு ஏற்ற நிலையில் இல்லாத குடியிருப்புக்களை வகை II என்ற பிரிவின் கீழும் வகைப்படுத்தப்பட்டு உரிய ஆய்வுகளை மேற்கொண்டு குடிநீர் வழங்கிடும் இம்மாபெரும் பொறுப்பு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் 1977ல் ஒப்படைக்கப்பட்டது.

தமிழகத்தில், மேலே குறிப்பிடப்பட்ட வகை I, IIல் மொத்தம் 5474 குடியிருப்புகள் தேர்வு செய்யப்பட்டு திட்டச் செலவுகளுக்காக ரூ. 25.67 கோடியில் திட்ட மதிப்பீடுகளும் தயார் செய்யப்பட்டு பணிகள் விரைவுபடுத்தப்பட்டதன் விளைவாக, இதுகாறும் ரூ. 24.89 கோடி செலவில் 4635 குடியிருப்புக்களிலுள்ள மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு விட்டது. எஞ்சியுள்ள 839 குடியிருப்புகளுக்கும் வெகுவிரைவில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு விடும்.

இதற்கு முன்னரெல்லாம், நகரங்களுக்கும், பேரூராட்சிகளுக்கும் குடிநீர் வழங்குவதற்கு மட்டுமே 10 மைல் 20 மைல்களுக்கு மேல் தொலைவுகளிலிருந்து குடிநீர் கொணரப்பட்டு வந்த நிலையை மாற்றி; சின்னஞ்சிறிய கிராமக் குடியிருப்புகளில் உள்ள கிராம மக்களும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் பெற்றிட இந்த அரிய திட்டத்தின் வாயிலாக வகை செய்யப்பட்டுள்ளது. மட்டுமல்லாமல், நீர் ஆதாரம் இல்லாத மேற்குறிப்பிட்ட 5474 குடியிருப்புகளிலும் உள்ள பெண்டிர்கள், குடிநீருக்காக நெடுந்தொலைவு அலைந்து வந்த அவல நிலைக்கு முற்றுப்புள்ளி இடப்பட்டு விட்டது என்பதை யாவரும் ஒப்புக் கொள்வர்.

## தன்னிறைவுத் திட்டம்

''தீட்டப்படுகின்ற திட்டங்களனைத்தும் குக்கிராமங்களில் வாழ்கின்ற அடித்தளத்து மக்களின் நலனைத் தொடுகின்ற வகையில் தீட்டப்பட்டாக வேண்டும்'' என்ற பேரறிஞர் அண்ணா அவர்கள் கண்ட கனவினை, நனவாக்கிடும் வகையில் 1980 ஆகஸ்டு திங்களில் ''தன்னிறைவுத் திட்டம்'' என்ற உயரிய திட்டத்தினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். கிராமப்புற மக்களுக்குக் குடிநீர் வசதி, போக்குவரத்து வசதி, மருத்துவ வசதி, குடிசைகளில் வாழ்வோர்க்

கும் குறைந்த கட்டணத்தில் மின்வசதி, ஆதி-திராவிடர் குடியிருப்புகளிலிருந்து மயானத்திற்குச் செல்லச் சாலைவசதிகள் சிறு பாலங்கள் அமைத்தல், கல்விக்கூடங்களுக்குப் புதியகட்டடங்கள் போன்றவைகள் நிறைவேற்றிட போர்க்காலத் தீவிரத்தோடு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

'தன்னிறைவு நிறைவு பெறக் குடிநீருக்கே முதலிடம்' என்ற வகையில், தன்னிறைவுத் திட்டத்தில் குடிநீருக்கே முன்னுரிமை வழங்கப்பட்டு, இம்மாபெரும் பொறுப்பும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

1980-81ஆம் நிதியாண்டில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட 69 ஊராட்சி ஒன்றியங்களில் அடங்கியுள்ள 2208 குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிட ரூ. 16.88 கோடி செலவில் திட்டமிடப்பட்டது. 1981-82 ஆம் ஆண்டு (நடப்பு நிதிஆண்டில்) இத்திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ள 150 ஊராட்சி ஒன்றியங்களில் அடங்கியுள்ள 4047 குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் முழுமையாக வழங்கிட ரூ. 47 கோடி செலவில் திட்டங்கள் நிறைவேற்றப்படவுள்ளன.

இவைதவிர, நகர்ப்புற மக்களின் நலன்களையும் கருத்தில் கொண்டு 1-7-77 முதல் இதுவரையில் அரசு 52.44 கோடி ரூபாய் செலவில் 84 திட்டங்களுக்கு அனுமதியளித்தது. இதில் இதுகாறும் ரூ. 10.20 கோடி செலவில் 15,86,268 மக்கள் பயனடையும் வகையில் 55 திட்டங்கள் செயலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. மீதியுள்ள 25 இடங்களிலும் திட்டப்பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன.

கோவை நகருக்கும் அதன் சுற்றுப்பகுதிகளுக்கும் சிறுவாணி வளர்ச்சித் திட்டத்தின் மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிடும் திட்டத்தின் கீழ் 1980-81ல் ரூ. 164.60 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது.

கோவை நகரின் புற நகர்ப் பகுதிகள் மற்றும் வழியோரக் கிராமங்களுக்குச் சிறுவாணி திட்டத்தின் கீழ் குடிநீர் வழங்கிட சென்ற ஆண்டு மட்டும் ரூ. 84.5 இலட்சம் செலவிடப்பட்டு பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

பருவ மழை தவறியதன் காரணமாக இவ்வாண்டு ஏற்பட்டுள்ள கடும் வறட்சியால் தோன்றியுள்ள குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்கிடும் வகையில், திருச்சி, தஞ்சாவூர், தென்னார்க்காடு, வடார்க்காடு, தருமபுரி, சேலம், பெரியார், செங்கல்பட்டு, மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் ஆழ்துளைக் கிணறுகள் அமைப்பதற்காக வாரியத்திற்கு மட்டும் அரசு, ரூபாய் 652.052 இலட்சம் வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டத்தின் அடிப்படையில், மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் பாதிக்கப்பட்டுள்ள இடங்களில் 3485 ஆழ்துளைக் கிணறுகள் அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டு 2.5.81 வரையில் 1857 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 1628 இடங்களிலும் வெகு விரைவில் ஆழ்துளைக்கிணறுகள் அமைத்திடப் பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன. இவை தவிர, மேலும் 9,000 இடங்களில் ஆழ் துளைக்கிணறுகள் அமைத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அமைக்கப்பட்டு பத்தாண்டுகளைத் தாண்டும் இத்தருணத்தில், குறிப்பாக 1980-81 ஆம் நிதியாண்டில், மேற்காணும் சாதனைகளை ஆற்றியதன் மூலம் கடந்த ஆண்டை, ''ஒரு சாதனை மிக்க ஆண்டாகப்'' பிரகடனப் படுத்திக் கொள்வதில் வாரியம் பெருமை கொள்கிறது.






# வேளாண்மையில் ஓராண்டுச் சாதனைகள்

**1976-77** ஆம் ஆண்டு 53 இலட்சம் டன்களாக இருந்த அரிசி உற்பத்தி 1979-80ல் 62.29 இலட்சம் டன்களாக உயர்ந்துள்ளது.

இதர பயிர்களின் உற்பத்தியும் 1976-77ல் இருந்ததைவிட கணிசமான அளவு உயர்ந்துள்ளது.

அரசின் அரிய முயற்சியினால் முதன் முறையாக கடந்த ஆண்டு 66,000 பேல்கள்' எம்.சி.யூ. 5' மற்றும் 'வரலட்சுமி' பருத்தி இரகங்களை சோவியத் யூனியன் பிலிப்பைன்ஸ் மற்றும் இதர ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்திட வழிவகை செய்யப்பட்டது.

| | | 1976—77 உற்பத்தி | 1979—80 உற்பத்தி |
|---|---|---|---|
| | | (இலட்சம் டன்களில்) | |
| அ. | சிறு தானியங்கள் | 18.00 | 19.03 |
| ஆ | எண்ணெய் வித்துக்கள் | 13.43 | 14.03 |
| இ. | கரும்பு (வெல்லமாக) | 13.50 | 20.16 |
| ஈ. | பருத்தி (இலட்சம் பேல்கள்) | 3.50 | 4.69 |

**உபரி உற்பத்தி**

1979-80ஆம் ஆண்டில் 50,000 டன்கள் அரிசியை கியூபா மற்றும் ஆப்பிரிக்க நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அரிசி உற்பத்தியில் புதிய சாதனை ஏற்படுத்தப்பட்டுள்ளது

**பயறு உற்பத்தியிணை அதிகரிக்க ஆறு ஆண்டுத் திட்டம்:—**

தமிழகத்தில் மொத்த பயறு வகைகள் உற்பத்தி நமது தேவைகுப் போதுமர்னதாக இல்லை. நமது தேவையின் பெரும் பகுதியினை வெளி மாநிலங்களிலிருந்து தருவித்துக் கொண்டு இருக்கிறோம். எனவே, தற்போதைய சாகுபடி பரப்பான 11.60 இலட்சம் எக்டேரில் இருந்து 1985-86ஆம் ஆண்டின் இறுதியில் 16.36 இலட்சம் எக்டேர்களாக அதிகரிக்கவும் , தற்போதைய உற்பத்தியின் குறியீடான 258 இலட்சம் டன்னிலிருந்து 1985-86ஆம் ஆண்டின் இறுதியில் 6.40 இலட்சம் டன் உற்பத்தி செய்யவும் ஆறு ஆண்டுத் திட்டம் தீட்டப்பட்டு அதற்கான முயற்சிகள் கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்டது.

**இரசாயன உர விநியோகம்:—**

கடந்த 1980-81ம் ஆண்டு 2.86 இலட்சம் டன்கள் தழைச்சத்தும், 0.85 இலட்சம் டன்கள் மணிச்சத்தும், 1.09 இலட்சம் டன்கள் சாம்பல் சத்தும் தரவல்ல இரசாயன் உரங்கள் உழவர் தேவைக்கு வழங்கப்பட்டது.

**நீல, பச்சைப் பாசி விநியோகம்:—**

காற்றிலுள்ள தழைச்சத்தை கிரகித்து ஒரு எக்டேருக்கு 20 முதல் 25 கிலோ வரை தழைச்சத்து சேகரிக்கக் கூடிய நீல பச்சைப் பாசி 1980-81-ம் ஆண்டு உற்பத்தி செய்யப்பட்டு, 0.95 இலட்சம் எக்டேர் பரப்பு நெற்



பயிருக்கு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

**பயிர்ப் பாதுகாப்பு**

உழவர் பெருமக்களுக்குத் தரமான பூச்சி, பூஞ்சான் கொல்லி மருந்துகள் கட்டுப்பாட்டு விலையில் கடந்த ஆண்டில் 298 இலட்சம் ரூபாய்க்கு வழங்கப்பட்டுள்ளது.

நெற்பயிரைத் தாக்குகின்ற புகையான், தண்டு துளைப்பான் மற்றும் நிலக்கடலையில் தோன்றும் சிகப்பு கம்பளிப் பூச்சி ஆகியவற்றை ஒழிக்க, ஒட்டு மொத்த மருந்து தெளிக்கும் பணிகள் மேற்கொள்ளப் பட்டது. மருந்து தெளிக்கும் செலவில் ஒரு எக்டேருக்கு ரூ. 7.50 மானியம் அளிக்கப்பட்டது. புகையான் தடுப்புத் திட்டத்தின் கீழ் பூச்சி மருந்துகள் 50 சதவீதம் விலையில் வழங்கப்பட்டன. 1980-81ம் ஆண்டில் 3,380 எக்டேரில் பூச்சி மருந்து தெளிக்கப்பட்டது.

**புது விதை வகைகள் :—**

தமிழ்நாடு வேளாண்மைத் துறை 1981ம் ஆண்டில் கீழ்க்கண்ட புதிய நான்கு விதை வகைகளை வெளியிட்டுள்ளது.

**கோவில்பட்டி 2 பனி வரகு,**
**ஆடுதுறை 3 உளுந்து,**
**திண்டிவனம் 4 ஆமணக்கு,**
**கோ.க. 8001 கரும்பு.**

**கரும்பின் கொள்விலை அதிகரிப்பு:—**

மத்திய அரசு கரும்புக்கு 1980 81ஆம் ஆண்டு டன் ஒன்றுக்கு 130 நிர்ணயம் செய்துள்ளது.

இந்த விலை உற்பத்தியாளருக்குத் திருப்தி அளிக்காத காரணத்தால் ,தமிழக அரசு கரும்பு உற்பத்தியாளர்களின் பிரதி நிதிகளுடன் கலந்தாலோசித்து கூட்டுறவு ஆலைகள் மூலம் டன்னுக்கு ரூ. 175; உற்பத்தியாளருக்கு கிடைக்க ஏற்பாடு செய்துள்ளது.

**தென்னை அபிவிருத்தித் திட்டம்:-**

தமிழகத்தில் தென்னை உற்பத்தி தேவையைவிட குறைவாக உள்ளது. எனவே ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பெறும் 12 இலட்சம் தென்னங்கன்றுகளை விட கூடுதலாக 15 இலட்சம் நெட்டைக் கன்றுகளும் 3 இலட்சம் நெட்டை-குட்டை வகைகளும் 4 இலட்சம் குட்டை நெட்டை வீரிய கன்றுகளும் வழங்க ஒவ்வொன்றும் முப்பது எக்டேர் பரப்பு கொண்ட புதிய நாற்றங்கால்கள் துவங்க தீவிர திட்டம் செயல்படுத்தப் பட்டது.

**நிலக்கடலை உற்பத்தியைப் பெருக்க:—**

தரமான விதைகளை உழவர்களுக்கு வழங்க தென்னார்க்காடு வடார்க்காடு ,தஞ்சாவூர் மற்றும் மதுரை மாவட்டங்களில் உற்பபத்தி மையங்கள் ஏற்படுத்தி 4,000 எக்டேர் பரப்பில் விதைப் பண்ணைகள் அமைத்து 4,000 டன் சான்றிதழ் பெற்ற நிலக்கடலை விதைகள் உற்பத்திசெய்யத் திட்டமிடப்பட்டுச் செயல்படுத்தப்படுகிறது. எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியினை அதிகரித்திட எண்ணெய் வித்துக்கள் இயக்ககம் தனித்துறையாக இயங்க, அனுமதிக்கப்பட்டது.

**புதிய உழவர் பயிற்சி நிலையம்:—**

புதிதாக அமைக்கப்பட்ட பெரியார் மாவட்டத்தில் உழவர்களுக்கும் விரிவாக்கப் பணியாளர்களுக்கும் பயிற்சி அளிக்க பெரியார் மாவட்டத்தில் ஒரு உழவர் பயிற்சி நிலையம் அமைக்கப் பட்டது.

**புதுக்கோட்டை மாவட்டத்தில் மண் ஆய்வுக் கூடம்:—**

புதுக்கோட்டை மாவட்டத்தில் மண் ஆய்வுக் கூடம் இல்லாத காரணத்தால், மண் பரிசோதனை தாமதப்படுவதால், உழவர்களுக்கு உதவும் வகையில் குடுமியான் மலையில் ஒரு மண் பரிசோதனை ஆய்வுக் கூடம் அமைக்கப்பட்டது.

**பயிற்சி பெற்று பார்வையிடும் முறை:—**

அனைத்துநாட்டு நிறுவன உதவியுடன் பயிற்சி பூண்டு பார்வையிடும் முறையை தமிழ் நாட்டில் அமல்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த முறை செயலாக்கத்தால் உழவர் பெருமக்களுக்கு அவ்வப்பொழுது

புதிய செய்நேர்த்தி நுட்பங்களை கையாண்டு பயிரிடும் முறைகளைப்பற்றி அறிவுரைகள் வழங்கும் வகையில் விரிவாக்கப்பணி திருத்தியமைக்கப்படும்.

இத்திட்டத்தை நிறைவேற்ற அனைத்துநாட்டு வளர்ச்சி நிறுவனம் உதவி அளிக்கும். இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ. 36.48 கோடியாகும். இதில் 70 விழுக்காடு மேற்படி நிறுவனம் நீண்டகாலக் கடனாக அளிக்கிறது.

**இயங்கும் மண் ஆய்வுக்கூடங்கள்:-**

இதுகாறும் 3 இயங்கும் மண் ஆய்வுக் கூடங்கள் ஆடுதுறை, கோவில்பட்டி, தர்மபுரி ஆகிய நகர்களிலிருந்து அம்மாவட்டங்களுக்குப் பணி புரிந்து வந்தன. வறட்சிக்கு இலக்காகும் பகுதிக்கான திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழும் காஞ்சீபுரம், மேலாலத்தூர், கடலூர், குடுமியான்மலை, திருச்சி, மதுரை, பரமக்குடி, அருப்புக்கோட்டை, நாகர்கோயில், கோயமுத்தூர், உதகமண்டலம், சேலம், தர்மபுரி ஆகிய இடங்களில் இருந்து அந்தந்த மாவட்டங்களிலுள்ள உழவர்களுக்கு உதவும் வகையில் பதின்மூன்று இயங்கும் மண் ஆய்வுக் கூடங்கள் செயல் படுத்தப் பட்டுள்ளன.

**வேளாண்மை பொறியியல் துறை:-**

வேளாண் பொறியியல் பணியினை மேலும் சிறந்த முறையில் செயல் படுத்தும் வகையில் வேளாண் பொறியியல் துறை தனித்துறையாக ஆரம்பிக்கப் பட்டு 1.2.81 முதல் செயல்பட்டு வருகிறது.

**வேளாண்மை ஆலோசனைக் குழு:-**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்டு வேளாண்மை, வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள் கால்நடையாகக் கொண்ட தொழில்கள் கால்நடை வளர்ச்சி மற்றும் கடன் வசதி ஆகியவற்றில் உள்ள பிரச்சினைகளை ஆராய்ந்து இவை தொடர்பாக பரிந்துரைகள் வழங்க வேளாண்மை ஆலோசனைக் குழு அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**உழவர் நலக்குழு:-**

தமிழக வேளாண் மக்களின் நலனுக்கு உகந்த திட்டங்கள் தீட்டவும், வேளாண்மைப் பொருட்களுக்கு உற்பத்தி செலவினை ஒட்டிய விலையை நிர்ணயம் செய்யவும் ''உழவர் நலக் குழு'' மாநில அளவில் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தலைமையில் அமைக்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்ட ஆட்சியாளர் தலைமையில் இது போன்ற குழுக்கள் அமைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.





# ஓராண்டுக் கால நீலப் புரட்சி

மீனவப் பெருமக்கள் தங்கள் மீனை விற்பனைக்குக் கொண்டு செல்லவும் தங்கள் தேவைகளைப் பெற்று வரவும் பெருஞ்சாலைகளுடன் குப்பங்களை இணைக்கும் இணைப்புச் சாலைகள் அமைக்க 1979-80ல் ரூ.20இலட்சமும் 1980-81ல் ரூ. 30 இலட்சமும் 1981-82ல் ரூ. 30 இலட்சமும் ஒதுக்கப்பட்டு இதுவரை 7 கடலோரக் கிராமங்களில் 84.7 கிலோ மீட்டர் நீளத்திற்கு 37 இணைப்புச் சாலைகள் அமைக்கும்பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மேலும் 67.3 கிலோ மீட்டர் நீளமுள்ள 42 இணைப்புச் சாலைகள் அமைப்பது அரசின் பரிசீலனையில் உள்ளது.

மீனவ சமுதாயத்தைச்சேர்ந்த இளைஞர்களுக்கு நவீன மீன்பிடி பயிற்சிக்குக் கடந்த 20 ஆண்டுகளாக இருந்துவந்த உபகாரச் சம்பளம் ரூ. 50ஐ அரசு ரூ. 75 ஆக 1980ல் உயர்த்தியது. 1977 ஆண்டுவரை கடலில் மீன்பிடிக்கச் செல்லும்போது எதிர்பாராமல் மீனவர் யாரேனும் இறந்தால் அவர்கள் குடும்பத்துக்கு நிவாரணமாக ரூ.1000 ரூபாய்(ஆயிரம் மட்டுமே) கொடுக்கப்பட்டு வந்ததைத் தமிழக அரசு அக்குடும்பத்தினரின் கண்ணீரைத் துடைத்து மறுவாழ்வு பெற ரூ. 5000ஆக உயர்த்தியதுமன்றி, மேலும் அக்குடும்பத்தில் தொழில் வாய்ப்புப் பெற மேற்கல்வி பெறத் தகுதியான குழந்தைகளின் படிப்புக்கும் விதவைகளின் மறு வாழ்வுக்கும் மேலும் ரூ. 5000 இலவசமாக வழங்கிவருகிறது. கடலோரப் பகுதிகளில் குடியிருக்கப் பாதுகாப்பான வீடின்றித் தவிக்கும் ஏழை மீனவ மக்களுக்கு முழுவதும் இலவசமாகவே வீடுகட்டித் தரும் பணியில் தமிழக அரசு மீன்துறையும் தமிழ்நாடு ஆதி திராவிட வளர்ச்சிக் கழகமும் இணைந்து செயல்படுகிறது. இத் திட்டத்தின்படி 1977க்குப் பிறகு 6240 வீடுகள் கட்டிக் கொடுக்க ஆண்டொன்றுக்கு ரூ. 100 இலட்சம் வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இதுவரை 1721 வீடுகள் கட்டி முடிக்கப் பட்டுள்ளதுடன் 4519 வீடுகள் பல்வேறு நிலையில் கட்டப்பட்டு வருகின்றன. இவ் வீடு ஒவ்வொன்றும் சுமார் ரூ. 6000 மதிப்புள்ளதாகும்.

இரவில் திசையறியாது தவிக்கும் மீன்பிடி படகுகள் பத்திரமாகக் கரைசேர வழிகாட்டி விளக்குகள் அமைக்கும் பணி சீரிய முறையிலே துவங்கப்பெற்று ஏற்கெனவே 10 இடங்களில் இவை முடியும் நிலையில்-மேலும் கீழ்க்கண்ட 10 இடங்களில் ஒவ்வொன்றும் ரூ. 25,000 செலவில் நிறுவவும் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. 1. வீரபாண்டிப்பட்டினம் 2. நீரோடித் துறை 3. தூத்தூர் 4. இணையம் 5. மல்லிப்பட்டினம் 6. சோடியக்கரை 7. செந்தரையல் 8.எரிப்புரக்கரை 9. வானமாதேவி 10 கரையூர்.

கடலரிப்பினால் மிகுந்த அவதியுற்ற குமரி மாவட்ட மீனவர்களின் துயர் துடைக்கத் தடுப்புச் சுவர் கட்ட நிதியளிக்கப்பட்டு கட்டுமானப்பகுதி நடந்து வருகிறது.

மீன்பிடிக் படகுகள் பத்திரப்மாக கரைசேரவும் பாதுகாப்பாக வைக்கப்படவும் பிடிபட்ட மீன்கள் விரைவாக எடுத்துச் செல்லப்படவும் மத்திய அரசு மானியத்துடன் பல இடங்களில் தங்கு துறைகளும் சிறிய மற்றும் பெரிய மீன்பிடித் துறைமுகங்களும் கட்டிக் கொடுப்பது என்ற தமிழக அரசின் திட்டப்படி இதுவரை கடலூர், நாகை மண்டபம், இராமேஸ்வரம், தூத்துக்குடி போன்ற இடங்கள் தவிர சென்னையில் ரூ. 10 கோடிக்கும் அதிகமான செலவில் சுமார் 500 விசைப் படகுகளும், ஐம்பது ஆழ்கடல் மீன்பிடி டிராலர்கள் தங்கும் வகையில் பல்வேறு உள்வசதிகள் கொண்ட ஒரு நவீன மீன்பிடித் துறைமுகம் இவை தவிர கோடியக்கரை, மல்லிப்பட்டினம் இவ்விரு இடங்களின் ரூ. 25 இலட்சம் செலவில் தங்கு துறைகள் கட்டும் பணியும் ரூ. 5.97 இலட்சம் செலவில் தண்ணீர், மின்சாரம்,சாலை மற்றும் பதனிடும் வசதிகளும் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு அதற்கான வேலைகள் தீவிரமாக்கப்பட்டு கோடியக்கரையில் முடியும் தருவாயிலும் ரூ.10.60 இலட்சம் செலவில் மல்லிப்பட்டினத்தில் கட்டிமுடிக்கப்பட்ட இறங்குதுறை 20.12.80 அன்று முதல் இயங்கி வருகிறது.

இவை தவிர குமரி மாவட்டத்தில் சின்னமுட்டத்தில் ஒருபெரிய மீன்பிடித்துறைமுகம் ரூ. 306 இலட்சத்துக்குத்திட்டம் தயாரிக்கப்பட்டு பூர்வாங்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு மத்திய அரசின் பார்வையில் இருந்து வருகிறது. அதே போல் தஞ்சை மாவட்டம் பழையாறிலும், முகவை மாவட்டம் வாலிநோக்கத்திலும் சிறிய அளவு தங்குதுறைகள் முறையே 112.3 இலட்சம், 100 இலட்சம் செலவில் அமைக்கவிருப்பதுடன் இவ்விரு இடங்களிலும் சாலை, பாலம் அமைத்தல் முதலிய உள் வசதிகளுக்காக ரூ. 58.3 இலட்சம் செலவில் ஒப்பளிப்பு அரசிடம் பெற்று பணி துரிதமாக நடைபெற்று வருகிறது.

1974ல் ரூ. 760 இலட்சம் மதிப்புள்ள 2582 டன் இரால் மட்டுமே ஏற்றுமதி செய்யப்பட்டு வந்த நிலை மாறி 1979-80ல் சுமார் 29.83 கோடி மதிப்புள்ள 8294 டன்கள் இரால் மற்றும் கடற்பொருட்கள் தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டு பெரும் அளவில் அந்நியச் செலாவணியை ஈட்டித் தந்துள்ளன. இரால் ஏற்றுமதியின் முக்யத்துவத்தை உணர்ந்து ஏற்கெனவே உள்ள மூன்று இரால் மாதிரிப் பண்ணைகள் தவிர 1978ல் மரக்காணத்தில் ஒன்றும் செங்கை மாவட்டத்தில் பழவேற்காட்டில் 5.75 எக்டேர் உவர் நீர்ப்பரப்பிலும் இரால் வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டது. இவை தவிர தமிழக அரசின் தனிச் சிறப்புக் கொள்கையாக மாநிலத்தில் உள்ள உவர் நீர் நிலைகளை யெல்லாம் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன்னுரிமையுடன் வழங்கப் படவேண்டுமென்ற ஆணையின் அடிப்படையில் முதல் கட்டமாகத் தஞ்சை மாவட்டம் அதிராம்பட்டினத்தின் 10 எக்டேர் உவர் நீர்ப்பரப்பில் ஒரு கூட்டுறவு இரால் பண்ணை அமைக்க அரசு மானியமாக ரூ. 4.10 இலட்சம் தந்து உதவியுள்ளது.

தமிழ் நாட்டின் தனிப்பெரும் பழந்தொழிலான சங்கு குளித்தல் என்ற அபாயகரமான நீர் மூழ்குதலில் ஈடுபட்டுள்ள சங்கு குளியாள்கட்கு 1977 வரை கொடுக்கப்பட்டு வந்த சங்கின் விலை ரூ. 2.60 (சங்கு ஒன்றுக்கு) எனத் தமிழக அரசு உயர்த்தியதுடன் அவ்வாறு சங்குகளைஒப்படைத்த சங்கு குளியாட்களுக்கு முதன் முறையாக போனஸ் வழங்கவும் ஆணையிட்டுள்ளது. இது தவிர கடலில் மூழ்குவோருக்கு முகமூடி அணிந்து கொள்ளவும் நீச்சல் காதுறை அணியவும் ஒருலட்சத்து நாற்பதாயிரம் ரூபாய் செலவினம் வழங்கப் பட்டுள்ளது. இதன் பயனாக 1980-81ல் மட்டும் முழு அளவு சங்குகள் நெல்லை மாவட்டத்தில் 5, 66, 086, முகவை மாவட்டத்தில் 1.12,741 கிடைக்கப் பெற்று தனியார்களுக்கு ரூ.3,15,958.24 பெறுமான 1,29,200 சங்குகளும் மேற்கு வங்கக் கைத்தொழில் நிறுவனங்களுக்கு ரூ. 56,500.00 பெறுமான19,05,983 சங்குகளும் விற்கப்பட்டன: மேலும்15.7.80 அன்று அதிராமப்பட்டினத்தில் முதல் முறையாக 'பட்டி' வகையைச் சேர்ந்த ஒரு வலம்புரிச் சங்கும் 11,12,80ல் தூத்துக்குடி அருகே 'ஜாதி' வகையைச் சேர்ந்த ஒரு வலம்புரிச்சங்கும் பிடிபட்டுள்ளன. இவை மிகுந்த சிறப்பும் அதிகமான விலைமதிப்பும் உள்ளவையாகும். 1980-81ல் துறையின் பனிக்கட்டி நிலையங்களிலிருந்து 2723 டன்கள் பனிக்கட்டி உற்பத்தியும் 49,055 டன் மீன்கள் குளிர்பதன வசதியும் வழங்கப்பட்டு மொத்தத்தில் ரூ. 3,99,279.30 ஈட்டப்பட்டது.

உள்நாட்டு மீன் உற்பத்தியை அதிகரிக்க அரசு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்ததன் பயனாக 1979-80ல் உற்பத்தி 1,60,000 டன்னாகவும் 1980-81ல் 1,65,000 டன்னாகவும் (உத்தேச மதிப்பீடு) உயர்ந்துள்ளது.

மீன் குஞ்சு உற்பத்தியைப் பெருக்க ரூ. 10. 65 இலட்சம் செலவில் தருமபுரி மாவட்டத்திலுள்ள கிருட்டிணகிரியிலும்





ரூ.3,45,500 செலவில் நெல்லை மாவட்டத்திலுமுள்ள மணிமுத்தாறிலும் ரூ. 11,175 இலட்சம் செலவில் சேலம் மாவட்டத்திலுள்ள மேட்டூரிலும் மீன்குஞ்சுப் பண்ணைகள் அமைக்க 1980-81ல் அரசு அனுமதி வழங்கி, பணிகள் தொடரப்பட்டன. இது



தவிர உள்நாட்டு மீன்வளர்ப்பு முறையை நவீனமாக்கி உற்பத்தியைப் பெருக்கி சிறு விவசாயிகள் பயனடையும் வகையில் ஏற்கெனவே துவங்கப்பட்ட தஞ்சை தவிர 1978ல் தருமபுரி மதுரை மற்றும் திருச்சி மாவட்டங்களிலும் 1980-81ல் செங்கை தென்னார்க்காடு திருநெல்வேலி மாவட்டத்தில் மற்றும் கீழத்தஞ்சை ஆகியவற்றில் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் நிறுவி, தரமான மீன் குஞ்சுகள், தூண்டுதல் இன வளர்ச்சி முறையில் உற்பத்தி செய்தல் குளங்களைச் சீரமைத்தல், பராமரித்தல், நவீன முறை கூட்டட வளர்ப்பு ஆகியவை மூலம் 1 எக்டேர் 1500 கிலோ வரை மீன் உற்பத்தி செய்யலாம் என நிரூபித்து தற்பொழுது இந்தத் திட்டம் பலராலும் வரவேற்கப்படுகிறது. ஏறத்தாழ 160 எக்டேர் நிலப் பரப்பில் இத்தகைய மீன்வளர்ப்பு முறையின் மூலம் உள்நாட்டு மீன் உற்பத்தி குறிப்பிடத்தக்க அளவு அதிகரிக்கும் என்பதுடன் சுய வேலை வாய்ப்புத் திட்டம் தன்னிறைவு அடைதல் சாத்தியமாகும்.

சமுதாயத்தில் பலவீனப் பிரிவினராக உள்ள மீனவர்களுக்காக அரசு செய்துள்ள பல்வேறு சேவைப் பணிகள் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 1980-81ல் இதுவரை கண்டறியாத வகையில் ரூ. 73 இலட்சத்துக்குத் ; தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் ஆதரவில் நிதி உதவி அளித்துள்ளது. செங்கை மாவட்டத்தில் எண்ணூர் ஆற்றின் அக்கரையிலுள்ள அவதியுறும் மீனவருக்கு 'ஹிட்கா' நிறுவன நிதி உதவியுடன் ரூ. 5 இலட்சத்துக்குக் கட்டுமர வகைகள் வாங்க உதவியுள்ளது.

தஞ்சை, நெல்லை என்று மாண்புமிகு முதல்வர் அவர்களால் அன்புடன் பெயரிடப்பட்ட இருமெக்சிகன் டிராலர்களும் (ஆழ்கடல் மீன்பிடிக்கப்பல்) இவ்விரு ஆண்டுகளில் தங்கள் சீரிய பணியைத் தொடர்ந்து கீழ்க் கண்ட அளவில் மீன் இரால் பிடித்து அரசுக்கு வருவாய் ஈட்டியுள்ளன.

1979-80ல் மீன்கள் 84.680 (டன்கள்) மதிப்பு 31,45 இலட்சம் 1980-81ல் 1000.596(டன்கள்) மதிப்பு 33.43 இலட்சம். இது தவிர மண்டபத்திலுள்ள (இந்தியத் துணைக் கண்டத்திலேயே பெரிதென மதிக்கப்படும்) மீன் தூள் அளவை நிலையம்.

1979-80ல் 1029.5 டன்கள்
1980-81ல் 454.8 டன்க்ள்
மீன்தூள் உற்பத்தி செய்துள்ளது.

சுருங்கக் கூறின் ''நீலப் புரட்சியிலே'' தமிழகம் தலையாய நிலை வகிக்கிறது என்பதில் ஐயமில்லை.



# சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் கழிவுநீரகற்று வாரியப்பணிகள்

சென்னைப் பெருநகரில் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று அமைப்புகளின் திட்டமிட்ட முன்னேற்றத்திற்காகவும்அதனை இயக்கிப் பராமரிப்பதற்காகவுமான ஒரு சட்டப்பூர்வமான அமைப்பாக 'சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் கழிவு நீரகற்று வாரியம்' 1978ல் செயல்படத் தொடங்கியது. தற்சமயம் இவ்வாரியத்தின் பணிகள் சென்னை நகரின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நடை பெற்று வருகின்றன.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் கழிவு நீரகற்று வாரியம் சென்னை நகரில் தற்பொழுதுள்ள குடிநீர் வழங்கல், கழிவு நீரகற்று அமைப்புகளை இயக்கிப் பராமரிக்கும் பொறுப்பேற்றுள்ளது. அத்துடன் இவ்வமைப்புகளின் மேம்பாட்டிற்கான பல திட்டங்களையும் மாநில திட்டப் பணிகளின் கீழ் செயல்படுத்தி வருகிறது. தற்பொழுதுள்ள முறைகளை மேம்பாடடையச் செய்வதுடன், நகரில் குடிநீர் வழங்குதல், கழிவுநீர் அகற்றுதல் இல்லாத பகுதிகளுக்கு அவைகளை விரிவுபடுத்துவதற்கான திட்டங்களையும் திட்டும் பொறுப்பு இவ்வாரியத்தைச் சார்ந்ததாகும்.

இத்திட்டங்களை இரு முக்கியப் பிரிவுகளாகப் பிரிக்கலாம்:

அ. மாநில அரசு நிதியுடன் செயல்படுத்தும் திட்டங்கள்.

ஆ. உலக வங்கி நிதி உதவியுடன் செயல் படுத்தும் திட்டங்கள்.

இவை தவிர, பொதுக் கடன் மூலம் கிடைக்கும் இவ்வாரியத்தின் சொந்த நிதியுடனும் பல திட்டங்களை இவ்வாரியம் செயல் படுத்த முனைந்துள்ளது.

கடந்த 1980-81ஆம் ஆண்டில் இவ்வாரியம் ''மாநில திட்டப்பணிகள்'' மற்றும் அதன் சொந்த நிதியுடன் செயல்படுத்திய திட்டங்களின் செலவினத் தொகை ரூ.621.71 இலட்சங்களாகும்.

1981-83 நடப்பு ஆண்டில் இவ்வாரியம் இத்திட்டங்களுக்காக ''மாநில திட்டப்பணிகளின் கீழ் ரூ. 1088.84 இலட்சங்களும், வாரியத்தின் சொந்த நிதியின் கீழ் ரூ. 110.00 இலட்சங்களும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

கடந்த ஓராண்டில் முடிவுற்ற நடைமுறையிலிருந்த முக்கிய சில திட்டங்களாவன:

**குடிநீர் :**

1. மாநில அரசுத் திட்டங்கள்:
   மணலியிலிருந்து அண்ணா (இராபின்சன்) பூங்கா வரை 750 மி.மீ. அளவுள்ள குடிநீர் இரும்புக் குழாய்களைப் பதித்தல்.

இத்திட்டம் நகரின் குடிநீர் வழங்கலை 15 சதவிகிதம் அதிகரிப்பதுடன் 4.5 இலட்சம்






முக்கட் தொகை கொண்ட வட சென்னைப் பகுதிகளின் குடிநீர் வழங்கலில் குறிப்பிடத் தகுந்த முன்னேற்றத்தை ஏற்படுத்தும்.

**செங்குன்றத்திலிருந்து (புழலேரி) 3வது மூடு செல்வழி கட்டுதல் :**

செங்குன்றத்திலிருந்து (புழலேரி) கீழ்ப் பாக்கம் தலைமை நீர் நிலையத்திற்குச் சென்னை நகரத்திற்குக் குடிநீர் வழங்கத் தேவையான நாளொன்றுக்கு 55 மில்லியன் காலன் நீர் தற்போது இரு கட்டட மூடு செல் வழிகள் வாயிலாகக் கொண்டுவரப்படுகிறது. இவைகளில், 600 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட, ஒரு மூடு செல்வழி குலைந்த நிலையிலுள்ளது. நீர் வழங்கலில் தடங்கல் ஏற்படாமலிருக்க, 10 கி.மீ. நீளத்தில் நாளொன்றுக்கு 42 மில்லியன் காலன் கொள் ளளவுள்ள நீரைக்கொண்டு வருவதற்கேற்ற ஒரு மூன்றாவது மூடு செல்வழியை ரூ. 288 இலட்ச மதிப்பீட்டில், கட்டுவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இப்பணி 1981-82ஆம் நிதியாண்டில் விரைவில் தொடங்கப்பட உள் ளது.

**உலக வங்கி நிதியுதவியுடன் செயற்படுத்தும் திட்டங்கள்:**

**பயிற்சிக்கூடம் கட்டுதல்**

பராமரிப்புத் துறையில் உள்ள அலுவலர் களின் ஆற்றலையும் பயிற்சித் திறமையையும் சீரியதாக்க அவர்களுக்குத் தக்க நெறி காட்டும் வழிமுறையோடு கூடிய பயிற்சி யளித்தல் இன்றியமையாதது. இதனைக் கருத் திற் கொண்டு இவ்வாரியம் உலக வங்கி உதவி யுடன் சென்னையில் ஒரு பயிற்சி நிலை யத்தை நிறுவ உத்தேசித்துள்ளது.

**கழிவு நீரகற்றல்.**

1. மாநில அரசு திட்டங்கள்:

**ஒருங்கிணைந்த மண்டல கழிவுநீர் வடிகால் திட்டங்கள்:**

இந்த ஆண்டில் கோயம்பேடு மற்றும் பெருங்குடியில் நவீன கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் செயல்படத் தொடங்கியுள்ளன.

**கிண்டி, வேளச்சேரி, பகுதிகளுக்கான கழிவு நீரகற்று அமைப்புத் திட்டம்:**

இத்திட்டம் 1981-82ஆம் ஆண்டு செயல் படத் தொடங்கும். இப்பகுதியிலுள்ள சுமார் 33,000 மக்களுக்கு இதனால் பாதாளச் சாக் கடை வசதி கிடைக்கப்பெறும்.

**அரும்பாக்கம், அமைந்தகரை பகுதிகளுக்கான கழிவுநீரகற்று அமைப்புத் திட்டம் :**

அரும்பாக்கம், அமைந்தகரை பகுதி களுக்கு பாதாளச் சாக்கடை வசதியளிப்பதற் காக, ரூ. 92.53 இலட்ச மதிப்பிட்டில் ஒரு திட்டமும் அநேகமாக முடிவடைந்து சீக்கிரத் தில் செயல்படத் தொடங்கும் நிலையில் உள் ளது.

**உலக வங்கி நிதி உதவியுடன் செயல் படுத்தும் திட்டங்கள்:**

**தியாகராயநகர் கழிவு நீர் விசைக் குழாய் அமைத்தல்.**

**கழிவு நீர்க்குழாய் சுத்திகரிப்புச் சாத னங்கள் வாங்குதல்**

**நகரின் 15 முக்கிய கழிவு நீரேற்று நிலை யங்களைப் புதுப்பித்தல் ஆகியவனவாகும்.**

**இந்தத் திட்டம் துரிதமாக நடைபெறு வதுடன், 1981ஆம் ஆண்டில் முடிவடைய உள்ளது. இதனால் நகரின் நீர் நிலையங்கள் அசுத்தமாவது பெரிதளவும் குறையும்.**

# முதன்மை பெற்றுள்ள வீட்டு வசதி வாரியம்

நம் இந்திய நாட்டில் வீடுகள் கட்டித்தரும் நிறுவனங்களில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் முதன்மையாக விளங்குகிறது. இவ்வாரியம் பல்வேறு சமூக வீட்டுவசதி திட்டங்களை பொருளாதாரத்தில் பின்தங்கியோர் முதல் உயர் வருவாயினர்போன்ற பல்வேறு வகுப்பினருக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கிறது. இவ் வாரியம் மேற்கொண்டுள்ள பல்வேறு வீட்டு வசதித் திட்டங்களின் விவரங்கள் பின்வருமாறு:

**மனை கையகப்படுத்தல்—**
**வளர்ச்சித் திட்டங்கள்**

வாரியம் பெரிய நகரங்களிலும் அதனை சுற்றியுள்ள பகுதிகளிலும் நிலங்களை கையகப் படுத்தி அவற்றை சிறிய நகரங்களாகவும் புறநகர்ப் பகுதிகளாகவும் அபிவிருத்தி செய்கின்றது. மேற்கண்ட பகுதிகளில் வாரியம் சாலைகள், தெரு விளக்குகள், குடிநீர் வசதி, கழிவுநீர் வசதி மற்றும் வடிகால் வசதிகள் அமைத்துத் தருவதுடன் சமூக நலத்திற்காக பள்ளிகள், மருத்துவ மனைகள், அங்காடிகள் மற்றும் விளையாட்டு மைதானம் போன்ற அடிப்படை வசதிகள் அமைத்துக் கொடுக்க, தேவையான நிலம் ஒதுக்கீடு செய்கிறது. 9-6-80 முதல் 31-3-81 முடிய வாரியம் மேற்கண்ட திட்டத்திற்கு ரூ. 201.65 இலட்சம் செலவிட்டுள்ளது. மேற்குறிப்பிட்டுள்ள காலத்தில் வாரியம், தமிழ்நாடு முழுவதிலும் 672.66ஏக்கர் நிலத்தை கையகப்படுத்த செய்ய அதிகாரம் அளித்துள்ளது.

**பொருளாதாரத்தில் பின்தங்கியோர்களுக்கான திட்டம்**

இத்திட்டத்திற்காக ரூ. 34.12 இலட்சம் செலவழித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் வாரியம் 9-6-80 முதல் 31-3-81 முடிய 1959 குடியிருப்புகளை கீழே குறிப்பிட்டுள்ளவாறு கட்டி முடித்துள்ளது :

| இடம் | முடிவுபெற்ற குடியிருப்புகளின் எண்ணிக்கை |
|---|---|
| வில்லிவாக்கம் | 605 |
| கொடுங்கையூர் | 972 |
| ராமநாதபுரம் | 74 |
| ராஜபாளையம் | 100 |
| தாதம்பட்டி | 208 |
| மொத்தம் | 1959 |

மேற்குறிப்பிட்டுள்ள காலத்தில் 996 குடியிருப்புகள் கட்டும் திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன.

**குறைந்த வருவாயினருக்கான குடியிருப்பு திட்டம்**

இத்திட்டத்திற்காக ரூபாய் 277.59 இலட்சம் செலவழித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் வாரியம் 9-6-80 முதல் 31-3-81 முடிய 1680 குடியிருப்புகளை கீழே குறிப்பிட்டவாறு கட்டி முடித்துள்ளது :—

| இடம் | முடிவுபெற்ற குடியிருப்புகளின் எண்ணிக்கை |
|---|---|
| அறிஞர் அண்ணா நகர், சென்னை | 168 |







| | |
|---|---|
| கொரட்டூர் | 84 |
| நாகார்ஜுன பார்மசூட்டிகல்ஸ் அறிஞர் அண்ணா நகர் | 96 |
| சென்னியம்மன் கோயில் வியாசர்பாடி | 64 |
| அசோக் நகர் | 36 |
| சிவன் கோயில் மனை, அசோக் நகர் | 12 |
| மணலி | 382 |
| கிருஷ்ணகிரி | 42 |
| ஓசூர் | 93 |
| என். டி. சி., கோயம்புத்தூர் | 252 |
| வடக்கு மற்றும் தெற்கு பேரூர் சாலை | 331 |
| ஈரோடு | 120 |
| மொத்தம் | 1680 |

மேல் குறிப்பிட்டுள்ள காலத்தில் 300 குடியிருப்புகள் கட்டும் திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன. [வியாசர்பாடி 212, இராசபாளையம் 58 மற்றும் வேலூர் புறநகர் பகுதி 30].

**நடுத்தர வருவாயினருக்கான குடியிருப்புத்திட்டம்**

இத்திட்டத்திற்காக ரூபாய் 630.59 இலட்சம் செலவழித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் வாரியம் 9.6.80 முதல் 31-3-81 முடிய 869 குடியிருப்புகளை கீழே குறிப்பிட்டவாறு கட்டி முடித்துள்ளது :—

| இடம் | முடிவுபெற்ற குடியிருப்புகளின் எண்ணிக்கை |
|---|---|
| அறிஞர் அண்ணா நகர் | 108 |
| கொரட்டூர் | 42 |
| கலைஞர் கருணாநிதி நகர் | 114 |
| பெசன்ட் நகர் | 20 |
| திருவான்மியூர் | 54 |
| கோட்டூர்புரம் | 126 |
| அசோக் நகர் | 96 |
| அறிஞர் அண்ணா நகர், மதுரை | 168 |
| இராசபாளையம் | 44 |
| சேலம் | 18 |
| ஓசூர் | 32 |
| ஆனைகுப்பம், கடலூர் | 25 |
| குருச்சி | 22 |
| மொத்தம் | 869 |

மேல் குறிப்பிட்டுள்ள காலத்தில் 1153 குடியிருப்புகள் கட்டும் திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன.

**தொழிலாளர்களுக்கான குடியிருப்புத்திட்டம்**

இத்திட்டத்திற்காக ரூ. 19.86 இலட்சம் செலவழித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் வாரியம் 9-6-80 முதல் 31-3-81 முடிய 240 குடியிருப்புகளை கீழே குறிப்பிட்டவாறு கட்டி முடித்துள்ளது:

| இடம் | முடிவுபெற்ற குடியிருப்புகளின் எண்ணிக்கை |
|---|---|
| பசுமலை, மதுரை | 240 |

**காவல் துறையினருக்காக குடியிருப்புத் திட்டம் :**

இத்திட்டத்திற்காக ரூபாய் 188.32 இலட்சம் செலவழித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் வாரியம் 9-6-80 முதல் 31-3-81 முடிய 80 குடியிருப்புகளை கீழ் குறிப்பிட்டவாறு கட்டி முடித்துள்ளது:



| இடம் | முடிவுபெற்ற குடியிருப்புகளின் எண்ணிக்கை |
|---|---|
| ஸ்ரீரங்கம், திருச்சி | 3 |
| பாளையங்கோட்டை | 32 |
| அறிஞர் அண்ணா நகர், சென்னை | 21 |
| மயிலாப்பூர், சென்னை | 24 |
| மொத்தம் | 80 |



மேலும் 901 குடியிருப்புகள் கட்டும் திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன.

**அரசு அலுவலர்களுக்கான வாடகைக் குடியிருப்புத் திட்டம் :**

இத்திட்டத்திற்காக வாரியம் ரூ. 243.99 இலட்சம் செலவழித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் வாரியம் 9-6-80 முதல் 31-3-81 முடிய 547 குடியிருப்புகள் கட்டி முடித்துள்ளது.

மேல் குறிப்பிட்டுள்ள காலத்தில் 242 குடியிருப்புகள் கட்டும் திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன.

**மாவட்டங்களில் குடிசை மாற்றுத் திட்டம் :**

இத்திட்டத்திற்காக ரூபாய் 41.52 இலட்சம் செலவழித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் வாரியம் 9-6-80 முதல் 31-3-81 முடிய 234 குடியிருப்புகளை கீழே குறிப்பிட்டவாறு கட்டிமுடித்துள்ளது.

| இடம் | முடிவுபெற்ற குடியிருப்புகளின் எண்ணிக்கை |
|---|---|
| மேல வாசல் மதுரை, | 234 |

மேல் குறிப்பிட்டுள்ள காலத்தில் மதுரையில் 408 குடியிருப்பு யிருப்புகள் கட்டும் திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன. [மேலவாசல் 88 மற்றும் ஆழ்வார் புரம் 320]

# மகளிர் மறுவாழ்வு

தமிழ்நாட்டின் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட பேரறிஞர் அமரர் அண்ணா கண்ட கனவை நனவாக்கிடும் தமிழக அரசு, சமுதாயத்தின் பல்வேறுபட்ட மக்களின், பாதிக்கப்பட்டோரின் நல்வாழ்வுக்காக - மறுவாழ்வுக்காக அயராது உழைத்து வருகிறது.

சென்னை, அரசினர் மகளிர் சீர்திருத்தப் பள்ளியில், போதிய குடிநீர் வசதியுடன் கூடிய, சுமார் 300 பெண் இல்லவாசிகள் அமர்ந்து உணவருந்தும் கூடத்தின் தேவை நீண்ட காலமாகவே உணரப்பட்டு வந்தது. சென்னை, அரசினர் மகளிர் சீர்திருத்தப்பள்ளி, இல்லவாசிகளின் அந்த நீண்ட நாள் கனவை, நனவாக்கும் வண்ணம் இவ்வரசு, அனைத்து வசதிகளுடன் கூடிய நவீன உணவருந்தும் கூடம் ஒன்றினை ரூபாய் இரண்டரை இலட்சத்தில் நிர்மாணிக்க அனுமதி அளித்துள்ளது.

இராமநாதபுரம் மாவட்டத்தில், மருத்துவ வசதியற்றகிராமப் புறச் சூழலில் அமைந்துள்ள மல்லிப்புதூர் அரசினர் இளநிலை சீர்திருத்தப் பள்ளி, மாணவர்களின் அத்தியாவசிய மற்றும் மருத்துவ உதவிக்காக, ஊர்தி ஒன்று பெற ரூ. 73,000 செலவினம் அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

சேலத்தில் விடுதலையடைந்த கைதிகளின் நலவாழ்வுச் சங்கத்தின் ஆதரவில், இயங்கி வந்த வரவேற்பு இல்லம், சரிவர இயங்காததால் மேற்படி இல்லத்தை அரசின் பொறுப்பில் மேற்கொள்ளப்பட்டது.

தர்மபுரி, பெரியார், நீலகிரி, கன்னியாகுமரி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் வரவேற்பு இல்லங்கள் கிடையாது. மேற்சொன்ன அனைத்து மாவட்டங்களிலும் வரவேற்பு இல்லங்களை ஆரம்பிக்க தமிழக அரசு கொள்கையளவில் ஏற்றுக்கொண்டது. தொடர்ந்து நடப்பாண்டில் ஈரோட்டில் ஒன்றும், தர்மபுரியில் ஒன்றுமாக இரண்டு அரசினர் வரவேற்பு இல்லங்களுக்கு அரசு அனுமதி வழங்கி, அவைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருகின்றன.

குறுகிய காலத் தங்குமிடங்களாக, சேலம், மற்றும் கோயம்புத்தூரில் ஏற்கெனவே இரண்டு மகளிர் மீட்பு இல்லங்கள் இயங்கி வந்தன. மேற்சொன்ன இரண்டு இல்லங்களின் நிலையினை நீண்ட காலத் தங்குமிடங்களாக மாற்றி, மகளிர் பாதுகாப்பு இல்லங்களாக உயர்த்தப்பட்டுள்ளன.

தமிழகத்தின் மேற்குப் பகுதியில் உள்ள சேலம், கோவை, பெரியார், நீலகிரி மற்றும் தர்மபுரி போன்ற மாவட்டங்களில், சீர்திருத்தப்பள்ளி கிடையாது. அதனை உணர்ந்த இவ்வரசு உடனடியாக, தர்மபுரி மாவட்டம் பஞ்சப்பள்ளியில் அரசினர் முதுநிலை மற்றும் இளநிலை சீர்திருத்தப்பள்ளி ஒன்று ஆரம்பிக்க ஆணை பிறப்பித்தது. அதன் பலனாக, தற்போது அப்பள்ளி முறையாக ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருகிறது.

சென்னை மயிலாப்பூர் அரசினர் மகளிர் காப்பகத்தில் உள்ள இல்லவாசிகள், கைத்தொழிலாகக் கற்றுக் கொள்ளவும், கற்கும் காலத்திலேயே பொருள் ஈட்டும் வாய்ப்பினை வழங்கிடும் வண்ணமும், மின்சாரத்தில் இயங்கும் சலவைக்கூடம் ஆரம்பிக்க அரசு அனுமதி அளித்துள்ளது.

சென்னை இராயபுரத்திலும், அடுத்து கடலூரிலும் உள்ள அரசினர் இளநிலை சீர்திருத்தப் பள்ளிகளிலுள்ள மாணவர்கள், பள்ளியிலிருந்து பயிற்சி முடிந்து வெளியேறினாலும், முறையாக உழைத்து அவர்களது வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் விதமாக, பள்ளிகளிலேயே பாண்டு வாத்திய இசைக் குழுக்களில் பயிற்சி பெற்றுக் கொள்ள, தலா ஒன்று வீதம், இரண்டு பள்ளிகளிலும் குழுக்களை ஆரம்பிக்க அரசு. அனுமதி அளித்துள்ளது.

இதுநாள் வரை, சீர்திருத்த நிலையங்களிலுள்ள இல்லவாசிகளை திருமணம் செய்துகொள்ள முன்வரும் மணமகன்கள், திருமண நாட்களில் அவர்களே செலவு செய்து வந்தனர். தற்போது அரசு, ஒவ்வொரு திருமணத்திற்கும் திருமண நாள் செல்வாக ரூ. 100 அனுமதித்துள்ளது.

சென்னை, அரசினர் பெண்கள் சீர்திருத்தப் பள்ளியிலுள்ள பெண்களுக்கு, வருங்கால வளமான வாழ்விற்காக, வீட்டு வேலைகளிலும், குழந்தைகளை முறையாக வளர்த்து பாதுகாப்பதில் பயிற்சி வழங்கவும் 'அரசினர் குழந்தைகள் பராமரிப்பு நிலையம்' ஒன்றினை ஆரம்பிக்க அரசினர் அனுமதி அளித்துள்ளனர். சமீபத்தில், அது முறையாக ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக இயங்கி வருகிறது.

அரசு சார்பற்ற நிறுவனங்களையும், நிர்வாக அமைப்பிலும் செயல் திறனிலும், அரசு நிறுவனங்களுக்கு இணையாக மாற்றி அமைக்க இயலும். அதற்கு அரசு சார்பற்ற அலுவலர்களின் ஒத்துழைப்புடன் அவைகளைப் பாச உணர்வுடன் கூடிய, இல்லப் பாங்கான ஒரு உணர்வினைக் கொண்டதாக உருவாக்க வேண்டும். மேலும், அவைகளை அரசு சீர்திருத்த நிறுவனங்களாகப் படிப்படியாக மாற்ற வேண்டுமென்பதே, சீர்திருத்த நலப் பணியில் தமிழக அரசின் கொள்கையாகும்.





# சாலைப் போக்குவரத்தின் சாதனைகள்

**1977** ஆம் ஆண்டில் சாலைப் போக்குவரத்தில் 50 சதவீதம் நாட்டுமையாக்கப்பட்டிருந்தது. தற்போது இது 58 சதவீதத்திற்கும் அதிகமாகும். அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் 7000க்கும் அதிகமான பேருந்துகளை இயக்குகின்றன. இவை நாளொன்றுக்குச் சுமார் 20 இலட்சம் கிலோ மீட்டர் தொலைவு ஓடுகின்றன. அன்றாடம் சுமார் 66 இலட்சம் பயணிகள் இப்பேருந்துகளில் பயணம் செய்கின்றனர். இக்கழகங்களில் சுமார் 54,000 பேர் பணி புரிகின்றனர். பயணிகளுக்குச் சிறந்த பாதுகாப்பான, ஒருங்கிணைந்த பணியைக் குறைந்த செலவில் அளிக்கும் நோக்குடன் இப்போக்குவரத்துக் கழகங்கள் செயல்பட்டு வருகின்றன.

கடந்த நான்காண்டுகளில் இப்போக்குவரத்துக் கழகங்கள் எய்திய சாதனைகள், செய்த மேம்பாட்டுப் பணிகள் தொழிலாளர் நலனுக்காகக்கொண்டுவரப்பட்ட நடவடிக்கைகள் மிகப் பல:—

* நெடுஞ்சாலைகளும் சாலைகளும், சாலைப் போக்குவரத்தின் அடிப்படைத் தேவைகளாக இருப்பதால், தேசிய நெடுஞ்சாலை உட்பட நெடுஞ்சாலைதுறை தலைமைச்செயலக நிலையில் ஒரு நிர்வாகத்துறையின் கீழ் 1.4.1978 அன்று கொண்டுவரப்பட்டது.

* போக்குவரத்துக் கழகங்களின் அமைப்பையும் அவை எய்திய சாதனைகளையும் ஆராய்ந்து அரசுக்குப் பரிந்துரை செய்யும் பொருட்டு அக்டோபரில் அரசு திரு சி.ஆர். பட்டாபிராமன் தலைமையில் ஒரு குழுவை அமைத்தது. இக்குழு 236 பரிந்துரைகளைத் தெரிவித்து 1977 ஜூனில்அறிக்கை கொடுத்தது. இப்பரிந்துரைகள் அனைத்தும் நுணுக்கமாக ஆராயப்பட்டு செயல்படுத்தப் பட்டு வருகின்றன. பரிந்துரைகளின் அடிப்படையில் பொறியியற் கழகங்களைத் தாய்க் கழகங்களோடு இணைக்கவும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு போக்குவரத்துக் கழகம் இருப்பதற்கு இயலும் வகையில் பெரிய கழகங்களை இரண்டாகப் பிரிப்பதற்கும் ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

* கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காகக் கிராமத்தில் நாட்டுடைமையாக்கும் திட்டம் செயல்படுத்தப் பட்டது. நாட்டுடைமையாக்கப்பட்ட பிரிவுகள் அங்கு விரிவுபடுத்தப்பட்டது. பேருந்து போக்குவரத்து இல்லாத பகுதிகளைக் கண்டறியும்பொருட்டு போக்குவரத்துத் துறை, போக்குவரத்துக் கழகங்கள், நெடுஞ்சாலைத் துறை அரசு புள்ளிவிவர இலாகா நிலையம், ஊர்வளர்ச்சித்துறைஆகியவை ஒருங்கிணைந்து 1979 சனவரியில் மாநிலத்தில் போக்குவரத்துப் பணி வரலாற்றிலேயே முதல் தடவையாக அறிவியல் முறையில் மாநிலம் முழுவதிலும் விரிவாக ஆய்வு செய்தது. ஆய்வின் முடிவுகள் கணக்கிடு பொறி உதவியுடன் வகைப் படுத்தப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டன.

எதிர்காலத்தில் நாட்டுப்புறங்களின் பேருந்து தடங்களில் திட்டமிடப் பெருந்திட்டம் ஒன்று தயாராக உள்ளது. 968 கிராம ஊராட்சிகளை வண்டிகள் செல்லக்கூடிய சாலைகளுடன் இணைக்க 476 புதிய தடங்களுக்கான திட்டங்கள் உருவாக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ஆதாயத்துடன் இயங்கத்தக்க வழியில் புதிய தடங்களை உருவாக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் போக்குவரத்து நெடுஞ்சாலை மற்றும் வருவாய்த் துறைகளின் அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

## ஆக்கபூர்வமான சாதனைகள்

மிகவும் உட்புறமாக அமைந்துள்ள கிராமப் பகுதிகள் நெடுந்தொலைவிலுள்ள ஒதுக்குப்புறமான பகுதிகள், மலைப் பகுதிகளின் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு போக்குவரத்துக் கழகங்கள் 47 சிறு(மினி) பேருந்துகளையும் 236 குறுகிய சக்கர அடித்தளப் பேருந்துகளையும் இயக்குகின்றன. குறைவான பேருந்துகளைக் கொண்டு அதிகமான கிராமங்களுக்குப் பேருந்து வசதிகளை அளிக்கும் பொருட்டு 279 புதிய வழித்தடங்களைக் கொண்டு 126 பலமுனை வழித்தடங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கிராம மக்கள் தங்கள் விற்பனைப் பொருட்களை எடுத்துச் செல்வதற்கு உதவும் பொருட்டு சந்தைப் பேருந்துகள் விடப்பட்டுள்ளன. அதிகக் கிராமங்களை நகர்ப்புறங்களுடன் இணைக்கும் வகையில், நகர்ப்புற பேருந்து வழித்தடங்களின் தூரம் 25 கி.மீ. இருந்து 30 கி.மீ. வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

பார்வையற்றவர்கள், புற்று நோயாளிகள், பத்திரிகை நிருபர்கள் ஊனமுற்றோர் முதலியோர் பேருந்துகளில் இலவசமாக பயணம் செய்யவும் சலுகைவீதத்தில் கட்டணங்களும் அளிக்கவும் அனுமதிக்கப்படுகின்றனர்.

மாணவர்களுக்குப் பேருந்துக் கட்டணத்தில் கணிசமான அளவுக்குச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. சட்டசபை அங்கத்தினர்களும் தமது மனைவி கணவனுடன் கழகப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர்.

சுற்றுலா வளர்ச்சிக்காகப் போக்குவரத்துக் கழகங்கள் தமது மிகுதியான நிதியிலிருந்து மாவட்ட உல்லாசப்பயண மையங்களை ஏற்படுத்தக் கருதியுள்ளன. முதலாவதாகக் கல்லணையில் இதுபோன்ற மையமொன்று சோழன் போக்குவரத்துக் கழகத்தால் நிறுவப்பட்டு வருகிறது.

சேரன் போக்குவரத்துக் கழகம் பக்தர்களின் நலனுக்கு இரண்டு இழுவை இரயில்களைப் பழனிக்கோயிலுக்கு அளித்துள்ளது.

## பாதுகாப்பு நடவடிக்கைகள்

அதிவேகமாக ஓட்டுவதால் விளையும்சாலை விபத்துக்களைத் தடுக்கும் பொருட்டு, போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகளில் ரூ. 3 கோடி செலவில் மின் வேகக் கட்டுப்பாடு கருவிகள் பொருத்தப்பட்டு வருகின்றன.

விபத்துகள் நேரும்போது உதவியாக இருக்கும் பொருட்டு விரைவுப் பேருந்துகளில் வான் வழிச் செய்திகள் கொடுக்கும் வகையில் சாதனங்கள் பொருத்தப்பட்டு வருகின்றன.

தீ விபத்துக்களால் நேரும் சேதங்களைக் குறைக்கும் பொருட்டு எல்லாக்கழகங்களின் பேருந்துகளிலும் தீயணைப்புக் கருவிகள்பொருத்தப்பட்டுள்ளன.

அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களும் ஓட்டுநர்களுக்குப் போதுமான பயிற்சி அளித்து வருகின்றன. சாலைப் போக்குவரத்து நிறுவனமும் புதிதாகவரும் விண்ணப்ப தாரர்களுக்கு 32 வாரங்களுக்குத் தீவிரமான பயிற்சி அளித்து வருகிறது. இதனால் விண்ணப்பதாரர்கள் பயிற்சியை முடித்த பின்னர் வேலை வாய்ப்பகத்திற்குத் தெரிவிக்காமல் அரசுப் போக்குவரத்துக் கழகங்களே இவர்களைப் பணிக்கு எடுத்துக் கொள்ள இயலும்.

விபத்துக்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதல்வரின் நிவாரண நிதியிலிருந்து ரொக்க நிவாரணம் அளிப்பதற்கான திட்டத்தை அரசு உருவாக்கியுள்ளது.

அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களின் ஓட்டுநர்களில் தொடர்ச்சியாக 30 ஆண்டுகள் எவ்விதவிபத்துக்களுமின்றிபேருந்துகளை ஓட்டியவர்களுக்கு ''பாதுகாப்பான முறையில் ஓட்டியதற்கான பரிசுத் திட்டத்தின் ''கீழ் ஒவ்வொரு ஆண்டும் ரூ. 100 முதல் ரூ. 3000 வரை தனிப் பரிசுகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

## தொழிலாளர் நல நடவடிக்கைகள்

1977-78ல் மூன்று கழகங்களில் நடைபெற்ற பெரும் வேலை நிறுத்தத்தைத் தவிர எல்லா அரசுப் போக்குவரத்துக் கழகங்களிலும் பெரும்பாலும் அமைதி நிலவியது எல்லோரும் அறிந்ததே. 1978 மே திங்களில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் மூலம் புதிய உடன் பாடு செய்து கொள்ளப்பட்டு இப்



பெரும் `வேலைநிறுத்தத்திற்குச் சுமுகமானமுறையில் தீர்வகாணப்பட்டது. இதனால் தொழிலாளர்கள் மாதம் ஒன்றுக்கு ரூ. 61- முதல் ரூ. 69 வரை புதிய உயர்வு பெற்றுப் பயனடைந்தனர்.

1-9-1980ல் இருந்து நிலுவையிலுள்ள புதிய உடன்பாடு திட்டமிடப்பட்டு அனைத்துத் தொழிற்சங்கங்களுடன் ஆலோசித்துச் செயல்படுத்தும் நாள் குறிப்பிடப்பட்டு அனைத்து தொழிற்சங்கப் பணியாளர்களுக்கும் திருப்தி யளிக்கும் வகையில் முடிவுசெய்யப்பட்டது. ஊதியத்தை மாதத்திற்கு ரூ. 65 முதல் ரூ. 130 வரை உயர்த்தியதன் விளைவாக ஆண்டு ஒன்றுக்கு ரூ. 7 கோடி அதிகப்படியாகச் செலவிடவேண்டியுள்ளது. அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களிலும் அகவிலைப்படி வீட்டு வாடகைப்படி நகர ஈட்டுப்படி, கிராமப்படி, சுகாதாரப்படி விடுப்பு வசதிகள் மருத்துவப் பயன்கள் முதலியவை செய்யப்பட்டுள்ளன.

இதுவரை கொடுத்து வந்த மாறுபடும் நிலையான அகவிலைப்படிக்குப் பதிலாகத் தொழிற்சாலைத் தொழிலாளர் குறித்த அகில இந்திய நுகர்வோர் விலைக் குறியீடுகளின் அடிப்படையிலான அகவிலைப்படி வழங்கப்படுகிறது.



சென்னையிலும், மாவட்டத் தலைநகரங்களிலும், போக்குவரத்துக் கழகத் தலைமை இடங்களிலும் வசிக்கும் அனைத்துத் தொழிலாளர்களுக்கும் 15% வீட்டு வாடகைப் படியும் மற்ற இடங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு 12% வீட்டு வாடகைப் படியும் அளிக்கப்படுகிறது.

சென்னை மாநகரில் வசிக்கும் பணியாளர்களுக்கு 8 சதவீதம் நகர ஈட்டுப்படியும் மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, சேலம் முதலிய இடங்களில் வசிப்பவர்களுக்கு 5 சதவிதம் நகர ஈட்டுப்படியும் வழங்கப்படுகிறது. மற்றவர்களுக்கு அதே சதவீதம் கிராமப்படியாக வழங்கப்படுகிறது.

மாதம் ஒன்றுக்கு உயரளவு ரூ. 40 என்பதற்கு உட்பட்டு சம்பளம் அகவிலைப்படியில் 4 சதவீதம் சுகாதாரப் படியாக அளிக்கப்படுகிறது.

சலவைப்படி மாதத்திற்கு ரூ. 6லிருந்து ரூ. 8 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. நீண்ட காலத் தொடர் ஊதியத்திட்டத்தின்படி பதவி உயர்வு கொடுக்கப்படுவது ஆண்டுக்கு ஒரு முறை ஆய்வு செய்வதற்குப் பதிலாகக் காலாண்டுக்கு ஒரு முறை ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

அனைத்துத் தொழிலாளர்களுக்கும் 1.1.1980லிருந்து ஓர் ஆண்டுக்கு ஊதியத்துடன் 10 நாள் தற்செயல் விடுப்பு அளிக்கப்படுகிறது. உடல் நலக்குறைவிற்கான விடுப்பு ஆண்டொன்றுக்கு 6 நாட்களிலிருந்து 8 நாட்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது. பெண்களுக்கு அளிக்கப்படும் மகப்பேறு மருத்துவ விடுப்பு 60 நாட்களிலிருந்து 90 நாட்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

எல்லாப் போக்குவரத்துக் கழகங்களும் அநேகமான இடங்களில் உணவகங்கள் ஆரம்பித்துள்ளன. அங்கு குறைந்த விலையில் தொழிலாளர்களுக்கு உணவு வழங்கப்படுகின்றது. இரவில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குச் சிற்றுண்டியும், தேனீரும் கட்டணமேதுமின்றி இலவசமாக அளிக்கப்படுகின்றன.

அநேக இடங்களில் தொழிலாளர்களுக்கு மன மகிழ்வுற வசதிகளுடன் ஓய்வு அகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. விடுப்பு நாட்களிலும் விடுமுறைநாட்களிலும் தொழிலாளர்கள் தங்குவதற்குக் குறிப்பிட்ட இடங்களில் விடுமுறை இல்லங்கள் கட்டப்படும்.

கழகப் பணியாளர்கள் தங்கள் குடும்பத்துடன் மாநிலம் முழுவதும் ஆண்டுக்கொரு முறை இலவசமாகக் கழகத்தின் பேருந்துகளில் பயணம் செய்யலாம்.

15.9.1977லிருந்து பணியாளர்களின் குழந்தைகள் கல்வி நிலை

யங்களுக்குக் கழகப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்யலாம்.

பணியில் உள்ளபோது மரணமடையும் தொழிலாளர்களின் குடும்பத்திற்கு உதவி செய்யும் வகையில் இறந்த தொழிலாளியைச் சார்ந்துள்ள ஒருவருக்குத் தகுதியின் அடிப்படையில் வேலை வாய்ப்புக்கழகத்தை நாடாமலேயே பதவி காலியாக உள்ள இடத்தில் வேலை அளிக்கப்படுகிறது.

அரசு ஊழியர்களைப்போலவே அனைத்துத் தொழிலாளர்களும் அரசாங்க மருத்துவ மனைகளில் அக நோயாளியாகத் தங்கிச் சிகிச்சை பெறுவதற்குத் தகுதியுடையவராவார்.

திருமண முன்பணம் பண்டிகை முன்பணம் முதலியவற்றின் தொகை கணிசமான அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளன.

பெரும்பான்மையான கழகங்கள் தங்களின் தொழிலாளர்களுக்கு வீட்டுவசதி அளிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றன.

எல்லாப் போக்குவரத்துக் கழகங்களிலும் தகுதியுடைய தொழிலாளர்களுக்கு, காலணிகள், குளுமைக் கண்ணாடிகள், சீருடைகளும் அவற்றைத் தைக்கும் கூலியும் தரப்படுகின்றன.

பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகமும் சேரன் போக்குவரத்துக் கழகமும் தங்களது பணியாளர்களுக்கு மூன்று ஆண்டுகளாக உயர்ந்த அளவு 20 ஊதியக் கொடை அளித்துள்ளன. கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகமும் அண்ணா போக்குவரத்துக் கழகமும் கடந்த 2 ஆண்டுகளாக இருபது சதவீத ஊதியக்கொடை அளித்துள்ளது. சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகம் 1978-79ல் 19 . ஊதியக் கொடையும் 1979-80ல்17 ஊதியக் கொடையும் அளித்துள்ளது. மற்ற கழகங்கள் 1979-80ல் குறைந்த பட்சம் 8.33 ஊதியக் கொடை அளித்துள்ளன. மேலும் அவை ஒவ்வொரு பணியாளருக்கும் கருணைத் தொகையாக ரூ. 100- வழங்கின. ஆதாயம் ஈட்டிய கழகங்கள் 1977-78, 1978-79 ஆண்டுகளில் ரூ. 50-250 ஊதியக் கொடையுடன் ரூ. 50-250 பெறுமானம் உள்ள தனிப் பரிசுகளை அளித்தன. எல்லாக் கழகங்களும் 1979, 1980 காலண்டர் ஆண்டுகளில் செயல் திறன் ஊக்கத் தொகையாக ரூ. 200-250 வரை அளித்தன.

நிதி செயற்பாடு

கழகங்கள் வரிவிதிப்புக்கு முன்னர் 1977-78ல் ரூ. 4.53 கோடியும் 1978-79ல் ரூ. 8.76 கோடியும் 1979-80ல் 6.67 கோடியும் ஆதாயம் ஈட்டின. ஆனால் டீசல் எண்ணெய்ப்பொருட்களின் விலை உயர்வு, ஊதிய உயர்வு ஆதாயமற்ற முறையில் இருந்த பயணக் கட்டணம் முதலியவற்றால் 1980-81ல் கடுமையான இழப்பு ஏற்பட்டது.

நம் நாட்டின் தென்மாநிலங்களில் விதிக்கப்படும் கட்டணங்களுடன் ஒப்பிடும்போது இங்கு வசூலிக்கப்படும் கட்டணம் மிகக் குறைவானதாகும்.

மாநிலப் போக்குவரத்துக் கழகங்கள் சுமார் 3800 பேருந்துகள் வாங்குவதற்குத் தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதிக் கழகம் ரூ 62.50 கோடி நிதியுதவி அளித்துள்ளது. ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் போக்குவரத்து வளர்ச்சி நிதி கழகத்தின் மூலம் போக்குவரத்துக் கழகங்களுக்குக் கடன் வசதி வழங்க முன்வந்துள்ளது.

மோட்டார் வாகன வரிமீதான கூடுதல் மேல்வரியாகவும் சாலைகள் மேம்பாட்டிற்கும் மாநிலப் போக்குவரத்துக் கழகங்கள் 1978-79ல் ரூ. 686 இலட்சமும் 1979-80ல் ரூ 1096 இலட்சமும் செலுத்தியுள்ளன. கடந்த நான்கு ஆண்டுகளில் ஆதாய பங்குத் தொகையாக ஏறக்குறைய ரூ.42 இலட்சம் அளித்துள்ளது.

கிராம வளர்ச்சிக்காக 1980-81ல் சேரன் போக்குவரத்துக் கழகம் ரூ. 20 லட்சமும், போக்குவரத்து வளர்ச்சி நிதிக் கழகம் ரூ. 10 இலட்சமும் வழங்கியுள்ளன. 1977-78ல் போக்குவரத்துக் கழகங்கள் முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதிக்கு ரூ. 12 இலட்சம் அளித்துள்ளன. 1980-81ல் போக்குவரத்து வளர்ச்சி நிதிக் கழகம் ஒரு இலட்சம் நன்கொடையாக வழங்கியுள்ளது.

## உலக வங்கி உதவியும் பெருநகர் போக்குவரத்தும்

285 பேருந்துகள் வாங்குவதற்கும் 3 பணிமனைகள் 8 பேருந்து முடிவிடங்கள், பேருந்துகள் நிற்பதற்காக 400 கொட்டகைகளைக் கட்டுவதற்கும் பல்லவன் போக்குவரத்துக் கழகத் (பெருநகர்)திற்கு உலக வங்கி ரூ. 685.50 இலட்சம் கடனாக அனுமதித்துள்ளது. இப்பணிகளுக்கான திட்டக் காலம் 1977-78 முதல் 1979-80 வரையாகும். பல்லவன் போக்குவரத்துக்கழகம் (பெருநகர்) குறிப்பிட்ட காலத்திற்கு முன்பாகப் பணியை முடித்ததுடன் செலவினங்களையும் மீதப்படுத்தியுள்ளது. பல்லவன் போக்குவரத்துக் கழகத் (பெருநகர்)தின் திறமையைப் பாராட்டும் வகையில் மீதமுள்ள பணத்தைக் கொண்டு கூடுதலாக 20 நவீன பேருந்துகளை வாங்க உலக வங்கி அனுமதி அளித்துள்ளது. பல்லவன் போக்குவரத்து கழகத்தின் (பெருநகர்) சாதனையை உலக வங்கி பாராட்டி 550 பேருந்துகளை வாங்கவும் பணிமனைமகளை கட்டவும் மீண்டும் ரூ. 1260 இலட்சம் அளிக்க முன் வந்துள்ளது. 550 பேருந்துகளை வாங்குவதற்காக அனைத்து நாட்டு நிறுவனங்களிலுமிருந்து 25.3.1981 அன்று வரப் பெற்ற புள்ளிகள் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றது.

1977-78ஆம் ஆண்டிலும் 1980-81ஆம் ஆண்டிலும் ஊன முற்றோர் வேலைவாய்ப்பு அளித்ததில் பல்லவன் போக்குவரத்துக் கழகம் (பெருநகர்) முதலிடத்தைப் பெற்றுள்ளது. உதிரி பாகங்களைப் புதுப்பிப்பதிலும், தேசிய வளங்களைப் பாதுகாப்பதிலும் 1977ஆம் ஆண்டின் சிறந்த பாதுகாப்பாளர் என்கிற பரிசைப் பல்லவன் போக்குவரத்துக் கழகம் (பெருநகர்) பெற்றது.

நெரிசல் நேரங்களில் நெருக்கடியைக் குறைப்பதற்காக 160 விரைவுப் பேருந்துகளையும், 246 பெண்கள் மற்றும் குழந்தைகள் பேருந்துகளையும் இக்கழகம் இயக்குகிறது. தனிப் பேருந்துகள் சிலவற்றில் இரண்டு நடத்துனர்களும், பெண் நடத்துனர்களும் உள்ளனர்.

போக்குவரத்து நிருவாகத்தில் ஏனைய நாடுகளுக்கு ஆலோசனை வழங்கும் பொருட்டு பல்லவன் போக்குவரத்துக் கழகம் (பெருநகர்) வெளிநாடுகளுக்கு ஆலோசனை வழங்கும் பிரிவை அமைத்துள்ளது.

சேரன் போக்குவரத்துக் கழகம் அந்தமானில் பேருந்து போக்குவரத்தை மேம்படுத்துவதற்கு ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டுள்ளது.

இம்மாநிலத்தில் உள்ள சாலைப் போக்குவரத்துப் பணிகளை நம் நாட்டில் உள்ள சிறந்த போக்குவரத்துக் கழகங்களுடன் ஒப்பிடலாம். அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் இயன்ற வரையில் குறைந்த கட்டணத்தில் பொது மக்களுக்குப் பணிபுரிவதையும் ஆதாயம் தரத் தக்க வகையில் இயங்கும் வணிக நிறுவனங்களாகச் செயல்படவேண்டும் என்பதையும் நோக்கமாகக் கொள்ள வேண்டியுள்ளது. தொழிலாளர்களின் ஒத்துழைப்புடன் வருங்காலத்தில் போக்குவரத்துக் கழகப் பணிகளை மேம்படுத்த இயலும் என்று அவை நம்புகின்றன.





# தொழில் துறையின் சாதனைகள்

நாட்டில் பெருமளவில் தொழில் வளர்ச்சியடைந்துள்ள மாநிலங்களுள் முந்தைய ஆண்டுகளிலிருந்ததைப் போல் 1980-81ஆம் ஆண்டும் தமிழ்நாடு ஒரு உயர்ந்த நிலையைத் தொடர்ந்து வகிக்கின்றது. இத்துறையில், தமிழக அரசின் எண்ணத்தில் குடிகொண்டுள்ள இரட்டை நோக்கம் என்னவென்றால், தொழில்வளம் மூலம் வேலைவாய்ப்பைப் பெருக்குதலும், அத்துறையில் பிராந்திய ஏற்றத்தாழ்வுகளைக் களைதலும் ஆகும். மேற்குறிப்பிட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதில் தனது முயற்சிகளனைத்தையும் வெளிப்படுத்தும் வகையில் இவ்வரசு சிறுதொழில்கள் மற்றும் குடிசைத் தொழில்களை வலுப்படுத்துகிறது. அதே நேரத்தில் அத்தியாவசியமான பல பெரிய, நடுத்தரத் தொழிற்சாலைகளையும் ஆதரித்து வருகிறது.

தமிழ்நாட்டில் தனியார் தொழில் முனைவர்களின் திறனை ஊக்குவிப்பதில் அரசு அதிக நாட்டம் செலுத்தி வருகிறது. ஆனால், சமூக நீதியை நிலைநாட்டுதல், தொழில் நுட்ப உத்திகளைப் புதிதாகக் கண்டறிதல், நலம் பயக்கும் அளவுக்கு வருமான வாய்ப்புகளைப் பகிர்ந்தளித்தல் போன்ற நோக்கங்களை ஈடேற்றவேண்டுமென்று தெரிகிற உற்பத்தித் துறைகளில் மட்டுமே அரசு நேரயாகத் தலையிடும். இவ்வகையில் உள்ளூர் வளவாயில்கள், மூலப்பொருட்கள், மனித ஆற்றல் முதலியவைகளை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளும் தன்னித்தியங்கவல்ல திட்டங்கள் எவையென்பதைக் கண்டறிந்து, கட்டுபடியாகும் திட்டங்களைத் திட்டி அடிப்படை வசதிகளுக்கு வகை செய்தல், செயலூக்கம் அளித்தல், கடன் வசதி, ஏனைய இடுபொருட்கள் ஆகியவற்றை வழங்குதல், பயிற்சி வசதிகளுக்கு ஏற்பாடு செய்தல், உரிய தொழில் நுட்ப உத்தியைப் பயன்படுத்தல், உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்தல், ஏற்றுமதி செய்தல் போன்றவைகளில் உதவி செய்வதன் வாயிலாக அவற்றை உற்பத்தியைப் பெருக்கும் வளங்களாக மாற்றிட முனைகிறது இவ்வரசு.

கடந்த நான்காண்டுகளில் அதிக வேலை வாய்ப்பு உள்ள தொழில்கள் முக்கியத்துவம் வாய்ந்ததாகவுள்ளன. மேம்பாட்டு வளர்ச்சியின் பயன்கள் இதுவரை மேம்பாடு அடையாத பகுதிகளுக்குப் பயன்படுவதற்கான நடைமுறைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இம்மாநிலத்தில் சிறுதொழில்களின் நிரந்தரப் பதிவு எண்ணிக்கை 1978 மார்ச்சு மாதம் 18789 இருந்தது. இப்பொழுது 36000-மாக அதிகரித்து, கிட்டத்தட்ட 100 சதவீத உயர்வினை எட்டியுள்ளது. கடந்த மூன்றாண்டுகளில் சுமார் 2.25 இலட்சம் பேர்களுக்கு மேல் சிறுதொழில்கள் பதிவு மூலம் வேலை வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளது.

மாவட்டத்தொழில் மையங்கள் 14 மாவட்டங்களில் தொடங்கப்பட்டு மாநிலத்தின் தொழில் மேம்பாட்டிற்கான முயற்சிகளை விரைவாகவும் விரிவாகவும் எடுத்து வருகின்றன.

மின் மற்றும் இரசாயனப் பிரிவில் போற்றத்தக்க வளர்ச்சி பெறப்பட்டுள்ளது. சிறு ரக மின்னணுத் தொழில்துறையில் சுமார் 21 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் தயாரிக்கப்பட்டு, தகுதி வாய்ந்த பொறியாளர்களுக்கும் தொழில் நுணுக்க வல்லுநர்களுக்கும் வேலைவாய்ப்பு அளித்துள்ளது. பதிவு பெற்ற இரசாயனம் மற்றும் அதைச் சார்ந்த தொழில்கள், 1977 முதல் 1980 வரையிலான காலத்தில் சுமார் இரு மடங்காகியுள்ளன. 1977-78-ல் ரூ. 769 இலட்சமாக இருந்த சிறு தொழில்கள் பிரிவுகளுக்கான இறக்குமதி உரிமத்தின் மதிப்பு, 1980-81-ல் ரூ. 3037 இலட்சம் என்ற அளவில் நான்கு மடங்காக உயர்ந்துள்ளது.

தொழிற் கூட்டுறவுப் பிரிவினை சிறு மற்றும் கிராமப்புறத் தொழில்கள் வளர்ச்சியின் அர

சின் நேரடி அங்கமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புமிக்க கிராமப்புற வளர்ச்சியினை ஏற்படுத்தியுள்ளது. தேயிலை மற்றும் தீப்பெட்டித் தொழில்களில் இது ஒரு தனிச் சிறப்பை ஏற்படுத்தியுள்ளது. இப்பிரிவில் கடந்த சில ஆண்டுகளில் கவனம் பெற்றவை தோலும், கயிறும்.

தோல் ஒரு முக்கியமான மாநிலத் தொழில். ஆகையால் சிறு தோல் பதனிடுபவர்களைப் பழமையான முறைகளைக் கைவிட்டு கூட்டுறவு முறையில் தோல் நிறைவு (பதனிட) செய்யும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவி தோல் நிறைவு (பதனிட) செய்ய உதவியளித்துள்ளது. இது போன்ற சங்கங்கள் இராணிப்பேட்டை, திண்டுக்கல் மேலும் பேரணாம்பட்டு போன்ற இடங்களில் உள்ளன. ஆம்பூர் அல்லது குரோம்பேட்டையில் மேலும் அது போன்ற ஒரு சங்கம் நிறுவப்படவுள்ளது. மாநில தோல் மேம்பாட்டு நிறுவனம் ஒன்று நிறுவன ரீதியாக இத்தொழிலுக்கு உதவி புரிவதற்காகக் கூடிய விரைவில் நிறுவப்படவுள்ளது. 1980-81 ஆம் ஆண்டில்10 கயிறு கூட்டுறவுச் சங்கங்கள் தமிழ்நாட்டில் அனுமதிக்கப்பட்டுள்ளன. மேலும் 22 சங்கங்களை சுமார் 6,000 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் 1981-82-ல் உருவாக்குவதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்:

கடந்த 15 ஆண்டுகளாக, டான்சியின் உற்பத்தி மதிப்பு சீராக அதிகரித்து வருகிறது. 1965-66-ஆம் ஆண்டில் ரூ. 3.89 கோடியாக இருந்த உற்பத்தி மதிப்பு 1980-81-ஆம் ஆண்டில் ரூ. 21.08 கோடியாக உயர்ந்துள்ளது. குறிப்பாக, 1979-80 மற்றும் 1980-81-ஆம் ஆண்டுகளின் உற்பத்தியின் வளர்ச்சி குறிப்பிடத்தக்கவைகளாகும். 1978-79-ஆம் ஆண்டில் அடைந்த ரூ. 15.37 கோடி மதிப்புள்ள உற்பத்தியிலிருந்து 1979-80-ஆம் ஆண்டில் ரூ. 18.35 கோடியாகவும், 1980-81-ல் ரூ. 21.08 கோடியாகவும் உயர்ந்துள்ளன. நான்கு ஆண்டு காலமாகத் தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வந்த இந்நிறுவனம், 1979-80-ஆம் ஆண்டில் நட்டமில்லாமல் இயங்கும் நிலையினை அடைந்ததோடு மட்டுமில்லாமல், ரூ. 17.53 இலட்சம் இலாபத்தையும் சட்டியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். 1980-81-ஆம் ஆண்டில், டான்சி ரூ. 30.00 இலட்சத்திற்கு மேலாக இலாபத்தை அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. நடப்பு ஆண்டில் டான்சி நிறுவனம் தனது விரிவாக்கம் மற்றும் புதிய திட்டங்களுடன், ரூ. 24 கோடி உற்பத்தி இலக்குடன் ஒரு புதிய சாதனையை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது. 1979-80-ஆம் ஆண்டில் டான்சி வெளிநாட்டு ஏற்றுமதியின் மூலம் ரூ. 109.10 இலட்சம் வரை அந்நியச் செலாவணியை சட்டியுள்ளது.

1980-81-ஆம் ஆண்டில் டான்சி முற்றிலும் வெளிநாட்டு ஏற்றுமதிக்கென 'டான்சி' ஆடைக்குரிய தோல் தயாரிப்புத் தொழிற்சாலை என்னும் புதிய தொழிற்சாலை விரைவில் தனது உற்பத்தியைத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு மொபெட் லிமிடெட், டான்சியின் ஒரு சார்பு நிறுவனமாக 19-8-1977 முதல் செயல்படத் துவங்கியது. இந்த நிறுவனம் 1979-80-ல் 1610 மொபெட்டுகளையும், 1980-81ல் 1654 மொபெட்டுகளையும் தயாரித்துள்ளது.

## தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம்:

தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் நிலம், கட்டடங்கள், இயந்திரங்கள் போன்ற நிரந்தர சொத்துக்களை வாங்கும் பொருட்டு நிதி உதவி அளித்து வருகிறது. நடுத்தர, சிறிய மற்றும் சின்னஞ் சிறிய தொழில்களுக்கு நிதி உதவியளிக்கப்படுகிறது. குறைந்தபட்சக் கடன் தொகையாக ரூ. 5,000 மும், அதிக பட்சக் கடன் தொகையாக ரூ. 30 இலட்சமும் வழங்கப்படுகிறது.

## 1980-81 ஆம் ஆண்டு நிறுவனப் பணிகளின் முக்கிய அம்சங்கள்:

இந் நிறுவனத்தின் செயலாக்கத்தில் பெருமளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

**சிறு தொழில்களுக்கு நிதி உதவி:** டி. ஐ. ஐ. சி. சிறு தொழில்களுக்கு அளித்து வரும் நிதி





உதவி ஆண்டிற்காண்டு அதிகரித்து வருகிறது.

**பிற்பட்ட பகுதிகளுக்கு நிதி உதவி:**

பிற்பட்ட பகுதிகளில் ஏற்படுத்தப்படும் தொழில்களுக்குக் கீழ்க்கண்ட சலுகைகள் உண்டு:

* சிறு தொழில் மற்றும் பெருந்தரத் தொழில் நிறுவனங்களுக்கு வட்டி விதம் 12.50 சதவீதம்.

* இரண்டு முதல் நான்கு ஆண்டுகள் வரை கடனைத் திருப்பித் தர அவகாசம் மற்றும் காப்புத் தொகையாகக் கடன் வாங்குவோர் கொண்டுவர வேண்டிய நிதி கோருவதில் இணக்கமான அணுகு முறை.

* உதவித் தொகை பெறத் தகுதியுள்ள பகுதிகளில் மத்திய-மாநில அரசின் மானிய உதவி.

**சிறப்புத் திட்டங்கள் :**

இந்நிறுவனம் பல சிறப்புத் திட்டங்களை அமல்படுத்தி வருகிறது. குறிப்பாக உலக வங்கிக் கடன், (உலக வங்கியில் அங்கம் வகிக்கும் நாடுகளிலிருந்தும் மற்றும் சுவிட்சர்லாந்திலிருந்தும் இயந்திரங்கள் மற்றும் தொழில் நுட்பம் போன்றவைகளுக்காக இறக்குமதி செய்யவும்), தொழில் நுட்ப வல்லுநர்களுக்கான திட்டம்

(கல்வி அல்லது முன் தொழில் அனுபவம் உடையவர்களுக்காக) போக்குவரத்து வாகனங்களின் ஓட்டுநர்கள் திட்டம் (குறிப்பாக ஆட்டோ ரிக்ஷாக்கள், டெம்போக்கள், லாரிகள், டிரக்குகள் உல்லாசப் பயணிகளுக்கான டாக்சிகள்), பதிவு பெற்ற மருத்துவர்களுக்கான திட்டம் (முழுச் சலுகைகளும், வசதிகளும் உள்ள மருத்துவமனை நிறுவுவதற்காக) மின்சாரத் தட்டுப்பாட்டைச் சமாளிக்க மின்சார உற்பத்தி இயந்திரங்கள் வாங்குவது போன்ற திட்டங்கள் சிறப்புத் திட்டங்களில் அடங்கும்.

**தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) :**

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) மேற்கொண்ட சீரான வளர்ச்சிப் பணிகள் காரணமாகத் தமிழகத்தில் தொழில் வளர்ச்சி கணிசமான அளவு அதிகரித்துள்ளது. பல பெரிய மற்றும் நடுத்தரத் தொழில்கள் வெற்றிகரமாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. குறிப்பிடத்தக்க சில திட்டங்களின் சுருக்கமான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

வடஆர்க்காடு மாவட்டம் இராணிப்பேட்டையில் ஆண்டு 1-க்கு 33 டன் எப்டிரின் ஹைட்ரோகுளோரைடு என்ற மருந்துப் பொருளை உற்பத்தி செய்வதற்காக ரூ. 134 இலட்சம் திட்டச் செலவில் மல்லடி டிரக்ஸ் அண்டு பார்மசூட்டிகல்ஸ் என்ற பெயரில் கூட்டுத்துறையில் ஒரு நிறுவனத்தை டிட்கோ தோற்றுவித்துள்ளது.

தமிழ்நாடு ஃபுளோரின் அண்டு அலைடு கெமிக்கல்ஸ் என்ற கூட்டுத்துறை நிறுவனத்திற்கு ஆண்டு 1-க்கு 16,500 டன் கந்தக அமிலம் உற்பத்தி செய்வதற்கு மைய அரசு இசைவுக் கடிதம் வழங்கியது. இத்தொழில் பிரிவு இராமநாதபுரம் மாவட்டத்தில் நிறுவப்படும். ரூ. 85 இலட்சம் திட்டச் செலவினால் ஆன இப்புதிய தொழிற்சாலையின் மூலம் 55 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிட்டும்.

ரூ. 5,350 இலட்சம் திட்டச் செலவில் ஆண்டு 1-க்கு 66,000 டன் சோடா ஆஸ் மற்றும் அமோனியம் குளோரைடு உற்பத்தி செய்யக்கூடிய தூத்துக்குடி ஆல்கலி கெமிக்கல்ஸ் மற்றும் உர நிறுவனத் திட்டப்பணிகள் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இத்திட்டம் சுமார் 480 பேர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பும் மற்றும் பலருக்குச் சார்பு வேலை வாய்ப்பும் அளிக்கும்.

முழுவதும் ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட தொழிலியல் காலணிகளை உற்பத்தி செய்வதற்காக ரூ. 100 இலட்சம் திட்டச் செலவில் தொழிலில் பின் தங்கிய வட ஆர்க்காடு மாவட்டம் வாலாஜாப் பேட்டையில் தோற்றுவிக்கப்பட்ட திருவாளர்கள் மெட்ராஸ் ஷூ பேபரிக் என்ற கூட்டுத்துறை நிறுவனத்தின் திட்டப்பணிகள் முன்னேற்றமான நிலையில் இருக்கின்றன.

* எழுதும் மற்றும் அச்சிடும் தாள்களை உற்பத்தி செய்வதற்

காக ரூ: 487 இலட்சம் திட்டச் செலவில் தென் ஆர்க்காடு மாவட்டம் வடக்கூத்து என்ற இடத்தில் கங்கப்பா பேப்பர் மில்ஸ் என்ற மற்றொரு கூட்டுத்துறை நிறுவனம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் 1981-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் உற்பத்தியைத் துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆட்டோமோபைல் தொழில்களுக்குத் தேவைப்படக் கூடிய தரமான உருக்கு வார்ப்புகளைத் தயாரிப்பதற்காகத் திருவாளர்கள் ஆட்டோமோட்டிவ் காஸ்டிங்ஸ் லிமிடெட் என்ற பெயரில் பெரியதொரு வார்ப்படத் திட்டம் ரூ. 1500 இலட்சம் திட்டச் செலவில் தொழிலில் பின் தங்கிய புதுக்கோட்டை இலட்சம். 100 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிட்டும்.

ரூ. 140.94 கோடி செலவில் டிட்கோ பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்கள் மூலம் சுமார் 4,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**தமிழ்நாடு சிமெண்டு நிறுவனம்**

தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் பொதுத்துறையில் இரண்டு சிமிண்டு ஆலைகளை (1) இராமநாதபுரம் மாவட்டம் ஆலங்குளத்தில் (ஆண்டு 1க்கு 4 இலட்சம் உற்பத்தித்திறன் கொண்டது) (2) திருச்சிராப்பள்ளி மாவட்டம் அரியலூரிலும் (ஆண்டு 1க்கு திட்டப்பணிகள் முடிவுறும் நிலையில் இருக்கிறது. திட்டப்பணிகள் 1981-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் இறுதிக்குள் முடிவுறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்தொழிற்சாலையின் மூலம் 300 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிட்டும்.

**சிப்காட்டின் பலதரப்பட்ட முன்னேற்றப் பணிகள்**

தமிழ்நாட்டின் நடுத்தர மற்றும் பெரிய தொழில்களின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் 'சிப்காட்' ஆற்றிய பணி மிகவும் முக்கியமானதாகும். இவ்வாண்டு 1981 மார்ச் மாதம் 31 ஆம் நாள் வரை பலதரப்பட்ட திட்டங்களின் கீழ் சிப்காட் அனு



மாவட்டத்தில் நிறுவப்பட்டு வருகிறது. இப்புதிய தொழிற்சாலையின் மூலம் கணிசமான பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிட்டும்.

* அரக்கோணத்தில் உள்ள தமிழ்நாடு எஃகு ஆலையில் எஃகு உருக்கும் பகுதிக்கு அருகிலேயே உருக்கு உருள் அழுத்த ஆலையை அமைக்க மைய அரசு அண்மையில் இசைவுக் கடிதம் வழங்கியுள்ளது. இதன் உற்பத்தித்திறன் ஆண்டு 1-க்கு 25,000 டன் மின் உருள் அழுத்தம் செய்யப்பட்ட பொருட்களாகும். இதன் திட்டச் செலவு ரூ. 430 5 இலட்சம் உற்பத்தித் திறன் கொண்டது) நிர்வகித்து வருகிறது. அரியலூர் சிமிண்டு ஆலை திட்டப்பணிகள் துவங்கப்பட்ட நாளிலிருந்து 30 மாதங்களுக்குள் முடிவுற்று ஆலை 1-8-79 முதல் வணிக உற்பத்தியைத் துவங்கியது ஒரு சாதனையாகும்.

1979ஆம் ஆண்டு இறுதியில் ஆண்டு 1-க்கு 36,000 மெட்ரிக் டன் ஆஸ்பெஸ்டாஸ் சிமிண்டு தகடு உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ரூ. 212 இலட்சம் திட்டச் செலவில் ஆலங்குளம் சிமிண்டு ஆலைக்கு அருகில் ஆரம்பிக்கப்பட்டது. இத்தொழிற்சாலையின் மதி அளித்துள்ள நிதி உதவி சுமார் ரூபாய் 67 கோடியாகும். இதன் மூலம் 48,000 பேர்களுக்கு நேரடி வேலைவாய்ப்புகளையும் உருவாக்கியுள்ளது. இந்த 67 கோடி ரூபாயில் 1976-77 ஆண்டு வரை அனுமதி அளிக்கப்பட்ட தொகை ரூபாய் 17 கோடியாகும். மீதம் உள்ள ரூபாய் 50 கோடி, 1977-78 ஆண்டிலிருந்தும் அதற்குப் பிறகும் அனுமதி அளிக்கப்பட்டவையாகும். இந்நிதியுதவியில் பெரும்பங்கு அதாவது 85 விழுக்காடு பின்தங்கிய மாவட்டங்களுக்கு அளித்திருப்பது சிப்காட்டின் குறிப்பிடத்தக்க முக்கியப் பணியாகும்.

1980-81-ஆம் ஆண்டில் தவணைக் கடன் வகையில் அனுமதி அளிக்கப்பட்டதும், வழங்கப்பட்டதுமான தொகை முறையே ரூபாய் 19.63 கோடியும், ரூபாய் 7.87 கோடியுமாகும். 1976-77 ஆம் ஆண்டு வரை ரூபாய் 6 கோடிக்கு அனுமதியளிக்கப்பட்டு ரூபாய் 4 கோடி வரை வழங்கப்பட்டுள்ளது. 1977-78ஆம் ஆண்டில் இருந்து இதுவரை ரூபாய் 30 கோடிக்கு அனுமதி அளிக்கப்பட்டு ரூபாய் 14 கோடி வரை வழங்கப்பட்டுள்ளது. அதேபோல் மத்திய அரசின் மானியம் மற்றும் வட்டியில்லா விற்பனை வரிக்கடன் ஆகியவைகள் வழங்க ஒப்புதல் அளித்தலிலும் நல்லதொரு சாதனையை ஏற்படுத்தியுள்ளது. மத்திய அரசின் மானியத் திட்டத்தின்கீழ் ஈட்டுத் தொகையைப் பெறுவதில் தமிழ்நாடு மற்ற எல்லா மாநிலங்களையும்விட முதன்மையில் இருக்கிறது என்பதை இங்குக் குறிப்பிடுவது சாலப் பொருத்தமாகும்.

1980-81-இல் வட்டியில்லா விற்பனை வரிக் கடன் வழங்க ஒப்புதல் அளித்தலிலும், வழங்குதலிலும் உள்ள நிலைமை ஊக்கமூட்டுவதாகவே உள்ளது. சிறுதொழில்களுக்கும், சிறு தொழில் விரிவாக்கத்திற்கும், மற்றும் சிறுதொழில் நடுத்தரத் தொழிலாக வளர்ச்சியடையவும் இந்த வட்டியில்லா விற்பனை வரித் திட்டம் நீட்டிக்கப்பட்டிருப்பதால் தற்போதுள்ள ஆண்டு ஒப்புதல் மற்றும் வழங்கல் தொகை ரூபாய் 2.40 கோடி. வரும் ஆண்டில் ரூபாய் 3 கோடி அளவுக்கு எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் ஆரம்ப மூலதன நிதியுதவி திட்டத்தின் கீழ் தங்களது நடுத்தரத் தொழிலை நிறுவவும், தொழில் நுட்ப அனுபவ தொழில் முனைவோருக்கு 1980-81-ல் ரூபாய் 0.27 கோடி வரை நிதியுதவி வழங்கி ஒரு புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ளது.

நடப்பாண்டு 1980-81-ல் இராமநாதபுரம் மாவட்டத்தில் மானாமதுரையிலும் புதுக்கோட்டை மாவட்டத்தில் நத்தம் பண்ணைக் கிராமத்திலும் புதிய தொழில்.

**தமிழ்நாட்டுக் கைத்திறன் தொழில்கள்**

தமிழ்நாட்டின் கலாச்சாரம் பாரம்பரியத்தை எடுத்துக்காட்டும் அடையாளச் சின்னங்களாக விளங்குபவை கைத்திறன் தொழில்களே. எனவே, இத்தொழில்களின் அடிப்படை நுணுக்கங்கள் வடிவமைப்புகள் இவற்றைப் பாதுகாத்து வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டு தமிழ்நாடு கைத்திறன் தொழில்கள் வளர்ச்சி நிறுவனம் 1973-ல் அரசால் தொடங்கப் பெற்று செயல்பட்டு வருகிறது.

தற்பொழுது இந்நிறுவனம் 18 பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையங்களில் கைவினைஞர்களுக்குப் பயிற்சியளித்து வருகிறது. 280 பேர்கள் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையங்களில் உற்பத்தியாகும் பொருட்களை விற்பதற்குத் தமிழ்நாட்டில் 13 விற்பனை நிலையங்களும் புதுடில்லி, பம்பாய் மற்றும் பெங்களூரில் ஒரு விற்பனை நிலையமும் உள்ளது. 1975-76ல் இந்தப் பயிற்சி நிலையங்களின் உற்பத்தி மதிப்பு ரூ. 19 இலட்சமாக இருந்தது. தற்சமயம் இது ரூ. 40 இலட்சமாக உயர்ந்துள்ளது.

மாநிலத்திலுள்ள பீங்கான் சிறுதொழில் வளர்ச்சிக்காக மாநில அரசின் கொள்கைகளை நிறைவேற்ற இந்நிறுவனம் பாடுபடுகிறது. இந்நோக்கோடு எல்லா வசதிகளும் கொண்ட 40 தொழிற்கூடங்களையுடைய தொழிற்பேட்டை அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றது. அடிப்படை வசதிகளை வழங்குவதோடு சிறு தொழிலர்களின் நன்மைக்காக ரூ. 40 இலட்ச செலவில் உலை எண்ணெய்யால் இயங்கும் நவீன சுரங்கச் சூளை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

நகரிலிருந்து விலகி நாட்டுப்புறங்களிலும் கிராமப்புறங்களிலும் வேலை வாய்ப்பை உறுதி செய்வதே இந்நிறுவனத்தின் நோக்கமாகும். இந்நிறுவனத்தின் 90 சதம் ஊழியர்கள் நகர்ப்புறமல்லாத இடங்களில் பணிபுரிகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம் 'டான்மாக்'**

சேலம், மாவட்டம், ஓமலூர் வட்டம் தாத்தையங்கார்பட்டி கிராமத்தில் உள்ள சுரங்கங்களிலிருந்து மாக்னசைட் கனிப் பொருளை, திருவாளர்கள் சேலம் மாக்னசைட் என்ற தனியார் நிறுவனத்தினர் வெட்டி எடுத்து வந்தனர். சுரங்கங்கள் சரியாகப் பராமரிக்கப்படாததால், சுரங்க வேலையை நிறுத்தி வைக்கவேண்டிய அபாய நிலைகள் இருந்தன. எனவே, மேற்படி நிறுவனத்தினருக்கு அளித்த குத்தகைக் காலம் முடிந்தவுடன் அக்குத்தகையைப் புதுப்பிக்காமல் சுரங்கங்களைத் தானே ஏற்று நடத்தவும் அதில் பணியாற்றி வந்த 2,300-க்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பும் தர தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம் என்ற புதிய நிறுவனம் அரசால் 17-1-1979-ல் தோற்றுவிக்கப்பட்டது. இந்நிறுவனம் அரசின் சார்பில் ''ரெய்சிங் காண்டிராக்டர்'' என்ற முறையில் பிப்ரவரி 79-லிருந்து சுரங்க வேலைகளை நன்கு செய்து வருகிறது.



'டான்மாக்' நிறுவனம் பொறுப்பேற்ற முதல் ஆண்டின் முடிவில் (14 மாதங்கள்) 1.15 இலட்சம் டன்கள் மாக்னசைட் உற்பத்தியும் 1.05 இலட்சம் டன்கள் விற்பனையும் செய்துள்ளது. அதனால் நிறுவனத்திற்குக் கிடைத்த வருவாய் 244.01 இலட்சம் ரூபாய். கிடைத்த நிகர

இலாபம் 30.09 இலட்ச ரூபாய். 1980-81-ஆம் ஆண்டின் உற்பத்தி 1.13 இலட்சம் டன்கள். விற்பனை 1.20 இலட்சம் டன்கள். மொத்த வருவாய் 320.28 இலட்ச ரூபாய். எதிர்பார்க்கப் படுகிற நிகர லாபம் 32.99 இலட்ச ரூபாய்.

**தமிழ்நாடு கனிம நிறுவனம் (டாமின்)**

தமிழ்நாடு கனிம நிறுவனம் தமிழகத்திலுள்ள தொழில் சார்ந்த கனிமங்களை முறையாகவும் விஞ்ஞான ரீதியாகவும் நன்கு பயன்படுத்திக் கொள்ளவும் கரும் பாறைகளை வெட்டி எடுத்து ஏற்றுமதி செய்யவும் 1978-ஆம் ஆண்டு ஏப்ரலில் நிறுவப்பட்டது.

'டாமின்' நிறுவனம் கரும் பாறை ஏற்றுமதிகளின் மூலம் 1979-80-ல் ரூ. 20 இலட்சமும், 1980-81-ல் ரூ. 44 இலட்சமும் அந்நியச் செலாவணியாக ஈட்டியுள்ளது. வரும் ஆண்டுகளில் மேலும் பல புதிய சுரங்கங்களை ஏற்று நடத்தத் திட்டமிட்டுள்ளது. கரும்பாறைகளை அறுத்து மெருகேற்றும் தொழிற்சாலை அமைக்கும் முயற்சியிலும் இந் நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

நாட்டில் முதன் முறையாகச் சாம்பல் நிறப்பாறைகளை இந்நிறுவனம் ஏற்றுமதி செய்து வருகிறது. 1979-80, 1980-81 ஆகிய ஆண்டுகளில் சுமார் ரூ. 16 இலட்சம் வருவாய் அந்நியச் செலாவணியாக ஈட்டியுள்ளது.

இந்நிறுவனம் உயர்ரகச் சுண்ணாம்புக்கல், வெர்மிகுலைட், குவார்ட்ஸ் மற்றும் பெல்ட்ஸ் பார், ரோஜா நிற குவார்ட்ஸ், சிலிகா மணல் முதலிய உயர்வகை கனிமங்களை உற்பத்தி செய்து விற்பனை செய்து வருகிறது. சிவகங்கைக்கு அருகில் சுமார் 600 ஏக்கர் பரப்பில் கிடைக்கும் கிராபைட் கனிமத்தை வெட்டியெடுத்து அதைப் பயன்படுத்தி வெப்பந்தாங்கும் கலன்கள் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவும் முயற்சியில் இந்நிறுவனம் ஈடுபட்டுள்ளது.



கைத்தறித் தொழில் மேம்பாட்டிற்கு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டதன் மூலம், நெசவாளர்கள் கடந்த ஆண்டுகளில் கணிசமாகப் பயன் அடைந்துள்ளனர். நெசவாளர்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என்ற நோக்கத்தில் கீழே காணும் கொள்கை முறைகளை அமல்படுத்தி நெசவுத் தொழில் தொடர்ந்து முன்னேற்றம் ஏற்பட அரசு ஏற்பாடுகள் செய்துள்ளது.

1. கூட்டுறவு அமைப்பின் கீழ் நெசவாளர்களை அதிக அளவில் கொண்டுவர புதிய கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதுடன் ஏற்கெனவே இயங்கி வரும் சங்கங்களில் நெசவாளர்கள் அங்கத்தினராகச் சேர்க்கப்படுவர்.

2. சொந்தத் தறியில்லாத நெசவாளர்களுக்குப் பொது நெசவுக் கூடம் அமைப்பதற்கும் நலிந்த சங்கங்களை வலுப்படுத்தவும் நிதியுதவிகள் அளிக்கப்படுகின்றன.

3. மாநிலத்திலுள்ள பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் மாநிலச் சங்கத்தின் பங்கு மூலதனத்தை அதிகப்படுத்தி அவற்றுக்கு விற்பனை வசதியைச் செய்து கொடுத்தல்.

4. கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான தரமான மூலப் பொருட்களைக் குறைந்த நியாயமான விலையில் அளித்தல் மற்றும் தேவையான நிதி உதவிகளைச் செய்து கொடுத்தல்.

5. மக்களின் மாறிவரும் ஆர்வ விருப்பங்களுக்கு ஏற்றபடி தொழில் நுட்ப முறையினை உயர்த்தவும் வடிவமைப்பு அமைப்பதன் வழியாகக் கைத்தறிப் பொருட்களின் தரத்தை உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

6. கைத்தறித் துணிகள் நெசவுக்கு முன்பு அவற்றுக்குத் தேவையான வசதிகளை அளித்தல் மற்றும் பதனிடும் வசதிகள் செய்து கொடுத்தல்.

7. கைத்தறித் துணியின் ஏற்றுமதியை அதிகப்படுத்துதல்.

8. கைத்தறி நெசவாளர்களின் நல்வாழ்வுக்கெனக் கூட்டுறவு நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் மற்றும் நெசவாளர் வீட்டு வசதித் திட்டம் போன்ற நலத்திட்டங்களைச் செயல்படுத்துதல்.

பல ஆண்டுகளாகத் தமிழ்நாட்டில் மூடப்பட்டிருந்த 10 துணி

ஆலைகள் (16,365 தொழிலாளர்கள் பணி புரிகின்றனர்) அரசு உத்தரவாதம்அளித்ததன் காரணமாக 1977-ல் மீண்டும் திறக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன. இவ்வகையில் 10 ஆலைகள் திறக்கப்படுவதற்கு அரசு ரூ. 304.33 இலட்சத்திற்கு உத்தரவாதம் அளித்துள்ளது.



### பட்டுப்புழு வளர்ப்புத் துறை

சேலத்தை தலைமையிடமாகக் கொண்டு தனியாகப்பட்டு வளர்ப்புக்கென இயக்குநர் அலுவலகம் 1-4-79ல் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

இன்று தமிழ்நாட்டில் சுமார் 40,000 ஏக்கர் நிலப்பரப்பில் முசுக்கொட்டை செடி பயிரிடப்பட்டுள்ளது. 1980-81ஆம் ஆண்டில் இத்தொழில் கூடுதல் வேலை வாய்ப்பு சுமார் 45950 கிராமப்புற மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளது.

விதை வளர்ச்சித் திட்டங்களின் கீழ் 110 இலட்சம் நோயுற்ற பட்டுப்புழு முட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளள. 1980-81ஆம் ஆண்டில் 1.50 இலட்சம் கிலோ கச்சாப்பட்டு உற்பத்தியாகியுள்ளது. இதுவரை 5295 விவசாயிகளுக்கு முசுக். கொட்டைச் செடி வளர்ப்பிலும் பட்டுப்புழுக்கூடு நூற்பிலும் நவீன முறைகளில் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. உபகரணங்கள் வாங்க உதவி அளிக்கும் திட்டத்தின் கீழ் இதுவரை 5275 விவசாயிகள், பட்டுப்புழு வளர்ப்பு கொட்டகை கட்ட உதவி அளிக்கும் திட்டத்தின்கீழ் 2865 விவசாயிகள் பயன் அடைந்தனர். 1980-81-ல், 700 ஏனங்கள் நூற்புப் பிரிவுகள் ரூ. 7.70 இலட்சம் செலவில் நிறுவப்பட்டு மொத்தத் தட்டுகளின் எண்ணிக்கை இதுவரை 1510 ஆக உயர்ந்துள்ளது.

தமிழ்நாடு மாநிலப் பட்டு உற்பத்தியாளர் தொழிற் கூட்டுறவு இணையம் ரூ. 2.95 கோடி மதிப்புள்ள 86000 கிலோ பட்டு நூலை விற்பனை செய்து 1980-81ஆம் ஆண்டில் ரூ. 1.90 இலட்சம் நிகர லாபம் ஈட்டியுள்ளது. இவ்விணையம் இலங்கை அகதிகள் மறுவாழ்வுக்கென, அகதிகள் மறுவாழ்வுக் கூட்டுறவு வங்கியின் நிதியுதவியுடன் ஒரு பட்டு நூல் முறுக்கேற்றும் ஆலையை ஆரம்பித்து அகதிகளுக்கு வேலைவாய்ப்பு அளித்துள்ளது.

பட்டு உற்பத்தி இன்றைக்குச் சுமார் நான்கு மடங்கு அதிக அளவில் உயர்ந்து 1.50 இலட்சம் கிலோ அளவுக்கு அதிகரித்துள்ளது. மேலும், கடந்த மூன்றாண்டுகளில் 2.50 இலட்சம் மக்களுக்குப் பட்டு வளர்ப்பின் தீவிரத்துடன் ஈடுபடும் வளர்ப்பில் அளவில் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தந்துள்ளது.

### சர்க்கரைத்துறை இயக்ககம்

தமிழ்நாட்டில் தற்பொழுது 21 சர்க்கரை ஆலைகள் இயங்கி வருகின்றன. இவற்றில் 10 கூட்டுறவு அமைப்பிலும், 2 பொதுத் துறையிலும், 9 தனியார் துறையிலும் உள்ளன. இவற்றின் மொத்த அரவைத் திறன் நாளொன்றுக்கு 41,350 டன்களாகும். 1980-81 (1-10-80 முதல் 30-9-81 முடிய) இவ்வாலைகள் 46 இலட்சம் டன் கரும்பு பிழிந்து 4.04 இலட்சம் டன் சர்க்கரை உற்பத்தி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தென்னார்க்காடு மாவட்டம் உளுந்தூர்ப்பேட்டை வட்டம், பெரிய செவலை கிராமத்தில் 1250 டன் பிழி திறனுடைய கூட்டுறவுச் சர்க்கரை ஆலை 18 மாத காலத்திற்குள் நிறுவப்பட்டு 1980 அக்டோபர் மாதம் 16-ஆம் நாள் சர்க்கரை உற்பத்தியைத் தொடங்கியது. இப்புதிய ஆலையில் 600 தொழிலாளர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

### செய்தித்தாள் காகித ஆலைத் திட்டம்:

கரும்புச் சக்கையை மூலப்பொருளாகக் கொண்டு நாளொன்றுக்கு 250 டன் செய்தித்தாளும் 50 டன் எழுதுதாளும் உற்பத்தி செய்வதற்காக அனுமதி பெற்ற 50 கோடி ரூபாய் மூலதனத்தோடு தமிழ்நாட்டில் காகித் ஆலை ஒன்றைத் தொடங்க 1979 ஆம்ஆண்டு ஏப்ரல் மாதம் 16-ஆம் நாளில் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் அரசு நிறுவனமாகப்பதிவு செய்யப்பட்டது. இத்திட்டத்திற்கு ரூபாய் 153 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டது. இத்தொழில் தொடங்குவதற்காக 1979ஆம் ஆண்டு ஜூலை மாதம் 3-ஆம் நாளன்று மத்திய அரசு முன் உரிமம் வழங்கியுள்ளது. இத்திட்டம் கட்டுப்படியாக இயங்குவதை முன்னிட்டு திருத்திய திட்ட அறிக்கையின்படி ஆண்டுக்கு 50,000 டன் செய்தித்தாள் மற்றும் 40,000 டன் எழுதும் மற்றும் அச்சிடும் தாள் உற்பத்தி செய்யக் கூடிய ஒருங்கிணைந்த ஆலையை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான செலவு ரூ. 180 கோடியாகும்.

இத்திட்டத்தை எங்கு நிறுவலாம் என ஆராய்ந்ததில் நிலம் தண்ணீர், மின்சாரம், மூலப் பொருட்கள், ரயில் வசதிகள் மற்றும் ஏனைய வசதிகளைக் கருத்தில் கொண்டு, திருச்சி மாவட்டத்தில் புகளூருக்கு அருகில் நிறுவ முடிவு செய்துள்ளது. இத்திட்டம் பின்தங்கிய பகுதியில் அமைய இருப்பதால் இத்திட்டத்திற்குப் பின்தங்கிய பகுதியில் கிடைக்கும் சலுகைகள் பெற இயலும்.

உலக வங்கி மற்றும் இந்திய நிதி நிறுவனங்களுடன் நிதி உடன்படிக்கைகள் விரைவில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேற்கண்ட உடன்படிக்கை முடிந்தவுடன் இத்திட்டத்தை விரைவாகச் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அதிகமான அளவில் கிராமியக் கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பளித்ததையொட்டி உற்பத்தியும், விற்பனையும் வெகுவாக உயர்ந்துள்ளன. 1976—77-ல், ரூ. 361 இலட்சமாக இருந்த கதர் உற்பத்தி 1980-81ல் ரூ.653 இலட்சத்தை அடைந்தது. அதே போல் ரூ. 406 இலட்சமாக இருந்த கதர் விற்பனை 1980-81-ல் ரூ. 653 இலட்சத்தை அடைந்தது. அதே போல் ரூ. 406 இலட்சமாக இருந்த கதர் விற்பனை 1980-81-ல் ரூ. 693 இலட்சத்தை அடைந்தது. 1976-77ல் ரூ. 15 கோடியாக இருந்த கிராமப் பொருட்களின் உற்பத்தி 1980-81ல் ரூ. 37 கோடியை அடைந்தது. விற்பனை ரூ. 17 கோடியாக இருந்தது ரூ. 39 கோடி அடைந்தது.

# உங்களுடைய சேமிப்புக்கு
# மேலும் அதிக வட்டி கிடைக்கும்
# உங்கள் பணம் இரட்டிப்பாகும்

## 6 வருடங்களில் ... தேசிய சேமிப்பு பத்திரம் ஆருவது வெளியீட்டில் முதலீடு செய்தால்

இப் புதிய தொகுதியில் ரூபாய் 100, 6 ஆண்டுகளில் ரூபாய் 201.50 ஆக அதிகரிக்கும். இதில் அரையாண்டுக்கொருமுறை கணக்கிடப்படும் ஆண்டுக்கு 12 சதவிகித கூட்டு வட்டியும் அடங்கும்.

தே. சே. ப. VII வெளியீடு புதியதொரு தொகுதியாகும். இதில் வருடத்துக்கு 12சதவிகித வட்டி கிடைக்கும்; வட்டி அரையாண்டுக்கொருமுறை வழங்கப்படும். முதலீட்டுப் பணம் 6 வருடங்களுக்குப் பின்னர் திருப்பித் தரப்படும்.

இரண்டு தொகுதிகளை சேர்ந்த பத்திரங்களையும் மூன்றுண்டுகளுக்குப் பின்னர் பணமாக்கிக் கொள்ளலாம். முதலீட்டு வரம்பு கிடையாது. வாரிசு நியமனம், அடையாள சீட்டு, மாற்றல் ஆகிய வசதிகளும் உண்டு.

வருமான வரி கணக்கீடுகளுக்கான அஞ்சலகங்கள், இலவசமாக சான்றிதழ்கள் அனுப்பும். ரூ. 1.5 லட்சம் வரையில் சொத்து வரி விலக்குண்டு. ஆண்டுக்கு ரூ. 3,000-வரையிலான வட்டிக்கு, வருமான வரி கிடையாது. தனிப்பட்டவர்கள், 1-5-81லிருந்து அனைத்து அஞ்சலகங்களிலும் இப் பத்திரங்களை வாங்கிக் கொள்ளலாம்.

மேற்கொண்டு விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய இடங்கள்:

- அங்கீகாரம் பெற்ற ஏஜெண்ட்
- மாவட்ட சேமிப்பு அதிகாரி, மாவட்ட கலெக்டரக மேற்பார்வை
- அருகிலுள்ள அஞ்சலகம்
- பிராந்திய அதிகாரி, தேசிய சேமிப்பு அதிகாரி (மத்திய மாநில அரசு)

அல்லது கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுங்கள்:

**நாஷனல் ஸேவிங்ஸ் ஆர்கனைசேஷன்,**
**12, ஸெமினரி ஹில்ஸ், நாக்பூர்-440006.**

DAVP 81-30



# உழவர்களுக்கு உதவிடும் அரசு

அரசு அளித்துள்ள பல அரிய சலுகைகளைப் பெற்று விவசாயிகள் பயனடைந்துள்ளார்களா?

உதாரணத்திற்கு, ஒரு சில விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சென்றதில் இந்த உண்மை புலப்பட்டது.

காஞ்சிபுரம், மத்தியக் கூட்டுறவு வங்கியின், பூவிருந்தவல்லிக் கிளையின் சார்பில் இயங்கிவரும் மேட்டுப்பாளையம், நேமம் ...கிய விவசாய சேவைக் கூட்டு ...வுச் சங்கங்களுக்குச் செல் ...றோம்.

மேட்டுப்பாளையம் கூட்டுறவுச் சங்கத்தில், 1189 ரூபாய் கடன் வாங்கியிருந்தார் திருமதி சீதம்மாள். இவர் வட்டியுடன் இத்தொகையை 1-3-79 அன்று திருப்பித் தந்திருக்க வேண்டும். ஆனால், அவரால் அவ்வாறு திருப்பித்தர இயலவில்லை. இதற்கிடையில் தமிழக அரசு 30-6-81க்குள் கடன் அசல் பாக்கியை மட்டும் திருப்பித்தந்தால்போதுமானது என்று அறிவித்திருந்தது. அதன் மூலம் சாதாரண வட்டி, அபராத வட்டி தள்ளுபடி செய்யப்படும் என்ற ஒரு நல்ல சலுகையையும் கொடுத்திருக்கிறது. இந்த நல்ல வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டுள்ளார் திருமதி சிதம்மாள்.



இவர் நெல் பயிடுவதற்கு 2½ ஆண்டுகளுக்கு முன்பு, குறுகியக் காலப் பயிர்க் கடனாக ரூபாய் 1189 பெற்றிருந்தார். தமிழக அரசின் அறிவிப்பைக் கண்டதும் இவர் 4.6.81 அன்று கடன் அசலை (ரூ. 1189) திருப்பிச் செலுத்தி விட்டார். இதன் மூலம் இவர் பெற்ற சலுகை என்ன?

இவர் வாங்கிய கடனுக்குச் சாதாரண வட்டி : ரூ. 446.92 அபராத வட்டி : ரூ. 90.10 இதரச் செலவுகள் ரூ. 5 ஆக மொத்தம் ரூ. 536.02 இவர் அசலுடன் சேர்த்துக் கட்டியிருக்க வேண்டும். இப்போது அசலை மட்டும் செலுத்திவிட்டதால், இவருக்குச் சாதாரண மற்றும் அபராத வட்டித் தொகையான ரூ. 536.02 தள்ளுபடி செய்யப்பட்டது.

இந்த மேட்டுப்பாளையம் விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ள 15 சிறு விவசாயிகள், தாம் வாங்கிய கடன் அசல் பாக்கியைத் திருப்பித் தந்துள்ளனர். இவர்கள் 26-5-81 முதல் 4-6-81 முடிய 16,067 ரூபாய் கடன் அசலைச் செலுத்தி சலுகை அடைந்துள்ளார்கள். அதாவது மொத்தத்தில் இவர்களுக்குச் சாதாரண மற்றும் அபராத வட்டியான ரூ. 5,889.88 தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது.

இச்சங்கத்தின் பெரிய விவசாயிகளான 4 பேர், இவர்கள் 16,892 ரூபாய் கடன் அசல் மற்றும் வட்டி 4.084.93 ரூபாய் செலுத்தி, அபராத வட்டியான 865 ரூபாய் சலுகை பெற்றுள்ளார்கள்.

இந்தக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் வழக்கறிஞர் திரு. ஆர். அருணாசலம் அவர்கள் கூறுகிறார்.

''அரசு விவசாயிகளுக்கு அளித்திருக்கிற நல்ல வாய்ப்பு இது. இதை அவர்கள் பயன்படுத்திக் கொள்வது நல்லது. இதுபற்றி நாங்களும் நேரில் அவர்களுக்குச் சொல்லி வருகிறோம். காலக்கெடுவிற்குள் கடனைத் திருப்பித் தந்து விடுவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.''

நேமம் விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கத்தில் சிறிய விவசாயிகள் 3 பேர் ரூ. 6,296 அசலைச் செலுத்தியதன் மூலம், ரூ. 2,834 வட்டிச் சலுகை பெற்றுள்ளார்கள். இதேபோல பெரிய விவசாயிகள் 8 பேர் ரூ. 66,012 கடனையும் ரூ. 8,690 வட்டியும் செலுத்தியதன் மூலம் ரூ. 3,938 அபராத வட்டிச் சலுகை பெற்றுள்ளார்கள்.



இந்தச் சங்க...
கிருஷ்ணசாமி ...
நிலம் உள்ள...
4,200 கடன் ...
விளைச்சல் ...
னைக் குறிப்பி...
திருப்பித் தர...
றும், இப்போ...
சலுகையைப்...
கொண்டு, ...
அசலைத் ...
விட்டதாக...
சாதாரண...
தள்ளுப...
றும் கூ...

# உறுதிமொழிகள்

## நிறைவேறுகின்றன!

''கடந்த ஆண்டு, வள்ளுவர் கோட்டத்தில்தான், ஊராட்சி ஒன்றியங்களின் ஆசிரியர்கள் அனைவரும் அரசு ஊழியர்களாக, அரசு ஆசிரியர்களாக ஆக்கப்படுவார்கள் என்ற அறிவிப்பினைச் செய்தேன்.

''அன்று நான் அளித்த வாக்குறுதி, இன்று நடைமுறைக்குக் கொணரப்பட்டு, ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றும் 97 ஆயிரம் ஆசிரியப் பெருமக்கள் அனைவரும் நாளைமுதல் அரசு ஊழியர்களாக ஆகிறார்கள். அதற்காக நடைபெறும் இந்த ஏற்பு விழாவிலே நான் உங்கள் மூலமாக மக்கள் மன்றத்தின் முன்னால் ஒன்றை மட்டும் எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டுள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

''எத்தனை தான் இடர்ப்பாடுகள் குறுக்கிட்டாலும், தடைகள் பல நேரிட்டாலும், நாங்கள் அரசுப் பொறுப்பேற்ற பொழுது மக்கள் மன்றத்தின முன்னால் அளித்த உறுதிமொழியை, வாக்குறுதிகளை நிறைவேற்றியே தீருவோம் என்பதை உறுதியுடன் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். பணியாற்றும்பொழுது வேண்டுமானால், சிற்சில சமயங்களில், தாமதம் ஏற்பட்டிருக்கக்கூடும். ஆனால், நாங்கள் கொடுத்த வாக்குறுதிகளை முழுமையாக நிறைவேற்றி வைப்பதுதான் எங்களுடைய இலட்சியம். அதற்காக முழுமூச்சுடன் தொடர்ந்து இந்த அரசு பாடுபடும் என்பதை உறுதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.''

[31.5.81 அன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தில் ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக [illegible]க்கும் விழாவில் மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள்.]






எழிலான வண்ணங்கள்
இனிதான எண்ணங்கள்!
கண்ணைக் கவரும் கைத்தறித் துணிகள்
வண்ண வண்ண பட்டுச் சேலைகள் ஆடவர்
மகளிர் அனைவரும் விரும்பும் அருமை
புதுமை இழையும் ஆடைகள் ஆயிரம்
வகைகள்... அழகார்ந்த ரகங்கள்
அனைத்தும் உண்டு!
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி

தமிழரசு Licence No. TN/MS(C)/PP-23

தமிழ்நாடு அரசு

வாய்மையே வெல்லும்

# தமிழக அரசின் ஓராண்டுப் பணிகள் தொகுப்பு மலர்

